
# திராவிட மக்கள் வரலாறு



ஆதிகாலம் — கி. பி. 1800.

# திராவிட மக்கள் வரலாறு

(ஆதிகாலம் தொடக்கம் கி. பி. 1800 வரையும்)

ஆங்கிலேய முதனூலாசிரியர் :

மட்டக்களப்பு, E. L. தம்பிமுத்து அவர்கள்.

மொழி பெயர்ப்பாசிரியர்:

அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழாசிரியர்

வித்வான், G. சுப்பிரமணியம்பிள்ளை, M.A.

முகவுரை :

சென்னைச் சர்வகலாசாலை

Professor, K. A. நீலகண்ட சாஸ்திரி, M.A.

கொழும்பு,

General Publishers Ltd.

1946.

(ALL RIGHTS RESERVED)

# முகவுரை

திராவிடர் என்ற தமது நூலுக்கு முகவுரை எழுதிக் கொடுக்குமாறு ஸ்ரீ. தம்பிமுத்து என்னைக் கேட்டபொழுது அவருடைய கோரிக்கையைச் சந்தோஷத்துடன் நான் ஏற்றுக்கொண்டேன். தமிழ் நாடுகளின் சரித்திரத்தையும், தமிழர்களது நாகரீகத்தையும் இச்சிறு நூலில் இலகுவில் படிக்கத்தகுந்த சுவாரஸ்யமான நடையில் அவர் எழுதி முடித்திருக்கிறார். அவர் விரிவாகப் படித்துத் தெளிவாகவும், திட்டமாகவும் எழுதுகிறார். அவர் தமக்குக் கிட்டிய ஆகச் சிறந்த அறிஞர்களின் நூல்களைப் பின்பற்ற அழகான முறையில் ஆராய்ச்சிகளை ஆங்காங்கே பயன்படுத்தி எழுதியுள்ளார். புத்தகத்தில் அவர் கொடுத்திருக்கும் படங்கள் குறைவாயிருந்தபொழுதிலும் நன்கு தெரிவுசெய்யப்பட்டவை. நமது சரித்திரத்தின் கலாசாரத்துறையில் போதிய கவனமும் செலுத்தப்பட்டிருக்கிறது.

தேச சரித்திரம் விஞ்ஞானத்தைப்போல அதன் இலட்சியத்தில் ஒருக்காலும் பரிபூரணத்துவம் பெறமுடியாது. எனவே, ஸ்ரீ தம்பிமுத்துவின் நூல் ஓரளவு அவருடைய மனோபாவத்தைப் பிரதிபலிப்பதாயிருப்பது இயல்பு. வாசகர்கள் சுலபமாகத் தங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத அபிப்பிராயங்களையும் மதிப்பீடுகளையும் புத்தகத்தினூடே சில இடங்களில் காண நேரிடலாம். ஆயினும் இப்புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொரு வாசகநேயரும், (இதைப் படிப்பவர்கள் அநேகர் இருப்பார்களென்று நம்புகிறேன். அவர்கள் ஒவ்வொருவரும்) பொது வாசகருக்கு தென் இந்தியாவின் சரித்திரச் சுருக்கத்தைத் திரட்டிக்கொடுக்கும் கடினமான சேவையை இவ்வாசிரியர் மிகுந்த திறமையுடன் நிறைவேற்றியுள்ளாரென்பதை ஒப்புக்கொள்ளுவது நிச்சயம். தற்காலத் தகராறுகளைப் பழங்காலச் சரித்திரத்திலும் பிரதிபலிக்கச்செய்து பழங்காலச் சரித்திர நிகழ்ச்சிகளின் உண்மைப் போக்கை மங்கி மறையச்செய்யும் ஆவலை ஆசிரியர் வெற்றிகரமாகத் தவிர்த்திருக்கிறார். இதைக்குறித்து அவரை விசேஷமாகப் பாராட்டவேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வமிசத்தைப் பற்றியோ அல்லது ஒரு காலத்தைப்பற்றியோ மட்டுமல்லாது தென் இந்தியா முழுவ

தினுமுடைய ஒரு சரித்திர நூல் நமது பல வருடத் தேவையாயிருந்து வந்துள்ளது. நான் பார்த்தவரை அந்தத் தேவையைப் பூர்த்திசெய்விக்க முயலும் முதலாவது நூல் இதுவேயாகும். நமது பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலுமுள்ள மாணவர்களும், பொது வாசகர்களும் இந்நூலை நன்கு பயன்படுத்திக்கொள்ளுவார்களென்று நம்புகிறேன்.

கே. ஏ. நீலகண்டன்.

சென்னைப் பல்கலைக் கழகம்,
1948-ம் ஹு பெப்ரவரி மீ 2-ம் திகதி.

# அபிப்பிராயங்கள்.

...........சங்க காலத்தின் வரலாறுகள் மூன்று அத்தியாயங்களில் பூரணமாகவும் சிறப்பாகவும் வரையப்பட்டிருக்கின்றன. பல்லவர்களினதும் பாண்டியர்களினதும் வமிசாவளிகள் அழகாகத் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், பதின்மூன்றும் நூற்றாண்டில் செழித்தோங்கி நின்ற சோழ பாண்டிய ஏகாதிபத்தியங்களின் பிரதாபங்களும் சிறப்பாக வரையப்பட்டிருக்கின்றன. கலையிலும் இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கு மிருந்த தொடர்புகளிலும் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. புத்தகத்திலுள்ள படங்கள் கவர்ச்சிகரமா யிருக்கின்றன.

"தி ஹிந்து", சென்னை.

பழங்கால நாகரீகத்தைப்பற்றி நிலவி வரும் சில கருத்துக்களை உள்ளிட்டு தென் இந்தியாவின் சரித்திரத்தை அற்புதமாக எழுதியிருக்கிறீர்கள்...........பொதுவாக இப்புத்தகத்தை எழுதிய உங்களை நான் பாராட்டவேண்டும்.

சங். பிதா எச். ஹீராஸ், S.J.
பம்பாய்.

பழங்காலத் தமிழ் இலக்கியங்களைப் பயன் படுத்திக்கொண்டிருக்கும் ஒரு தனி விசேஷக்கதை இந்நூலில் நாம் காண்கின்றோம். மகத்தான சலியாத உழைப்பின் அறிகுறிகளும் புத்தகத்தினூடே மலிந்து காணுகின்றன. தெற்குக் கோடியில் வசிக்கும் மக்களினது அரசியல் பொருளாதார சமூக கலாசார சரித்திரத்தை நன்கு துருவி யெடுத்த சாதுர்யமான ஆராய்ச்சி உண்மைகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு தொகுத்திருப்பதுதான் ஸ்ரீ தம்பிமுத்துவினது முயற்சியில் அடைந்த பலன். மனப் பூர்வமான ஆராய்ச்சிக்கு இந்நூல் ஒரு அருமையான உதாரணம்.

நாவலர். எஸ். சோமசுந்தர பாரதி,
இளைப்பாறிய பேராசிரியர், மதுரை.

திராவிட நூலில் வசனநடை அலாதியான அழகு பொருந்தியது. அதில் கொடுக்கப்பட்டுள்ள வாதங்களின் கோவை அசைக்க முடியாதது.

வித்துவான் ஜி. சுப்பிரமணியம்பிள்ளை M.A.
அண்ணாமலைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்.

உங்கள் நூல் படிப்பதற்கு இனிமையா யிருக்கிறது. தமிழர் வகுப்பின் தெளிவானதும் தீர்க்கமானதுமான சரித்திர வரலாறு இது. உங்கள் ஆங்கில நடை மிகவும் நேர்த்தியா யிருக்கிறது. நீங்கள் மிகத் திறமையுடன் செய்து முடித்திருக்கும் இந்தச் சேவை பாராட்டற் குரியது.

சங். எஸ். ஞானப்பிரகாசர் ஓ.எம்.ஐ.,
யாழ்ப்பாணம்

இந்த இளம் சரித்திர ஆசிரியர் தமிழர் சரித்திரத்தை இலகுவான இனிய நடையில் எழுதி இருக்கிறார். கவைக்குதவாத வாதங்களையோ அல்லது நம்பமுடியாத கொள்கைகளையோ அவர் புத்தகத்தில் புகுத்தவில்லை. இலக்கியம், கலைகள், பழக்கவழக்கங்கள், அல்லது அரசாட்சிகள் முதலான எல்லாவற்றையும் அவர் நேர்மையுடன் மதிப்பிட்டிருக்கிறார்...........தமிழர் பரம்பரையை நமக்குச் சொல்ல அவர் முற்படும் பொழுது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தஸ்தாவேஜுகள் அவரது மனக்கண்களுக்கு முன்னால் வந்து நிற்கின்றன. தமிழர்களின் வமிசாவளி, அவர்களது கலாசாரப் பண்பாடு, அவர்களுடைய ஆட்சிப் பெருமை முதலியவைகளெல்லாம் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. சரித்திர ஆசிரியரென்ற முறையில் ஸ்ரீ தம்பிமுத்து சிறப்புடன் வெற்றிபெற்று விளங்குகிறார்.

"கேசரி"

இந்தியாவின் சரித்திரத்தையும், தனியாகத் தென்னிந்தியாவின் சரித்திரத்தையும் பற்றி எவ்வளவோ புத்தகங்களிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு நூலும் குறிப்பிட்ட ஒரு காலத்தையோ அல்லது ஒரு ஆட்சியையோ விரித்துரைப்பவைகளாகவேயுள்ளன. தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய்ச் சரித்திர கலாசார பாஷா தொடர்புகளிருந்தும் தென்னிந்திய சரித்திர நூல்களில் இலங்கையைப்பற்றிச் சில குறிப்புகளை மட்டுமே நாம் காண்கிறோம். இன்றுகூட தென்னிந்திய பல்கலைக் கழக மாணவர்களுக்கும் இலங்கைத்தீவு ராவணன் அரசாண்ட ஏதோ ஒரு கற்பனைத் தீவாகக் காட்சியளிக்கின்றதேயன்றி, திராவிட நாகரீகம் தலைசிறந்து விளங்கிய நாளில் அந்நாகரீகப் பண்பாட்டுக்குப் பக்கபலமாயிருந்த நாடுகளில் இலங்கையுமொன்றென்பது தெரியவில்லை. இப்பெருங் குறையை, ஸ்ரீ தம்பிமுத்துவின் நூல் தீர்த்துவைக்கின்றது.

திராவிடர்களென்னும் தமிழர்களின் கலாசார, நாகரீக, சமூகப் பொருளாதார சரித்திரத்தைப்பற்றி இவ்வளவு மேற்கோள்களுடன் கூடிய விரிவான நூல் இதுவரை வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. தாய் மொழியிலேயே சகல பாடங்களையும் போதிக்கச் சுதந்திர இலங்கையும் சுதந்திர இந்தியாவும் விரும்பும் இக்காலத்தில் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்ட ஸ்ரீ தம்பிமுத்துவின் நூல் பெரிதும் பயன்படுவதாயிருக்க வேண்டும். இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள தமிழ் மாணவர்கள் பிறதேச சரித்திரங்களைப் படிக்க முற்படுவதின் முன் தங்களது பூர்வீக சரித்திரத்தைக் கற்றுணர்ந்தவர்களாயிருப்பது அவசியம். அதற்கு இதைவிடச் சிறந்த, ஆதாரப் பூர்வமான நூல் வேறொன்று இருக்கமுடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.

கே. வீ. எஸ். வாஸ், M.A.
*நியூஸ் எடிட்டர், வீரகேசரி,*
*கொழும்பு.*

# பொருளடக்கம்.

## 1-ம் பாகம்


அத்தியாயம்


1. சரித்திரத்துக்கு முந்தின காலம்
2. ஆரியர் வருகை
3. ஆரியவர்த்தம்—தட்சின பாதம்
4. சரித்திரகாலத் தொடக்கம்
5. தமிழ் இலக்கிய வரலாறு
6. கடைச்சங்க நூல்கள்
7. சங்க காலத்துத் தமிழ் அரசர்கள்
8. திராவிட நாட்டின் அரசியல் (கி. பி. 300—900)
9. தமிழ் இலக்கிய வரலாறு.


## 2-ம் பாகம்


1. சோழர் பேரரசாட்சி
2. சோழரும் பாண்டியரும் 1070—1216
3. பாண்டியர் பேரரசாட்சி
4. தமிழ் அரச குடும்பங்களின் வீழ்ச்சி
5. பிந்திய சோழ பாண்டியர்காலத் தமிழ் இலக்கியம்
6. நாயக்கர் ஆட்சியும் ஆங்கிலேயர் ஆட்சியும்.

இந்திய ஜனங்கள்




1. Aryans—ஆரியர்
2. Mongolian—மொங்கோலியர்
3. Arye-Dravidians—ஆரிய திராவிடர்
4. Mongolo-Dravidians—மொங்கோலிய திராவிடர்
5. Telugu—தெலுங்கு
6. Dravidians—திராவிடர்
7. Aryo-Dravidians—ஆரிய திராவிடர்
8. Tamil—தமிழ்
9. Malayalam—மலையாளம்
10. Kannada—கன்னடம்
11. Tulu—துளுவம்
12. திராவிட மொழிகள் பேசப்படும் பகுதி
13. Sytho-Dravidians—சித்தோ-திராவிடர்

# திராவிட மக்கள்

## முதல் பாகம்

## அத்தியாயம் 1

### சரித்திரத்திற்கு முந்தின காலம்.—இந்திய மக்கள்.

இந்திய நாடும் ஒரு சிறு கண்டம் என்றே சொல்லப்படும். அது, ஏறக்குறைய, ஐரோப்பாவின் அளவு பெரிதானது. அங்கும், ஐரோப்பாவில் இருப்பதுபோல், மொழி, பண்பாடு, அரசியல் சரித்திரம், இவற்றில் வேறுபட்ட பலவகையான மக்களினங்கள் வாழ்ந்து வருவதைக் காணலாம். வடக்கேயுள்ள பட்டாணியர், பஞ்சாபியர், இரஜபுத்திரர்; மேற்கே காணப்படும் குஜராத்தியர், மராட்டியர்; கிழக்கேயுள்ள வங்காளியர், பீஹாரியர்; தெற்கேயுள்ள ஆந்திரர், கன்னடர், தமிழர், மலையாளிகள், இலங்கையிலுள்ள சிங்களர் இவர்கள் அனைவரும் இந்திய மக்களேயாவார்கள்.

இவர்கள், மிகப்பழங்காலமுதல் இந்திய நாட்டைப் படையெடுத்து வந்து, குடியேறிய பல்வகைக் குழுவினரின் வழித்தோன்றியவர்களேயாவர். அக்குழுவினர்களுள், திராவிடரும், ஆரியரும், இஸ்லாமியரும் மிகவும் முக்கியமானவர்கள். திராவிடர்களும் ஆரியரும் இந்துசமயத்தவர்கள்; ஆதலால் அரசியலில் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்களாக வகுக்கப்பட்டுள்ளனர். அராபியரும், துருக்கர்களும், ஆப்கானியரும், மங்கோலியரும் முஸ்லீம் கூட்டத்தினர் ஆவர். இந்துக்களாய் இருந்தவர்களும் பலர் முஸ்லீம்களாக மாறியிருக்கின்றனர். ஏனைய மதத்தினர்களாகிய பௌத்தரும், சமணரும், கிறிஸ்துவரும், முன் இந்துக்களாய் இருந்தே பின் அவ்வாறு மாறியவர்கள். ஆகையால் திராவிடக் குழுவையாவது, ஆரியக்குழுவையாவது சார்ந்தவராக வேண்டும்.

### திராவிட இனத்தவர் :—

மிகத்தொன்மை வாய்ந்த நாகரிக மக்களாக விளங்கும் திராவிடர், விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள இந்திய நிலப்பரப்பு முழுவதிலும் வாழ்ந்து வருகின்றனர். வடகிழக்கிலும், வடமேற்கிலும் வாழ்ந்துவரும் மக்கள்கூட, திராவிடமும் ஆரியமும், அல்லது திராவிடமும் மங்கோலியமும், அல்லது திராவிடமும் சீத்தியமும் கலந்துள்ளவர்களே என்னலாம். (படம்—1) ஆரியர்

கள் அளவிற் சுருங்கியிருந்தாலும், பல திராவிடக்கூட்டத்தாரிடைத். தங்களுடைய மொழியையும், பண்பாடுகளையும் பரவச் செய்து, அவர்களைத் தங்களோடு சேர்த்து, 'தங்கள் நிலையைப் பலப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் வடக்கே அதிகமாக உள்ளனர். இந்திய நாடெங்கும் விரவிக் காணப்படும் முஸ்லீம்கள் வட இந்தியாவில் சில பகுதிகளில் மிகுந்து காணப்படுகின்றனர். ஆகவே, அவ்வாறு மிகுந்துள்ள பகுதிகளில் தங்களுக்கே ஆட்சி உரிமை கிடைக்கவேண்டும் என்று அவர்கள் இப்பொழுது பாக்கிஸ்தானை ஸ்தாபித்துவிட்டார்கள்.

ஆரியம் என்றும் திராவிடம் என்றும் மக்களில் இனவேறுபாடு இப்பொழுது இந்தியாவில் இல்லை என்றும், அது மொழிகளின் இனவேறுபாட்டையே குறிக்கிறதென்றும் சில அறிவாளிகள் உண்மையாகவே நம்புகின்றனர். அவ்விரு குழுவினரிடையும் நெடுங்காலமாக ஏற்பட்ட உட்கலப்பாலும், தாங்கள் பொதுவாகத் தழுவிக்கொண்ட சமய உணர்ச்சியாலும், அவர்களுடைய தூய தனிநிலை வேறுபாடுகள் இப்பொழுது குறைந்திருப்பதில் ஐயமில்லை. ஆனாலும், அவ்விரு குழுவினரும் இரண்டறக்கலந்து ஒரே இனமாகிவிட்டனர் என்று சொல்லமுடியாது.


இந்தியாவிற்கு அடுத்த வடமேற்கில், திராவிட இனத்தைச்சேர்ந்த பிராகுவி என்ற மொழியொன்று பயிலப்படுகிறது. இன்னும், சிந்துநதி தீரத்தில் புதைந்துகிடந்த சில நகரங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அவை, சரித்திரகாலத்திற்கும் அப்பால், சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த திராவிடர்களுக்கு உரியனவாகக் கருதப்படுகின்றன. இத்தகைய சான்றுகளைக் கொண்டே, ஒருகாலத்தில் அதாவது, சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்தியா முழுவதும் திராவிடர்களுடைய ஆட்சியில் இருந்துவந்ததாகக் கொள்ளலாம். ஆனால். இக்காலத்திலோ, தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், துளு முதலிய திராவிட மொழிகளைப் பயின்றுவரும் திராவிட இனத்து மக்கள் சென்னை மாகாணம், கொச்சி, திருவாங்கூர், புதுக்கோட்டை, மைசூர், ஐதராபாத்தில் ஒரு பகுதி என்னும் இவற்றினுள் அடங்கியவர்களாகக் குறைந்தே காணப்படுகின்றனர்.

இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்துவரும் வடக்கும் கிழக்குமான மாகாணங்களையும் தற்காலத் திராவிட நாட்டின் பகுதியாகவே கொள்ளவேண்டும்.


## திராவிடக் குழுவின் தோற்றம் :—

தமிழ் என்னும் பெயரிலிருந்து சிதைந்து தோன்றிய 'திரவிட' அல்லது 'திரமிள' என்னும் ஆரியச் சொல்லில் இருந்தே திராவிடம் என்னும் சொல் தோன்றியது. தமிழ் அல்லது திராவிட இனமக்களின் தோற்றம் நமக்கு எட்டாத மிகப் பழைய காலத்ததாய் மறைந்து கிடக்கிறது. அதைப்பற்றிப் பலவித

மொகோந்தோ ஜாறவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை



மரித்தவர்களை அடக்கம் பண்ணும் மட் குடம்



விந்தைக் கதைகளும் மாறுபட்ட கொள்கைகளும் உண்டு. இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள மலைகளிலும் காடுகளிலும ஒதுங்கி வாழ்ந்துவரும் பழங்குடி மக்களைக் காணும்பொழுது, திராவிடர்கள் வெகுநாட்களுக்குமுன் இந்தியாவைப் படையெடுத்து வந்த ஒரு குழுவினர் என்றே தெரிகிறது. அவ்விதம் படையெடுத்து வந்தவர்கள், மிலேச்சர்களாய் அங்கு வாழ்ந்துவந்த தொல்குடி மக்களைக் காடு மலைகளுக்குத் துரத்திவிட்டுத் தாங்கள், செழித்துப்பரந்த வெளி நிலங்களிலும், வண்டல் வளமிக்க ஆற்றோரங்களிலும், சிந்து நதி தீரத்திற் கண்டுபிடித்ததுபோன்ற ஒரு சிறந்த நாகரிக வாழ்க்கையை நாட்டியிருக்கலாம். வட இந்தியாவில் சரித்திரகாலத்திற்குமுன் வழங்கிய திராவிட நாகரிகமானது, பிற்காலத்திற் படையெடுத்துவந்த வேற்றினத்தோரால் ஒன்று, அழிக்கப்பட்டிருக்கவேண்டும், அன்றேல், மாற்றி அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இந்தியாவின் தென் பாகத்தில் திராவிட நாகரிகம் செழித்தோங்கி, சரித்திரகாலம் தோன்றிய பின்னும் யாதோர் இடையூறுமின்றித் தொடர்ச்சியாய் வளர்ந்துவந்ததால், தமிழர்கள் கல், இரும்பு என்ற பலவிதக் கால நிலைகளிலும் பயின்றுவந்த பண்பாடுகள் அனைத்தும், அழிவு மாறுதல்களுக்குள்ளாகாமல் அப்படியே வழங்கப்பட்டு வருவதை நாம் இன்னும் காணலாம். அவ்விதம் வாழலுற்ற திராவிடர் பெரும்பாலான தொல்குடி மக்களையும் தம்மோடு சேர்த்துக் கலந்துகொண்டிருக்கவேண்டும். இவ்வாறு ஒன்றிக் கலந்துகொள்வதைத் தென் இந்தியாவிலும், இலங்கையிலும் இன்றும் காணலாம். வேடர்களும் இருளர் என்னும் கூட்டத்தாரும் நாகரிக மக்களோடு மெதுவாக ஒன்று சேர்ந்து வருகிறார்கள்.

### சுமேரியர்கள் :—

கிறிஸ்துவின் காலத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், ஈராக் என்று இப்பொழுது வழங்கப்படும் நாட்டில் சுமேரியர் என்று ஒரு கூட்டத்தார் வாழ்ந்து வந்தனர். அவர்கள் கட்டியுள்ள பட்டணங்கள் பல இப்பொழுது வெட்டியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து அவர்களே மனித நாகரிகத்திற்கு அடிகோலிய முதல் மக்கட்குழுவினர் என்பதை ஐயமின்றித் தெரிந்துகொள்ளலாம். டாக்டர் ஹால் என்னும் அறிஞர் சுமேரியர்களைத் தென் இந்திய இந்துக்களோடு, அதாவது, திராவிட மக்களோடு ஒப்பிட்டிருக்கிறார். ஆதலால், பழைய சுமேரிய நாட்டுப் பகுதியிலிருந்துதான் திராவிடர்களுடைய முன்னோர்கள் வந்திருக்கவேண்டும் என்று பலரும் கருதுகின்றனர்.

### சிந்து நதி தீரம் :—

சிந்து வெளி நிலத்தில் நடத்தப்பட்ட புதைபொருட் சோதனையின் விளைவாக, சரித்திர காலத்திற்கு முந்திய இந்திய நாகரிகம் சுமேரிய நாகரிகத்தோடு பெரிதும் ஒத்திருப்பது நன்கு

வெளியாகிறது. ஆனாலும், சுமேரியாவில் இருந்துதான் அந்த நாகரிகம் வந்தது என்று சொல்லமுடியாது. அப்புதைபொருட் சோதனையிலிருந்து, மிகப் பழையகாலத்திற்கு முன்னரே இந்திய நாகரிகம் தோன்றியிருந்தது என்று மட்டும் கொள்ளலாம். ஒரு வேளை தொடர்புடைய இருவகைக் கூட்டத்தார் ஒரே காலத்தில் இத்தகைய நாகரிகத்தை இரண்டு இடங்களிலும் நிறுவி இருக்கலாம்.

## புதைக்கும் பழைய வழக்கம் :—

மண்ணால் வனைந்த தாழிகளில் இறந்தவர்களை வைத்து மூடிப் புதைப்பது பழங்கால மக்களின் வழக்கங்களில் ஒன்று. இவ்வழக்கம் சுமேரியருக்கும் திராவிடருக்கும் பொதுவானது. ஆனால், ஆரியர்களுக்கும், அவர்களுக்குப்பின் இந்தியாவிற்கு வந்த ஏனைய மக்களுக்கும் இவ்விதம் புதைக்கும் வழக்கம் கிடையாது. இவ்வாறு புதைக்கப்பட்ட மட்கலங்கள் பல, சிந்து வெளி நிலத்திற் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை திராவிடர் ஒரு காலத்தில் அங்கு வாழ்ந்து வந்தமைக்குச் சான்று பகர்வனவாகும். கிறிஸ்துவின் காலத்திற்குப் பின்னரும் சில நூற்றாண்டுவரையில் தென் இந்தியாவில் இந்த வழக்கம் இருந்து வந்திருக்கிறது. கிள்ளி வளவன் என்னும் சோழ அரசன் இறந்ததும், அவனை மட்கலத்தால் மூடிப் புதைத்ததாகத் தமிழ் இலக்கியத்திலும் கூறப்பட்டுள்ளது. (புறநானூறு—228) இன்னும் தென் இந்தியாவில் நல்ல முறையிற் புதைபொருட் சோதனைகள் நடத்தப்படவில்லை; ஆயினும், தற்செயலாகப் பல செய்திகள் கண்டுபிடிககப்பட்டுள்ளன. திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரவருணி நதிக்கரையிலுள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் செத்தோரைப் புதைத்துவைத்த தாழிகள் ஆயிரக்கணக்காகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சென்னை மாகாணம் முழுவதிலும் எங்குப் பார்த்தாலும், கட்டிட வேலைகளுக்காகத் தோண்டும்பொழுதெல்லாம் புதைந்த தாழிகள் காணப்படுகின்றன. திராவிடக் குழுவினரிடையே தமிழ் மக்கள்தான் இவ்வழக்கத்தை விடாது கையாண்டு வந்திருக்கிறார்கள்.

## சிந்துவெளி நாகரிகம் :—

சிந்துவெளிப் பகுதியில் நாகரிகத்தின் உயர்நிலை யெய்தி வாழ்ந்துவந்த திராவிடர் தங்களைவிடக் குறைந்த நாகரிகமுடைய ஒரு குழுவினரால் அமுக்குண்டனர். புதைபொருட் சோதனைச் சான்று கொண்டும், அவர்களைப் படையெடுத்து மோதிய ஆரியர்களே எழுதியுள்ள குறிப்புகளிலிருந்தும், பழங்காலத் திராவிடரின் உயரிய நாகரிகம் நன்கு தெளியப்படும். அவர்களுடைய நகரங்களில் பல அடுக்கு மாடங்கள் கொண்ட உயர்ந்த கட்டிடங்கள் நூற்றுக்கணக்காக இருந்தன. சாதாரண மக்கள்கூட நீர்ச் சாலகங்களும் தண்ணீர் வசதிகளும் அமைந்துள்ள நல்ல வீடுகளில் வாழ்ந்திருந்தனர். உலோகங்களைக் கொண்டு அவர்களுக்



குத் தொழில் செய்யத் தெரியும். பளிங்கிலும் மண்ணிலும் பல்வகைப் பாத்திரங்கள் செய்தனர். மொகஞ்சதரோவில் கிடைத்த நடனமாதின் உருவெழுதிய வெண்கலப் பாவையொன்று, தற்காலம் தென் இந்தியாவிற் காணப்படும் ஆடற்பெண்ணை அப்படியே ஒத்திருக்கிறது. அப்பழங்கால மக்கள் சித்திர எழுத்துக்களால் எழுதவும் கற்றிருந்தனர். சிந்து வெளியிலே கண்டெடுக்கப்பட்ட பல சாசனங்களின் பொருளைத் தெரிந்துகொள்வதற்காக இன்னும் கலைஞர்கள் முயன்றுவருகிறார்கள். தென் இந்தியாவில் இத்தகைய சித்திர எழுத்துக்கள் இதுவரை காணப்படாவிடினும், அவ்வித எழுத்துமுறை பொதுவாகத் திராவிடர்களிடைப் பயிலப்பட்டு வந்ததாகக் கொள்ளலாம்.

## பழங்காலத் திராவிடரின் சமயக் கொள்கைகள் :—

தற்காலத் திராவிடர்கள் இந்துக்கள்தான்: ஆனால், கிறிஸ்துவமதம், இஸ்லாமியமதம் என்பதுபோல் இந்துமதம் என்பது ஒன்றில்லை. இந்துமதம் ஒரு மதகுருவால் அமைக்கப்பட்டது என்றும் சொல்வதற்கில்லை. அது ஐம்பது நூற்றாண்டுகளாக ஆரியர் திராவிடர் என்ற இருவகை மக்கட் குழுவினருமாகச் சேர்ந்து திரட்டி எடுத்த அனுபவ ஞானத்தையே குறிப்பதாகும். இந்துமதத்தில் முதன்மையாக வைணவம், சைவம் என்று இருபிரிவுகள் உண்டு. பொதுவாக, சைவம் எனப்படும் சிவநெறியானது பழங்காலத் திராவிடர்களின் சமயக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டெழுந்தது என்று சொல்லலாம். சிவநெறியே தென் இந்தியாவிலும் வட இலங்கையிலும் வாழ்ந்துவரும் திராவிட மக்களுக்கு உகந்த நெறியாக வழங்கி வருவதை இன்றும் காணலாம். இன்னும், சைவ சித்தாந்த உண்மை பிறந்தது தென்றமிழ் நாட்டிலே என்பது உளங்கொளற்பாலதாகும்.

பறவைகளும் விலங்குகளும் சூழ, ஒரு மனிதன் கால்மேல் கால்போட்டு வீற்றிருப்பதுபோன்ற உருவம் பொறித்த இலச்சினைகள் பல மொகஞ்சதரோவிலிருந்து கிடைத்துள்ளன. சிவனுக்குப் பொதுவாகச் சொல்லப்படும் சாயல், தோற்றங்கள் எல்லாம் இந்த உருவத்திற்கும் அமைந்திருக்கின்றன; ஹீராஸ் அடிகள் போன்ற சில அறிஞர்கள் இந்த இலச்சினையிலுள்ள மனித உருவமே சிவபெருமானுடைய ஆதி உருவென்றும், அதைச் சுற்றிலும் காணப்படும் குறிகளும் அடையாளங்களும் அக்காலத் திராவிடரிடைப் பிரிந்து காணப்பட்ட பல்வேறு மக்கள் கொண்டுள்ள அடையாளக்குறி என்றும் கருதுகின்றனர். இக்காலத் திராவிட மக்கள் வழிபடுவதுபோல், அவர்கள் முன்னோர்களாகிய பழங்காலத் திராவிடரும் சிவனை இலிங்கவுருவாகவும் வைத்து வழிபட்டனர். ஆரியர் வருகைக்கு முன்னர் வட இந்தியாவில் வதிந்த திராவிட மக்கள் தொழில் முறைகளிலும் வேலைத்திற நுட்பங்களிலும் சிறந்து விளங்கியதன்றி, மற்றும் வானநூல், மருத்துவம், விஞ்ஞானம் போன்ற பல கலைகளிலும் கைதேர்ந்தவர்களாய் இருந்தனர். இந்தியாவின் வெப்பதட்பங்

களால் உண்டாகக்கூடிய நோய்களையும் அவற்றைத் தீர்த்து வைக்கும் உள்நாட்டுத் தழை மருந்துகளையும் பற்றி நன்கு தெரிந்திருந்தனர். ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்து இப்பழந்திராவிடர்களோடு தொடர்பு கொண்டபின்னரே, அவ்வாரியரும் இத்துறைகளிற் பயின்று தேர்ச்சிபெறலாயினர் என்று சொல்லப்படுகிறது. பின்னர், சமஸ்கிருத மொழியில் தோன்றிய கலைநூல்கள் எல்லாம் இவ்விதத் தொடர்பின் பயனாகவே எழுதப்பட்டவை. (முக்கர்ஜி எழுதிய "இந்து நாகரிகம்" என்னும் நூலைப் பார்க்கவும்.) சிந்துவெளியிடையே கண்டுபிடித்த இவ்வளவு உயரிய நாகரிகம் அந்த எல்லையளவுக்கு மட்டுமே உரியதாக இருந்திருக்க முடியாது. தென் பகுதியிலுள்ள திராவிடர்களும் அதையொத்த உயரிய நாகரிகமும் பண்பாடும் பெற்றவர்களாய் இருந்திருக்கவேண்டும். பின்வரும் சில அத்தியாயங்களில் தமிழரைப் பற்றிய வரலாறும் இலக்கியமும் இவ்வுண்மையை எவ்வாறு விளக்குகின்றன என்பதைப் பார்ப்போம்.

# அத்தியாயம்—2

## ஆரியர் வருகை :—

வேதங்களைக் கொண்ட ஆரியர் முதல் தற்கால ஐரோப்பியர்கள் வரை, இந்தியாவைப் படையெடுத்துவந்த ஒவ்வொரு கூட்டத்தாரும், திராவிடர்களுடைய பழங்கால நாகரிகத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டே அதன்மேல் தங்கள் தங்கள் நாகரிகத்தை நிறுவ முயன்றும், நிறுவியுமுள்ளார்கள். ஓர் அழகிய மாளிகையின் அடிப்படையானது எவ்வாறு வெளியே பார்ப்பவர்களுக்குத் தோன்றாதோ, அதேபோல் இந்தியப் பண்பாடுகளுக்கு அடிநிலையாக அமைந்துள்ள திராவிட நாகரிகமும் வெளிப்படாது மறைந்துகிடக்கிறது. ஆரியர் படையெடுப்பு முதல் ஆங்கிலர் ஆட்சி வலிபெற்ற இக்காலம்வரை அந்த அடிப்படையின்மேல் எழுப்பப்பட்டுள்ள மேற்கோப்புக் கட்டிடங்களின் ஒவ்வொரு பகுதியையும் விடாமல் யாவரும் கற்றறிந்து களிப்படைகின்றனர். ஆனால் அத்தகைய பண்பாட்டுக் கோயிலைத் தாங்கிநிற்கும் அடிப்படையாது என ஆய்ந்தறிவார் சிலரேயன்றோ! அம்மாளிகையைத் தாங்கிநிற்கும் அடிப்படையாகிய நம் பழங்கால முன்னோர்களால் அமைக்கப்பட்ட கட்டிடம், காலம் என்னும் மணலால் மூடப்பட்டு, ஆழப் புதைந்து கிடக்கிறது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்தியா எவ்வளவு நாகரிகம் வாய்ந்த நாடாக இருந்தது என்பதை அறிந்தோம். இந்தியாவிற்கு அடுத்த மேற்குப் பகுதியிலுள்ள ஈரான், ஈராக், எகிப்து, பாலஸ்தீனம் போன்ற மற்ற நாடுகளிலும் அதே காலத்தில் அதற்கு ஒப்பான நாகரிகம் வளர்ந்து வந்தது. அந்த நாடுகளில் தோன்றி வாழ்ந்துவந்த மக்கள் எல்லாரும் தொடர்புடையவர்களாய், ஒத்த பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டிருந்தார்கள். தென் இந்தியாவில் வாழ்ந்துவந்த திராவிடர்களும் அத்தகைய குழுவினரின் வழித்தோன்றியவர்களேயாவர். கிறிஸ்துவின் காலத்திற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன், மத்திய ஆசியாவிலிருந்து ஒரு வெள்ளைநிறக் கூட்டத்தார் கிளம்பி மேற்கு ஐரோப்பாவைப் பாழ்படுத்திப் பின்னர் தெற்கிலுள்ள நாகரிக நாடுகளின்மீதும் பொங்கி எழுந்து தாக்கினர்.

ஐரோப்பாவில் வாழ்ந்த தொல்குடி மக்களை அவர்கள் எளிதில் வென்று வடபகுதியில் குடியேறினர். இக்காலத்தில் அவர்களுடைய கான்முளைகளாய் இருப்பவர்கள் நார்டிக் வகுப்பினர் என்று பெருமையுடன் தங்களைக் கூறிக்கொள்கின்றனர். ஆனால், அப்பொழுது அவர்கள் வென்று துரத்திய பழங்குடி மக்களைவிடத் தாங்கள் ஒன்றும் அவ்வளவு மேலான நாகரிகம் படைத்திருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள், அநேகமாய், மிலேச்சர்களைப்போன்ற கீழ்நிலை வாழ்க்கையையுடையவர்களாய், இயற்கைப் பொருள்களைப் பல கடவுள்களாகக் கொண்டு வழிபட்டுவந்

தனர். அந்தக் குழுவைச் சேர்ந்த சில கூட்டத்தார் தெற்கு நோக்கிவந்து சிறிது சிறிதாய் நடுநிலக் கடல் பகுதியிலுள்ள நாகரிக மக்களையெல்லாம் வென்றனர். அவ்விதம் வென்ற மக்களைத் தங்களோடு சேர்த்துக்கொண்டதோடு, அவர்களுடைய பண்பாடுகளையும் வாங்கிக்கொண்டு, அவற்றை வளம்படுத்தித் திருத்தியமைத்து, வேறொரு நாகரிகமாய்த் தோன்றும்படி அங்கேயே புகுத்தினர். இவ்விதம் எழுந்த புதிய நாகரிகம் கிரீஸ் நாட்டிலும் ஈஜியன் கடல் தீவுகளிலும் மிகவும் உச்சநிலையை அடைந்தது. அங்கிருந்து மெதுவாக இத்தாலிய நாட்டினுட் புகுந்து, பெருமை வாய்ந்த ரோமன் நாகரிகமாக அது வளர்ந்தோங்கியது. அதன் பின்னர் கான்ஸ்டென்டைன் என்னும் புகழ்பெற்ற பேரரசரின் ஆட்சியில் (கி. பி. 284—305) ரோமர்கள் கிறிஸ்துவ மதத்தைத் தங்கள் நாட்டு மதமாக ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு வளர்ந்தோங்கிய கிறிஸ்துவ மதமும் ரோமர் நாகரிகமும் தென் ஐரோப்பாவிலிருந்து வட ஐரோப்பா முழுதும் பரவி, பிரிட்டிஷ் தீவுகளையும் அடைந்தன. கிறிஸ்துவ மதம் தென் ஐரோப்பாவில் ஏற்படு முன், அங்கு இயற்கைப் பொருள்களையே ஆண் தெய்வங்களாகவும், பெண் தெய்வங்களாகவும் கொண்டு வழிபட்டுவந்தனர். அவர்களுடைய அப்பல்லோ, மார்ஸ், ஜுப்பிட்டர் போன்ற தெய்வங்களின் பெயர்கள் யாவரும் அறிந்தனவே.

## இந்தியாவில் ஆரியர்கள் :—

ஐரோப்பாவின்மீதும், நடுநிலக்கடல் நாடுகளின்மீதும் எதிர்த்துச் சென்ற வெள்ளைநிறக் கூட்டத்தார், அதேகாலத்தில் இந்தியாவிற்கும் வரத் தொடங்கினர். அவ்விதம் இங்குவந்த அக்கூட்டப் பகுதியினர் ஆரியர் என்று தம்மைக் கூறிக்கொண்டனர். அப்பெயரே அந்தக் குழுவினர் அனைவருக்கும் பின்னர் வழங்கலாயிற்று.

வேறுபட்ட வெப்ப தட்பங்களையுடைய வெவ்வேறு நாடுகளுக்கு ஆரியர் எவ்வாறு சென்று குடியேறினர் என்பதைப் பார்த்தோம். அதனால் அவர்கள் பல பகுதியினராகப் பிரிந்து வேறுபட்டு, ஒவ்வொரு பகுதியினரும் தத்தமக்கு உகந்த வழியில் வாழ்க்கைப் பண்பாடுகளை அமைத்துக்கொண்டனர். அப்படியிருந்தும், இந்நாளில் அவர்கள் பேசும் பலவகை மொழிகளிலும் ஒருவித ஒற்றுமையும், பொதுத்தன்மையும் விளங்கக் காணலாம். அவ்வினப் பகுதிகளின் மொழிகள் அனைத்தும் ஆரியக் குழுவினத்தைச் சேர்ந்ததாகச் சொல்லப்படும். ஆனால் ஆரியக் குழுவினத்து மொழிகளைப் பேசுவோர் அனைவரும் ஆரியக்கூட்டத்தினர் என்று சொல்லிவிடமுடியாது. தாங்கள் வென்றடக்கிய மக்களிடையெல்லாம் ஆரியர் தங்கள் மொழியைப் புகுத்தினர் என்பது நன்கு தெரிந்ததே. ஆரியர்களால் வெல்லப்படாத மக்கள் கூட அவர்களாற் பெரிதும் மாறுதல் அடைந்துள்ளனர்.



## வேதம் தோன்றிய காலம் :—

முதன் முதலாக வந்த ஆரியர்கள் சட்லெஜ், யமுனை என்னும் ஆறுகளுக்குத் தெற்கே வரவில்லை. அவைகளுக்கு வடபக்கமே தங்கிவிட்டனர். நாளடைவில் மேன்மேலும் ஆரியர்கள் வரத்தொடங்கி, தெற்கே சிந்து, கங்கை இவ்விரு ஆறுகளின் வளம் மிக்க கரையோரங்களாகப் பார்த்துக் குடியேறுவாராயினர். அப்பொழுதும், நிலையாக, அவர்கள் ஓரிடமென்று தங்காது, மேய்ச்சல் நிலங்களின் நாட்டமாகவே கன்று காலிகளுடன் திரிந்துகொண்டிருந்தனர். ஐரோப்பாவிலுள்ள தங்களைச்சேர்ந்த இனத்தாரைப்போல், இவர்களும் சூரியன், அக்னி, வாயு போன்ற பல இயற்கைத் தெய்வங்களையே வழி பட்டனர். இந்திரன் போன்ற வீரர்களையும் தெய்வமாக வணங்கிவந்தார்கள்.

செழிப்பான நிலத்திலே வந்து குடியேறியதும், அவர்களுக்கு இன்னும் அதிகமான நிலத்தைக் கைக்கொள்ளவும், பிறரை வென்று தாம் மேலோங்கவும் வேண்டும் என்ற விருப்பம் கிளர்ந்தெழுந்தது. அங்கு முன்னரே வாழ்ந்துவந்த நாகரிக மக்களின் பண்பாடுகளையும், வழக்க வழக்கங்களையும் ஆரியர்கள் விரைந்து கற்றுக்கொண்டனர். ஆனால் அவ்விதம் திராவிடர்களுடைய பண்பாட்டு வாழ்க்கை முறையைத் தாங்கள் மதித்துக் கைக்கொண்டார்களே தவிர, அப்பண்பட்ட பெருமக்களையும் மதித்தொழுகவேண்டுமென்ற எண்ணம் ஆரியர்களுக்கு இல்லை. அவர்களை இகழ்ந்து கீழ்ப்படுத்துவதையே நோக்கமாகக்கொண்டனர். ஆதலால் அவ்விரு திறத்தார்களுக்கும் நெடுநாளாக ஓயாத போராட்டம் இருந்துவந்தது.

ஆரிய முனிவர்களால் அந்தக்காலத்தில் பாடப்பட்டதாகச் சொல்லப்படும் இருக்கு வேதத்திலுள்ள பாடல்களில், தாங்கள் வந்து குடியேறிய புதிய நாட்டில் அக்கால ஆரியர் எவ்வாறு தங்கள் வாழ்க்கையை நடத்தினர் என்பதும், அவர்களுக்கு முன்னரே அங்கு வாழ்ந்துவந்த மக்கள் ஒவ்வொரு தடவையும் எவ்வாறு அவர்களை எதிர்த்தனர் என்பதும், அவர்கள் வாழ்க்கையில் எய்திய இன்ப துன்பங்கள் யாவை என்பதும் தெளிவாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளன. எவ்வளவோ தத்துவார்த்தப் பொருள்கள் இருக்கு வேதத்தில் அடங்கியுள்ளன என்று பிற்காலத் தத்துவ ஞானிகள் ஆராய்ந்து கூறியுள்ள போதிலும், அதிற் காணப்படும் பாடல்கள் எல்லாம், தங்களுக்கு நன்மையும் வெற்றியும் அளித்த கடவுளர்களைப் புகழ்ந்து பாராட்டுவனவாய், இன்னும் அத்தகைய உதவிகளை அளிக்கும்படி வேண்டுவனவாய், அரசியல் தன்மையையே முதன்மையாகக்கொண்டு விளங்குகின்றன.

அவர்களுடைய கடவுளர்களாகிய வீரர்களில் இந்திரனே முந்தியவன். அதனால், வேதப் பாடல்கள் பலவும் அவனை நோக்கியே பாடப்பட்டுள்ளன. ஆரியர்களுக்கு முன்னிருந்த பழங் குடிமக்கள் பல தொகுதியினராகப் பிரிந்து பிரிந்து இருந்தனர்.

அவர்களில் முன்னேற்றமுடைய இனத்தவர்கள் கோட்டை கொத்தளங்களில் வாழ்ந்தனர். ஆரியர்களை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் அவர்கள் எல்லோரும் ஒத்துழைத்ததாகத் தெரியவில்லை. ஆதலால் அவர்களைத் தாக்கிய ஆரியர்கள் அவர்களைத் தொகுதி தொகுதியாக எளிதில் வென்றுவிட்டனர். இருக்கு வேதம் 4;30—20 ஆவது பாடல், ஆரியர்கள் தாசர் கூட்டத்தாரின் அரசனான சம்பரனை வென்று. அவன் கோட்டைகளை அழித்ததற்காக இந்திரனுக்கு நன்றி கூறுகின்றது. 1;33—4 ஆவது பாடல் வேத வேள்விகளில் நம்பிக்கையற்ற தாசர்களை அழிக்கவேண்டுமென்று இந்திரனை வேண்டுகிறது. 4;30—21 ஆவது பாடல் முப்பதினாயிரம் தாசர்களை மோசடியாய்க் கொலை செய்ததைக் குறிக்கின்றது. (தாசர் அல்லது தசியூ என்பது ஆரியர் திராவிடர்களுக்கு இகழ்ச்சியாகக் கொடுத்த பெயர்.)

ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழையும்பொழுது அங்கு வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் செல்வமும் உரனும் படைத்தவர்களாய், நல்ல முறையில் நாகரிக வாழ்வு பூண்டிருந்த செய்தியை இருக்கு வேதப் பாடல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அவர்களுடைய நகரங்கள் நூற்றுக்கணக்கான மாளிகைகளைக் கொண்டிருந்தனவாகக் கூறப்படும். நாம் இவ்வுண்மையைப் புதைபொருட் சோதனைகளின் வாயிலாகவும் தெரிந்துவருகிறோம். தங்கள் எதிரிகளுடைய நகரங்களின் சிறப்பைக்கண்டு விம்மிதங்கொண்டு வியந்த செய்தியை அவர்களே அடக்கமுடியவில்லை. ஆரியர்கள், உண்மையில், திராவிடர்களிடமிருந்தே கட்டிடங்கள் கட்டவும், பட்டணங்களில் வாழவும் கற்றுக்கொண்டனர். ஆனால் ஆரியர்களும் சில புதிய வழக்க பழக்கங்களை இந்தியாவுக்குக் கொண்டுவந்தனர் என்பதில் ஐயமில்லை. அவர்கள் செத்தவர்களைக் கொளுத்திக் கரைக்கும் வழக்கமுடையவர்கள். உள்நாட்டுப் பழக்கமான மூடிப்புதைக்கும் முறை அவர்களுக்கு அநாகரிகமாகத் தோன்றியது. அதனால், திராவிடர்களும் நாளடைவில் ஆரியர் முறையைக் கையாளத் தொடங்கினர். ஆரியர்கள் விலங்குகளின் வெந்த இறைச்சியைக் கடவுளர்களுக்குப் படைத்தனர். அவ்வித வேள்விச் சடங்குகளுக்குச் சிறந்த பலன்கள் உண்டென்றும் நம்பினர்.

இருக்கு வேதம் 7;21—5 ஆவது, 10;99—3 ஆவது பாட்டல்கள் தாசர்களையும் மற்றும் அவ்வினத்தவர்களையும் இலிங்க வழிபாடு செய்கிறவர்கள் என்று இகழ்ச்சியாகக் கூறுகின்றன. இதிலிருந்து ஆரியர்கள் திராவிடர்களுடைய மதக்கொள்கைகளை முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. திராவிடர்கள் தாங்கள் பயின்ற மொழியில், தொண்டையைத் தொல்லைப்படுத்தி எழுப்புகின்ற ஒலிகளைக் களைந்து, இயல்பாக எழுகின்ற இன்னொலிகளையே கொண்டிருந்தனர். இச்சிறப்பை இன்னும் தமிழ் மொழியிற் காணலாம். இதை மொழிக்கு ஒரு குறை என்று சிலர் கருதுவர். அதனால் ஆரியர் திராவிட மொழிகளுக்கு விளக்கம் இல்லையென்று ஏளனம் செய்தனர்.



**புராதன காலம் :—**

ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நிகழ்ந்த போராட்டத்தின் அடுத்த படியைப் புராணகாலம் என்று சொல்வர். புராணங்களும் பழங் கதைகளும் சரித்திரகாலத்திலே எழுதப்பட்டிருப்பினும், அவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் நடந்த கதைகளையே கொண்டுள்ளன. ஆரியர்களும் திராவிடர்களும் தங்கள் தங்கள் வீரச்செயல்களை அழகிய கதைகளாய் அமைத்திருந்தனர். பிற்காலத்தில், அவர்கள் நட்புக்கொண்டு உடனுறைந்தபோது, அக்கதைகள் ஒன்றோடொன்று பின்னிக் கலந்துகொண்டன. அவற்றைப் பின்னர் பக்திமான்களாயுள்ளார் எழுதத் தலைப்படுகையில், அவற்றின் அரசியல் தன்மையை அறவே மறந்துவிட்டனர். இக்கதைகளின் மூலமாய் மதத்தைப் பரப்பவேண்டும் என்பதே அவர்கள் நோக்கம். அதனால் மிக்க உயர்வு நவிற்சியுடனும் ஆரியர்களுக்கு ஏற்றம் உண்டாகும்விதத்திலும் அவைகள் எழுதப்பட்டுள்ளன.

திராவிடர்கள் இந்தியாவின் வடபாகத்தைக் கைவிட்ட பின்னருங்கூட, செல்வமும் ஆற்றலும் நிறைந்த அசுரர், அரக்கர் என்று வழங்கப்பட்டனர். அரசியல் நிலையில் எதிர்த்து நின்றாலும், ஆரியரும் திராவிடரும் ஒருவரிடமிருந்து மற்றவர் பல்வகை வாழ்க்கை முறைகளைக் கற்றுப் பின்பற்றியபடியால், இருவருடைய பழக்க வழக்கங்களும் கொள்கைகளும் பலவிதத்தில் ஒத்திருந்தன. இவ்விதம் பரிமாறிக்கொள்வதற்கு நீண்டகாலம் சென்றிருக்கவேண்டும். ஆகையால், வேதகாலத்திற்கும் புராணகாலத்திற்குமிடையில் பல நூற்றாண்டுகள் சென்றதாகக் கொள்ளலாம்.

ஆரியருக்கும் திராவிடருக்கும் நேர்ந்த போர், முதலில் சிறு சிறு கூட்டத்தாரிடையே தோன்றிப் பின்னர் இந்தியா முழுவதும் பரவிவிட்டது. பல தடவைகளில் ஆரியர் அழியோடு அழிந்துவிடும் விதத்தில் அவர்களுக்குத் தீங்குகள் நேரிட்டன. அசுரர், அரக்கர் எனப்படுவோர் தங்கள் கை மேலோங்கிய பொழுதெல்லாம் தங்களிடம் புகுந்த ஆரியர்களுக்குச் சற்றும் இரங்கவில்லை. அதனால், அவர்கள் மிகக் கொடிய வன்கண்ணர் என்று வழங்கப்பட்டனர்.

ஆனால், எவ்வளவோ போர்த்திறம் இருந்தும்கூட, திராவிடக் குழுவினர் தங்களுக்குள் ஒற்றுமையின்றி வாழ்ந்ததால், சிறிது சிறிதாகத் தென்பகுதிக்குத் தள்ளப்பட்டனர். நாளடைவில் வட இந்தியா முழுமையும் ஆரியர் கைவசம் வந்தது. ஸ்கந்தன் என்னும் ஓர் ஆரிய இளவரசன் அசுரர்களைத் தோற்கடித்துத் தென்கோடிக்குத் துரத்தியதாகப் புராணம் கூறும். அதேபோல், சில நூற்றாண்டுகள் கழித்து, தென் இந்தியாவில் இருந்த சில ஆரியரல்லாத கூட்டத்தாருடைய உதவியால், ஆரியனான இராமன் இலங்கையைப் படையெடுத்து அரக்கர் கோமானை

இராவணனை வென்றான். இந்தக் கதைகள் மெய்யாகவும் இருக்கலாம், அல்லது பொய்யாகவும் இருக்கலாம்; ஆனால் எப்படியும் ஆரியர்கள் திராவிடர்களுடைய எதிர்ப்பை வென்று, விந்திய மலைக்கு வடக்கேயுள்ள நாடு முழுவதையும் அவர்களிடமிருந்து பறித்துக்கொண்டனரென்பது இவற்றால் தெளிவாகிறது. அவர்கள் வட இந்தியாவை வென்று ஆளத் தொடங்கியது மிகவும் மெதுவாகப் படிப்படியாய் நடந்தது. ஆதலால், அவர்கள் வென்றுகொண்ட மக்களைத் தங்களோடு சேர்த்து ஒன்றுபடுத்திக்கொள்ளப் போதுமான காலம் கிடைத்தது. வடக்கே தோல்வியுற்ற ஆரியரல்லாத மக்களும் தங்கள் பகைமை மாறி, வென்றோருடன் வேற்றுமை கொள்ளாது ஒன்றுபட்டவுடன் அங்கே அவர்கள் போராட்டமும் ஓய்ந்தது.

# அத்தியாயம்—3

## ஆரியாவர்த்தம் — தட்சிணபாதம் :—

புராண காலத்தின் இறுதியாகிய கி. மு. 1000 ஆண்டளவில், ஆரியர்கள் வட இந்தியாவைத் தங்கள் ஆட்சியினுட்படுத்தி வடக்கே இமயமலைக்கும், தெற்கே விந்திய மலைக்கும் இடைப்பட்ட பகுதியை ஆரியாவர்த்தம் என்று பெயரிட்டனர். திராவிடர்கள் தனியுரிமையுடன் ஆண்டுவந்த விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள நாட்டைத் தட்சிணபாதம் (தக்கிணம்) அல்லது தென்னாடு என்று அழைத்தனர்.

## அங்கிருந்த அரசுகள் :—

ஆரியாவர்த்தத்திலும் தக்கிணத்திலும் பல அரசுகள் இருந்துவந்தன. அவற்றுட் சில பெருவலி படைத்துப் பேருடன் விளங்கின. ஏனைய அளவிற் சுருங்கி விளக்கமடையாதிருந்தன. கௌரவர், பாஞ்சாலர், கோசலர், மகதர் முதலிய அரசகுலத்தார் ஆரியர்களில் மிகவும் வலிமை பெற்றவர்கள். தக்கிணத்தில் விந்தியமலை முதல் மைசூர் வரையும் பரந்துகிடந்த பெரிய மேட்டுப் பரப்பில் தெலுங்கு மொழி பயிலும் ஆந்திரர்களின் முன்னோர்களாகிய திராவிடக் கூட்டத்தார் வாழ்ந்துவந்தனர். இவர்களிற் பெரும் பகுதியினரும் நாளாவட்டத்தில் ஆரியமயமாகித் தங்கள் தனி நிலையை இழந்துவிட்டதால், அக்காலத்தில் அங்குத் தோன்றிய திராவிட அரசுகளைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. கீழக் கடற்கரையில் கலிங்கம், தெலுங்காணம் என்ற இரண்டு அரசுகளே இடைக்காலம்வரை இருந்துவந்ததாகத் தெரிகிறது. இவைகளே இப்பொழுது சென்னை மாகாணத்தில் ஆந்திர ஜில்லாக்களாக விளங்குகின்றன.

தக்கிண மேட்டுப்பரப்புக்கும் தெற்கேயுள்ள சமவெளிக்கும் இடைப்பட்ட மலைப்பிரதேசம் கருநாடு அல்லது கருநாடகம் (மைசூர்) எனப்படும். அங்கு வாழ்ந்த மக்கள் திராவிட இனத்தவர். அவர்களே கருநாடர் அல்லது கன்னடர் எனப்பட்டார். அவர்கள் போர்வலி மிகுந்த வீரராய் விளங்கினர். தெற்குச் சமவெளியில் சேர சோழ பாண்டியர் என்னும் அரசர்கள் ஆண்டுவந்தனர். ஆரியவரவை அங்கு வீசத்தொடங்கியது மிகவும் பிற்காலத்தில்தான். ஆதலால் அங்கே திராவிடர்களுடைய பழைய நாகரிகம் இன்றுவரையிற் கெடாது நிலைத்துக் காணப்படுகிறது.

## ஈழம் அல்லது இலங்கை :—

இராவணன் தோல்வியுற்று மடிந்தபின்னர், நெடுங்காலம் வரை இலங்கைத் தீவைப்பற்றி ஒன்றும் கேட்கப்படவில்லை

அரக்கர்களுடைய நிலைமை சீர்கேட்டைந்து கொண்டே வந்திருக்கிறது. பின்னர் அத்தீவு நாகர்களுடைய கையிற்பட்டது. நாகர்கள் ஒரு பழங்குடி மக்கட் கூட்டமாகக் கருதப்படினும், நாகரிக மக்களாகவே இருந்துவந்தனர். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு வரையில் பல நாகரினத்து மன்னர்கள் மேன்மையுடன் ஆண்டு வந்ததாகத் தெரிகிறது.

## பார்ப்பன இந்துமதம் :—

கி. மு. 1000 ஆண்டளவில் ஆரியருடைய வேதக்கொள்கை அதிக மாற்றமடைந்தது, முதலில் ஒரு மேய்ச்சற் குழுவினரும் கென்று எளிய முறையில் அமைக்கப்பட்டிருந்த அவர்கள் மதம் பின்னர் வரவரச் சிக்கலான வேள்விச் சடங்கு முறைகளைக் கொண்டு, ஒரு விரிந்த மதமாக மாறிவிட்டது. அதுவே இம்பொழுது பார்ப்பனீயம் அல்லது பார்ப்பன இந்துமதம் என்னப்படும். முற்றத்துறந்த முனிவர்கள் கையிலே வளர்ந்துவந்த அம்மதமானது மெதுவாய், தாங்களே மனிதக்கூட்டத்தின் உயர் நிலையை யெய்தினவர்கள் என்று கருதும் ஒரு வகுப்பினர் அல்லது சாதியார் கைக்கு நழுவிவிட்டது. மற்றும், ஸ்கந்தன், இராமன் போன்ற பல ஆரிய வீரர்கள் கடவுளரின் நிலையை எய்திவிட்டனர். ஆரியர் இனத்தைச் சாராத அனுமான், வீட்ணன் முதலியோர்கூட தெய்வத்தன்மை வாய்ந்தோராக உயர்த்தப்பட்டனர்

வென்றுகொண்ட மக்களைத் தங்களோடு இணைத்துக்கொள்ளும் முயற்சியில், சிவலிங்க வழிபாட்டை ஏற்றுக்கொள்ளவேண்டியது ஆரியர்களுக்கு இன்றியமையாததொன்றாயிற்று. அவ்விதமே தயங்காதும் ஏற்றுக்கொண்டனர். உண்மையில், சில ஆரியர்கள் திராவிட மதக் கொள்கைகளை விரும்பியேற்று வழிபடும் பக்தர்களாகிவிட்டனர். அப்படியிருந்துங்கூட, பொதுவாக ஆரியாவர்த்தத்தில் திராவிடப் பண்பாடும் மொழியும் சற்றுத்தாழ்ந்த நிலையிலேதான் வைக்கப்பட்டிருந்தன. ஆயினும், வட இந்தியாவிற் கண்ட ஆரிய நாகரிகத்திற் பெரும்பகுதி திராவிட நாகரிகத்தைத் தழுவியே அமைக்கப்பட்டிருத்தல் வெண்டும். அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, தென்னாட்டில் தாமார்க்குங் குடியல்லாத் தன்மையுடன் தனியுரிமைத் தலையரசாய்த் தழைத்தோங்கிய தமிழ் மக்களிடை ஆரியர்கள் தங்கள் நாகரிகத்தைப் புகுத்த முயன்றது, கொல்லர் தெருவில் ஊசி விற்பதுபோலவேயாயிற்று. ஆரிய நாகரிகம் என்ற பெயருடன் வட இந்தியாவில் வழங்கப்பட்ட பல கொள்கைகள் தென் பகுதியில் அதற்கு முன்னரே பயிலப்பட்டு வருவதைக் கண்டனர். இதனால், வட இந்தியாவில் தோல்வியுற்ற திராவிட மக்கள் எத்துணை அளவுக்கு ஆரியர்களைப் பண்படுத்தும் வகையில் தங்கள் நாகரிகத்தை அளித்து உதவியுள்ளார்கள் என்பது தெற்றெனப் புலனாகும்.



## ஆரியர் சாதிமுறைமை :—

ஆரியர்கள் தங்கள் தேவைகளுக்குத் தகுந்தவாறு ஒரு சமூக ஒழுங்கு முறையை ஏற்படுத்தலாயினர். ஆரியர்களுக்குள் மதக் குருக்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பார்ப்பனர். அவர்கள் வேதம் பயின்ற முனிவர்களின் நேரான கான்முளைகள். ஆதலால் வேதக்கலைகளுக்கும், ஆரியக் கல்வி ஞானங்களுக்கும் அவர்களே காவலாளிகள். எல்லாவித சமூகச் சடங்குகளையும், மதக்கிரியைகளையும் அவர்களே செய்தற்கு உரியராவர். அதனால் ஏனைய வகுப்பினர்களிடத்தில் அவர்களுக்கு நிறைந்த செல்வாக்கு உண்டு. சமூகத்தில் அவர்களுக்குத்தான் முதன்மையான உயர் நிலை அளிக்கப்பட்டது. போர்த் தொழில் புரியும் க்ஷத்திரியர்கள் பார்ப்பனருக்கு அடுத்தபடியிலிருந்தனர். அவர்களே நாட்டை ஆள்பவர்கள். ஆனால் பார்ப்பனர்மேல் அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. (யசுர் வேதம், 9—40). மூன்றாவது சாதியார் வைசியர் : அவர்கள் வாணிகத்தொழில் செய்வோர். இந்த மூன்று சாதிகளும் கொண்டதுதான் ஆரியர்களுடைய முக்கிய சமூகம். தோல்வியுற்ற மக்களாய் ஆரியர்களுடைய பண்பாடுகளைக் கைக்கொண்ட கூட்டத்தார் நானகாவது சாதியாராக சூத்திரர் எனப்பட்டார். அவர்கள் தொண்டு புரிவோர். அவர்கள் இழிவான ஏவல்களையெல்லாம் செய்யவேண்டும். ஆனால் ஒரு நாட்டு மக்களுக்குள்ள சாதாரண உரிமைகள்கூட அவர்களுக்கு இல்லை : பணிசெய்து பிழைப்பதே அவர்கள் பொறியாய் நலிவுற்றுக் கிடந்தனர்.

## தீண்டப்படாதாரும் சாதிக்குப் புறம்பானவரும் :—

சில ஆரியரல்லாத கூட்டத்தார் ஆரியர்களோடு ஒருவித தொடர்பும் வைத்துக்கொள்ளாது மலைகளிலும் அடவிகளிலும் ஒதுங்கி வாழ்ந்துவந்தனர். அவர்கள் இவ்வாறு ஆரியக் கூட்டத்திற்கு வெளியே இருந்ததால் சாதி முறைமைக்குப் புறம்பானவர்கள் என்று கழிக்கப்பட்டு, தீண்டாமை என்னும் நரகினுங்கொடிய படுகுழியினில் படிப்படியாய் வீழ்த்தப்பட்டனர்.

## தக்கிணத்துள் ஆரியர் புகுதல் :—

முற்காலத்தில் அகத்தியர் என்னும் ஒரு முனிவர் விந்திய மலையைக் கடந்து தென்னாட்டுக்கு வந்ததாக மகாபாரதத்தில் எழுதப்பட்டுள்ளது. அவரே முதன்முதலாக விந்திய மலையை அடக்கித் தெற்கே நுழைந்த ஆரியர் என்பதும், அதற்குமுன் அம்மலையானது சூரிய சந்திரர்கள் போக்கையும் தடுத்து வானளாவ ஓங்கி நின்றது ஏன்பதும் கூறப்படுகின்றன. சூரிய சந்திரர்களைத் தடுத்ததாகக் கூறுவது, சூரியகுலத்திலும் சந்திர குலத்திலும் தோன்றிய ஆரிய மன்னர்கள் தென்னாட்டைப் படையெடுக்க முடியாதிருந்த நிலைமையையே குறிப்பதாகும். ஆரிய குல மன்னர்களிற் சிலர் சூரியன் வழியாகவும், சிலர் சந்திரன்

வழியாகவும் தோன்றியதாகத் தங்களைப் பெருமைப்படுத்திக் கொண்டனர். தென்னாட்டைப் பிடிப்பதற்கு அவர்கள் படைகளுடன் விந்திய மலையைக் கடந்து வரமுடியவில்லை. அம்மலை ஒரு பெருந்தடையாய் இருந்தது. அங்கு வாழ்ந்த திராவிட மக்களும் திடமாய் எதிர்த்து நின்றனர். அகத்திய முனிவர் வந்தபொழுது விந்தியமலை தானாகவே தணிந்து வழிவிலகியதாகக் கூறப்படுவதால், அகத்தியர் படைதிரட்டிக்கொண்டு வராமல், சமாதானத்துடனேயே தக்கிணத்துள் நுழைந்திருக்க வேண்டும்.

ஆரியர்கள் முதல்முறையாகத் தக்கிணத்திற் சென்று தங்கிய வரலாற்றைப்பற்றி இராமாயணத்தில் இன்னும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தட்சிணபாதம் என்று சொல்லப்படும் தக்கிணத்தில் அகத்தியக் குடும்பத்தார் மூன்று இடங்களில் குடியேறியதாகத் தெரிகிறது. அவை, கோதாவரி நதிக்கரையும், (இராமாயணம்—3) பாண்டிய நாட்டில் பொதியை மலையும், (இராமாயணம்—4 : 49) இலங்கையுமாகும் (இராமாயணம்—4 : 41). பின்னர் மற்ற ஆரியர்களும் இவ்வகத்தியக் குடும்பத்தாரைத் தொடர்ந்து சென்று, திராவிட நாட்டிற் குடியேறுவராயினர்.

அவ்விதம் அமைதியாய்க் குடியேற வந்த ஆரியர்களைத் திராவிட அரசர்களும் விரும்பியேற்று, அவர்களுக்கு உகந்தவாறு வாழ்க்கையை நடத்துவதற்கு உதவிபுரிந்தனர். இவ்விதம் வந்து குடியேறிய ஆரியர்களிற் பெரும்பாலோர் தங்கள் மதக்கொள்கைகளைப் பரப்பும் கருத்துடைய பார்ப்பனக்குருக்களாகவே இருந்தனர். எல்லாச் சமயக் கணக்கர்களும் நினைப்பதுபோல், மிலேச்சக் கூட்டத்தினரிடை நாகரிக வாழ்க்கையையும், சீரிய பண்பாடுகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டியது தங்கள் கடமை என்று இவர்களும் உண்மையில் நம்பினர் போலும்! இந்திய மக்கள், தங்கள் மதத்தின் உயர்ந்த பண்பாடுகளைத் தவறாது அடைந்து உய்யவேண்டும், அதற்குத் தாங்கள் ஆனமட்டும் முயன்று உதவியளிக்கவேண்டும் என்ற திடமான நம்பிக்கை ஐரோப்பியக் கிறிஸ்துவப் பாதிரிமார்களிடம் எவ்வளவு இருந்து வருகிறது என்பதை நாம் காண்கின்றோம். திராவிட நாட்டிற்கு வந்து குடியேறிய பார்ப்பனர்களிடையும் இதுபோன்ற எண்ணம் இருந்திருக்கலாம். தக்கிணத்திலுள்ள அரசுகள் ஆரியாவர்த்தத்திற்கு அருகாமையில் இருந்ததால், பார்ப்பனர்கள் முதலில் அங்கேயே தங்கள் கவனத்தைச் செலுத்தினர். தக்கிணத்தில் பார்ப்பனீயம் விரைந்துபரவவும், அங்குள்ள மக்கள் ஆரியமயமாயினர். அதன் விளைவாக, தக்கிணத்தில் வாழ்ந்த திராவிடர்களிடையே சாதிக் கொள்கையும் ஆரியரின் ஏனையப் பழக்கவழக்கங்களும் பலமாய் வேரூன்றிவிட்டன. அவர்கள் பேசிவந்த மொழியும் ஆரியச் சொற்களை நிறைய உட்கொண்டு உருமாறிவிட்டது, இவ்வாறு தக்கிணத்துத் திராவிடர்கள் தென்னாட்டில் வாழ்ந்துவந்த தங்கள் இனத்தவராகிய கருநடரையும், சேர சோழ பாண்டியர்களான தமிழ் மக்களையும் விட்டுப்பிரிந்து,



அவர்களை வேறினத்தவர்களைப்போலக் கருதி, திராவிடர் அல்லது திரமிளர் (தமிழர்) என்று அழைக்க ஆரம்பித்துவிட்டனர்.

## பார்ப்பனர் திராவிடம் சென்றது :—

திராவிடம் அல்லது தமிழ்நாட்டில் கி. மு. 700 ஆவது ஆண்டளவில் பார்ப்பனர்கள் அதிகமாக வரத்தொடங்கினர். சேர சோழ பாண்டிய நாடுகள் மிகவும் தொன்மை வாய்ந்தன. ஆரியர் வருகைக்கு நெடுநாள் முன்னரே அவை நிலவி வந்தன. கிறிஸ்துவின் காலத்திற்கு இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த செய்திகளைக் கூறும் இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்களில் அவைகளைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அக்குறிப்புகள் பிற்காலத்திலே புகுத்தப்பட்டிருக்கலாம். எனினும் இந்நாடுகளின் தொன்மையைப் பற்றித் தடை கூறுவார் ஒருவருமில்லை. அந்நாடுகள் எல்லா விதத்திலும் முன்னேற்றம் அடைந்திருந்தன. அம்மூன்று நாடுகளிலும் பயிலப்பட்டுவந்த திராவிட மொழியாகிய தமிழானது அக்காலத்திலேயே இலக்கண இலக்கிய எழில் வீசி உயர்நிலையெய்தி விளங்கியது. தமிழ் மக்களும், தங்கள் தொன்மொழியின் சிறப்பாலும் நாகரிக மேம்பாட்டாலும் செருக்குற்றுத் திகழ்ந்தனர். திராவிட இனத்திற்கே தங்கள் நாடுதான் முடிவாய் முடிந்த அரண் என்பதையும் தெரிந்திருந்தனர் போலும். திராவிட நாட்டின் மற்றப் பகுதிகளிற் பயிலப்பட்ட நன்கு திருந்தாத பேச்சு மொழிகளிலிருந்து தங்கள் மொழியைத் தெளிவிக்கும் வகையில், தங்கள் தாய்மொழிக்குச் செந்தமிழ் என்று பெயர் கொடுத்தனர். தமிழ்மொழியானது இலக்கியத்திலும், இசையிலும், கூத்திலும் செழித்தோங்கியிருந்ததால், செந்தமிழை இயல்; இசை, நாடகம் என முத்தமிழாகப் பிரித்திருந்தனர். திராவிட நாட்டிற்குவந்த பார்ப்பனச் சமயிகள், அங்குக் கற்றுக்கொடுப்பதைவிடத் தாங்களே அங்கிருந்து கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை உணர்ந்தனர். பிற்காலத்தில் வீரமாமுனிவர், டாக்டர் போப் முதலிய கிறிஸ்துவப் பாதிரிமார்கள் முதலில் எவ்வாறு தமிழைக் கற்றுப் பின்னர் நூல்களை எழுதினார்களோ. அதேபோல் அக்காலத்துப் பார்ப்பனர்களும் செய்தனர். டாக்டர் போப் தமிழ் மொழியில் இலக்கண நூல் எழுதியதுபோலவே முதன் முதல் தமிழைக் கற்ற ஆரியச்சமயக் கணக்கராகிய அகத்திய முனிவரும் அகத்தியம் என்னும் தமிழ் இலக்கண நூலை எழுதினார் என்பது சிந்திக்கற்பாலது.

அதன்பின், பார்ப்பனர்கள் அக்காலத் தமிழ்ப் புலவர்களுடனும் பாணர்களுடனும் கலந்து பழகி உலகியல் வழக்கையும் செய்யுள் வழக்கையும் நன்கு தெரிந்துகொண்டனர். அவ்விதம் கற்றுப் பழகியவுடன் தமிழ் மரபு குன்றாது சிறந்த முறையிற் கவிகளும் பாடினர். இங்ஙனம் தாங்கள் வந்து குடிபுகுந்த நாட்டு மக்களுக்கு உலவாக் கிழிபோன்று உதவுவாராயினர். ஆரியாவர்த்தத்தில் கல்விக்கிருப்பிடம் தாங்களாகவே திகழ்ந்ததுபோல்,

திராவிட நாட்டிலும் ஆகிவிடுவதற்குப் பார்ப்பனர் ஆனமட்டும் முயற்சி எடுத்தனர். அதில் வெற்றியும் பெற்றனர். ஆனால் அதன் ஏதுவாக, சமஸ்கிருதச் சொற்களையும், பிற இலக்கிய வழக்கு நடைகளையும் தமிழ்மொழியில் மிகுதியாகப் புகுத்திவிட்டனர். ஆரியக்கொள்கைகளும் மூட நம்பிக்கைகளும் மெதுவாகத் திராவிட மக்களையும் பற்றிக்கொண்டன. பார்ப்பனர்களுடைய செல்வாக்கு நாளடைவில் முற்றிவரவும், பார்ப்பனீயமும் இடம், பொருள், ஏவல்களுக்கியைந்தவாறு சிறிது மாறுதல் அடைந்த போதிலும் திராவிட நாட்டில் விடாது நிலைத்துவிட்டது. புராணக் கதைகளுக்கு வேறு பொருள்கள் கூறப்பட்டன. அசுரர்களும் அரக்கர்களும் உண்மையில் இராக்கதர்கள் அல்லது பூத வேதாளங்கள் என்றும், அவர்களை ஆரியக் கடவுளர்கள் அழித்ததனால்தான் இம்மண்ணில் மனிதர் இனிது வாழ முடிந்ததென்றும் தமிழர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டன. இன்னும், எதையும் எளிதில் நம்பிவிடும் இயல்புடையோருக்கு வேறு தத்துவ நுண்பொருள்களையும் கற்பித்துக்கொடுத்து, அறம் வெல்லும் மறம் மங்கும் என்ற நீதியும் போதிக்கப்பட்டது. இதற்கு மேலும், பார்ப்பனீயத்தை மிக விரைவில் தமிழ்நாட்டில் பரப்பிவிடவேண்டும் என்ற எண்ணத்துடன், பல படித்த தமிழ் மக்களையும் பார்ப்பன இனத்தோடு சேர்த்துக்கொண்டனர் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. அவ்விதம் மாறியவர்களின் கோத்திரப் பெயர்கள் எல்லாம் திராவிடத் தோற்றத்தைக் கொண்டனவாய் இருப்பதிலிருந்தே எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

## திராவிட நாட்டில் சாதி முறைமை :—

பார்ப்பனர்கள் வருவதற்கு முன்னரே தென் இந்தியாவில் சேர சோழ பாண்டியநாட்டு மக்களனைவர்க்கும் ஒத்தபடி சாதி வெறுப்பற்ற ஒருவகைச் சமூகத்திட்டம் நடைமுறையில் இருந்து வந்தது. நிலைமைக்கும் தொழிலுக்கும் ஏற்றவாறு மக்கள் பல தொகுதி தொகுதியாகச் சேர்ந்து கூடிவாழ்ந்தனர். தமிழ் நாட்டுப்பிரிவாகிய ஐவகை நிலங்களிலும் வாழும் மக்கள் ஐந்துவகைக் கூட்டத்தாராக விளங்கினர். மருத நிலத்திருந்தோர் வெள்ளாளர். அவர்கள் உழுதுண்டு வாழும் குடியான மக்கள்; நெய்தல் நிலத்தோர் பரதவர்; மீன் பிடித்தும் மரக்கலம் செலுத்தியும் வாணிபம் செய்வோர்; முல்லை நில மக்கள் இடையர்; அவர்கள் ஆடு மாடுகளை மேய்ப்பவர்கள்; கிழக்குத் தொடர்ச்சி மலையின் காடுகளில் வேட்டையாடித் திரிவோர் குறவர்; தெற்கோரத்துப் பாலை நிலங்களில் வாழ்வோர் மறவர்; அவர்கள் ஆறலைத்தும் சூறை கொண்டும் பிழைத்தனர்.

ஆரியர்களுக்கு உரிய சாதிப் பிரிவினையைத் தமிழ் நாட்டிற் புகுத்துவதற்குப் பார்ப்பன மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சி அவ்வளவாகப் பலிக்கவில்லை. தங்கள் தொழில் முறைமைபற்றி வந்த பழைய பெயர்களையே அங்குள்ள மக்கள் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் ஆரிய முறையைக்



கைக்கொள்ளாததால், ஆங்கில ஆட்சியில் அவர்களுக்குப் பல கெடுதல்களும் நேரிட்டுள்ளன. 1921-ம் ஆண்டில் எடுத்த மக்களின் தொகையில் சென்னை மாகாணத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்று நான்கு பேர் சூத்திரர்களென்றும், சாதிக்குப் புறம்பானவர்களென்றும் குறிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், ஆங்கில அரசியல் நீதிமன்றங்களில் ஆரிய இனத்தவனான மனு என்பவன் எழுதிய இந்து மத விதிகளே வழங்கப்பட்டுவருவதால், தமிழ் மக்களும் ஏனைத் திராவிடர்களும் மனுதர்மத்தில் சூத்திரர்களுக்கு விதிக்கப்பட்ட சமூக இடைஞ்சல்களையும், கொடிய அநீதிகளையும் அடைந்தேதீரவேண்டியிருக்கிறது.

# அத்தியாயம்—4

## சரித்திரகாலத் தொடக்கம் (கி. மு. 600—கி. பி. 1) :—

கி. மு. அறுநூறாவது ஆண்டிலிருந்துதான் இந்திய சரித்திரகாலத்தின் தொடக்கம் நமக்குத் தோற்றமளிக்கிறது. அப்பொழுதுதான் வட இந்தியாவில் மத சீர்திருத்தவாதியாகிய மகா வீரர் பிறந்தார். அக்காலத்தில் பார்ப்பனீயமானது திராவிட நாட்டினுள்ளும் புகுந்து மிகவும் சீர்கேடுற்ற நிலையிலிருந்தது. பார்ப்பனர்கள் மத சம்பந்தமான வேள்விச் சடங்குகளையே மிகவும் வற்புறுத்தி, வேதக் கடவுளர்களுக்கு உயிர்வதை செய்து பலி கொடுத்துவந்தார்கள். ஏனை வகுப்பாரின்மேல் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கு மிகவும் உதவியாயிருந்த சாதிமுறைத் திட்டமானது மிகவும் கண்டிப்புடன் கையாளப்பட்டு சூத்திரர்களும் தீண்டாதார்களும் சொல்லமுடியாத துயரத்திற்காளாயினர். பார்ப்பனர்கள் கையில் எல்லா அதிகாரமும் சேர்ந்து, அவர்கள் அரசர்களைக்கூடத் தங்கள் மனம்போல் ஆட்டிவைக்கத் தொடங்கிவிட்டனர். அப்பொழுது பல அறிவாளிகள் அந்நிலையை மாற்றிச் செப்பனிடவேண்டும் என்பதை உணரத்தான் செய்தனர். ஆனால் நல்ல செல்வாக்கிலிருந்த பார்ப்பனர்களை முன்வந்து எதிர்க்க ஒருவரும் துணியவில்லை.

## மகா வீரரும் சமணமும் :—

ஜீனர் என்று யாவருக்கும் தெரிந்த மகாவீரர் என்பவர்தான் முதன்முதல் பார்ப்பனர்களுடைய அட்டூழியங்களை எதிர்த்துநின்றார். அவர் உயிர்ப்பலி கொடுப்பதைத் தடுத்து, எல்லா உயிர்களும் புனிதமானவை என்ற உண்மையைப் போதித்தார். மனிதனுக்கும் எறும்புக்கும் உயிர் ஒன்றுதான், வேற்றுமையில்லை; பார்ப்பனனுக்கும் சூத்திரனுக்கும் வேறுபாடு கிடையவே கிடையாது என்பதை எடுத்துக்காட்டினார்.

வைதிகப் பார்ப்பனர்கள் மகா வீரரை ஒரு மத வைரி என்று கடுமையாகக் கண்டித்து ஒதுக்கினர். ஆயினும் கி. மு. 527ல் அவர் இறந்தபொழுது பதினாயிரம் தொண்டர்கள் அவர் கொள்கையைத் தாங்கிநின்று அவர் வழியே ஒழுகுவாராயினர்.

## கௌதமபுத்தர் :—

ஜீனருக்கு அடுத்தாற்போல், கௌதமபுத்தர் தோன்றினார். அவரது வாழ்க்கை வரலாற்றினை அறியாதாரிலர். அரசிளங்குமரனாய்ப்பிறந்துவைத்தும், அவர் அரியணை துறந்து, உலகப் பற்றுக்களை உதறித்தள்ளி, புத்த சமயத்தை ஏற்படுத்தினார். புத்த மதமும் பார்ப்பனக்கொள்கையை எதிர்த்து ஒழிப்பதற்காகவே தோன்றியதாகும். கௌதமரும் எல்லா உயிரும் புனிதம் என்பதை வற்புறுத்தினார். சில தத்துவ சம்பந்தமான நுட்பங்களிலே மட்டும் ஜீனரினின்றும் மாறுபட்டார். அவருக்கும் பார்ப்பனர்களுடைய எதிர்ப்பு இடைவிடாதிருந்துவந்தது. கி. பி. 480ல் அவர் இவ்வுலகை நீத்தார்.

## இலங்கையில் ஆரியர்கள் :—

கௌதமர் இறந்த அதே நாளில் வங்காளத்திலோ குஜராத்திலோ இருந்து கிளம்பிய ஓர் ஆரியக் கூட்டத்தார் படை வீரர்களுடன் இலங்கைத்தீவில் வந்து இறங்கியதாகச் சொல்லப்படுகிறது. அக்கதை வரலாற்றின்படி, விஜயன் என்னும் இளவரசனோடு எழுநூறு பேர் தங்கள் தாயகத்தினின்றும் நாடு கடத்தப்பட்டனர். விஜயனும் அவன் ஆட்களுமாகச் சேர்ந்து இலங்கையை அடைந்து அங்கு வாழ்ந்திருந்த யக்கர்களையும் நாகர்களையும் வென்று, அத்தீவு முழுதையும் கைப்பற்றினர். பின்னர் அவர்கள் பாண்டியநாட்டுத் தமிழர்களோடு தொடர்புகொண்டு, இவ்வாறாகச் சிங்கள மக்கள் தோன்றுவதற்கு அடிகோலினர். அவர்கள் தொடர்பால், பாண்டியநாட்டிலிருந்து ஏராளமான மக்கள் இலங்கையில் வந்து குடியேறியதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு வந்தவர்கள் அக்காலத்தில் இலங்கையின் வளர்ச்சிக்குத் தேவையாயிருந்த தொழிலாளிகளும் வேலையாட்களும் ஆவர். இலங்கைத்தீவின் சரித்திர ஆரம்பகாலமான அன்றுதொடங்கி இன்றுவரை சுமார் 2500 ஆண்டுகளாய் இந்திய நாட்டிலிருந்து திராவிட மக்கள் நாள் தவறாது அங்கே சென்று குடியேறிக்கொண்டேதான் இருக்கிறார்கள். அவ்விதம் குடியேறியவர்களில் பெரும் பகுதியார் சிங்களர்களோடு கலந்து ஒன்றாகிவிட்டனர். எஞ்சியோர் இக்காலத்தில் இலங்கைத் தமிழர் என்ற சிறப்புப் பெயருடன் அங்கேயே நிலையாய் வாழ்ந்துவருகின்றனர்.

## மௌரியச் சக்கரவர்த்திகளும் தமிழ் நாடும் :—

கி. மு. 327-ல் கிரீஸ் முதல் பாரசீகம்வரை பரந்து கிடந்த பேரரசின் தலைவனான அலெக்சாந்தர் என்னும் மாசிடோனிய மன்னன் இந்தியாவைப் படையெடுத்துவந்தான். அவன் ஆரியாவர்த்தத்தின் மேலைப்பகுதியை வென்று, அதைத் தனக்குக் கீழ்ப்படிந்து வழிமொழிந்த உள்நாட்டு மன்னர்வசம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பிச்சென்றான்.

பின்னர் அலெக்சாந்தர் இறந்துவிடவும், மகத நாட்டு மன்னனான சந்திர்குப்தன் மேலோங்கித் தன் அரசைப் பெருக்குவதற்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. சிறிதளவில் ஆரியாவர்த்தம் முழுதும் அவன் ஆட்சியின்கீழ் வந்தது.

சந்திரகுப்தன் இறந்ததும், அவன் மகனான பிந்துசாரன் தனது தந்தை தொடங்கிய வேலையை விடாது தொடர்ந்து நடத்

னான். புராண காலத்திற்குப்பின் முதலாவதாகத் தக்கிணத்தின்மேல் போர்தொடுத்துச் சென்றவன் இவன்தான். பிந்துசாரன் மகன் அசோகனும் தன் தந்தையையும் பாட்டனையும் போன்று போர்த்தினவு கொண்டவன். ஆந்திர நாட்டில் தனியாட்சியுரிமையுடன் விளங்கிய கலிங்கத்தைத் தாக்கினான். அங்கு நடந்த போரில் எண்ணிறந்த மக்கள் மடிந்ததைக் கண்டு அசோகச் சக்கரவர்த்திக்கு உலக வாழ்க்கையிலேயே வெறுப்புத் தட்டிவிட்டது. அதிலிருந்து அவன் பௌத்த நெறியைப் பின்பற்றி ஒரு சிறந்த பக்திமானாகிவிட்டான்.

இவ்விதம் அசோகனின் மனம் மாறியதைக் கொண்டுதான் தென்னாட்டுத் தமிழ் அரசுகள் தப்பிப்பிழைத்தன என்றும், இல்லாவிடில் மௌரியப் பேரரசின் மாகாணங்களாக அவை ஒடுக்கப்பட்டிருக்கும் என்றும் சிலர் கூறுவதுண்டு. அதுதான் உண்மை என்று நாம் கூறுவதற்கில்லை. ஏனெனில், வம்ப மோரியர் (மௌரியர்?) வடுகரின் படையுதவி கொண்டு தமிழகத்தின் வடவெல்லையைத் தாக்க எண்ணிப் பல முயற்சிகளும் எடுக்கத்தான் செய்தனர். அதற்காக விந்தியமலையைக் கடந்து தங்கள் தேரைச் செலுத்துவதற்குப் பல வழிகளும் செய்து பார்த்தனர். அம்முயற்சியில் அவர்கள் வெற்றி பெறுவதற்கு முரண்மிகு வடுகரும் வேண்டும் படையுதவி அளித்தனர். அவ்விதமிருந்தும் மோரியர்களால் தமிழகத்தினுள் தலை நீட்டவும் முடிந்ததாகத் தெரியவில்லை. இச்செய்திகளைத் தமிழ் இலக்கியத்தில் தெளிவுறக் காணலாம்.* அதன் உண்மை எவ்வாறாயினும், அசோகன் காலத்தில் புத்தமதக் கொள்கைகள் இந்திய நாடு முழுவதும் பரவலுற்றன. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பகுதிக்கும், மற்றும் வெளி நாடுகளுக்கும், அசோகன் பௌத்த சமயிகளைத் தூதாக விடுத்தான். அவ்விதம் தான் தூதனுப்பிய தனியரசுகளுள் சேர சோள பாண்டியர்களையும் குறிப்பிட்டுள்ளான்.

இந்நாளில் பௌத்த நெறிக் கொள்கைகள் தமிழ் மக்களிடைக் காணப்படாவிடினும், ஒன்பதாம் நூற்றாண்டுவரை புத்தமதம் திராவிட நாட்டில் திகழ்ந்துவந்ததாகத் தமிழ் இலக்கியம் சான்று பகர்கின்றது. வடமொழியிலும் பாலிமொழியிலும் உரை நூல்கள் பல எழுதிப் பெயர்பெற்ற, சிறந்த புத்தமத எழுத்தாளர்களான போதிதர்மர், புத்ததத்தர், தர்மபாலர் போன்றவர்கள் தமிழ் மக்களேயாவர்.

---

* "முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிர முன்னிய வரவிற்கு" (அகநானூறு—281)

"மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவாய்" (அகநானூறு—251)

"விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரிதிரிதரக் குறைத்த, அறை" (அகநானூறு—69)
(புறநானூறு—175)



## தமிழர் சிலர் இலங்கையைப் பற்றியது :—

சிங்களரில் ஒரு பகுதியார் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதைப் பார்த்தோம். அதுமட்டுமன்றி, ஒரு பெரும் பகுதியான தமிழர், முக்கியமாய் வணிகர்களாயுள்ளார், இலங்கைக்கு வருவதும் போவதுமாய் இருந்துவந்தார்கள். அப்பொழுது இலங்கை மக்கள் இன்னும் வெளிநாட்டு வியாபாரத்தில் தலையிடாதிருந்ததால், தமிழ்நாட்டு வணிகர்களாய் இலங்கையிலிருந்தோர் அத்தீவின் விளைபொருட்களை யவனர்களும், போனீஷியர்களும் மற்றும் கடல் கடந்துவரும் நடுநிலக்கடல் நாட்டு மக்களும் வந்துகூடும் தென் இந்தியத் துறைமுகங்களாகிய முசிறி, கொற்கை, காயல், புகார் என்னும் இடங்களுக்குக் கொண்டுபோவது வழக்கம். இவ்விதம் நடந்துவந்த வாணிபத்தால் தமிழ் வணிகர் பெருத்த ஊதியமடைந்து செல்வந்தராய்ச் செழிப்புற்றனர்.

அரேபியா முதலிய நாடுகளிலிருந்து உயர்தரமான குதிரைகள் தென் இந்தியத் துறைமுகங்களில்தான் வழக்கமாக வந்து இறக்குமதியாயின. இக்குதிரை வியாபாரத்தில் தமிழ் வாணிகர்களுக்கு ஒரு தனியுரிமையிருந்ததால், அதன்மூலம் தக்க பொருள் ஈட்டினர். மேலும், இந்திய அரசர் படைகளுக்குக் குதிரைகள் அவசியம் வேண்டியிருந்தமையால், இந்தக் குதிரை வியாபாரிகளுக்கு அரசர்களினிடையே மிகுந்த செல்வாக்கும் இருந்து வந்தது. அவர்களுடைய சொந்த அரசியற் காரியங்களிற்கூட இவர்கள் தலையிடுவது உண்டு. சுமார் கி. மு. 177-ல் ஒரு குதிரை வியாபாரியின் மக்களான சேனன், குடிகன் என்னும் இருவரும் கூடி இலங்கையில் சிங்கள அரசைக் கைப்பற்றிக் கொண்டனர். அசேலன் என்னும் சிங்கள அரசன் தெற்கு நோக்கி ஓடவேண்டியதாயிற்று. அவர்கள் பதினைந்து ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். பின்னர் அவர்களைப் போரில் வென்று அசேலன் மீண்டும் அரசனானான்.

## (ஏலேல சிங்கன்) இலங்கையை வென்றது :—

சேனனும் குடிகனும் சிறிதுகாலம் வெற்றிபெற்றதிலிருந்து சிங்களர்கள் வலிமை குன்றியவர்கள் என்று ஒரு பொதுவான எண்ணம் ஏற்பட்டது. பதினேழு ஆண்டுகள் கழித்து, கி. மு. 145-ல் முற்கூறிய குதிரை வியாபாரியின் மக்களைவிட அதிக பலம் பொருந்திய மற்றொரு வியாபாரி இலங்கைக்கு அரசனாகிவிடவேண்டுமென்று ஆத்திரம் கொண்டான். அவன் பெயர் ஏலாளன். சிங்களர் அவனை ஏலாரா என்று கூப்பிடுவர். அவன் சோழ நாட்டிலிருந்து வந்தவன். ஏலாளன் ஒரு பலத்த படையுடன் திரிகோண மலையருகே இறங்கி அனுராதபுரத்தை வந்தடையவும், சிங்கள மன்னனை அசேலன் மீண்டும் உயிர் பிழைக்க ஓட்டமெடுத்தான்.

ஏலாளனுடைய ஆட்சி நல்ல முறையில் நீதியோடு விளங்கியது. இலங்கையை ஆண்ட மன்னர்களுக்குள்ளே அவன் ஒரு சிறந்த அரசனாகத் தோன்றினான். அவனுடைய பகைவர்களாகிய சிங்களர்கூட அவனை வாயார வாழ்த்தி, அறம் நிறைந்த ஏலாரா என்று சிறப்பித்துள்ளார்கள்.

அவ்விதம் விளங்கிய அரசன் ஏலாளன் புத்த மதத்தினன் அல்லன். ஆயினும், நடுநிலைமையிற் பிறழாது, தன் குடிமக்களுள் பௌத்தர்களாயுள்ளவர்களின் மனம் வருந்தாதபடி எவ்வளவோ முயன்று தன் அரசியலை நடத்திவந்தான். அப்படியிருந்துங்கூட, புத்த மதத்தினரான குடி மக்களுக்கும் அம்மதத்தைச் சாராத அவன் படைவீரர்களுக்கும் அடிக்கடி சிறு பூசல்கள் ஏற்பட்டுவந்தன. அவன் நாட்டு எல்லைக்குப் புறம்பே வதிந்த சிங்களர்களும், அவ்விதம் நேரிடும் மதச் சச்சரவுகளை ஏதுவாக வைத்துக்கொண்டு குழப்பங்களைக் கிண்டிவிட்டுக்கொண்டே இருந்தனர்.

ஆயினும் 43 ஆண்டுகள்வரை சிங்களர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. பிறகு ஏலாளன் முதுமைப்பருவம் அடைந்துவிடவும், காமினி என்னும் ஒரு சிங்கள இளவரசன் அத்தமிழ் மன்னனை எதிர்த்து ஒரு மதப் போராட்டத்தைத் தொடங்கினான். அவ்விதம் நடத்திய போரில் காமினி பலமுறையும் தோல்வியுற்றான்; ஆயினும் அவன் விடவில்லை; கிழவனான ஏலாளனைத் தனியே தன்னுடன் போருக்கழைத்தான்; ஏலாளனும் இசைந்தான். இருவரும் கைகலந்து நடத்திய போரில் காமினி ஏலாளனைக் கொன்று வெற்றிபெற்றான். அனுராதபுரமும் அவன் கைக்கு வந்தது.

## மறவர்கள் இலங்கையைப் பிடித்தது :—

கி. மு. 44ல் இலங்கை மறுபடியும் தமிழர் ஆட்சியின்கீழ் வந்தது. மறவர்களின் தலைவர்கள் எழுவர் சேர்ந்துகொண்டு, கொள்ளையடிப்பதற்காக இலங்கைமேல் படையெடுத்தனர். வலகம்பாகு என்னும் அரசன், அவர்களுக்கு அஞ்சித் தனது தலைநகரை விட்டோடித் தெற்கே மலைகளில் ஒளிந்துகொண்டான். அக்காலத்தில் அநுராதபுரம் மிக்க செல்வத்தோடு விளங்கியது. காமினி அரசனும் அவன் வழிவந்தோரும் அளவற்ற பொருளைச் செலவிட்டு அந்நகரை அழகுபடுத்தியிருந்தனர். அத்தகைய திருநகர் சூறையாடப்பட்டது. அவ்வாறு படையெடுத்த மறக்குலத் தலைவர்களில் இருவர் ஏராளமான பொருளைக் கொள்ளையடித்துக்கொண்டு திரும்பிவிட்டனர். ஏனை ஐவரும் ஒருவர் பின் ஒருவராகப் பதினைந்து ஆண்டுகள் அங்கு ஆட்சி செலுத்தினர். ஒவ்வொருவனும் தானே அரசனாகிவிடவேண்டும் என்று அவர்களுக்குள்ளேயே போட்டியிட்டு, ஒருவன் மற்றொருவனைக்கொன்று ஆளத் தொடங்கிக் கடைசியாக எஞ்சிநின்ற ஐந்தாவது மறவன் ஆண்டுகொண்டிருந்தான். அந்நேரம் பார்த்து வலகம்பாகு அனுராதபுரத்திற்குப் படையுடன் கிளம்பிவந்து மறவர்களை முறியடித்துத் தீவைவிட்டு விரட்டினான்.



இவ்விதமாகத் தமிழ்நாட்டிலிருந்து இலங்கையைப் படையெடுத்தவர்கள் எல்லாரும் சிற்றரசர்களாகவோ அல்லது தனிப்பட்ட போர் வீரர்களாகவோ இருந்தார்களேயொழிய, தமிழ்நாட்டு முடிவேந்தர்களில் யாரும் இவ்வாறு படையெடுத்ததாக இல்லையென்பது நோக்கத்தக்கது.

## திராவிடத்தில் ரோமர்கள் :—

கி. மு. 50 முதல் கி. பி. 250 வரை ஐரோப்பாவில் செல்வாக்குடன் வாழ்ந்த மக்கள் ரோமர்கள். ஐரோப்பா முழுவதும் அவர்கள் ஆளுகையில் இருந்ததோடு, பாலஸ்தீனம் முதலிய நடுநிலக்கடல் நாடுகளும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தன. இத்தகைய ரோம நாட்டுப் பேரரசர்களோடு தமிழ் மன்னர் நட்புக்கொண்டு தொடர்புடையவர்களாய் விளங்கினர் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நடுநிலக்கடல் நாடுகளோடு வாணிகம் நடத்திவந்த தமிழ் அரசர் ஐரோப்பாவில் ரோமர்கள் உயர்நிலையெய்தியபோது, ரோம நகருக்குத் தூதர்களையும் அனுப்பினர். ரோம நாட்டுப் பேரரசனான அகஸ்தஸ் என்பவன் அரசவைக்குப் பாண்டிமன்னன் அனுப்பிய தூதுக்கூட்டம் ஒன்று கி. மு. 20ல் ரோம் நகரை அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. திராவிடநாட்டுப் பெரிய நகரங்களில் அயல்நாட்டு மக்களும் யவனர்களும் வாழ்வதற்குப் பெரிய தெருக்கள் அமைக்கப்பட்டிருந்ததாகத் தமிழ் இலக்கியம் கூறுகிறது.[1] தமிழ் நூல்களில் ரோமர்கள் யவனர் என்னும் பெயரால் குறிக்கப்பட்டுள்ளனர். அவர்களிற் பலர் தமிழ் மன்னர்களிடத்தில் வாயிற்காப்பாளர் வேலையில் அமர்ந்திருந்தனர்.[2] அவர்கள் மறத்தன்மை மிக்குடையவர்களாய், தங்கள் வார்ந்தொழுகிய ஆடையினுள்ளே வாள் ஒடுக்கும் வய வீரராய் விளங்கினர் எனவும் கூறப்பட்டுள்ளது.[3] முசிறியில் அகஸ்தஸ் என்பவருக்கு ஒரு கோயில் கட்டப்பட்டிருந்தது. அங்கு நடந்துவந்த வாணிகத்தைக் காத்துக்கொள்வதற்காக 1200 ரோம வீரர்கள் வைக்கப்பட்டிருந்தார்கள். பழந்தமிழ்நாட்டு நகரங்களைச் சுற்றி

---

1. “கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனரிருக்கையும்
கலந்தரும் திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்.”
(சிலப்பதிகாரம் V, 9—12)

“மொழி பல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்.” (பட்டினப்பாலை, 216—218)

2. “கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
வடல்வாள் யவனர்.” (சிலப்பதிகாரம் XIV 66—67)

3. “மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்.”
(முல்லைப்பாட்டு)

லும் பேரரண்களும் மதில்களும் வகுக்கப்பட்டு அவற்றின்மீது ரோமர்கள் வழங்கி வந்ததுபோன்ற இயந்திரப் படைகள் கரந்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது.

மதுரை முதலிய நகரங்களுக்கருகில் தோண்டியெடுக்கப்பட்ட ஏராளமான ரோம நாணயங்கள், கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முடிய ரோம் நாட்டுக்கும் தமிழகத்திற்கும் நடந்துவந்த வாணிகப் பெருமையை நன்கு புலப்படுத்துவனவாகும்.

# அத்தியாயம்—5

## தமிழ் இலக்கிய வரலாறு :—

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகத் தோன்றி உலகில் உயர்நிலையடைந்த மொழிகள் சமஸ்கிருதம், கிரீக், இலத்தின் ஹீப்ரு பாலி என்பன. அவை தோன்றிய காலத்திலேயே மிகச் சீருடன் விளங்கியது தமிழ்மொழியாகும். ஆனால் அம்மொழிகள் இற்றைநாளில் உலக வழக்கழிந்தொழிந்து சிதைந்தன. தமிழ் மொழிமட்டும் தனது சீரிளமைத்திறம் குன்றாது, ஏட்டிலே தவழ்ந்தும், வழக்கிலே வளர்ந்தும், நாவிலே நடந்தும், கருத்திலே கனிந்தும், கன்னித் தமிழாய் இன்றும் மிளிர்கின்றது; என்றும் அழியாதது. இப்பொழுது இந்தியாவில் வழங்கப்படும் மொழிகளுக்குள்ளே மிகத் தொன்மைவாய்ந்த இலக்கிய வளம் நிரம்பப் பெற்றது தமிழ் மொழியேயாகும்.

## தமிழ் இலக்கியத் தோற்றம் :—

ஆதலால், இத்தகைய தொன்மையும் சிறப்பும் வாய்ந்த தமிழ் இலக்கியத்தின் வரலாறு மிகநீண்டகால அளவுடையதாய், சுவை மிக்குடையதாய் இருக்குமன்றோ ! ஆனால் தமிழ் மக்களின் தோற்றம்போலத் தமிழ் மொழியின் தோற்றமும் பழங் கதைகள் என்னும் பனிப்படலத்தால் மூடுண்டு கிடக்கிறது. பிற்காலத்தில், இந்து மக்களின் பழங்காலக் கேள்விக் கதைகள் எல்லாம் ஒன்றைப்போலவே மற்றொன்றும் இருக்கவேண்டுமென்று திருத்தப் பட்டதால், தென்னாட்டுப் புராணக்கதைகளும் வடநாட்டுப் புராணங்களையே தழுவி அமைக்கப்பட்டன. இத்தகைய முயற்சியால் பெருந்தீங்கு விளைவதாயிற்று. இயல்பாய் நடக்கக்கூடிய சிறு நிகழ்ச்சிகளைக்கூடத் தெய்வங்கள் வந்து நடத்தியதாகப் புராணப் புளுகுகளைத் திணித்து, உலகியலைக் கடந்த செய்திகளாகத் திரிக்கப்படவும், சில முக்கியமான சரித்திர உண்மைகள் அறவே தோன்றாது ஒழிந்தன. தற்கால சரித்திர ஆராய்ச்சிக்குப் பொருந்தாத கதைகளே மலிந்து காணப்படலாயின. இதற்குச் சான்றாக ஓர் எடுத்துக்காட்டைக் குறிப்பிடலாம். தமிழ் இலக்கியத்தின் தோற்றத்தைப்பற்றிப் புராணம் கூறுவதாவது :—பௌராணிக ஆரியர்களுடைய முதற் கடவுளாகிய பிரமதேவர் கலைவாணியாகிய சரசுவதியையும், மற்றும் இரண்டு தேவமாதர்களையும் அழைத்துக்கொண்டு கங்கையில் நீராடுவதற்காக வந்தார். வருகிற வழியில் ஒரு மானிடன் இசை பாடவும், அதைக் கலைமகள் சிறிது கேட்டுக்கொண்டே நின்றுவிட்டாள். அதனால் பிரமதேவர் நீராடி முடித்த பின்னரே அவள் கங்கைக் கரைக்கு வந்துசேர்ந்தாள். உடனே பிரமதேவர்க்குச் சீற்றம்பொங்கியெழுந்தது. கலைமகள் உடலில் அமைந்த ஐம்பத்திரண்டு எழுத்துக்களில் நாற்பத்தொன்பதும் அத்தனை பெரும் புலவர்களாகப் பிறக்கக்கடவது என்று சபித்துவிட்டார். அதன்படியே, உரியகாலத்தில் அவ்வெழுத்துக்கள் நாற்பத்தொன்பது புலவர்களாகப் பிறக்க

வே, அப்புலவர்கள் இந்தியா முழுவதும் சுற்றித்திரிந்து, பின்பு பாண்டியனின் தலைநகராகிய மதுரையிலே ஒன்றுகூடி ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். நக்கீரர் என்னும் புலவர்தான் அந்த சங்கத்தின் தலைவர்.

## நக்கீரரும் முச்சங்கங்களும் :—

நக்கீரர் என்று ஒரு புலவர் இருந்தது உண்மைதான். அவர் எழுதிய நூல்களும் பாக்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவர் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். கடைச்சங்கம் என்று சொல்லப்படும் இயற்புலவர் கழகத்தின் தலைவராய் இலங்கிய பெரியார். பாண்டிய மன்னர்களுடைய ஆதரவில் இத்தமிழ்ச் சங்கமானது மதுரையிலே நடந்துவந்தது. செற்றமிகழ்ந்து குற்றங்கடியும் செஞ்சொற் புலமைவாய்ந்த நற்றமிழ்ப்புலவராய நக்கீரர், அகப்பொருள் என்னும் நூலுக்குத் தாம் எழுதிய விரிவுரையில், காய்சினவழுதி என்னும் பாண்டிய மன்னன் தமிழ்க் கலைப் பயிர் தழைத்தல் வேண்டி ஒரு தமிழ்க் கழகம் அல்லது சங்கத்தை நிறுவினதாகக் கூறப்படும் என்று குறித்துள்ளார். இத்தலைச்சங்கமானது அப்பொழுது பாண்டியரின் தலைநகராயிருந்த தென் மதுரையில் 4400 ஆண்டுகளாக நடந்துவந்தது. அச்சங்கத்தை 89 பாண்டிய மன்னர்கள் ஆதரித்துவந்தனர். எண்பத்தொன்பதாவது மன்னனின் பெயர் கடுங்கோன். இச்சங்கத்தில் அரசர் எழுவர் உள்ளிட்டு 4449 புலவர்கள் கவியரங்கேறியதாகக் கூறப்படுகிறது. இந்துக் கடவுளர்களிற் சில பெயர்களும் இப்புலவர் வரிசையிற் காணப்படுகின்றன, அவர்கள் அப்பெயர்கொண்ட மானிடராகவே அக்காலத்திருந்திருக்கலாம்.

இப்புலவர் குழாத்திடை அரங்கேற்றப்பட்ட நூல்களுட் சில இசையைப்பற்றியும், கூத்தைப்பற்றியும், அவைபோன்ற கலைகளைபற்றியும் எழுதப்பட்டன. ஆனால், அந்தோ! அவைகளில் ஒன்றேனும் இப்பொழுது கிடைக்கவில்லை. கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னனின் ஆட்சியில் கடலானது பொங்கியெழுந்து பாண்டியநாட்டின் தென்பகுதியாகிய பனை நாட்டை வவ்விக்கொண்டது. அந்த வெள்ளப்பெருக்கில் தென் மதுரை நகரமும் தலைச்சங்க நூல்கள் அடங்கிய ஏடுகளும் அகப்பட்டு அழிந்துபோயின. பனைநாடு எங்கிருந்தது என்பதைத் தெரிந்துகொள்வது அரிதாகாது. பனை மரங்களை மிக்குடையது பனை நாடு. இந்தியாவின் தெற்கோரத்திலும் இலங்கைத்தீவின் வடக்கோரத்திலும் பனைகள் மிகுதியாய் வளர்ந்திருப்பதை இன்றும் காணலாம். இவை இரண்டும் ஒன்றுசேர்ந்து பண்டைக்காலத்தில் மணற்பாங்கான தாழ்ந்த இடமாயிருந்திருக்கவேண்டும். கடல் மண் சோதனையில் வல்ல நிபுணர்களும், இவ்வாறே, மிகவும் முற்பட்டகாலத்தில் கடலானது இடைப்புகுந்து இந்தியாவிலிருந்து இலங்கையைப் பிரித்திருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். இவ்வெள்ளம் நேர்ந்த காலத்தைப்பற்றிக் கூறுவதற்கு மிகவும் பொருத்த



மானவர்கள் தமிழ் மக்களே. ஏனெனில், இவ்வெள்ளத்தால் மூடப்பட்ட நிலத்தில் அவ்வமயம் வாழ்ந்திருந்து தப்பிப் பிழைத்தோர் அவர்களேயாவர். அவர்கள் நேரிற்கண்டு கூறி, அது பின்னர் வழிவழியாகக் கேள்விச்செய்தியாய் நிலவிவந்திருக்கிறது. அதை நாம் நம்பக்கூடுமேயானால், இவ்வெள்ளப்பெருக்கு நிகழ்ந்தது சுமார் கி. மு. 5400 ஆகும்.

## இடைச் சங்கம் :—

பாண்டியநாட்டின் தென்பகுதியைக் கடல் கொண்டொழியவும், வான்றேர்ச்செழியன் என்னும் பாண்டிய மன்னன் கபாடபுரத்தைத் தனது தலைநகராகக்கொண்டு, தன் முன்னோர்கள் ஏற்படுத்திய தமிழ்ச் சங்கத்தைத் தானும் தொடர்ந்து நடத்தலானான். இதுதான் இடைச்சங்கம் என்று சொல்லப்படும்.

இராவணன் சீதையை எடுத்துச் சென்றிருக்கக்கூடிய இடங்களுள் கபாடபுரமும் ஒன்றாய் இருக்கலாம் என்று நினைத்ததாக இராமாயணத்திற் கூறப்படுகிறது, அது பொன்னும் முத்தும் வைத்திழைத்து, வானுலகின் வளம்பதிபோன்று வனப்புடன் விளங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. 3700 ஆண்டுகள் கபாடபுரம் தமிழ்க்கலைப் பண்பாடுகளுக்கும் கல்விக்கும் நிலைக்களமாய் உதவியது என்று தம்முடைய காலத்திற் கூறப்பட்டதாக நக்கீரர் எழுதியுள்ளார். தமிழ்க்கலை செழித்தோங்கும்படி இடைச் சங்கத்தை 59 அரசர்கள் ஆதரித்துவந்ததாகவும், 3700 புலவர்கள் கவியரங்கேறியதாகவும் சொல்லப்படுகின்றன. அவ்விதம் இயற்றிய நூல்களுள், தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலைத் தவிர வேறு ஒன்றும் இப்பொழுது நமக்குக் கிடைக்கவில்லை. தொல்காப்பியம் இயற்றிய தொல்காப்பியனார் அகத்திய முனிவரின் மாணாக்கர் என்று சொல்லப்படுவார். தமிழ் மொழிக்கு முதல் இலக்கண நூல் என்று கருதப்படும் அகத்தியத்தை அடிப்படையாகக்கொண்டே தொல்காப்பியமும் எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரைப்பற்றியும் எத்தனையோ நம்பத்தகாத கதைகள் புனையப்பட்டிருப்பதால், இவர்கள் வாழ்ந்த காலத்தைப் பற்றி உறுதியாக ஒன்றும் சொல்வதற்கில்லை.

நக்கீரர் எழுதிய வரலாற்றை மேலும் தொடர்ந்து பார்ப்போம். கபாடபுரத்தையும் கடல் எழுந்து மூடிவிட்டது, அதன்பின் பாண்டியர்கள் இப்பொழுதுள்ள மதுரையைத் தலைநகராகக் கொண்டனர். முடத்திருமாறன் என்னும் பாண்டிய அரசன் தனது புதிய தலைநகரில் மீண்டும் தமிழ்ச்சங்கத்தை அமைத்தான்.

## கடைச்சங்கம் :—

இதுதான் கடைச்சங்கம் எனப்படுவது. முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதியீறாகவுள்ள பாண்டியர் காலமான 1800 ஆண்டுகள் இச்சங்கம் நிலைபெற்றிருந்தது. நக்கீரர் உக்கிரப்


பெருவழுதியின் காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ஆதலால் கடைச்சங்கமானது கி. மு. 1700-ம் ஆண்டில் தோன்றியிருக்க வேண்டும். இதில் 449 புலவர்கள் நூலியற்றி வெளியிட்டனர். நக்கீரர் கூறும் கடைச்சங்க வரலாறாவது உண்மையாயிருக்கக் காரணம் உண்டு என்பதை உணர்ந்து தமிழ் மக்கள் செம்மாப்புக் கொள்ளலாம். கடைச்சங்க நூல்களாக இப்பொழுது நமக்குக் கிடைத்திருப்பனவற்றுள், சில சிதைவுற்று அரைகுறையாயிருந்தாலும், அவையெல்லாம் நானூற்று நாற்பத்தொன்பது புலவர்களாற் பாடப்பட்டனவேயாகும்.

## முச்சங்கங்களைப்பற்றிய உண்மை :—

முச்சங்கங்களையும்பற்றிய இக்கதையைப் பலரும் பலபடியாக ஆராய்ந்து, அதில் குற்றமே கண்டு முற்றிலும் நம்பத்தகாத பொய்க்கதையென்று தள்ளிவிட்டனர். ஆயினும், ஒன்றுமே இல்லாதவிடத்தில் இத்தகையதொரு கதை எழுந்திருக்கமுடியாது. ஆசிரியர்கள் கூறும் விதமே அகத்தியரின் காலத்தை அளவிட்டு நாம் ஒரு முடிவு செய்துகொள்ளலாம். அக்காலத்தில் அவர் ஓர் இலக்கணம் எழுதவேண்டுமானால் அவருக்கு நெடுங்காலத்திற்கு முன்னமேயே தமிழ் இலக்கிய நூல்கள் நிறைய இருந்திருக்கவேண்டும். ஆதலால், ஏதோ சில செய்திகள் தெய்வத்தோடு பின்னிப் பிணைத்திருப்பதை வைத்து, முச்சங்கங்களைப்பற்றிய கதை முற்றிலும் பொய் என்று தள்ளிவிட முடியாது. இச்செய்திகள் மிகப் பழைய காலத்தில் நடந்தனவாதலால், கேள்விக்கதை வரலாறுகள் சற்றுத்திரிந்து மாறுவது இயல்பே.

கடைச்சங்க நூல்களாக நமக்குக் கிடைத்திருப்பனவற்றுள், நானூற்று நாற்பத்தொன்பது சங்கப் புலவர்கள் பாடல்களோடு, நக்கீரர் காலத்திற்குப்பின் இருந்த பல புலவர் பாக்களும் அடங்கியுள்ளன. மூன்றாம் நூற்றாண்டின் முடிவுவரையும் கடைச்சங்கம் இருந்து வேலை செய்ததாகத் தெரிகிறது. பின்னர் அது மறைந்து போகவும், பல நூற்றாண்டுகள்வரை, ஏதாவது ஒரு முறை தேவையுள்ளபொழுது ஒரு சங்கத்தைக் கூட்டிப் பல சிறந்த புது நூல்கள் அரங்கேற்றப்பட்டிருக்கவேண்டும். அம்முறையாலும் தமிழ் இலக்கியக் களஞ்சியம் வளம்பெற்றிருக்கிறது.

## சங்க காலத்து யாழ்கள்.



# அத்தியாயம்—6

## கடைச்சங்க நூல்கள் :—

கடைச்சங்க காலத்து இலக்கிய நூல்கள் தொன்மை சான்ற சிறப்புடன், இன்றமிழின் இளநலக்கவின் கொண்டு தனித்திலங்கும் ஒரு தொகுதியாய் மிளிர்கின்றன. அவற்றுள் மிகவும் முந்தியனவாக விளங்குவனவற்றுள் வடமொழிச் சொற்கள் சிறிது விரவாது, ஆரியர்களுடைய சமூக சமயக் கருத்துக்களையும் தழுவாமல், தனித்தமிழின் தூயநடையில் எழுதப்பட்டுள்ளன. இத்தகைய பழம் பாடல்கள் மிகச் சுருங்கியனவாய் இருந்தாலும், அவை-ஆரியர்கள் தமிழ் நாட்டினுள் அடியெடுத்துவைக்குமுன்னரே எழுதப்பட்டவை என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இதிலிருந்தே அவற்றினுடைய தொன்மைச் சிறப்பினை நாம் ஒருவாறு தெளிந்துகொள்ளலாம்.

இயற்கைச் சூழலிலே திளைத்துக் களித்த புள்ளினம் இழுமென்றிசைக்கும் இன்னொலிபோல, இப்பழம் பாடல்களும் எளிய நடையில் இயற்கையோடியையத் தெளிவுபெற்று விளங்கா நிற்கும். இப்பழந் தமிழின் தூயநடை ஆரியர்களுடைய வலிந்துபாடும் செயற்கை நடைக்கு முற்றிலும் வேறுபட்டது.

இப்பாடல்களிலிருந்து, நம்முடைய தமிழ் முன்னோர் வீரமும் வலியும் படைத்த வீறுடை மக்களாய் வாழ்ந்தார்கள் என்று தெரிகிறது, அவர்கள் மாண்புடை மானம் வாய்ந்த மைந்தினையுடையவர்கள். மூத்த குடிவந்த மூதின் மகளிராய தமிழ்த் தாய்மார்கள் தங்கள் தநயர் போரிற் புறங் கொடுத்தார் என்னும் பழியஞ்சிப் பதைத்துடனே உயிர் நீப்பர்.

ஒரு தமிழ் வீரனுக்கு முதுகிலே வடுப்பட்டால், அதைவிட் மானக்குறை வேறொன்றுமில்லை. தமிழ்நாடு முழுதும் வீரர் வழிபாடு நடந்துவந்தது. போரில் மடிந்த வீரர்களுக்குக் கல் நட்டு அவ்வீரக்கல்லைத் தெய்வமாக வணங்கி வழிபட்டனர். ஐந்து நிலத்து வாழ்வோரும் ஐந்திணை மக்களாக வகுக்கப்பட்டாலும், எல்லாரும் ஒருதர மக்களாகவே கருதப்பட்டனர். திருமணத்திற்கு முன்னர் காதல் செய்தலும் களவுக் கூட்டமும் நிகழ்வதுண்டு. நிலத்திற்கு நிலம் வழக்க பழக்கங்கள் சிறிது வேறுபடும். பழியஞ்சிக் குடிபுரந்து கோலோச்சும் மன்னனே நாட்டை ஆள்வதற்குரியான். அரசன் எப்பொழுதும் நிலையாக ஒருதானை வைத்திருப்பான். போர்க்காலத்தில் படைத்தலைவர்களும், சிற்றரசர்களும், குடிமக்களும் அரசனுக்குப் படையளிப்பதுமுண்டு தமிழ்நாடு பொதுவெனப் பொருது தத்தம் கொற்றமே முற்றிலும் நிலவவேண்டுமென்று திராவிட நாட்டு முடிவேந்தர் மூவரும் தமக்குள்ளே அடிக்கடி போர் செய்துவந்தனர். முடிவேந்தர்கள்

தவிர, வேளிர், குறுநில மன்னர் போன்ற சிற்றரசர்களும் பேர ரண்கள் வகுத்துக்கொண்டு தமக்குள்ளே போர்கள் நிகழ்த்தின தாகவும் படிக்கிறோம். ஆனால், இவ்விதம் இடைவிடாது போர் கள் நடந்தாலும், பொது மக்களுடைய வாழ்க்கையை வளம்படுத் தும் வாணிகம், உழவுத்தொழில் போன்ற பிற முயற்சிகள் தடை பட்டுக் குன்றியதாகத் தெரியவில்லை. இப்போர்களால் மக்களு டைய வீரச்சிறப்பும், மனவெழுச்சியும், உழைப்பின் ஊக்கமும் நன்குயிர்த்து நிலைபெறலாயின என்றே சொல்லவேண்டும்.

புலவர்களும் பாணர்களும் மாளிகைதோறும் மன்னர்களையும் வள்ளல்களையும் நாடிச்சென்று, அவர்களது வீரச்செயல்களையும் வண்மைச் சிறப்பையும் விந்தைப் பாடல்களால் வழுத்தி, யாழ் மீட்டிப் பண்ணோடு பாடினர். தமிழ்ச் சங்கம் மூன்றும் தலைசிறந்து விளங்குவதற்கு இசைப்பாணர்களும் பேருதவியாய் இருந்தனர். அவர்கள் பாடிய பாடல்கள் பல நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் பண்டைத் தமிழரின் பண்பட்ட உள்ளமும், அவர்தம் வீர வாழ்க்கையும் விழுமிய நோக்கமும் அழகுறத் தீட்டியிருப் பதைக் காணலாம்.

கடைச்சங்க காலத்துப் பாட்டல்களை அக்காலப் பின்பகுதியில் வாழ்ந்த உக்கிரப் பெருவழுதி, சேரல் இரும்பொறை, மாறன் வழுதிபோன்ற தமிழ் மன்னர்களின் கட்டளைப்படி, பல தொகை நூல்களாகத் தொகுத்திருக்கிறார்கள். அத்தொகை நூல்கள் தாம் நுவலும் பொருளுக்கேற்ப, அகம் என்றும் புறம் என்றும் இரு வகையாகப் பிரிக்கப்படும். காதலைப்பற்றிக் கூறுவன அகத் துறை நூல்கள். போரைப்பற்றியும் ஏனைப் பொருள்களைப்பற்றி யும் பாடுவன புறத்துறை நூல்கள். அகத்துறை நூல்களுள் மிகவும் முந்தியது **அகநானூறு**. இது காதலைப்பற்றிய பாடல் கள் நானூறு கொண்டது. இதைத் தொகுப்பித்தோன் உக்கிரப் பெருவழுதி. பல புலவர்கள் பாடிய பாடல்கள் இதில் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன. இதுபோன்று, போரைப்பற்றிய நானூறு பழம் பாடல்களை ஒன்று சேர்த்துத் தொகுக்கப்பட்டது **புற நானூறு** என்னப்படும். இதில் நூற்றைம்பது புலவர்களின் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. போர்கள் வழக்கமாய் அரசர் களால் நடத்தப்பட்டதால், கடைச்சங்க காலத்துத் திகழ்ந்த தமிழ்நாட்டுச் சேர சோழ பாண்டியர்களின் வீரச்செயல்கள் பல வும் புறநானூறு என்னும் இத்தொகை நூலில் நன்கு புலப்படும்.

**நற்றிணை** என்னும் மற்றொரு தொகை நூலும் நானூறு பாடல்களைக் கொண்டது. இது மாறன்வழுதி என்னும் அரசனால் நூற்றெழுபத்தைந்து புலவர்களின் பாடல்களைச் சேர்த்துத் தொகுப்பித்தது. இப்பாடல்களும் காதலையே பொருளாகக் கொண்டு பாடப்பட்டன.

**குறுந்தொகை** என்னும் அகத்துறை நூலும் இருநூற் றைந்து புலவர்கள் பாடிய நானூற்றொரு பாடல்களைக்கொண்டு விளங்குகிறது.



**ஐங்குறு நூறு** என்பது திணைக்கு நூறாக ஐந்து புலவர்களாற் பாடிய ஐந்நூறு பாடல்களைக்கொண்டது. இது சேரல் இரும் பொறை என்னும் சேர அரசனால் தொகுப்பிக்கப்பட்டது.

பதிற்றுப்பத்து என்பது, ஒவ்வொரு சேரவரசன்மேல் பத் துப் பாட்டாகப் பதின்மர் புலவர்களாற் பாடப்பட்டது. அப் பாடல்களுள் எண்மர் புலவர் பாடிய எட்டுப் பத்துக்களே இப் பொழுது நமக்குக் கிடைத்துள்ளன.

பரிபாடல் எழுபது பாடல்களைக் கொண்டது. அவற்றுள் ளும் பல மறைந்துபோயின.

கலித்தொகை என்பது நூற்றைம்பது கலிப்பாக்களால் அகப்பொருள் ஐந்திணை மேலும் ஐந்து புலவர்களாற் பாடப்பட் டது. அவற்றுள் நெய்தற் கலியைப் பாடிய நல்லந்துவனார் என் னும் புலவரே கடவுள் வாழ்த்துச் செய்யுளையும் பாடி இதனைத் தொகுத்தவராவர்.

பத்துப்பாட்டு என்பது பத்து நீண்ட பாட்டல்களையுடையது. அவை முறையே வருமாறு:—

திருமுருகாற்றுப்படை,—இது தமிழரின் போர்க் கடவுளாகிய முருகனை வழுத்தி நக்கீரர் என்னும் புலவராற் பாடப்பட் டது.

பொருநராற்றுப்படை,—இது முடத்தாமக் கண்ணியார் என்னும் புலவரால் சோழன் கரிகாலனது வெற்றிச்செயல்களை விரி த்துப் பாடப்பட்டது.

சிறுபாணாற்றுப்படை,—இது நல்லூர் நத்தத்தனார் நல்லியக் கோட னைப் புகழ்ந்து பாடியது.

பெரும்பாணாற்றுப்படை,—இதில் உருத்திரங் கண்ணனார் தொண் டை நாட்டரசன் தொண்டைமான் இளந்திரையனைப் போற்றி யிருக்கிறார்.

முல்லைப்பாட்டு,—இதில் நப்பூதனார், கார்காலத்தில் தனித்து உறையும் தலைவியின் துயரமும் தலைவனின் வீரமும் இனிது விளங்கப் பாடியுள்ளார்.

மதுரைக்காஞ்சி,—இது மாங்குடி மருதனார் பாண்டிய அரசன் நெடுஞ்செழியனைப் புகழ்ந்து பாடியது.

நெடுநல்வாடை,—இது நக்கீரர் நெடுஞ்செழியன்மேற் பாடியது.

குறிஞ்சிப்பாட்டு,—இது கபிலரால் ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்காகப் பாடியது.

**பட்டினப்பாலை**—இது உருத்திரங் கண்ணனார் கரிகால் வளவனையும் காவிரிப்பூம் பட்டினத்தையும் சிறப்பித்துப் பாடியது.

**மலைபடுகடாம்,**—இது பெருங்குன்றூர் பெருங் கௌசிகனார் நன்னனைப்பற்றிப் பாடியது.

இவ்விதம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் நூல்கள் தவிர பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகுதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவ்வகை நூல்கள் பதினெட்டிலும் பார்ப்பனீய இந்துமதக் கொள்கைகளின், கருத்துக்களும், வடமொழிச்சொல் வழக்குகளும் மலிந்து காணப்படுகின்றன. தமிழ் மக்களிடையே ஆரியப் பண்பாடுகள் வந்து கலந்த காலமாகிய கடைச்சங்கத்தின் இறுதியில் அந்நூல்கள் எழுதப்பட்டிருக்கவேண்டும். அவையாவன:—" நாலடியார், நான் மணிக்கடிகை, கார் நாற்பது, களவழி நாற்பது இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமாலை, திணைமொழி, ஐந்திணை எழுபது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி. கைந்நிலை."

இவற்றுள் திருக்குறள் முக்கியமானது. அதிற் காணப்படும் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள் வெண்பாக்களும் அறிவின் முதிர்ச்சியில் திரண்ட முத்துக்களாய் இலங்குகின்றன. ஒவ்வொரு குறளும் இரண்டு அடியாலே அமைக்கப்பட்டிருப்பினும், அக்குறுகிய அடிகள் மனித வாழ்க்கைக்கு வேண்டிய உறுதிப் பொருள்களையெல்லாம் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கின்றன. திருக்குறள் தமிழ் வேதம் என்று போற்றப்படும். ஆனால் ஆரிய வேதங்களைப்போல் ஒரு சமயச்சார்பிலே எழுதப்படாமல், யாவரும் ஏற்றுக்கொள்ளும் முறையில், பொய்தீர் ஒழுக்க நெறியாகிய அறநெறியையே எடுத்துக் கூறுகிறது திருக்குறள். அதன் ஆசிரியர் திருவள்ளுவர் என்னும் பெரியார். அவர் ஒரு சமணராகக் கருதப்படினும், அவர் யாதொரு சமயத்தின் குறுகிய நோக்கங்களையாவது கொண்டவரல்லர். அவருடைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றிப் பலர் பலவாறாகக் கூறுகின்றனர். நம்முடைய பழங்காலப் புலவர்கள் தங்களுடைய வாழ்க்கையைப் பற்றி எதுவும் எடுத்தியம்பும் வழக்கம் இல்லை. ஏதோ ஒன்றிரண்டு செய்திகள் அவர்கள் நூல்களில் அவர்களை அறியாமலே தென்படலாமேயொழிய வேறில்லை. இவருடைய காலம் இன்னதென்று அறிவதற்குப் பிற்காலத்தெழுந்த கதைகள் எல்லாம் சரித்திரவுண்மையுடையனவல்லவாதலால், அவை ஏற்றுக் கொள்ளத்தக்கனவாயில்லை.

இலத்தீன் முதலிய எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் திருக்குறளை மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

ஐம்பெருங் காப்பியங்களில் இரண்டாகிய சிலப்பதிகாரமும், மணிமேகலையும், கடைச்சங்கக்காலத்து நூல்களைச் சேர்ந்தவைகளே. அவை கடைச்சங்கத்தாரால் இறுதியில் ஏற்றுக்கொள்



ளப்பட்ட பெரிய நூல்கள் போலும். இலக்கிய நூல்கள் காவிய நடையில் எழுதுவதென்பது முதலில் ஆரியர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு வழக்காகும். கடைச்சங்க காலத்தின் பிற்பகுதியில், அதாவது, இரண்டாம் நூற்றாண்டின் இடைக்காலம் அல்லது சிறிது பிந்தி, தமிழ்ப் புலவர்கள் தூய தமிழ் இலக்கியமுறைகளை மட்டும் கையாள்வது என்பதை விட்டு, ஆரியர்களுடைய இலக்கிய வழக்குகளையும் மரபுகளையும் பின் தொடர்ந்து நூல்கள் செய்யத் தொடங்கினர்.

சிலப்பதிகாரம் அல்லது சிலம்பைப்பற்றியெழுந்த காவிய நூலானது பத்தினிப் பெண்ணாகிய கண்ணகி யென்னும் கற்புடையாளின் அற்புதச் செயல்களை விரித்துக் கூறுகிறது. அவள் இவ்வுலகை நீத்ததன் பின்னர் பத்தினிக் கடவுளாக வழிபடலானாள். ஒருகாலத்தில் அவளுடைய வழிபாடு, இலங்கையுட்பட இந்தியாவின் பல பாகங்களிலும் பரவியிருந்தது. இலங்கையில் தமிழர்கள் கண்ணகியம்மனை இன்னும் வழிபட்டுவருகிறார்கள். தென் இந்தியாவைவிட, இலங்கையிலுள்ள தமிழ் மாகாணங்களில் கண்ணகியம்மன் கோயில்கள் ஏராளமாய்க் காணப்படுகின்றன. சிங்கள வரலாற்றின்படி முதலாம் கயவாகு (கி. பி. 174—195) என்னும் அரசனே இலங்கையில் பத்தினி வழிபாட்டைப் புகுத்தினவனென்றும், பத்தினியின் காற்சிலம்பு ஒன்றை அவன் இலங்கைக்குக் கொண்டுவந்தானென்றும் சொல்லப்படும். சிங்கள நாட்டில் பல இடங்களிலும் பத்தினியின் தேவாலயங்கள் காணப்படுகின்றன. இந்தப் பத்தினிக் கோயில்களில் 'ஹாலம்பா' என்னப்படும் சிலம்பானது இன்னும் வைத்து வணங்கப்படுகிறது.

இந்தக் காப்பிய நூலிற் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் செங்குட்டுவன் என்னும் சேர அரசனின் ஆட்சிக்காலத்தில் நடந்தனவாகும். சேரன் செங்குட்டுவனின் திருத்தம்பியாராகிய இளங்கோவடிகள் என்னும் அரசிளங்குமரரே, துறவு நிலைபூண்டு, இக்காப்பிய நூலைப் பாடியருளினார். பழக்காலத் தமிழ் மன்னர்களிற் செங்குட்டுவன் ஒரு தலைசிறந்த மன்னனாய் விளங்கினான். இளங்கோவடிகளும் தாம் எழுதிய அழியாப்புகழ் படைத்த அருமைக் காப்பியத்தில் தமது தமையனைப்பற்றிய வீரச்செயல்களையும் ஒரு பகுதியில் அமைத்துள்ளார்.

இளங்கோவடிகளின் நெருங்கிய நண்பராகிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் மணிமேகலை என்னும் காப்பியம் பாடப்பட்டது. அவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர். அவர் தமது நூலாகிய மணிமேகலையில், கோவலன் மகளாகிய மணிமேகலை புத்த மதத்தைச் சேர்ந்து துறவுபூண்ட வரலாற்றைக் கூறுமுகத்தானே புத்த சமயத் தத்துவங்களை யெடுத்துச் சிறந்த முறையில் நன்கு விளக்கியுள்ளார்.

இந்த இரண்டு காப்பியங்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ் நாட்டில் தழைத்தோங்கிய கலைச்சிறப்பையும், வேலைத்திற நுட்பங்களையும், தமிழ் மக்களுடைய பண

பாடுகளையும், நாகரிக வாழ்க்கையையும் திறம்படக்கூறும் திப்பிய நூல்களாகவுள்ளன. ஆடலும் பாடலும் பண்டைத் தமிழர் வாழ்க்கையில் முதன்மைபெற்று விளங்கின. இந்தக் கலைகளின் மரபு முறைகள் எல்லாம் இப்பொழுது தென் இந்தியாவில் வழங்கப்படும் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் முதலியவைகளுக்கு முற்றிலும் வேறுபட்டன. அக்காலத்தில் வழங்கப்பட்ட பல்வேறு இசைக் கருவிகளைப்பற்றியும், ஆடல் மகளிருக்கு அக்காலம் கொடுக்கப்பட்ட பயிற்சிகளைப்பற்றியும் அக்காப்பியங்களில் விரித்துக் கூறியிருப்பதைக்காண வியப்பாகவே இருக்கும். நடனக்கலையில் ஒரு பெண் தேர்ச்சியடையவேண்டுமானால், ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயதளவும் அவள் தனது உடலையும் மிடற்றையும் உரியமுறையிற் பயிற்றவேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெற்றபின்னர், ஆடல் அரங்கமைத்து ஓர் அரசன் முன்னிலையில் அரங்கேற்றுவது வழக்கமாக இருந்தது. இது அக்காலவரசர்கள் தமது நாட்டுக்கலைப் பண்பாடுகளில் தாம் எடுத்துக்கொண்ட ஆர்வத்தை நன்கு புலப்படுத்துவதாகும்.

திராவிட மக்கள் வழங்கிவந்த பலவித இசைக்கருவிகளைப் பற்றியும் அந்நூல் கூறுகிறது. அவற்றுள் நான்குவகை யாழ்களையும், முப்பத்தொரு வகை தோற் கருவிகளையும் நாம் காணலாம். இன்னும் இசைத்துறையிலும், நாடகத்துறையிலும் தத்துவச் செய்திகளைப்பற்றியும் அக்காலத்திற் குறித்து வழங்கப்பட்ட தனித் தமிழ்க்கலைச் சொற்களைக்கண்டு நாம் மகிழலாம். அச்சொற்கள் எல்லாம் இக்காலத்தில் வழக்கிறந்து மங்கிக்கிடக்கின்றன. மொழியை வளர்த்து வளம்படுத்துகிறோம் என்றபெயரால், இந்நாளில் அத்தமிழ்க் கலைச்சொற்களைக் களைந்து வடமொழிச் சொற்களை நிறையப் புகுத்தி வழங்குகின்றனர்.

## தமிழ் எழுத்தின் வரலாறு :—

தொல்காப்பியம் சங்க இலக்கியம் முதலியன அக்காலத்திலேயே எழுதப்பட்டிருப்பதால், பண்டைத் தமிழ்மக்களிடையே தமக்கென ஓர் எழுத்து முறைமை ஏற்பட்டிருந்ததா என்ற கேள்வி எழுதல்கூடும். தமிழ் இலக்கியம் முதலில் இருந்தே எழுதப்பட்டு வந்ததேதவிர, வேதங்களையும் ஏனை வடமொழி நூல்களையும் போல் எழுதப்படாமல் வாயாற்சொல்லி மனப்பாடம் செய்யப்பட்டுவந்திருப்பதில்லையென்பது திண்ணம். தனக்கு முன்னரே இருந்துவந்த இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுக்கவந்த தொல்காப்பிய நூலிலேயே எழுத்தைப்பற்றிய இலக்கணம் ஒரு தனி அதிகாரமாக்ச் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், எழுத்து என்னும் சொல்லே தனித் தமிழாய் இருப்பதைக் காணலாம். அதேபொழுது, சமஸ்கிருத மொழிக்காக எழுந்த முதல் இலக்கண நூல்களில் எழுத்தைப்பற்றி யாதொரு குறிப்பும் இல்லை. அக்காலத்தில் ஆரியர்களுக்கு வடிவெழுத்து இல்லாததே அதற்குக் காரணமாகும்.



கி. மு. 5000 ஆண்டளவிலேயே பழந் திராவிட மக்கள் ஒருவகை எழுத்துமுறையைக் கையாண்டு வந்ததாகத் தெரிகிறது. மொஹஞ்சதரோக் காலத்து வழங்கிய சித்திர எழுத்துக்களிலிருந்து பிராமி என்னும் எழுத்துமுறை எப்படித் தோன்றியிருக்க வேண்டுமென்பதை லாங்டன் என்னும் பெரியார் (Professor Londgdon) நன்கு விளங்கக் காட்டியுள்ளார். இன்னும், ஆரியர்கள் எவ்வாறு இவ்வெழுத்து முறையைக் கையாண்டு தங்கள் சமஸ்கிருத மொழியை வளம்பெறச் செய்தனர் என்பதையும், அதனால் இவ்வடமொழி ஏனை ஆரியவினத்தைச் சேர்ந்த மொழிகளுக்கில்லாத சில குணங்குறிகளைக்கொண்டு விளங்குவதையும்பற்றி அவரே கூறியுள்ளார். (முக்கர்ஜி எழுதிய ‘ இந்து நாகரிகம் ’ என்னும் நூலைப் பார்க்கவும்). தற்காலம் உள்ள தமிழ் எழுத்தின் வடிவம் பத்தாம்நூற்றாண்டிலே ஏற்பட்டது. அம்முறையானது அதற்கு முன்னிருந்த வட்டெழுத்து முறையினின்றும் தோன்றியதாகும். இவ்வெழுத்து முறையானது தென்னிந்தியாவில் சமஸ்கிருதத்தை எழுதிய கிரந்தவெழுத்துமுறையை ஒத்து விளங்குகிறது. வட்டெழுத்துக்களையும் கிரந்தவெழுத்துக்களையும் தவிர, இந்தியாவில், முக்கியமாய்த் தென் பகுதியில், ஒருசேரத் தோன்றிய இன்னும் பலவகை எழுத்துமுறைகளும் இருந்துவந்தன. இவ்வகை எழுத்துக்களெல்லாம் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் அசோக மன்னனால் கையாளப்பட்ட பிராமி எழுத்துக்களோடு தொடர்பு கொண்டனவாகவே காணப்படும். சரித்திர காலத்திற்கும் முற்பட்டதாக மொஹஞ்சோதரோவிற் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துக்களுக்குப் பிறகு, இந்தியாவில் சரித்திரகாலத்தில் மௌரியவரசர்களின் கட்டளைகளைப் பாறைகளில் வெட்டப்பட்டிருக்கும் எழுத்துக்களே மிகவும் முந்தியனவாகவுள்ளன. ஆதலால், தென் இந்தியாவிற் காணப்படும் எழுத்துமுறைகள் எல்லாம் அசோகன் எழுத்தாகிய பிராமி வடிவிலிருந்தே தோன்றியனவாகப் பலர் கருதுகின்றனர். வரலாற்று உண்மைகளைக் கற்களிற் பொறித்துச் சேமிக்கவேண்டுமென்று அசோகன் போன்ற மௌரிய அரசர்களே முதன் முதலில் எண்ணியிருக்கலாம். இன்னும், அவர்கள் அக்காலத்தில் வட இந்தியாவின் ஒருபகுதியை ஆண்டு வந்த கிரேக்கர்களிடமிருந்துங்கூட எழுத்துமுறையைத் தெரிந்துகொண்டிருக்கலாம். ஆனால் அதற்குமுன் இந்தியாவில் எழுத்துமுறையே இருந்ததில்லை என்று சொல்வது உண்மையாகாது. இந்த பிராமி எழுத்துமுறையானது கி. மு. ஏழாம் நூற்றாண்டில் போனீஷியர்கள் கைக்கொண்டிருந்த எழுத்துமுறையைப் பெரிதும் ஒத்திருப்பதாக இப்பொழுது தெரியவருகிறது. பழங்காலத்தில் திராவிடர்கள் நிறைந்திருந்த இந்திய நாடானது அக்காலத்து நடுநிலக் கடற்பகுதி நில மக்களோடு சேர்ந்து பொதுவானதொரு மொழியையும் பண்பாடுகளையும் வழங்கிவந்திருத்தல் கூடுமென்பதையும் நோக்காது, பழைய இந்திய எழுத்து முறையானது செமிட்டிக்குழுவினத்து மொழிகளிலிருந்து தோன்றியிருக்கலாம் என்றுகூடச் சிலர் நம்புகின்றனர்.

போனீஷிய எழுத்துவடிவிலிருந்து பிரர்மி வடிவம் தோன்றியிருந்தாற்கூட, கடலோடும் வாழ்க்கையைக்கொண்ட போனீஷியர்கள் நடுநிலக் கடலோரத்திலிருந்து இந்தியாவுக்குக் கடல்வழியாக வந்தனரேயன்றி நிலத்தின்வழியாக வரவில்லை. ஆதலால் வட இந்தியாவைவிடத் தென் இந்தியாவோடுதான் அவர்கள் மிகவும் முந்திய தொடர்புடையவர்களாக இருந்திருக்கவேண்டும். தமிழ்ச் சொற்கள், முக்கியமாய் வாணிகப்பண்டங்களின் தமிழ்ப் பெயர்கள் பழைய ஹீப்ரூ, கிரேக்க மொழிகளிற் புகுந்து காணப்படுகின்றன. சரித்திரகாலத்திற்கு முன்னர் இருந்து இப்பொழுது அழிந்துபோன முகையர் (Mugheir) என்னும் இடத்திற் கண்டு பிடிக்கப்பட்ட தென்னிந்தியத் தேக்குமரத்துண்டுகளாலும், வேறு சில பொருள்களாலும் பழைய திராவிட நாட்டிற்கும் நடுநிலக் கடற்பகுதி நாடுகளுக்கும் அக்காலத்திருந்துவந்த வாணிகத் தொடர்பு நன்கு விளங்குவதாகும். இத்தகைய செய்திகளையெல்லாம் பார்க்கும்பொழுது, பழைய போனீஷிய எழுத்துமுறையானது, முதலில் தென்னிந்தியாவிற் புகுந்து, பின்னர் நாளடைவில் வடபகுதிக்குச் சென்றிருக்கவேண்டுமென்று நம்புவதற்கு இடமுண்டாகிறது. பின்னர், அசோகனுடைய ஆட்சிக்காலத்தில் அம்முறை எழுத்துக்களின் பலவகைகள் ஆரியவர்த்தத்திலும் தக்கிணத்திலும் தோன்றியிருக்கவேண்டும் என்னலாம்.

# அத்தியாயம்—

## சங்க காலத்துத் தமிழ் அரசர்கள்

சங்க இலக்கியத்திற் காணும் குறிப்புக்களின் உதவியால், நாம், அக்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த பல அரசர்களும் வள்ளல்களும் எவ்வாறு விளங்கினர் என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். அவர்களுடைய கல்வித்திறனும் போர்த்திறனும் இனிது புலனாகின்றன. ஆனால் அக்குறிப்புகள் ஒன்றோடொன்று தொடர்பில்லாத தனித்தனி நிகழ்ச்சிகளைப்பற்றியே கூறுவதால், அக்கால வரலாற்றினை ஒழுங்குபடுத்தித் தொடர்ந்தமைப்பதற்கு வழியில்லை. ஆரியரை எதிர்த்தெழுந்த போராட்டம் சங்க காலத் தமிழர் உள்ளத்தில் உயிர்த்துக்கொண்டேயிருந்திருக்கிறது. அவ்விரு இனத்தவரிடையும் அரசியலிலும் வாழ்க்கைமுறைப் பண்பாடுகளிலும் ஏற்பட்ட முரண்பாட்டைப் பற்றிய குறிப்புகள் பல சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. தமிழ் அரசர்கள் ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு வடநாட்டு ஆரியமக்கள் மேற்போர் தொடுத்து வென்று, அவ்வாரிய வர்த்தத்தில் தீரம் நடத்திய வீரச் செயல்களை நிலை பெறுத்துவதற்காக, ‘ஆரியப்படை கடந்த’, ‘இமய வரம்பன்’ போன்ற விருதுப் பெயர்களைப் பூண்டனர்.

பிந்துசாரன் காலத்தில் மௌரியப் பேரரசானது பரந்து தமிழ்நாட்டின் வட எல்லைவரை வளர்ந்துவிடவும், பழங்காலப் பகையானது தமிழ்நாட்டினுள்ளும் வந்துவிடலாகாது என்ற உணர்ச்சியைத் தமிழ் மன்னர்கள் பெற்றிருக்கவேண்டும். அது முதல் கி. பி. 335 வரை தமிழர் தங்கள் தற்காப்பின் நிமித்தமாகவே ஆரிய மக்களுடன் போர் நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆனால், வாய்ப்புக் கிட்டியபோதெல்லாம் தமிழ் மன்னர் ஆரியவர்த்தத்தினுள்ளும் நுழைந்து போரை நடத்தினர். அசோகனுக்குப் பின்வந்த அரசர்கள் வலி குன்றியவர்களாய் இருந்ததால் கி. மு. நூறாவது ஆண்டளவில் மௌரியர்கள் தங்கள் கையிலிருந்த தக்கிணப்பகுதி நாட்டை இழந்துவிட்டனர். அதற்குப்பின் ஐந்து நூற்றாண்கள் கழிந்த பின்னரே குப்தர்கள் என்ற ஆரியக் குடும்பத்தாரின் ஆட்சி கி. பி. முந்நூறாவது ஆண்டளவில் பேரரசுப் புகழ்கொண்டு கிளம்பியது.

இந்த இடைப்பட்ட நீண்டகாலமாகிய நானூறுக்கு மேலான ஆண்டுகளில் வட இந்திய சரித்திரமானது மிகவும் துயரம் நிறைந்தபகுதியாகும். அலெக்சாந்தரைச் சார்ந்தவர்களின்வழிவந்தவர்களாகிய இந்திய கிரேக்கர்கள் பாக்டிரியா, பார்த்தியா என்னப்படும் தற்கால ஆப்கானிஸ்தானம், பலுச்சிஸ்தானம் என்னும் பகுதியை ஆண்டுகொண்டிருந்தனர். அவர்கள் சுமார் கி. மு. நூறாவது ஆண்டில் வட இந்தியாவைப் படையெடுத்துவந்து

ஆரியவர்த்தத்தின் மேலைப்பகுதியில் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினர். அது கிறிஸ்துவின் காலந்தொடக்கம்வரை நடந்துவந்தது. அசோகன் இறந்த பிறகு தெற்கே ஆந்திரர்கள் முதலாவதாகத் தாங்கள் இழந்த உரிமையை மீண்டும் பெற்று, விந்திய மலைக்குத் தெற்கே மௌரியர்கள் கையிலிருந்த நாடனைத்தையும் பிடுங்கிக்கொண்டனர். அவர்கள் அதோடு நிற்காமல், கி. மு. நூறுவது ஆண்டில் ஆரிய நாடாகிய அவந்தியையும் கைப்பற்றினர். அக்காலத்திலும் கி. பி. சில நூற்றாண்டுகள் முடியமட்டும் ஆந்திரர்கள் பெரும்பாலும் புத்த சமயத்தைத் தழுவினவர்களாயிருந்தார்கள். அவர்கள் பல விகாரங்களையும், பள்ளிகளையும் கட்டுவித்து அவற்றைப் பலவகைச் சித்திரங்களாலும், சிற்பங்களாலும் அழகுபடுத்தினர். இக்காலத்தும் அவர்களின் கலை நுட்பங்களைத் தக்கிணத்தில் நாசிக், அஜந்தா, அமராவதி போன்ற பல இடங்களிற் காணலாம். ஆந்திரர்களுடைய நாகரிக முனைப்பால், இலங்கையில்கூட அவர்களின் கலை நுட்பங்கள் சென்று பயிலலுற்றன. அக்காலத்தில் இலங்கையிற் கட்டப்பட்ட பௌத்த பள்ளிகளும் மடங்களும் ஆந்திரர்களுடைய சிற்பக் கலையைப் பின்பற்றியே கட்டப்பட்டன. அக்காலத்தில் இலங்கையும் ஆந்திரர் நாடும் புத்த சமயத்தையே தழுவி இருந்ததால், இரண்டும் நெருங்கிய தொடர்புகொண்டு விளங்கின.

கிறிஸ்துவின் காலத்தொடக்கத்தில் ஆரியவர்த்தத்தின் மேலைப்பகுதியை ஆண்டுவந்த இந்திய கிரேக்கர்களைக் குஷான் என்னும் ஒரு மங்கோலிய வகுப்பார் தோற்கடித்தனர். வட இந்தியாவின் பெரும்பகுதி குஷான் அரசர்களுடைய ஆளுகையின் கீழ் வரலாயிற்று. அவர்களின் ஆட்சி குப்தர்கள் எழுந்த காலம் வரையில், சுமார் மூந்நூறு ஆண்டுகள் நடந்துவந்தது. இவ்வாறு மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் நெடுங்காலம் வட இந்தியா அயலாருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது தெற்றென விளங்கும்; வச்சிரம், மகதம், வங்கம், கங்கைக்கும் இமயத்திற்கும் இடைப்பட்ட பத்துச் சிற்றரசுகள், என்னும் இனங்களே சிறிது உரிமையுடன் தனியரசுகளாய் விளங்கிவந்தன. அக்காலத்தில் திராவிடத்தில் ஆண்டுவந்த தமிழ் அரசர்கள் படையெடுத்து வென்ற ஆரிய நாடுகள் எல்லாம் கிழக்கு ஆரியவர்த்தத்திற் காணப்படுவனவேயன்றி, அயலார் ஆட்சியில் இருந்துவந்த மேலைப்பகுதி ஆரியவர்த்தத்தில் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

முதன் முதல் வட இந்தியாவைப் படையெடுத்த கரிகாலன், அக்கரிகாலனால் வெல்லப்பட்ட சிறந்த வீரனாகிய பெருஞ் சேரலாதன் என்னும் சேரமன்னன், பாண்டிய அரசனான ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், அவன் காலத்தவனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன், அவன் மைத்துனனான கிள்ளிவளவன் என்னும் சோழன், சோழன் நலங்கிள்ளி, தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பெருநற்



கிள்ளி, பாண்டியன் மாறன்வழுதி, உக்கிரப் பெருவழுதி, சேரல் இரும்பொறை முதலிய மன்னர்கள் சங்க காலத்தரசர்களுள் மிகவும் பெயர் பெற்றவர்கள் ஆவார்கள்.

இவர்களுள் கரிகாலனையும் செங்குட்டுவனையும் தவிர, ஏனையோர்கள் எல்லாரும் தமிழ்நாட்டு எல்லைக்குள் நிகழ்த்திய போர்ச் செயல்களாலும், தமிழ்ச் சங்கத்தை ஆதரித்துவந்த வண்மையாலும் பெயர் பெற்றவர்கள். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், அவர்களின் சிறப்புப் பெயர் தெரிவிக்கிறபடி, ஆரியர்களை எதிர்த்து ஏதோ வெற்றி கொண்டார்கள் என்றுமட்டும் தெரிகிறதேயொழிய வேறு விரிவான செய்தி யாதும் தெரிவதற்கில்லை.

**சோழன் கரிகாலன் :—**

திராவிடநாட்டு வீர மன்னர்களில் மிகவும் முந்தியவனும் நன்கு தெரியப்பட்டவனுமாகவுள்ளவன் சோழன் கரிகாலன். அவன் இளஞ்சேட் சென்னி என்பவனுடைய மகனென்று எழுதப்பட்டுள்ளது. இளஞ்சேட் சென்னி என்னும் பெயரிலிருந்தே அவன் ஒரு சோழ அரசனின் தம்பி என்பது புலப்படும். கரிகாலன் தன் வயிற்றிற் கருவுற்றிருக்கும்பொழுதே சோழ அரசைத் தாயகமாகப் பெற்றானென்று கூறப்படுகிறது. இதனால் அவன் பிறக்கும் முன்னரே அவன் தந்தையும், அத்தந்தையின் தமையனான சோழ மன்னனும் இறந்துவிட்டனர் என்பது விளங்கும். அவனுடைய இளமைப்பருவத்தில் சோழநாட்டின் அரசாட்சி சில தலைவர்களுடைய கையில் இருந்துவந்தது. உரியகாலத்தில் கரிகாலனுக்குப் பட்டம் சூட்டிவைப்பதாக அவர்களுக்கு எண்ணமில்லை. ஒரு சிங்கக் குட்டியைக் கூட்டில் அடைப்பதுபோல், கரிகாலனை அடைத்துச் சுற்றிலும் காவலாளர்களும், ஒற்றர்களும் சூழ்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது. அவனுடைய இளமைப்பருவத்தைப்பற்றி எத்தனையோ கட்டுக் கதைகள் உண்டு. இளைஞனான அவனைப் பல ஆண்டுகள் சிறையிலிட்டு வைத்திருந்ததாகச் சொல்லப்படும். அவன் தாய் மாமனான இரும்பிடர்த்தலையார் சேரநாட்டில் வதிந்துவந்ததால், கரிகாலன் மெதுவாகச் சிறையினின்றும் தப்பியோடிச் சேரநாட்டை அடைந்தான். பின்னர், கரிகாலனுக்குத் துயர் விளைத்த ஆட்சியாளர்கள்மேல் சோழநாட்டுக் குடிமக்கள் சீறியெழுந்து அவர்களைத் துரத்திவிட்டுக் கரிகாலனைக் கொண்டுவந்து முடிசூட்டியதாகக் கதைகள் கூறுகின்றன.

கரிகாலன் சோழநாட்டாட்சியைக் கைக்கொண்டவுடனே, பல சிற்றரசர்களின் தலைமையில் நாட்டில் கலகம் விளைவித்துக் கொண்டிருந்த பல கூட்டத்தார்களையும் தன்கீழ் ஒன்றுபடுத்தும் வேலையை மேற்கொண்டான். அவ்வாறே ஒளியர், அருவாளர் என்ற இரண்டு முரட்டுக் கூட்டத்தார்களையும் அடக்கித் தனடிப்படுத்தினான். இவ்விதம் உட்பகை களைந்து தன் நாட்டை ஒன்றுபடுத்தினதும், தன்னோடொத்த சேரபாண்டியர்களைத் தாக்கும்படியான வலிமை அவனுக்குப் பிறந்தது. அவர்கள்

இருவரும் தன் இளமைப்பருவத்தில் தன் பகைவர்களாயிருந்த ஆட்சியாளர்களுக்கு உதவிபுரிந்துவந்தவர்கள். இப்பொழுதும் போர்க்கோலம் பூண்டு சோழநாட்டைத் தாக்க முனைந்துள்ளார். கரிகாலன் தன் படைக்குத் தானே தலைமை தாங்கிச் சேரபாண்டியரை எதிர்த்தான். வெண்ணி என்னும் போர்க்களத்திற் கடும் போர் நடந்தது, அக்காலத்திற் புகழ்வாய்ந்த போர்வீரனாய் விளங்கிய பெருஞ்சேரல் என்னும் சேரமன்னன் கரிகாலனோடு தனியே போர் செய்யக்கருதி, அவன் நிற்கும் இடம்நோக்கி விரைந்துவந்தான். அப்பெயர்வாய்ந்த சேரன் தன்னைநோக்கி வருவதைக்கண்ட கரிகாலன் தன் கணைகளைச் சரமாரியாய் அவன்மீது பொழிந்தான். அவற்றைப் பொருட்படுத்தாது முன்னேறிவந்த சேரன் சற்றே திரும்பித் தன் துணையாட்களைப் பார்க்கவும், அவ்விமைப்பொழுதினுள்ளே சோழன் கணையொன்று சேரன் முதுகிற் பட்டுவிட்டது. ஆனால் அது மேலாகப் பட்டுவிழுந்ததால் பெருஞ்சேரல் அப்பொழுது அதைக் கவனிக்கவில்லை. அன்று முழுதும் போர் நடந்து ஒரு முடிவுக்கு வராததால் அன்றிரவில் இரு பக்கத்தாரும் போரை நிறுத்திவிட்டுத் தம் பாடிகளுக்குச் சென்றனர். அங்குத் தன் படைத்தலைவர்கள் புடைசூழ சேரமன்னன் வீற்றிருந்து தன் விழுப்புண்களைச் சோதிக்கும்பொழுது தான் தன் முதுகிற் பட்டிருந்த கோறையைக் கண்டான். கண்டதும் மனம் புண்பட்டுக் கலங்கினான். முதுகில் வடுப்பட்டதே என்று விம்மினான். தற்செயலாய்ப்பட்ட அக்கோறை ஒரு குற்றமாகாது என்று அவனைச் சேர்ந்தோர்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும், தம் முன்னோர்கள் மானம் குலைந்ததேயென்று துளங்கினான். மறுநாள் போர்க்களம் செல்லுதலையும் நாணி விடுத்தான். வாளொடு வடக்கிருந்து உயிர் நீத்தான்.

அவ் வெண்ணிப் போரில் கரிகாலன் மிக எளிதில் வெற்றிமாலை சூடி, பாண்டிய நாட்டையும் சேர நாட்டையும் தன் ஆட்சியினுட்படுத்தினான். தமிழர் சரித்திரத்தில் முதன் முறையாகத் தமிழ்நாடு ஒன்றுபட்டு ஒரு குடையின்கீழடங்கியது இதுவேயாகும். அவ்விதம் தமிழ்நாடு அறிவும் அறமும் செறிந்த தன் ஆட்சியின்கீழே வந்ததும், கரிகாலன் திராவிட நாட்டின் பழமையான எல்லையை அகற்றி அதற்கப்பாலும் தனது ஆட்சியைப் பரவச் செய்யவேண்டுமென நினைந்தான். வடக்கே, முதலில் ஆந்திரர்களே பகைவர்கள். அசோகன் இறந்தபிறகு ஆந்திரர்கள் எவ்வாறு வலியோங்கிவிட்டனர் என்பதை முன்னரே பார்த்தோம். மூன்றாவது நூற்றாண்டின் தொடக்கம்வரை அவர்கள் மேலோங்கியிருந்தாலும், இடையிடையே அவர்கள் தலைசாய்ந்ததும் உண்டு. சோழன் கரிகாலன் முன்னேறிவந்த நாளில் ஆந்திரர்கள் சிறிது பின்னொதுக்கப்பட்டே கிடந்தனர்.

கரிகாலன் காலத்தில் ஆந்திரநாடு பல அரசுகளாகப் பிரிந்திருந்தது. அவற்றுள் ஒன்பது அரசுகள் ஒன்றுகூடித் தமிழ் மன்னன் கரிகாலனைத் தடுத்தனர். வாகை என்னும் போர்க்களத்தில் ஏழுநாள் போர் நடந்தது. அதில் ஆந்திரர் முறியடிக்கப்



பட்டனர். இவ்வாறு ஆந்திரர்கள் தோல்வியுறவும், கரிகாலன் ஆரியவர்த்தத்தினுட் செல்வது எளிதாகிவிட்டது. கரிகாலன் வச்சிரம், மகதம், அவந்தி என்ற ஆரிய நாடுகளைத் தாக்கிய பொழுது, தமிழர் இனத்தையே சேர்ந்தவர்களான ஆந்திரர்களும் அவனுக்கு உதவியாய்த் துணைபுரிந்தனர் என்று கொள்ள இடமுண்டு. கரிகாலன் காலத்திருந்த புலவர்களும் எழுத்தாளர்களும் அவன் வடவர்களை வென்றான் என்றுமட்டும் குறித்தனரேயன்றி, அதைப்பற்றி வேறொரு செய்தியும் கூறிற்றிலர். ஒருவேளை அவர்கள் எழுதிவைத்தவை இப்பொழுது தொலைந்து போயிருக்கலாம். அது எப்படியாயினும், சிறிதுகாலம் கழித்து எழுதியவர்கள், தமிழர் படையானது கரிகாலன் தலைமையில் கங்கையைக் கடந்து இமயமலையின்கீழ் அடிவாரத்தைச் சேர்ந்ததாகவும், அதற்கு மேற்கடந்து செல்லாதபடி அம்மலையானது தடுத்துவிட்டதாகவும், அவர்களுக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு, குறித்துள்ளனர். வெப்பம் வாய்ந்த தென்பகுதியிற் பிறந்து வளர்ந்த தமிழர்படை இமயத்தின் குளிருக்கு ஆற்றாது, திரும்பிவிடுவதே நன்றென்று கொண்டனர். கரிகாலன் ஒப்பற்ற தனது வெற்றியின் சின்னமாகச் சோழரது புலிப்பொறியை அம்மலையின் ஒரு கல்லிலே பொறித்துவிட்டு மீண்டான் "என்று சொல்லப்படுகிறது. ஆனால், கரிகாலன் வட இந்தியாவில் தான் வென்ற நாடுகளைத் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்ததாகத் தெரியவில்லை. வச்சிரம், மகதம், அவந்தி என்னும் நாடுகள் கரிகாலனுக்குக் கணக்கற்ற பொன்னும் மணியும் வேறு பல பொருள்களும் திறையளந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவன் ஆந்திரநாட்டை அவ்வாறு விட்டுவிடவில்லை. அவன் தனது குடும்பத்தாரிற் பலரைத் தக்கிண நாடுகளிற் சிற்றரசர்களாகவும் படைத் தலைவர்களாகவும் நிலைநாட்டிவைத்தான். இவ்விதம் நியமிக்கப்பட்ட சிற்றரசர்களின் வழித்தோன்றல்கள் பிற்காலத்தில் தெலுங்குச் சோழர்கள் என்னும் பெயரால் விளங்கினர். பதினான்காம் நூற்றாண்டிற்கூட பஸ்தார் போன்ற வடக்குப் பகுதியிலுள்ள ஆந்திரத் தலைவர்கள் சிலர், தாங்கள் கரிகாலனின் கான்முளைகள் எனப் பெருமை பாராட்டிக்கொண்டிருந்தனர். (Epigraphica Indica *11* பக்கம் *338*) கரிகாலன் தன் தலைநகரை உறையூரிலிருந்து காவிரி கடலொடு கலக்கும் இடத்துள்ள துறைமுகமாகிய காவிரிப்பூம் பட்டினத்திற்கு மாற்றிக்கொண்டான். இச்சோழர் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினம் காவிரியோரமாய்ப் பல மைல் அளவுக்குப் பரந்து விரிந்து அழகுடன் தோன்றியதாகப் பட்டினப்பாலை என்னும் நூலில் இருந்தும், மற்ற நூல்களிலிருந்தும் நாம் தெரிகிறோம். அப்பட்டினம் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நிறைந்து விளங்கியது. அயல்நாட்டிலிருந்து வரும் வாணிகக் கப்பல்கள் பாயைக் களையாதும், பாரம் பறிக்காதும், கரை வரையும் தடையின்றி வந்து தங்கள் பண்டங்களை இறக்குமதி செய்தன. இவ்விதம் வந்திறங்கிய பண்டங்கள் குவியல் குவியலாக, சோழனின் புலி இலச்சினை பொறித்தல்வேண்டிக் காத்துக்கொண்டிருக்கும். அயல்நாட்டு வாணிகத்தால் உண்டாகும் நன்மையை உணர்ந்த கரிகாலன் ரோமர்களை

யும் பிறநாட்டு வணிகர்களையும் தன் நாட்டுக்கு வரும்படிச் செய்து அவர்களுக்கு வேண்டிய பண்டகசாலைகளையும் அமைத்துக்கொடுத்தான். காவிரிப்பூம்பட்டினத்து வீதிகளில் இக்கலந்தருதிருவிற் புலம்பெயர் மாக்கள் நிறைந்து காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் வாணிகத் தொழிலையே மேற்கொண்டிருந்தனர்.

சோழநாட்டு மக்களின் பிழைப்புக்கு முக்கியமாயிருந்த உழவுத் தொழிலும் நன்கு பேணப்பட்டுவந்தது. கரிகாலன் நூறு மைல் அளவுக்குக் காவிரியாற்றில் கரை கட்டி நீர்வளஞ் செழிக்கச் செய்தான் என்று சொல்லப்படுகிறது.

## நெடுஞ் செழியனும் நெடுஞ் சேரலாதனும் :—

கரிகாலன் இறந்த பின்னர் சோழர் ஆட்சி பிற நாடுகளில் நிலைத்திருந்ததாகத் தெரியவில்லை. பாண்டியனும் சேரனும் முன்போல் தங்கள் ஆளும் உரிமையைக் கைப்பற்றிக்கொண்டனர். கரிகாலனுக்குப் பின்னர்த் தோன்றிய நெடுஞ் செழியன் என்னும் பாண்டியனும், நெடுஞ் சேரலாதன் என்னும் சேரனும் வட இந்தியாவைப் படையெடுத்ததாகச் சொல்லப்படும் கரிகாலன் என்னும் நெடியோன் அமைத்த தமிழ்ப் பேரரசானது வட இந்தியாவில் நிலைகுலைவதைத் தடுக்கும் முயற்சியில் அவ்விரு அரசர்களும் ஆரியர்களோடு போராடும்படி நேர்ந்திருக்கலாம். அதைப் பற்றி நாம் அதிகமாக ஒன்றும் தெரிந்துகொள்ள இயலாமைக்கு வருந்த வேண்டியதாகத்தானிருக்கிறது. நெடுஞ் சேரலாதனுக்குப்பின் அவன் மகன் செங்குட்டுவன் அரசனானான்.

## சேரன் செங்குட்டுவன் :—

செங்குட்டுவன் பட்டத்திற்கு வந்தபொழுது சோழ நாட்டில் அவன் மைத்துனன் கிள்ளி வளவனுக்கும் வேறு ஒன்பது சோழ இளவரசர்களுக்கும் இடையே உட்போர் நடந்துகொண்டிருந்தது. செங்குட்டுவன் கிள்ளி வளவனுக்காக உதவி புரிந்து, அவனை எதிர்த்த ஒன்பது அரசிளங் குமரர்களையும் நேரிவாயில் என்னும் இடத்தில் வென்று, சோழநாட்டில் அமைதியும் ஒழுங்கு முறையும் நிலவும்படி வைத்தான். பின்னர், செங்குட்டுவன் பாண்டி மன்னனையும் தனது தலைமையை ஏற்றுக்கொள்ளும்படி செய்து, இவ்வாறு தமிழ் மக்களுக்குத் தான் ஒரு பேரரசனாய் விளங்கினான்.

செங்குட்டுவனின் தம்பியாராகிய இளங்கோவடிகள், தாம் எழுதிய சிலப்பதிகாரம் என்னும் காப்பிய நூலில், பத்தினிக் கடவுள் என்று தமிழ் நாடு முழுதும் போற்றும் கண்ணகிக்குச் சேர அரசன் கல்லெடுத்துக் கோயில் கட்டிய வரலாற்றினை விரித்துக் கூறியுள்ளார். தமிழர்களுக்குப் புனிதமான பொதிய மலையிலிருந்து கருங்கல் வெட்டி அதில் கண்ணகியின் திருவுருவை அமைக்கும்படிச் சிற்பிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கும் வேளையில், ஆரிய வர்த்தத்திலிருந்து ஒரு பார்ப்பனன் சேரர் பெருந்தகையின்



அவையில் வந்து தோன்றினான். அவ்வாறு தோன்றிய பார்ப்பனன், வட நாட்டில் நடந்த விருந்தொன்றில் கங்கையின் வடக்கே ஆண்டுவந்த சில ஆரிய மன்னர்கள்கூடி, ஆரிய வர்த்தத்தில் தங்களைப்போன்ற வீரர்கள் இல்லாத வேளையில்தான் தமிழர்கள் அங்குப் படையெடுத்து வரமுடியும் என்று தமிழர்களை இழிவுபடுத்திப் பேசிய செய்தியைச் சேர மன்னனுக்குத் தெரிவித்தான்.

இதனைக் கேட்டவுடனே செங்குட்டுவன் பத்தினிக் கடவுளுக்கு இமயமலையிலிருந்து கல் எடுத்து அதைக் கங்கையில் நீராட்டிக்கொண்டுவருவதெனத் தீர்மானித்தான்.

இவ்வாறு முடிவுசெய்தது ஆரிய மன்னர்களைப் போருக்கு அறைகூவி வட நாட்டைப் படையெடுப்பதற்கு ஒரு வழியாக வாய்த்தது. ஒரு நல்ல நாளிலே பதினாயிரம் குதிரைப் படையும், ஐயாயிரம் யானைப் படையும், நூறு தேர்ப்படையும் கொண்ட பெருங் காலாட் படையுடன் ஆரிய வர்த்தத்தின்மேற் கிளம்பிச்சென்றான். அவன் முதலில் நீலகிரி மலையில் தங்கி, அங்கு வந்த சிற்றரசர்கள் கொடுத்த திறைகளையும், படையுதவியையும் பெற்றுக்கொண்டான். மற்றும், கருநட்ரும், ஓவியரும், குடகரும் தங்கள் படையுதவியை அளித்தனர். அவ்வமயம் ஆந்திர மன்னர்களாயும், சிற்றரசர்களாயும் ஆண்டு வந்தோரிற் பலர் கரிகாலனால் நியமிக்கப்பட்டோரின் வழிவந்தவர்கள் என்பதும் நினைவிலிருக்கவேண்டும். அவர்களும் செங்குட்டுவனோடு நட்புக்கொண்டு அவன் தலைமையை ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். செங்குட்டுவனுக்குக் கங்கைக் கரைவரையில் செல்வாக்கு இருந்துவந்ததாகத் தெரிகிறது. மாளவத்திலிருந்து நூற்றுவர் கன்னர் என்பவர்கள் நீலகிரிக்கு வந்து, செங்குட்டுவனைக் கண்டு, அவனைப் போருக்குச் செல்லவேண்டாம் என்று எவ்வளவோ தடுக்க முயன்று பார்த்தனர். தாங்களே இமயமலைக்குச் சென்று கற் கொண்டு வருவதாகச் சொல்லிப் பார்த்தனர். அதற்குச் செங்குட்டுவன், "பால குமரன் மக்கள் மற்றவர், காவா நாவிற் கனகனும் விசயனும், விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி, யிருந்தமிழாற்றலறிந்திலராங்கெனக், கூற்றக்கொண்டிச் சேனை செல்வது" என்று கூறி, அதனால்தான் மேற் செல்லவேண்டிய கடப்பாட்டை நூற்றுவர் கன்னருக்குக் காட்டி, தனது படைத் தலைவனான வில்லவன் கோதை என்பவனைப் படையுடன் கிளம்பும்படிக் கட்டளையிட்டான். இதனால் கங்கையாற்றுக்கு வடக்கேயுள்ள ஆரிய மன்னர்களைத் தாக்கவேண்டியே செங்குட்டுவன் அவ்வாறு சினங்கொண்டெழுந்துள்ளான் என்பதை அறியலாம். ஆதலால் ஆரியவர்த்தத்தின் மேலைப்பகுதியை அவன் ஒன்றும் செய்யாது விட்டுவிட்டான். சில மாதங்களிற் செங்குட்டுவனது வீரப் படையினர் கங்கையாற்றின் தென் கரையை அடைந்ததும் அங்கு நூற்றுவர், கன்னர் கொண்டு வைத்திருந்த படகுகளில் ஏறிக் கங்கையைக் கடந்தனர். அப்பொழுது கங்கைக்கு வடக்கேயுள்ள நாடுகளை உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன், கனகன், விசயன் என்னும்

ஆரிய அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களுள் கனகனும், விசயனுமே செங்குட்டுவனுக்கு முக்கியமான எதிரிகள். கங்கையின் வட கரையில் தமிழ்ப் படைகளை ஆரிய மன்னர் தாக்கினர். குயிலாலுவம் என்னும் இடத்தில் பெரும் போர் நடந்தது. பதினெண் கணப்பொழுதினுள் ஆரியர் படையெல்லாம் துகள் பட்டு நாலா பக்கமும் சிதறியோடியது. ஆரிய மன்னர்கள் பெண்கள் போலவும், சாம்பலைப் பூசியும், சடை முடி தரித்தும், வாளை ஒளித்து இசை வங்கியம் எடுத்தும், உருமாறித் தப்பியோட முயன்றனர். ஆனால் முடிவில் கண்டுபிடிக்கபட்டனர். விண்ணையிடிக்குந் தலை இமயம் எனும் வெற்பையிடிக்கும் திறனுடைய தன் இனத்தவராகிய தமிழ் மக்களின் மானத்தையும் வீரத்தையும் நிலைநாட்டிக் கொள்ளைப் புகழ்கொண்ட செங்குட்டுவன், அவ்வாறு தான் வென்றுகொண்ட அந்நாட்டிலே சிலநாள் தங்கியிருந்தான். அதற்குள் கண்ணகி உருவமும் எழுதி முடிந்தது. அப்படிவத்தைக் கங்கையில் நீராட்டிய பின்னர், போரிற் கொள்ளை கொண்ட பெரும்பொருளையும் திறைகளையும் வாரிக்கொண்டு தமிழர் படையானது, மூன்று ஆண்டுகள் கழித்து வீடு திரும்பியது. செங்குட்டுவன் வெற்றித் திருவுடன் தனது நகரினுள்ளே சென்ற காட்சி சிலப்பதிகாரத்தில் சித்திரித்திருப்பதைப் படிக்கும்பொழுது, அப்பேர்ப்பட்ட காலங்களில் ரோமாபுரியில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கண்ணைப்பறிக்கும் காட்சிகளே நமக்கு நினைவில் வந்து நிற்கும். ஆனால் ரோமர்களைப்போல் தமிழர் சிறையெடுத்த பகைவர்களைக் கொன்றறியார். அதற்கு மாறாக செங்குட்டுவனால் சிறைப்பிடிக்கப்பட்ட ஆரிய அரசர்களில், கனகனும் விசயனும் தவிர மற்றனைவரும், செங்குட்டுவனின் தலைமையை ஏற்று வழிமொழிந்த பின்னர், தங்கள் நாடுகளுக்கு அனுப்பபட்டனர். கனகனும், விசயனும் பேடியர் கோலம் பூண்டு தப்ப முயன்றதால், அப்பெண்ணுடை தாங்கியவாறே, கண்டோர் நகைத்து, இகழும் விதத்தில், சோழ நாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் தமிழுலகறிய அனுப்பப்பட்டனர். ஆனால் சோழனும் பாண்டியனும் அச்செய்கையை ஒப்பினதாக இளங்கோவடிகள் கூறவில்லை. செங்குட்டுவன் அவ்வாறு தோல்வியுற்ற அவ்விருவரையும் செய்தது அடாது என்றே அவர்கள் கருதினர்.

அதன் பின்னர், செங்குட்டுவன் பத்தினிப் படிவத்திற்கு ஒரு கோயில் கட்டுவித்தான். அந்நடு கல் விழாவிற்கு வெளிநாட்டு மன்னர்கள் பலரும் வந்திருந்தனர். அவர்களுள் கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னனும் ஒருவன். கி. பி. 174 முதல் 195 வரை இலங்கைக்கு மன்னனாய் இருந்த முதலாம் கஜபாகு என்பவனே அவ்வாறு செங்குட்டுவனின் விருந்தினனாய் விளங்கியவன் என்று கொள்வதில் யாதொரு தடையுமில்லை. சிங்களர்கள் கூறுகிற கதை வரலாற்றின்படி, கஜபாகு என்பவனே பத்தினி வழிபாட்டை இலங்கையினுட் புகுத்தினவன். ஆதலால், சேரநாடு சென்று வந்ததன் விளைவாகவே, அவன் அவ்வாறு செய்திருக்க வேண்டும். இத்தகைய வழிபாடு புத்த சமயத்திற்கு ஒவ்வாததொன்றாயிருந்தபடியால், பௌத்த முனிவர்கள் எழுதிய மகா



வம்சம் என்னும் நூலில் இச்செய்தியைப்பற்றி ஒன்றும் கூறாது விடுத்தனர் போலும். ஆனால் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் எழுந்த இராஜாவளி என்னும் நூலில் ஒரு விசித்திரமான கதை சொல்லப்படுகிறது. கஜபாகு என்பவன் நீல மகாயோதயன் என்னும் அரக்கனைக் கூட்டிக்கொண்டு தஞ்சை மன்னன் முன்னிலையில் திடீரெனத்தோன்றி, அங்குச் சிறைப்பட்டுக் கிடந்த பன்னீராயிரம் சிங்களர்களை விடுவிக்கும்படிக் கேட்டான். அம்மன்னவன் அதை மறுக்கவும், அவர்கள் இருவரும் தங்கள் உடல்வலித் திறனைப் பல அதிசயச் செயல்களைப் புரிந்துகாட்டி, அத்தகைய வலி படைத்த மல்லர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் இலங்கையின் கரையிலிருந்து கடல் கடந்து வரக் காத்துக்கொண்டிருப்பதாகவும் கூறி அச்சுறுத்தினர். உடனே தஞ்சை மன்னன் நடு நடுங்கி, தான் சிறை வைத்திருந்த பன்னீராயிரம் சிங்களர்களையும் விடுவித்ததுமன்றி, அதுபோல் இரண்டு மடங்கான தமிழர்களையும் சேர்த்து இலங்கைக்கு அனுப்பிவைத்தான். இன்னும், அந்தக் கதையின்படி, தமிழர்கள் வழிபட்டு வந்த பத்தினிக் கடவுளின் காற்சிலம்பு ஒன்றையும் கஜபாகு இலங்கைக்கு எடுத்துச்சென்றான். இலங்கைத் தீவினுள் பத்தினி வழிபாடு புகுந்த வரலாற்றினை, மகா வம்சத்தை எழுதினோர் வேண்டுமென்றே கூறாது விடுத்திருக்கலாம். ஆனால் இராஜாவளி குறிப்பிடுவதுபோல், கஜபாகு என்பவன், வரலாற்று முறைக்கே பொருந்தாப் புதுமையதாய்த்தான் குருதி சிந்தாமலே கைக்கொண்ட வெற்றியின் அறிகுறியாக மட்டும் அச்சிலம்பைக் கொண்டு சென்றிருந்தால், அதை ஏன் மகா வம்சம் குறித்திருக்கக்கூடாது என்பதுதான் விளங்கவில்லை. இராஜாவளியிற் குறிப்பிட்டுள்ள இந்தக் கதையானது வெறுங் கட்டுமானமும் கற்பனையுங் கொண்டதாய், நடக்கமுடியாத நிகழ்ச்சிகளைக் கூறியிருப்பதால், அதன் உண்மையை நாம் நம்பக்கூடவில்லை. மேலும், சரித்திர உண்மைக்கு மாறானவிதமாய், சோழ அரசனைத் தஞ்சை மன்னன் என்று குறிப்பிட்டுள்ளதாலும், தஞ்சை நகரமானது ஒன்பதாம் நூற்றாண்டிற்குமுன் கேட்கப்படாததாலும். இது மிகப் பிந்திய காலத்தில் கற்பித்து நுழைத்ததொரு கட்டுக்கதை என்பது தேற்றமாகும். ஆனால், கயவாகுவின் காலத்தில் எழுந்த நூலாகிய சிலப்பதிகாரத்தில் கடல்சூழ் இலங்கைக் கயவாகு கல்நாட்டு விழாவிற்கு வந்திருந்தானென்று உரிமை பாராட்டி, வலிந்துகொள்ளாது இயல்பு முறையாகக் கூறப்படுவதாலும், சிங்களர்களுடைய கேள்விக்கதை வரலாற்றிலும் கஜபாகு இலங்கைக்குப் பத்தினியின் காற்சிலம்பைக் கொண்டுவந்து வழிபட்டானென்று சொல்லப்படுவதாலும், இக்காலத்தும் அச்சிலம்பின் வழிபாடு அங்குப் பத்தினிக் கோயில்களில் நடந்து வருவதாலும், கயவாகு என்பவன் யார் என்பதும், எதற்காகத் தமிழ்நாட்டிற்குச் சென்றான் என்பதும் நமக்கு ஐயந்திரிபறத் தெளிவுறும் என்பது திண்ணம்.

செங்குட்டுவன் அமைத்த பேரரசு எவ்வளவு காலம் நிலைத்திருந்தது என்று தெரியவில்லை. எல்லாப் பேரரசுகளையும்போல்,

அதுவும் அதை நிலை கோலியவன் மறைந்த பின்னர் சிதைந்து போயிருக்கவேண்டும். அதன் பிறகு ஒரு நூற்றாண்டளவு சரித்திரத்தின் போக்கை நாம் தொடர்ந்து செல்லமுடியவில்லை. எத்தனையோ மன்னர்கள் தமக்குள் போர் செய்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது.

## மாறன்வழுதி : சேரல் இரும்பொறை : தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் :—


மாறன்வழுதி சேரல் இரும்பொறை என்னும் இருவர்களுடைய ஆதரவில் கடைச்சங்கம் நன்கு நடந்துவந்ததாகத் தெரிகிறது. செங்குட்டுவனுக்குப் பிறகு, தமிழ் மன்னர்களுக்குள் சிறந்து விளங்கியவன் நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன். அவன் சேரனையும் சோழனையும் தலையாலங்கானம் என்னும் இடத்தில் பொருது வென்ற புகழினை யுடையான். அதனால் அவன் தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்று போற்றப்பட்டான். அவன் இவ்வாறு திராவிட நாடு முழுவதிலும் தன் ஆட்சியைச் செலுத்தியதோடு அமையாது, அதன் எல்லைக்கு அப்பாலுள்ள கொங்கு நாட்டையும் வென்று ஒரு பேராசை நிறுவின பெருமையைக் கொண்டான். அவன் பாடிய பாட்ல்கள் சில புறநானூற்றிற் காணப்படுவதால், ஒரு சிறந்த புலவனாகவும் விளங்கினான் என்று தெரிகிறது.

## சோழன் பெருநற் கிள்ளி :—

நெடுஞ் செழியனுக்குப் பிற்காலத்தில் தோன்றியவனான பெருநற் கிள்ளி என்னும் சோழ அரசன் ஆரிய முறைப்படி வேதச் சடங்குகளுடன் முடி தரித்துக்கொண்டான் என்று சொல்லப்படுகிறது. இச்செய்தி ஆரியப் பார்ப்பனர்களுடைய செல்வாக்கு தமிழ்நாட்டில் வளர்ந்து வந்ததைத் தெரிவிக்கிறது. இவனுக்கு முன்னரே கரிகாலன் வேத வேள்விகள் நடத்தும்படித் தூண்டப்பட்டான். ஆனால் பெருநற் கிள்ளிக்குமுன் எந்தத் தமிழ் மன்னனும் ஆரிய முறைப்படி முடி தரித்துக்கொண்டதாக யாதொரு குறிப்பும் கிடையாது. முதன் முதல் க்ஷத்திரியின் ஆனவன் பெருநற் கிள்ளியே போலும். ஏனெனில், ஆரியர் கொள்கைப்படி, ஒரு க்ஷத்திரியன் தான் முடிதரித்துக்கொள்வதற்கு (பட்டாபிஷேகம்) அருகனாவான். அது பார்ப்பர்களுக்கு ஒரு சிறந்த வெற்றியாகவே முடிந்தது. அது முதல் ஆரிய நாகரிகத்தின் அடியார்களாகிய பார்ப்பனர்கள் திராவிட மன்னர்களிடமிருந்து நன்மதிப்பையும் செல்வாக்கையும் அதிகம் பெற்று வருவாராயினர்.

அது திராவிட நாட்டு வரலாற்றில் ஒரு 'புதுமுகம் தொடங்கிய தன்மையைக் குறிப்பதாகும். அதாவது, அதுமுதல் ஆரிய நாகரிகப் பண்பும் சமயக்கொள்கைகளும் திராவிட நாட்டில் தடையின்றிப் புகுந்து வேலை செய்யத் தொடங்கின.

பாண்டிய சாம்ராச்சியமும், பல்லவ சாம்ராச்சியமும் கி. பி. 600—900




1. Chera—சேர
2. Musiri—முசிறி
3. Kumbakonam—கும்பகோணம்
4. Mangalapuram (Mangalore) மங்களாபுரம்
5. Badami—பதமி
6. Nasik—நாசிக்
7. Vindhya Mts.—விந்தியமலை
10. Vengi—வேங்கி
11. Kanchi—காஞ்சிபுரம் (தொண்டமண்டலம்
12. Tanjore—தஞ்சாவூர்
13. Naga Patnam-நாகபட்டினம்
14. Chola—சோழ
15. Madura—மதுரை
16. Korkai—கொர்கை
17. Trincomalie-திருகோணமலை

## திராவிட நாட்டின் அரசியல் வரலாறு (கி. பி. 300-900):—

நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கடைச் சங்கமானது தளர்நிலையடையத் தொடங்கி ஆறாம் நூற்றாண்டளவில் அறவே நின்றுவிட்டது. மிகப் பழங்காலத்திலிருந்து தமிழ்நாட்டை ஆண்டுவந்த மும்முடி வேந்தர்களும் பெருங் கேடடைந்ததே அதற்குக் காரணமாகும்.

திராவிட இனத்தைச் சேர்ந்த பல கூட்டத்தாரும் தொகுதியினரும் தத்தமக்கு வெவ்வேறு தலைவர்களைக் கொண்டிருந்தனர். இத்தகைய கூட்டங்களின் தலைவர்கள் எல்லோரும் முடியுடை வேந்தர் மூவருள் ஒருவருக்கு அங்கங்கே கீழ்ப்பட்டிருந்தாலும், சமயம் வாய்த்தபோதெல்லாம் தனியுரிமையடைய முயல்வதற்குத் தயங்கினதில்லை. மலைப்பகுதிகளில் வாழ்ந்துவந்த சில கூட்டத்தாரைக் கட்டுப்படுத்துவது மிகவும் அரிதாக இருந்தது. படையினால் ஒறுக்கப்பட்டும் அச்சுறுத்தப்பட்டுமே, அவர்கள் முடி மன்னர்களின் ஆளுகைக்கு ஒரு சிறிது அடங்குவாராயினர். அதனால் சங்க இலக்கியத்தில் மலிந்து காணப்படும் உட்போர்கள் பழந் தமிழ்நாட்டில் ஓயாது நடந்துகொண்டேயிருந்தன.

### களப்பிரதுலம் :—

நான்காவது நூற்றாண்டின் தொடக்கத்தில் முன்பின் தெரியாததொரு முரட்டுக் கூட்டத்தார் திடீரென எழுந்து, முடியுடை வேந்தர் மூவரையும் வென்று தமிழ்நாடு முழுதையும் கைக்கொண்டு சுமார் இருநூறு ஆண்டுகள் ஆளலுற்றனர். காஞ்சி என்று இப்பொழுது சொல்லப்படுகிற தொண்டைநாடு நீங்கலாக மற்றைத் தமிழ்நாடு முழுதும் இந்தக் கூட்டத்தார் கையில் அகப்பட்டது. களப்பிர அரசர்களைப்பற்றி ஒன்றுமே தெரிவதற்கில்லை. அவர்கள் எவ்வாறு தமிழ்நாடு முழுதையும் கவிழ்க்க முடிந்தது என்பதும் நமது புத்திக்கு எட்டாத செய்தியாகும். ஒரு புலவனாவது, பாணனாவது அவர்களைப் புகழ்ந்து பாடிவைக்கவும் இல்லை. கல்வியை ஆதரிப்பார் யாரும் அப்பொழுது இல்லைப் போலும். களப்பிர அரசனை அச்சுதன் கோயில் முன்றிலின்கண் முடியுடைத் தமிழ் மன்னர் மூவரும் விலங்கிட்டு நின்றதாக ஒரே ஒரு குறிப்புமட்டும் காணப்படுகிறது. தொன்மையும் எழிலும் வாய்ந்த காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு, அச்சுதவிக்கந்தன் என்பான் அழகிய சோழ நாட்டை ஆண்டுவந்ததாக பௌத்த மதத்தினராகிய ஆசிரியர் புத்த தத்தரால் கூறப்படுகிறது. அவ்விதம் கூறப்படும் களப்பிரனை அச்சுதவிக்கந்தனும், முற்கூறிய தனிக் குறிப்பிற்கண்ட அச்சுதனும் ஒருவனே என்று கொள்ளப்படுகிறது. சோழ நாட்டில் உறையூரைச் சேர்ந்தவராகிய புத்ததத்தர் ஐந்தாம் நூற்றாண்டில்

இலங்கைக்குச் சென்றார். ஆதலால் அச்சுதன் ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்டு வந்தவனாதல் வேண்டும். களப்பிர அரசர்களுள் அவன் ஒருவன் பெயரே தெரிய வருகிறது. தமிழ் இலக்கியக் குறிப்பிலிருந்து அவன் சேரபாண்டிய நாடுகளையும் சேர்த்து ஆண்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இந்தப் போர்வலி படைத்த களப்பிரர்களைப்பற்றி நாம் வேறு ஒன்றும் அறிய முடியவில்லை.

**பல்லவர்கள் :—**


தமிழ் நாட்டின் தென்பகுதியில் களப்பிரர் இவ்வாறு செய்த புரட்சி தொண்டை மண்டலம் என்னும் வடபகுதியில் பல்லவர்கள் தோன்றி முதன்மையடைவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக உதவியது. நாக கன்னி ஒருத்தியை ஒரு சோழ அரசன் மணந்து பெற்ற மகனாகிய தொண்டைமான் இளந்திரையன் ஆண்டுவந்த நாடே தொண்டை நாடு என்னும் பெயர் பெற்றது எனத் தமிழ் இலக்கியம் கூறுகிறது. இளந்திரையன் இந்த நாட்டிற்கு வாய்த்த முதல் சிற்றரசன். அதற்குமுன் தமிழர்களில் ஒரு பகுதியாராகிய திரையர் என்பார் அங்கு வாழ்ந்துவந்தனர். திரைகடலிற் கலம் செலுத்தித் திளைத்தவர்கள் திரையர்கள். சங்ககாலத் இறுதி வரையும் தொண்டைமண்டலம் சோழநாட்டின் ஒரு பகுதியாய், சோழ மன்னனால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவனின் ஆட்சிக்குள் இருந்து வந்தது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே காஞ்சி நகர் பார்ப்பனர்களுக்கு அரணாக அமைந்து விட்டதால், அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அப்பொழுதிலிருந்தே ஆரியர் செல்வாக்கினுள் அகப்படுத்தப் பட்டனர். அங்கு வாழ்ந்துவந்திருந்த பல்லவர் போன்ற கூட்டத்தார்களும் சமஸ்கிருதக் கல்வியின்கண் ஒரு தலையான பற்றுக் கொள்ள ஆரம்பித்துவிட்டனர். தொடக்கத்தில் எழுந்த பல்லவர்கள் கல்வெட்டுகள் யாவும் வட மொழியிலேயே பொறிக்கப்பட்டன. அக்காலத்திலேயே காஞ்சி நகர் வடமொழிக் கலைகளுக்கு நிலைக்களமாய் விளங்கிய செய்தி வட இந்தியா வரையும் எட்டியிருந்ததால் முந்திய பல்லவ சாசனங்கள் வட மொழியில் எழுதப்பட்டது வியப்பாகாது. பல்லவர்கள் என்பார் இளந்திரையனின் வழிவந்தோராய் இருக்கலாம்.


**சமுத்திரகுப்தனும் தமிழரும் :—**

அசோகனுக்குப் பின் மிகப் பெரியவன் என்று கருதப்படும் ஆரியப் பேரரசனாகிய சமுத்திர குப்தன் கி. பி. 335ல் தென்னாட்டைப் படையெடுத்தான். அதற்குச் சிறிது முன் ஆந்திரர்களும் தமிழர்களும் வடநாட்டைப் படையெடுத்து ஆரியர்களை இழிவு படுத்தியதை மனத்தில் வைத்து இப்பொழுது பழிவாங்க வேண்டுமென்று எண்ணியே இவ்வாறு போர் தொடுத்தான் போலும். தென்னாட்டு அரசுகளுக்குப் பயந்தே அவன் அவ்வாறு கிளம்பினான் என்று சிலர் கருதுகின்றனர். தன்னை அவர்கள் தாக்குவதற்கு முன்னரே இவன் படைகொண்டெழுந்து,

# மாகமல்லபுரம்

(மாகபலிபுரம்)









வழியில் அகப்பட்ட பலநாடுகளையும் வென்றுகொண்டே கிருஷ்ணா நதிக்கரையளவும் வந்துவிட்டான். ஆனால் அங்கு வந்ததும் பல்லவர்களோடு போர் நிகழ்ந்தது. அவ்விதம் நடந்த போரில் விஷ்ணுகோபன் என்னும் பல்லவ அரசனைத் தோல்வியுறச் செய்து தென் நாட்டு மன்னர்களைத் தளையிட்டதாகத் தன் கல்வெட்டு ஒன்றில் சமுத்திரகுப்தன் கூறிக் கொள்கிறான். ஆனால் அப்போரின் உண்மையான விளைவு யாது என்பதைப் பற்றி, அதன் பின்னர் அவன் செய்தது என்ன என்பதைக் கொண்டு முடிவு செய்ய வேண்டுமேயன்றி, கல்வெட்டின் கூற்றினைமட்டும் ஏற்றுக் கொள்ளுதல் கூடாது. தனது போக்கைப் பல்லவர் தடுத்துப் போர் நிகழ்ந்த பின்னர், குப்தப் பேரரசன் தனது வலிய படையுடன் வீடு நோக்கித் திரும்பினான். தனக்கு முன்னிருந்த அசோகனைப் போல் சமுத்திர குப்தனும், ஏதோ ஒரு காரணத்தாலே தமிழ் வேந்தர்களின் அருகிலேயே செல்லவில்லை; தான் வென்று கொண்ட தக்கிணத்து நாடுகளைக்கூட விட்டுவிட்டான்; நர்மதை ஆற்றிற்கு வடக்கேயுள்ள ஆரியவர்த்தத்தில் மட்டும் தனது பேரரசை வலுக்கும்படிச் செப்பனிட்டமைத்தான்.

கி. பி. 335 ம் ஆண்டளவில் பல்லவர்கள் தொண்டை நாட்டில் தங்கள் அரசாட்சியை நிலைநாட்டி கிருஷ்ணா நதிவரைத் தங்கள் ஆட்சியைச் செலுத்தலுற்றனர். வெல்ல முடியாத புகழ்பெற்ற வீரனான சமுத்திரகுப்தனை வென்றதிலிருந்து பல்லவர்கள் புகழ் எங்கும் பரவி, பல்லவப் பேரரசும் வளர்ந்தோங்கத் தலைப்பட்டது. ஆனால், அதன் பின்னர் கி. பி. 575 வரையும் அவர்களைப்பற்றிய செய்தி ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. கி. பி. 575 ல் சிம்ம விஷ்ணு என்பவன் காஞ்சியில் அரியணை ஏறினான். போர்த்திறவு கொண்ட மன்னனாகிய சிம்ம விஷ்ணு தனது ஆட்சியைத் தெற்கு நோக்கிப் பரப்ப எண்ணிச் சோழ நாட்டைப் படையெடுத்து அங்கு ஆட்சி புரிந்த களப்பிர அரசனை வென்றான். அதன் பின்னர் பாண்டிநாட்டிலிருந்த களப்பிர அரசனையும், சேரனையும், இலங்கை மன்னனையும் வென்று அடிப்படுத்தினதாகக் கூறிக் கொள்ளுகிறான். சேர நாட்டிலும் இலங்கையிலும் அவன் போர் நடத்தினதாக ஒரு குறிப்பும் காணப்படவில்லை. அவன் பாண்டி நாட்டில் மட்டும் ஏதோ போர் நடத்தினதாகத் தெரியவருகிறது. களப்பிரர்களை எதிர்த்து அவன் நடத்திய போரில் கடுங்கோன் என்னும் பாண்டியன் அவனுக்கு ஒத்தாசையாக இருந்தான்.

## பாண்டியர் ஆட்சியைக் கடுங்கோன் மீட்டது :—

பாண்டி நாட்டின் ஒரு மூலையிலே பதுங்கியிருந்த கடுங்கோன் என்னும் பாண்டியன் அங்கு ஆட்சி புரிந்த தனது பகைவனான களப்பிர அரசன் சிம்ம விஷ்ணுவுக்கு எதிர்நிற்றலாற்றாது நிலைகுலைந்து தோற்றதைத் தனக்கு ஒரு நல்ல வாய்ப்பாகக் கொண்டான். களப்பிரன் விழுந்ததும் கடுங்கோன் பாண்டி நாட்டைக் கைப்பற்றினான். பாண்டியர் குலத்தின் பழைய பெருமையை மீட்டவன் என்று பாண்டி நாட்டுக் குடிகள் அவனைக் கொண்டாடி

னர். இவ்வாறு சிம்ம விஷ்ணு அடைந்த வெற்றியின் பயனைக் கடுங்கோன் பாண்டியன் கைப்பற்றியது கண்டு பல்லவர்களுக்குக் கடுப்பு ஏற்பட்டது. அது முதல் ஐந்து நூற்றாண்டுகள்வரை பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் தீராப் பகைமை இருந்து கொண்டே வந்தது.

## ஆரியாவர்த்தத்து நிகழ்ச்சிகள் :—

நான்காவது நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய குப்தர்களின் பேரரசாட்சி சிறிது காலத்திற்கு ஆரியர்களின் பழம்பெருமையை நிலைக்கச் செய்தது. ஆனால் ஐந்தாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் ஹூணர்களின் தாக்குதலால் குப்தர்களின் ஆட்சி அழிவுற்று, மீண்டும் ஆரியாவர்த்தம் அயலார் ஆட்சியினுட் புகுந்தது. ஹூணர்களுடைய ஆட்சி ஆறாவது நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் நடந்து வந்தது. பின்னர் ஆரிய அரசர்கள் ஒன்று கூடி ஹூணர்களை வடக்கோரமாக ஒதுங்கும்படி துரத்தி விட்டனர். அட்டில்லாவின் தலைமையில் ஐரோப்பாவைத் தாக்கிய ஹூணர்கள் எவ்வாறு பிற்காலத்தில் ஜெர்மானிய மக்களோடு கலந்து ஒன்றுபட்டனரோ, அதேபோல் இந்தியாவினுட் புகுந்த ஹூணர்களும் தாம் கூடி வாழ நேர்ந்த இந்திய ஆரியர்களோடு நாளடைவில் இரண்டறக் கலந்து ஒன்றாகி விட்டனர். கி. பி. 606 ல் அப்பொழுது ஆரிய அரசர்களுக்குள் வலிமை கொண்டிருந்த தானேசர் நாட்டில் ஹர்ஷன் என்னும் ஒரு புத்த மத இளவரசன் அரசனாகத் தோன்றினான். அவன் விரைவில் வட இந்தியாவிற்குப் பேரரசனாகி, தன் முன்னோர்களைப் போல், தக்கிணத்தையும் வெல்லுதற்கு முற்பட்டான்.

## மேலைச் சாளுக்கியர்கள்:—

ஹூணர்களுடைய பேரரசு விழுந்த பொழுது ஆந்திர நாட்டின் மேற்பகுதியில் சாளுக்கியர் எனனும் ஒரு புதிய குலத்தார் மேம்பட்டு வரலாயினர். விந்திய மலையிலிருந்து சேர நாட்டு வடஎல்லை வரையில் தங்கள் ஆட்சியைப் பரப்பிய சாளுக்கிய குலத்து மன்னர்கள் தென்னாட்டு அரசர்களுடனேயே சார்ந்து விளங்கினர். ஆதலால் ஹர்ஷன் தென்னாட்டைப் படையெடுக்க முயன்றபொழுது இரண்டாவது புளகேசி என்னும் சாளுக்கிய மன்னன் ஹர்ஷனின் ஆரியப் படையை நர்மதை ஆற்றங்கரையில் வைத்தே முறியடித்து அவனைத் தக்கிணத்தினுள் நுழையாதபடி தடுத்து விட்டான். இதுதான் ஆரியர்கள் தென்னாட்டை வெல்வதற்கு எடுத்துக் கொண்ட இறுதியான முயற்சி.

## சாளுக்கியரும் பல்லவரும் மோதுதல் :—

பல்லவர்கள் தென்னாட்டில் நாளுக்கு நாள் மேலோங்கி வருவது வலி படைத்த சாளுக்கியர்களுக்குப் பிடிக்கவில்லை, அதனால் இரண்டாம் புளகேசிக்கும் சிம்மவிஷ்ணுவின் தோன்றலான முதலாம் மகேந்திர வர்மனுக்கும் விரைவில் போர் மூண்டது.



பல்லவகாலத்து நாட்டியப் பெண்



மகேந்திர வர்மன்

பாண்டி மன்னனான கடுங்கோனும், பல்லவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த சோழனும் பல்லவர்களைத் தட்டிவிடவேண்டும் என்னும் நோக்கத்துடன் புளகேசியோடு சேர்ந்துகொண்டனர். இவ்வாறு பல்லவர்களும் சாளுக்கியர்களும் போராடிக்கொண்டிருந்த வேளையில், பாண்டியன் கடுங்கோன் தன் நாட்டினுள் இருந்துவந்த சிறு குழப்பங்களையெல்லாம் அடக்கி, குறும்புக் கூட்டங்களை ஒடுக்கிப் பணியச்செய்து தனது நிலையைப் பலப்படுத்திக்கொண்டான். கடுங்கோனின் நண்பனாகிய புளகேசி மகேந்திர வர்மனை வென்று, கிருஷ்ணாவுக்கும் கோதாவரிக்கும் இடையே கீழோரமாகவுள்ள வேங்கி என்னும் நாட்டைப் பிடித்துக்கொண்டான். வேங்கி என்பது ஆந்திர நாட்டைச் சேர்ந்த ஒரு பகுதியாக இருந்தாலும், அப்பொழுது பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

புளகேசி வேங்கி நாட்டை ஒரு தனி அரசாக்கி அதற்குத் தனது தம்பியை அரசனாக நியமித்தான். அதுவே பின்னர் கீழைச் சாளுக்கிய நாடு என்னும் பெயர்பெற்று விளங்கியது.

## நரசிம்மவர்மன் சாளுக்கியர்களை வென்றது :—

கி. பி. 642-ல் சாளுக்கியர்களுக்குப் பெருந்தோல்வி ஏற்பட்டது. ஏனெனில், அப்பொழுது பல்லவ மன்னர்களுக்குள்ளே மிகவும் சிறந்தவனாக விளங்கிய நரசிம்ம வர்மன் காஞ்சியில் அரசனானான். அதுமுதல் பல்லவர்கள் முன்னேறத் தொடங்கிவிட்டனர். அந்த இளைஞனான பல்லவன் கையில் புளகேசி, எவ்வளவோ பெரியவனாய் இருந்துங்கூடத் தோல்வியடைந்தான். சாளுக்கியர் முற்றிலும் தோல்வியுற்றுச் சிதறவும், நரசிம்ம வர்மன் அவர்களைத் துரத்திக்கொண்டே சென்று, அவர்கள் தலைநகராகிய வாதாபித்தொல் நகரைப் பாழாகச்செய்துவிட்டான். ஆனாலும், பல்லவர்களால் வேங்கி நாட்டை மீளவும் பெற இயலாதுபோயிற்று. சாளுக்கிய நாட்டில் வேறு சில பகுதிகளைமட்டும் பிடித்ததோடு அமைவாராயினர். ஆயினும், சாளுக்கியர்களோடு கொண்ட போராட்டம் அதனோடு நின்றுவிடவில்லை. இன்னும் பல தலைமுறைகள்வரை இழுத்துக்கொண்டே வந்தது.

## நரசிம்மவர்மனின் ஆட்சி :—

நரசிம்மவர்மன் கி. பி. 660 வரை அரசாண்டான். அவன் திராவிடநாட்டு மன்னர்களுக்குள்ளே வலி சிறந்துவிளங்கினான். அவன் ஆட்சியில் பல புதிய பண்புகள் தமிழ்க் கலையில் தோற்றம் பெற்றன. பார்ப்பனர்கள் ஆரிய நாகரிகத்தைப் பரப்புவதற்கு நரசிம்ம வர்மன் பெரிதும் துணையாயிருந்தான். திராவிட நாட்டை இந்தியாவினின்றும் வேறுபடுத்திவைக்க அவன் விரும்பவில்லை. அதனால் ஆரியர்களுடைய பழக்க வழக்கங்களைப் பரவும்படி செய்தான். காஞ்சியிலிருந்த கடிகை என்னும் சமஸ்கிருதக் கல்லூரிகளுக்கு மிகுந்த பொருளை வழங்கினான். முக்கியமாக அவனுடைய காலத்தில்தான் தமிழர்களுடைய பழைய கலைகளும் வேலைப்பாடுகளும் தங்கள் சிறப்பியல்களை இழக்கலாயின. கூத்து

களுக்குப் பதிலாக நாட்டியங்களும், இன்னிசைக்குப் பதிலாக சங்கீதமும் தோன்றி, அவற்றைப்பற்றிய நூல்களும் மிகுதியாக வடமொழியில் எழுதப்பட்டன. சோழர்களும் பாண்டியர்களும் இலக்கியத்தில் ஆர்வமுடையவர்களாய் இருந்ததுபோல், பல்லவர்கள் கட்டிட வேலையிலும் சிற்பக் கலையிலும் ஆர்வங்காட்டினர். பௌத்தர்களையும், சமணர்களையும் பின்பற்றி, முதன் முதலாக நரசிம்மவர்மனே கருங்கல்லினால் இந்துக் கோயில்களைக் கட்டினான். கீழைக் கடற்கரையில் பாதிக்குமேல் இப்பொழுது மணலால் மூடப்பட்டுக்கிடக்கும் மகாபலிபுரம் (மாமல்லபுரம்) என்னும் கோயில்கள் நிறைந்த நகரினை அமைத்தான். அங்கு அவனால் கட்டப்பட்டுள்ள அழகிய கோயில்களில் சிற்பக்கலையின் அருமையான வேலைத்திறன் மிக்வும் சிறந்து காணப்படுகிறது. இந்து மதப் புராணக் கதைகளிற் கண்ட காட்சிகள் பல கல்லில் உயிர் பெற்றனபோற் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றை இந்திய சிற்பத்தின் அழகிய எடுத்துக்காட்டுகளாக இப்பொழுது மதிக்கின்றனர். பல்லவர்களுடைய கலைப்பண்புகள் தென் இந்தியாவோடு நிற்காது, இலங்கை, கிழக்கு இந்தியத் தீவுகள் முதலிய தொலைவிடங்களுக்கும் பரவிச்சென்றன. பல்லவர்கள் பலத்த கடற்படையும் வைத்திருந்தார்கள். அதன் உதவியால் அவர்கள் வங்காள விரிகுடாவின் எதிர்ப்பக்கத்து நாடுகளுக்கும் சென்று தங்கள் ஆட்சியை ஏற்படுத்தியதாகச் சிலர் நம்புகின்றனர்.

## இலங்கையரசன் மானவம்மன் :—

கி. பி. 676-ல் இலங்கைக்கு அரசனாக வந்த மானவம்மன் என்னும் சிங்கள மன்னன், தான் அவ்வாறு அரசனாகு முன்னர் இலங்கையிலிருந்து துரத்தப்பட்டு, காஞ்சி மன்னனிடத்தில் சரண்புகுந்திருந்தான். அங்கு இருக்கும்பொழுது, சாளுக்கியர்களோடு பல்லவர்கள் நடத்திய போரில், பல்லவ மன்னனுக்கு உதவியாக நின்று பொருது, தான் ஒரு சிறந்த வீரன் என்பதைக் காட்டினான். அது கண்டு மகிழ்ந்த பல்லவன் அவனை இலங்கைக்கு அரசனாக்கி வைத்து விட எண்ணி அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்தான். சிறந்த போர்வீரர்கள் நிறைந்த படையுடன் காஞ்சி மன்னன் மானவம்மனைக் கப்பல்களோடு இலங்கைக்கு அனுப்பினதாக எழுதப் பட்டிருக்கிறது. மானவம்மன் அத் தீவில் இறங்கி அனுராதபுரத்தைப் படையெடுத்து எளிதில் கைப்பற்றினான். ஆனால் தமிழ்ப்படை காஞ்சிக்குத் திரும்பியவுடன், மானவம்மன் மீண்டும் இலங்கையிலிருந்து விரட்டப்பட்டான். காஞ்சி மன்னன் மறுபடியும் கி. பி. 676 ல் ஒரு பெரிய படையுடன் மானவம்மனை இலங்கைக்கு அனுப்பினான். அப்பொழுது சிங்களர்களும் ஓர் அரசனில்லாது தவித்துக்கொண்டிருந்ததால், இம்முறை மானவம்மனை விழைந்து அரசனாக ஏற்றுக் கொண்டனர். அவ்வாறு அவன் அரசனாக வந்ததிலிருந்துதான் பல்லவருடைய கலைப்பண்புகளும் செல்வாக்கும் இலங்கையினுட் புகுந்தன. மானவம்மனே அதற்குக் காரணமா யிருந்தான். அவன் காலத்தில் சிங்களத் தொழிலாளிகள் பல்லவர்களிடமிரு



ந்து மிகச் சிறந்த சிற்ப நுட்பங்களைக் கற்றுக் கொண்டனர் என்பதை அனுராதபுரத்தில் இடிந்து கிடக்கும் கட்டிடக் குவியல்கள் நமக்குத் தெளிவுறுத்துகின்றன.

மானவம்மன் தமிழ்ப்படை வீரர்களின் உதவியால் தனது நாடாளும் உரிமையை எய்தியது போலவே தமிழ்த் தொழிலாளிகளைக் கொண்டு தனது தலைநகரையும் அழகு படுத்தினான்.

## பாண்டியன் மாறவர்மன் அவனிசூளாமணி (கி. பி. 620—645) :—

கி. பி. 620 ல், கடுங்கோனுக்குப்பின் அவனது மகன் மாறவர்மன் அவனி சூளாமணி அரசனானான். அவனும் தனது தந்தையைப் போல் பாண்டி நாட்டைப் பலப்படுத்தி இருபத்தைந்து ஆண்டுகள் இனிது ஆட்சி புரிந்தான். அவனைப்பற்றி வேறொரு செய்தியும் தெரிவதற்கில்லை.

## சேந்தன். கி. பி. (645—670) :—

கி. பி. 645 ல் அவனி சூளாமணியின் மகன் சேந்தன் பட்டத்திற்கு வந்தான். அப்பொழுது பாண்டி நாடு நல்ல முறையில் திறம் பெற்று விளங்கியது. அதனால் சேந்தன் அயல்நாடுகளை வென்று கைக்கொள்ள எண்ணங் கொண்டான். ஆனால் நரசிம்மவர்மன் என்னும் வலியுடைப் பல்லவன் வடக்கே ஆண்டு வந்ததால், சேந்தன் தனது போர்வலியை விரித்துக் காட்டுவதற்கு வழியில்லாமற் போயிற்று. அதனால், சேந்தன் சில சேரநாட்டுச் சிற்றரசர்களோடு மட்டும் போர் செய்து அவர்களின் நிலங்களைக் கைப்பற்றியதோடு அமைவானாயினான்.

## அரிகேசரி மாறவர்மன். (கி. பி. 670—710):—

சேந்தனின் மகனான அரிகேசரி மாறவர்மன் கி. பி. 670 ல் பட்டத்திற்கு வந்தான். தனது தந்தையைப் போலவே இவனும் போர்த்தினவு கொண்டவன்; நாட்டைப் பரப்ப வேண்டுமென்று ஆத்திரம் கொண்டான். பல்லவப் பேரரசனான நரசிம்மவர்மனும் இறந்து விட்டான். இனி, பாண்டியர்கள் பல்லவர்களுக்கு அஞ்சவேண்டியதில்லை. அவ்விரு திறத்தாருக்குள் யார் தென் இந்தியாவில் முதன்மை பெறுவது என்ற போட்டி கிளம்பியது. அரிகேசரி பல்லவர்களைப் பாழி என்னும் இடத்திலும், நெல்வேலி என்னுமிடத்திலுமாக, இருமுறை தோற்கடித்தான். வேறொரு குறிப்பும் காணப்படாததால், இந்த இரண்டு இடங்களும் எங்கே இருக்கின்றன என்று தெரியப்படவில்லை. அவன் ஆட்சியில் சில உட் குழப்பங்கள் கூடக் கிளம்பினதாகத் தெரிகிறது. தென்கரையிலுள்ள பரவர்களும் குறுநாட்டு மக்களும் கலகஞ்செய்தனர். ஆனால் அரிகேசரி அவர்களைத் தகுந்த முறையில் ஒடுக்கி விட்டான். பின்னர் அவன் சேர நாட்டின்மீது படையெடுத்து, சேர மன்னனைக் குடும்பத்தோடு, சிறைப்படுத்தி, சேர்பலத்தை

நசுக்கினான். இவ்வாறு அரிகேசரி மாறவர்மன் ஆட்சியில் பாண்டி நாடு பரவலுற்று மேலோங்கி எழுந்தது. சேர நாடும் பாண்டியனுக்குக் கீழ் அடங்கிவிட்டது. சோழநாட்டில் பல்லவர்கள் கையிலிருந்த பகுதிகளும் பாண்டியன் ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு நாடுகள் பிடிபட்டதை விட இன்னொரு முக்கிய செய்தியென்னவென்றால், நெடுநாளாகப் பல்லவர்கள் அடைந்திருந்த உயர் நிலையானது இப்பொழுது சீர் குலையத் தொடங்கியதேயாகும்.

## கோச்சடையன் கி. பி. (710—740)

அரிகேசரியின் மகனான இரண தீரன் என்னும் கோச்சடையன் கி. பி. 710 ல் பட்டம் பெற்றான். அவனும் ஒரு சிறந்த போர் வீரனாய் விளங்கி சேரநாட்டையும் சோழநாட்டுப் பகுதிகளையும் விடாமல் தன் கையில் வைத்திருந்தான். ஆய் என்னும் ஓர் இடையர் தலைவன் மருதூரில் மூட்டிவிட்ட குழப்பத்தை வென்றடக்கினான். பின்னர் கோச்சடையன் கொங்கு நாட்டைப் படையெடுத்து சேரநாட்டுக்கு வடக்கே மங்களாபுரத்தைத் தலைநகராகக் கொண்டு மேலைக் கடற்கரையில் ஆண்டு வந்த மராட்டியர்களை வென்றான். இவ்வாறு பாண்டியன் மங்களாபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டு கொங்கு நாடு முழுதையும் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். ஆனால் இவ்விதம் கொங்கு நாட்டைப் பிடித்ததிலிருந்து பாண்டியர்களுக்கு ஓயாத தொல்லையே விளைந்து கொண்டிருந்தது. கோச்சடையனின் பின் வந்தோர் அடிக்கடி போர்கள் நடத்தியே அப்பகுதியில் தங்கள் ஆட்சியைச் செலுத்த வேண்டியதாயிற்று.

## முதலாம் மாறவர்மன் இராஜசிம்மன் (கி. பி. 740—765) :-

கோச் சடையனின் மகனான மாறவர்மன் இராஜசிம்மன் பல்லவர் பலத்தை ஒழித்துவிட வேண்டும் என்ற உறுதியுடன், நெடுவயல், குறுமடை, மண்ணைக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளூர் முதலிய இடங்களில் பல போர்கள் நடத்தி வெற்றி பெற்றான். இவ்வாறு பல போர்கள் சொல்லப்படுவதால், இராஜ சிம்மன் பல்லவர்களோடு நிகழ்த்திய போராட்டம் நீண்டகாலம் மிகக் கடுமையாய் நடந்துவந்ததாகத் தெரிகிறது. முடிவாக, குழுமூர் என்னும் இடத்தில் இராஜ சிம்மனுக்குப் பெரியதொரு வெற்றி கிடைத்தது. நந்திவர்மப் பல்லவ மன்னன் எண்ணிறந்த யானைகளையும், குதிரைகளையும் மற்றும் போர்ப் படைகளையும் கைவிட்டு வீரமும் வாளும் களத்தே போட்டு வெறுங்கையோடு காஞ்சி புக்கான். உதயச்சந்திரன் என்னும் பல்லவர்களின் படைத் தலைவனும் பல இடங்களில் பாண்டியர்களை வென்றதாகச் சொல்லப் படுகிறது. ஆனால், நெடுநாள் நடந்த இப் போராட்டமானது இராஜ சிம்மனுக்கே நன்மையாய் முடிந்தது என்பதில் யாதோர் ஐயமுமில்லை.



பல்லவர்களை வென்றதும், இராஜசிம்மன் காவிரியைக்கடந்து மழகொங்கம் அடைந்து அங்கிருந்து சாளுக்கியர் செல்வாக்கு நடந்துவந்த கருநாட்டினுட்புகுந்தான். அக்காலத்தில் கருநாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்த கங்கர் குல அரசர்கள் சாளுக்கியர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள். அதனால் இராஜ சிம்மன் சாளுக்கியர்களோடு போர்செய்ய வேண்டி வந்தது. வெண்பை என்னும் இடத்தில் பெரும் போர் நடந்தது. பாண்டியனுக்கே வெற்றி கிடைத்தது. கங்கர்களும் அவனுடைய தலைமையை ஏற்றுக் கொண்டனர். கங்கர்களை எதிர்த்து நடத்திய இப்போரும் ஓர் இனிய முடிவைப் பெற்றது. இராஜசிம்மன் தனது மகன் நெடுஞ்சடையனுக்கு ஒரு கங்கர் குல இளவரசியை மணஞ்செய்து வைத்தான்.

## பராந்தக நெடுஞ்சடையன் (கி. பி. 765—815) :—

வரகுணன் என்னும் சடில பராந்தக நெடுஞ்சடையன், தன் தந்தைக்குப்பின் கி. பி. 765ல் பட்டத்திற்கு வந்தான். இராஜசிம்மன் இறந்தவுடனேயே அவனால் அடிப்படுத்தப்பட்ட நாடுகள் எல்லாம் கலகமிட்டுக் கிளம்பின. நெடுஞ்சடையன் தன் தந்தையின் எதிரிகள் எல்லாரோடும் போர் செய்ய வேண்டியதாயிற்று. தெற்கேயுள்ள மலைப்பக்கத்துச் சிற்றரசர்கள்கூட, இப் புதிய அரசனிடத்தில் குறும்புசெய்யத் துணிந்தனர். மற்றொரு பக்கம் பல்லவர்களோடு போர் தொடங்கிவிட்டது. காவிரியாற்றுக்குத் தென் கரையிலுள்ள பெண்ணாகடம் என்னும் இடத்தில் நெடுஞ்சடையனுக்கு ஒரு பெரிய வெற்றி கிடைத்தது. ஆனால் சீக்கிரத்தில் அவனது திறமைவாய்ந்த அமைச்சனாய் விளங்கிய மாறன் காரி என்பவன் இறந்தான். பிறகு மாறன்காரியின் தம்பியான மாறன் எயினன் என்பவனே தலைமை அமைச்சனாக நியமிக்கப் பட்டான்.

சேரர், பல்லவர்கள் உதவியைக் கொண்டு மேலைக் கொங்கு நாட்டரசன் அதிகன் என்பான் நெடுஞ்சடையனின் ஆட்சியை எதிர்த்துப் போர் தொடங்கினான். ஆனால் இவ்வாறு பல உதவிப் படைகளையும் திரட்டிவந்தும்கூட, அதிகன் என்னும் அக்கொங்கர் தலைவன் காவிரியின் வடகரையில் ஆயிரூர், புகலியூர் என்னும் இடங்களில் நடந்த போரில் பெருந் தோல்வியடைந்தான். அதிகன் இவ்வாறு தோல்வியுற்ற பின்னர் கொங்கு நாட்டுக் குழப்பங்கள் எல்லாம் அறவே ஓய்ந்து விட்டன. கொங்கு நாட்டரசனைச் சிறையிட்டு மதுரைக்குக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. இவ்வெற்றியின் நினைவைக் குறித்து, கொங்கு நாட்டிலுள்ள காஞ்சிவப் பேரூர் என்னும் இடத்தில் நெடுஞ் சடையன் ஒரு கோயில் கட்டினான். பின்னர் ஐந்து ஆண்டுகளுக்குள் காஞ்சி கூட அவன் கீழ் அடங்கிவிட்டது. நெடுஞ்சடையன் ஒரு பேரரசனாக விளங்கினான். அவன் ஆட்சி தமிழ் நாட்டோடுமட்டும் அமையாமல், அதற்குமப்பால் மங்களாபுரம் வரையில் பொங்கிப் பொலிந்தது. வேணாடு என்னப்படும் தென் திருவாங்கூரிலுள்ள தலைவர்களும், மற்றும் மலைநாட்டுப் பகுதியிலுள்ள சிலரும் தொல்லை கொ

டுத்துக்கொண்டே வந்தனர். அவர்களை ஒரு தலையாய் வாட்டி ஒடுக்குவதற்காக, கி. பி. 788 ல் ஒரு போர் தொடக்கமாயிற்று. மலைநாட்டுத் தலைவனான சடையன் கருநந்தன் என்பவனை முறியடித்து. அரிவியூர்க் கோட்டை, கரைக்கோட்டை என்பனவும் அடியோடு அழிக்கப்பட்டன. இவ்வாறு தெற்கே மலைநாட்டுக் கூட்டங்களும் ஒடுக்கப்பட்ட பின்னர், வேறு போரின்றி சடையவர்மன் இருபத்தைந்து ஆண்டுகள் அமைதியோடு தன் வெற்றியின் பலன்களை இனிது துய்த்து வந்தான்.

## சீமாறன் வல்லபன். (கி. பி. 815—862) :—

கி. பி. 815 ல் சீமாறன் வல்லபன் தன் தந்தையை அடுத்து திராவிட நாட்டின் பேரரசன் ஆனான். அவ்வமயமும் கீழ்ப்படிந்திருந்த நாடுகள் கலகம் செய்தன. வேனாட்டிலும் ஒரு குழப்பத்தை அடக்க வேண்டியதாயிற்று. தெள்ளாறு என்னும் இடத்தில் மூன்றாவது நந்திவர்மன் என்னும் பல்லவன் பாண்டியர் படைகளைச் சிதற அடித்து, பாண்டியரின் தலைமையை வீசியதுமல்லாமல், சோழநாட்டிற் சில பகுதிகளையும் பிடுங்கிக் கொண்டான். இந்த வெற்றியிலிருந்து, பாண்டியப் பேரரசின் வளர்ச்சியைக் கண்டு முன் அஞ்சிக் கிடந்த வடபகுதியிலுள்ள அரசர்கள் எல்லாரும் பல்லவர் பக்கத்திற் சேர்ந்து கொண்டனர். பாண்டியன் கையிலிருந்து விடுபட்ட கங்கர்கள், கலிங்கர்கள், சாளுக்கியர்கள், மற்றும் வட இந்தியாவிலுள்ள மகதநாட்டரசன், எல்லோரும் பல்லவர் பக்கம் சேர்ந்து படைதிரட்டி எதிர்க்கலுற்றனர். ஆனால் சீமாறன் அத்தகைய வெருவரும் கூட்டுப் படைக்குக் குலைந்து விடவில்லை. கும்பகோணத்துக்கருகே அவர்களோடு பொருது வெற்றிமாலை புனைந்தான். இந்த வெற்றியிலிருந்து பாண்டியர்களுடைய தலைமை தென் இந்தியாவில் தழைத்தோங்கியது. தக்கிணத்திலுள்ள ஆந்திர அரசுகளும் சாளுக்கியர்களும் பாண்டியர்களுடைய தலைமையைப் பணிந்து ஏற்றுக் கொள்வாராயினர்.

பின்னர் சீமாறன் தெற்கே கடல் நோக்கித் தனது நாட்டத்தைச் சிறிது செலுத்தினான். அங்கே இலங்கைத் தீவு இலங்கி மிளிர்ந்துகொண்டிருந்தது. அதனை இதுவரையில் தமிழ் நாட்டிலிருந்து தமிழ் மன்னர் யாரும் வென்று கைக்கொள்ள நினைத்ததில்லை.

சீமாறன் ஒரு பெரிய படையுடன் இலங்கைக்குச் சென்று சிங்களப் படைகளை மகாதலிதா என்னும் இடத்தில் தோற்கடித்தான். இலங்கை அரசனான முதலாவது சேனன் நடுநாட்டு மலையநாட்டவிலுள்ள மலைகளில் ஓடி ஒளித்தான், தமிழர்கள் கையிற் படுவதைவிட இறப்பது மேலென்று மகிந்தா என்னும் இளவரசனைப் போன்ற பல சிங்களத் தலைவர்கள் போர்க்களத்தில் தற்கொலை புரிந்து கொண்டனர். மற்றொரு இளவரசனான காசியப்பா என்னும் பெயர் பெற்ற வீரன் நெஞ்சழிந்து போரை விடுத்து ஓடியே போய் விட்டான். பாண்டியர்களுக்கு முழு வெற்றி கிடைத்தது. ஆனால் ஓடிப்போன சேனன் திரும்பி வந்து தன் அடி பணிந்ததும் வல்ல



பன் இலங்கை அரசை மீண்டும் அவனுக்கு அளித்து விட்டு கொள்ளைப் பொருள்களையும் திறைகளையும் வாரிக்கொண்டு வெற்றித் திருவுடன் மதுரைக்கு வந்தான். இப் பழியைத் தீர்ப்பதற்காக, இரண்டாவது சேனன் ஆட்சியில் (கி. பி. 866—901) சிங்களர்கள் மதுரைமேற் படையெடுத்துச்சென்று, தாங்கள் குறித்த ஒருவனை அங்கு அரியணையேற்றியதாக, சிங்களச் சரித்திர நூலாசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் பாண்டியர் அரசாட்சி அக் கால அளவில் அவ்வாறு தடைப்பட்டதாகத் தமிழ்க்கல்வெட்டுகளால் ஒன்றும் அறியக் கூடவில்லை. ஒருவேளை சிங்களர்கள் கூறுவது உண்மையாக இருந்தாலும், அவ்வாறு அவர்களால் அரியணையேற்றப்பட்டவன் மிகச்சிறுபொழுதே இருந்திருக்கமுடியும். சீமாறனின் சிறந்து விளங்கிய ஆட்சி இறுதியில் பல தோல்விகளால் மங்கலுற்றது. காஞ்சியரசன் மூன்றாம் நந்திவர்மனுக்குப் பின் அவன் மகன் நிருபதுங்கன் கி. பி. 854 ல் அரசனானான். இளமைப் பருவத்தனாகிய அவனுக்குத் தன் குலப் பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணம் பிறந்தது. சீமாறனை அவ்விதம் வெற்றிமாலையோடு அமரவிடாது, அவனோடு கடும்போர் புரிந்து காவிரியின் கிளையாகிய அரிசிலாற்றங் கரையில் பல்லவன் அவனைப் புறமுதுகிட்டோடச் செய்தான். இந்தத் தோல்விக்குப்பின் சீமாறன் நெடுநாள் வாழவில்லை. அவன் இறந்ததும் அவன் மகன் வரகுணவர்மன் கி. பி. 862-ல் பாண்டிநாட்டு மன்னனாக வந்தான்.

## வரகுணவர்மன் (கி. பி. 862—880) :—

அரிசிற் போரில் வெற்றி சூடிய காஞ்சி மன்னனின் திறனைத் தெரிந்து வரகுணன் அவனோடு பொறுமையாய் வாழவேண்டியதாயிற்று. இகலின்றி இணைந்துவாழ வேண்டிய அவ் விருவரும் கி. பி 880 வரை பொருந்தியே வாழ்ந்து வந்தனர்.

## அபராஜிதன் :—

அதற்குள் நிருபதுங்கன் இறந்து அவன் மகன் அபராஜிதன் காஞ்சி மன்னனானான். வரகுணனும் தன் போர்வலியை நிலையிட்டிய எண்ணங்கொண்டு பல்லவனை எதிர்த்துப் போர் தொடங்கினான். ஆனால் திருப்புறம்பயம் என்னும் இடத்தில் நடந்த போரில் பாண்டியனுக்குப் படுதோல்வி நேர்ந்தது. அப் போரில் அபராஜிதனுக்கு உதவி புரிந்த மேலைக் கங்க அரசனான முதலாம் பிருதிவிபதி என்பான் உயிர் துறந்தான்..

## சோழர் குல எழுச்சி :—

தமிழ்நாட்டில் முதன்மை பெறுவதற்காக, பல்லவரும் பாண்டியரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருந்த காலத்தில் பழைய சோழர் குலத்தில் வந்தவர்கள் சிற்றரசர்களாய் புன்மையுற்று, நாட்டில் ஒதுங்கிப் பிழைத்து வந்தனர். திருப்புறம்பயத்தில் பாண்டியர் தோல்வியடைவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் சோழ அரச குலத்தவனாகிய விஜயாலயன் என்பான் ஒரு சிறுதலைவன் கையிலிருந்த தஞ்சை நகரைக் கைப்பற்றி,

அதனைத் தலைநகராகக் கொண்டு, சோழர்களின் புலிக் கொடியை நிலைநாட்டினான். அவன் சோழன் கரிகாலனின் வழித்தோன்றல் என்று சொல்லப்படுவான்.

## பராந்தகன் வீர நாராயணன் (கி. பி. 880—900) :—

பல்லவர்களால் தோல்வியுற்ற சிறிது காலத்துக்குள் வரகுணவர்மன் இறந்துவிடவும், அவன் தம்பி பராந்தகன் வீரநாராயணன் பட்டத்திற்கு வந்தான். அவன் வானவன் மகாதேவி என்ற சேரநாட்டு அரசிளங்குமரியை மணஞ் செய்து கொண்டவன். அவன் கொங்கு நாட்டிலும் வேறு சில இடங்களிலும் போர் புரிந்ததாகச் சொல்லிக் கொள்கிறான். ஆனால் அவனைப் பற்றிய வரலாறு ஒன்றும் தெரிவதற்கில்லை. எப்படியும் பாண்டியர் உயர்ச்சியானது இப்பொழுது தணிய ஆரம்பித்து விட்டது. வீர நாராயணன் அதைத் தடுப்பதற்குத் தன்னால் இயன்றதைச் செய்து முயன்றிருக்கலாம்.

## இரண்டாம் மாறவர்மன் இராஜசிம்மன் (கி. பி, 900–920) :-

கி. பி. 900-ல் வீரநாராயணனின் மகனான இரண்டாம் மாறவர்மன் இராச சிம்மன் பாண்டிநாட்டில் முடிசூடப் பெற்றான். அவனுடைய ஆட்சியில் காரியங்கள் எல்லாம் சீர்கேடடையத் தொடங்கின. அப்பொழுது பல்லவர்களைப்பற்றிய பயம் நீங்கி விட்டது. ஆனால் புதிதாகத் தோன்றிய தஞ்சைச் சோழர்களே பகைவர் ஆயினர். விஜயர்லயன் மகன் முதலாம் ஆதித்தன் ஆட்சிக்கு வந்ததும், வலியவே கொடி கட்டிப் போருக்கு அறைகூவும் வன்கண்மை உடையவனாக விளங்கினான். பல்லவ அரசனான அபராஜிதனைப் பல முறை போரில் வென்று, காஞ்சி உட்படப் பழைய சோழநாடு முழுவதையும் கைப்பற்றிக் கொண்டான். இவ்வாறு விரைந்து சோழர்கள் முன்னேறியது பாண்டியர்களுக்குத் திகைப்பை உண்டுபண்ணியது. அவர்கள் அஞ்சியது போலவே அவர்களும் சோழர்களோடு போர் புரியும் காலம் முடுகிக் கொண்டு வந்தது.

விஜயாலயன் குடும்பத்தினர் சோழநாட்டில் ஆட்சி தொடங்கியதிலிருந்து தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் பொற்காலம் என்னும்படியான ஒரு சிறந்த புதுமுகம் தோன்றுவதாயிற்று.



# அத்தியாயம்—9

## தமிழ் இலக்கிய வரலாறு :—


திராவிடநாட்டு மன்னர்கள் நிலை தளர்ந்து சேர்ந்த நாளில் கடைச் சங்கமும் முடிவடைந்த செய்தியை நாம் முன்னரே பார்த்தோம். பழையபடியும் பாண்டியர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு கூட சங்கம் எதுவும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அரசர்களின் ஆதரவு இல்லாது போனது புலவர் குழாத்திற்குப் பெருங்கெடுதலாய் முடிந்தது. பழைய புலவர்களும் இரவலரும், பாணரும் அறவே மறைந்து போயினர். அவர்களுக்குப் பதிலாக முனிவர்களும் துறவிகளும் தோன்றினர். அவர்களுக்கு அரசர்களின் ஆதரவு இருந்தாலும் நல்லதுதான்; இல்லாவிடினும் கவலையில்லை. சங்ககாலத்துப் புலவர்கள் அகவற்பாவில், இருந்தன இருந்தபடி பொருந்தி விளங்க, பலவும் சிலவுமான அடிகள் அமைந்த பாடல்களையே பெரிதும் பாடினர். அவர்கள் உயர்ந்த தத்துவக் கருத்துக்களையும், சமயக் குதர்க்கங்களையும் பற்றிப் பாடினதேயில்லை. தமிழர் வாழ்க்கைப் பண்புகளிற் பிணைந்து கிடந்த சில வழிபாட்டு முறைகளைப்பற்றி மட்டும் இங்கு மங்குமாகச் சிலவற்றைக் கூறிவைத்தனர். அறவுரைகளைக் கூற வந்த திருக்குறள் நூலிற்கூட, ஒரு தலையான சமயச் சார்புபற்றிய விதப்புகளும் விதண்டைகளும், காண முடியாது. கடைச் சங்க காலத்திற்குப் பின், 6 ஆம் நூற்றாண்டிலிருந்து, தமிழ் இலக்கியம் புதிய புதிய துறைகளில் இறங்கலுற்றது; அதன் விளைவாக, சமயத்தைப்பற்றியும் கடவுளைப்பற்றியும் மிகுதியாக நூல்கள் தோன்றலாயின.

## பார்ப்பனீயம் :—

கடைச்சங்க காலத்தில்தான் தமிழ்நாடு பார்ப்பனர், சமணர் பௌத்தர்போன்ற மதவகுப்பார்களுடைய தொடர்பு பழக்கங்களைக் கொள்ளலாயிற்று. சமணமும் பௌத்தமும் வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பார்ப்பனீயம் தமிழ் நாட்டிற் புகுந்து தமிழர்களுடைய கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தான் மிகவும் உட்கொண்டுவிட்டதால், தமிழ் மக்கள் பார்ப்பனீயத்தை ஓர் வேற்றுமைக் கொள்கையாகவே கருதினதில்லை; அவ்வளவு பழகிப்போய்விட்டது. அப்படிப் பழகியும், பார்ப்பனர்கள் சமஸ்கிருதத்தையே தங்கள் சமய மொழியாக விடாது கைக்கொண்டு, தமிழ் மொழியில் ஒரு நூல்கூட சமயத்தைப்பற்றி எழுதினதில்லை. அவர்கள் தங்கள் சடங்குகளையும் கிரியைகளையும் விடாப்பிடியாய்க் கட்டிக்கொண்டு, வேறு மக்கள் அவற்றைப் பற்றி ஒன்றும் அறிந்துவிடாதபடி மூடுமந்திரமாய் வைத்திருந்தனர். அதற்குமாறாக, சமணர்களும் பௌத்தர்களும் தமிழில் நிறைய நூல்களை எழுதினர். ஆனால் தங்கள் மதக்கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்தோடுதான் அவை எழுதப்பட்டன. தமிழ்

மக்கள் அந்நூல்களை விரும்பிப்படிக்க ஆரம்பித்தனர். அதனால் சில நூற்றாண்டுகளில், தமிழர்கள் புன்மையுற்ற புறச்சமய நூல்களைப் படித்துத் தங்கள் வாணாளை வீணாள்படுத்துவதாகச் சைவ நாயன்மார்களும், வைணவ ஆசிரியர்களும் ஓலமிடும்படியாயிற்று. அதனால் சங்ககாலத்தின் இறுதிப்பகுதிக்குள் சமணமும் பௌத்தமும் தமிழ்நாடெங்கும் பரவி, சில மன்னர்கள் கூட அம் மதங்களின் கொள்கைகளை வெளிப்படையாகத் தழுவத் தொடங்கியது வியப்பாகமாட்டாது. இவ்வாறு மத வகுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் ஏறட்டுக் கொண்டு தங்கள் கொள்கைகளைப் பரப்பிவந்தாலும், சங்ககாலத்தில் எம்மதமும் சம்மதமேயென்ற சமயச் சகிப்பு உண்மையாய் இருந்து வந்தது. ஆனால் நான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து மதவகுப்புகளுக்குள் போட்டியும் கடுப்பும் சிறிது தோன்றலாயின. சமணமும் பௌத்தமும் தமிழ்நாட்டில் மட்டுமன்றி, இந்தியா முழுவதும் பரவி வந்ததால் வைதிகப் பார்ப்பனர்களுக்குப் பெரிதும் துயர மேற்பட்டது. இந்துமதச் சரித்திரத்தில் மிகவும் நெருக்கடியான அந்த வேளையில், பாாப்பனீயத்தைக் காத்தவரான சங்கராச்சாரியார் தோன்றினார். அவர் சேரநாட்டில் காலடி என்னும் ஊரிலுள்ள ஒரு வைதிகப் பார்ப்பனக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு பெரிய மதாசாரியாராக விளங்கி, வேதாந்த தத்துவக் கொள்கைகளை யாவருக்கும் புரியும்படி தெளிவாக விரித்துரைத்து, பார்ப்பனீயத்துக்குப் புத்துயிர் அளித்தார். சங்கரர் வடமொழியில் எழுதியும் சொற்பொழிவுகள் ஆற்றியும், இந்தியா முழுதும் சுற்றி வந்து, சமணர் பௌத்தர்களாகிய புறச் சமயிகள் செய்துவரும் வேலைக்குத் தாம் எதிராக வேலைசெய்தார். இந்துமதத்தை ஒழுங்கு படுத்தி, சமணர்களையும் பௌத்தர்களையும் போல், தாமும் இந்தியாவில் நான்கு இடங்களில் பெரிய மடங்களைக் கட்டி அமைத்தார். தென் இந்தியாவில் அவர் ஏற்படுத்திய மடம், நெடுநாளாக வடமொழிக் கல்விக்கு உறைவிடமாகிய காஞ்சியிலே கட்டப்பட்டது. சங்கருடைய உரைகளாலும், நூல்களாலும், பலரும் பரபரப்புடன் பார்ப்பனீயத்தைப் பின் பற்றுவாராயினர். வேதங்களையும் மற்றுமுள்ள சமய சாத்திரங்களையும் தெளிவுபடுத்தி அவர் விளக்கியதன் ஏதுவாக, இந்து மக்களுக்குத் தேவையாய் இருந்த கடவுள்பக்தி ஏற்பட்டதோடு, குறுகிய வைதிகக் குழியிற் கிடந்த பார்ப்பனீயமும் இந் நாளிற் காணப்படுவது போல் இந்து சமயமாக விரிந்து விளங்குவதாயிற்று. இவ்வாறு இந்து சமயமானது தமிழ் நாட்டில் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியதும் மதக் கடுப்பு முற்றி, ஒரு சமயத்தார் மற்றொரு சமயத்தாரைத் துன்புறுத்துவது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அப்பொழுது ஆண்டு வந்த மன்னர்களுடைய ஆதரவு தத்தமக்கே கிடைத்துவிட வேண்டுமென்று பார்ப்பனரும், சமணரும், பௌத்தரும் ஒருவரோடு ஒருவர் மல்லுக்குநின்றனர். சமயவாதிகள் தத்தம் இடங்களிற் கொடிகளைக் கட்டிக்கொண்டு பிறரை வலிந்து வாதுக் கிழுத்தனர். தமிழ்நாடு எங்கணும் சமய வாதங்கள் நடப்பது வழக்கமாகிவிட்டது.

சோழ சாம்ராச்சியம் (கி. பி. 1070. மட்டும்)




மலேயாவில் சோழர் படை, போரில் ஜெயித்த ஊர்கள் :—கடாரம் (Kedah), ஸ்ரீ விஜயம் (Palembang), மாபப்பாளம் (Lower Burma), பண்ணை, மலேயூர், மாயிருடிங்கம், இலங்கா சோகம், மேவிலிம்பங்கம், வளைபந்தூர், தலைத்தங்கோலம், மாதமர் லிங்கம், இலாமுரிதேசம், மாநக்கவாரம் (Nicobars).



## பத்திநெறிப் பெரியார்கள்: —

இவ்வாறு மக்களுக்கு இந்து சமயத்தின்மீது புதிதாக உண்டான ஆர்வத்தின் விளைவாக பக்திமார்க்கம் என்ற பத்தி நெறியானது தோன்றுவதாயிற்று. இந் நெறியைக் கடைப்பிடித்த பத்தர்கள் எல்லா வகுப்புகளிலிருந்தும் தோன்றினர். அவர்கள் வெறும் தத்துவஉண்மைகளைப் பன்னிப் பன்னிப் பிதற்றுதலை விட்டு ஐம்பொறி ஒடுக்கி ஆன்ம உணர்ச்சி பெற்று அன்பின் வழி நிற்றலையே வேண்டினர். இவ்விதம் அன்பு செலுத்துவதற்கு ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமயமான இறைவனை வழிபடுதல் வேண்டும். இந்நிலையை அடைவதற்கு உயர்ந்த பிறப்பும் மேலான அறிவும் வேண்டியதில்லை. மனம் மட்டும் தூய்மையும் ஒருமையும் அடைதல் வேண்டும். அதைக் கல்லாத ஒரு புலையனும் எளிதில் அடையலாம் என்ற இத்தகைய கொள்கையைக் கொண்ட பத்திப்பெரியார்கள் சைவத்திலும் வைணவத்திலும் தோன்றினார்கள். அவர்களுடைய அடிப்படையான கருத்துகள் ஒன்றாகவே இருப்பினும், அவர்கள் சமணர்களோடும் பௌத்தர்களோடும் போட்டியிட்டதுபோல், தங்களுக்குள்ளும் வாதுகள் நிகழ்த்தினர். ஆயினும் அவர்கள் பத்திச் சுவை நனி சொட்டச்சொட்ட உயிரை உருக்கும் அழகிய தமிழ்ப் பாமாலைகளைப் பாடியருளினர்.

சிவனடிக்கன்பு பூண்ட நாயன்மார்களில் மிகவும் முக்கியமானவர்கள் திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர். அவர்கள் பாடிய திருப்பாடல்கள் தேவாரமும் திருவாசகமும் ஆகும். அவற்றை எட்டுத் திருமுறைகளாக வகுத்திருக்கின்றனர். முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தர் பாடியவை. நான்கு முதல் ஆறு வரை அப்பர் அடிகளின் அருமைப் பாடல்கள்; சுந்தரர் பாடியவை ஏழாந் திருமுறையில் அடங்கியுள்ளன. மாணிக்க வாசகர் பாடிய திருவாசகம் எட்டாம் திருமுறை.

வைணவப் பத்தர்களாகிய ஆழ்வார்கள் பதினொருவர். அவர்கள் :— பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணுழ்வார், திருமங்கையாழ்வார். இவ்வாழ்வார்கள் பாடிய பாடல்களை எல்லாம் நாதமுனி என்னும் பெரியார் கி; பி. 920 ல் நாலாயிரப் பிரபந்தம் என்னும் பெயரால் தொகுத்துள்ளார்.

## சமண பௌத்த ஆசிரியர்கள் :—

பத்திநெறி அடியார்களுக்குள்ளே மிகவும் முந்தியவராகிய அப்பர் என்னும் திருநாவுக்கரசர், காஞ்சி மன்னனை முதலாம் மகேந்திரவர்மனைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினர். திருஞான சம்பந்தர்கூட கூன்பாண்டியனைச் சமணத்திலிருந்து சிவநெறிக்குத் திருப்பியதாகச் சொல்லப்படுகிறது. அது போல்

பெரியாழ்வாரும் பாண்டியன் அரசனான சீமாற வல்லபனை சமண மதத்திலிருந்து வைணவனாக்கியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இம்மாற்றங்களிலிருந்து, திராவிட நாட்டில் சில சிறந்த அறிவாளிகளான நூல்வல்லார் சமண சமயத்தையும் பௌத்த சமயத்தையும் பின்பற்றினார்கள் என்பது தெரியவரும. அக் காலத்தில் அவ்வாசிரியர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியுள்ளார்கள் என்பதைக் கவனிப்போம். தங்களுடைய பார்ப்பனக் கொள்கைகளைப் போதிப்பதற்கும் பரப்புவதற்கும் ஆரியர்கள் தான் முதலில் செய்யுளிற் காவிய நடையைக் கையாண்டனர். இராமாயணம், மகாபாரதம் போன்ற வடமொழி நூல்களிலிருந்து இதை நாம் அறியலாம். தமிழ்நாட்டில் சமணர்களும் பௌத்தர்களும் தங்களுடைய சமயக் கொள்கைகளைப் புகுத்துவதற்கு இந்தக் காப்பிய நடையைப் பெரிதும் பயன் படுத்தினர். இதற்கு மணிமேகலை ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகு. சங்ககாலத்திற்குப் பிந்தினகாலப் பகுதியாகிய கி. பி. 600 முதல் 900 வரை சமண பௌத்தப் புலவர்கள் இக்காப்பிய நடையையே கைக்கொண்டு வளையாபதி, சீவகசிந்தாமணி, குண்டலகேசி என்ற மூன்று பெருங் காப்பியங்களை எழுதியுள்ளார்கள்.

அதே காலத்தில் சிறு காப்பியங்களும் ஐந்து தோன்றின, அவையாவன :— சூளாமணி, நீலகேசி. யசோதர காவியம், உதய குமாரன் காவியம், நாககுமார காவியம்.



# இரண்டாம் பாகம்.

## அத்தியாயம்—1

### சோழர் பேரரசாட்சி:—

களப்பிரரும் அன்னவரையடுத்து வந்த பல்லவரும் கவினுடைக் காவிரி வளநாட்டைக் கைக்கொண்டிருந்த பல நூற்றாண்டுகளாய், கரிகாலன் வழிவந்த சோழகுலத்தார் இருந்த இடம் தெரியாது மறைந்தே வாழவேண்டியிருந்தது. சோழ குலத்து இளவரசர்கள் பாண்டியர் குலத்திலும் சேரர் குலத்திலும் உறவாடிப் பெண் எடுத்தும் கொடுத்தும், தங்கள் பெருமையை மறந்துவிடாது மணங்கொண்டொழுகினர். அவர்களிற் பலர் தஞ்சைமாவட்டத்தில் சிற்றரசர்களாயும், சிறு தலைவர்களாயும் இருந்தனர். அந்தப் பகுதி நிலத்தில் பல்லவரும் பாண்டியரும் முரணிப் போராடுவது வழக்கமாகையால், அது ஒருவர் கட்டுப்பாட்டுக்கும் அடங்காத எல்லை நிலமாகக் கைமாறிக் கொண்டேயிருந்தது. அத்தகைய இடத்திலுங்கூட, சோழர் குலச் சிற்றரசர்களுக்கு முழுத் தனி உரிமை அடைய முடியவில்லை. உண்மையில் அந்த எல்லைப்புற நாட்டை ஆண்டு வந்தவர்கள் முத்தரையர் என்னும் சிற்றரசர்கள். அவர்கள் யார் கை ஓங்குகிறது என்று அரசியல் நிலையைக் கவனித்து, ஒருகால் பாண்டியர்களுக்கும், மற்றொருகால் பல்லவருக்குமாக, வழிமொழிந்து வந்தனர். ஒரு சிறு சண்டையைக் கிளப்பி, முத்தரையரைச்சேர்ந்த ஒரு சிற்றரசன் கையிலிருந்துதான் விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றினான். இவ்வாறு முத்தரையர்கள் தோல்வியுற்றுப் புறங்கொடுத்ததும் தஞ்சையிலிருந்து தெற்கே புதுக்கோட்டைவரை முன்னிருந்த சோழ நாட்டின் பாதியளவு நிலப்பரப்பிற்கு விஜயாலயன் அரசனாகி விட்டான்.

### முதலாம் ஆதித்தன் :—

விஜயாலயனின் மகனான இராஜகேசரி வர்மன் என்னும் முதலாம் ஆதித்தன் கி. பி. 880 ல் தஞ்சைக்கு அரசனானான். அதே வேளையில் அபராஜிதனும் காஞ்சியில் முடிதரித்துக் கொண்டான். திருப்புறம்பயத்தில், பாண்டியன் வரகுணவர்மன் பல்லவர்களோடு போர் செய்து எவ்வாறு கெட்டான் என்பதை நாம் முன்னரே பார்த்தோம். அந்தப் போர் நடந்தகாலத்தில் சோழர்கள் தங்கள் முழு உரிமையையும் அடைந்ததாக இல்லை. பல்லவர்களுக்குக் கீழ்ப்படியும் சிற்றரசர் நிலையிலேயே இருந்தனர். திருப்புறம்பயப் போரில் சோழர்கள் யாருடைய பக்கத்தைச் சார்ந்திருந்தனர் என்பது குறித்து சரித்திர ஆசிரியர்களுக்குள் வேறுபாடு உண்டு. எனினும், அதற்குப்பின் சில ஆண்டுகளுக்குள் ஆதித்தன் அபராஜிதனை வென்று பல்லவர் பலத்தை அறவே நசுக்கி விடவும், தொண்டை மண்டலம் முழுதும்

பழையபடி சோழர் ஆட்சியின்கீழ் வந்து சேர்ந்தது. தொண்டை மண்டலம் மீட்கப் பெற்றதும், கரிகாலன் காலத்துச் சோழர் ஆட்சி உயிர்பெற்று விட்டது என்னலாம். கி. பி. 900-ல் பாண்டிய நாட்டுக்கு அரசனாக வந்த இரண்டாம் இராஜ சிம்மன் சோழர்களுக்கு வெளிப்படையான பகைவன் விரைந்து, சோழர்கள் இவ்வாறு உயர்நிலையை அடைந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. சோழர்கள் எந்த நேரத்திலும் பாண்டியநாட்டைப் படையெடுப்பார்கள் என்பது திட்டமாய்த் தெரிந்து விட்டது. அவ்விதம் நேர்வதற்குள் சோழர்களை மட்டந்தட்டவேண்டும் என்று இராஜ சிம்மன் ஆத்திரப்பட்டான்- அவ்வாறே இரண்டு நாடுகளுக்கும் போர் ஏற்பட்டு, ஆதித்தனின் கடைசி நாள்வரை அப்படியும் இப்படியுமாய் இழுத்துக்கொண்டே வந்தது.

## முதலாம் பராந்தகன் :—

இளமை முதற்கொண்டே சிறந்த போர்த்தலைவனாய் விளங்கிய பராந்தகன் கி. பி. 907-ல், தன் தந்தை ஆதித்தனுக்குப்பின் அரசனானான். அவன் தன் தந்தை பாண்டி நாட்டில் நடத்திய போர்களில் மிகவும் முனைந்து சண்டை செய்தவன் ஆகையால், “மதுரைகொண்ட” என்ற பட்டப்பெயர் அவனுக்கு அப்பொழுதே உண்டு. தான் அரசனான பின்னர், முன்னிலும் மிகுந்த ஊக்கத்துடன் பாண்டியனோடு போர்புரிந்தான். இராஜசிம்மனால் சோழர் படையை எதிர்த்துநிற்க முடியவில்லை. காசியப்பன் என்னும் இலங்கை அரசனை உதவியளிக்குமாறு வேண்டினான். பாண்டிநாடே இலங்கைக்கு முதல் அரண் என்பதை உணர்ந்த இலங்கை மன்னன், யானை குதிரைகள் கொண்ட ஒரு பெரிய படையை உடனே அனுப்பினான். கி. பி. 920-ல் ஒரு போர் நடந்தது. இராஜசிம்மனும் மனத்தைத் தளரவிடாது, சிங்களர்களுடைய உதவியைக்கொண்டு போரில் முனைந்து நின்றான். ஆனால், இருவர் படைகளும் சேர்ந்தும்கூட, அவர்களால் சோழர் படையைத் தடுக்கமுடியவில்லை. கி. பி. 923-ல் வெள்ளூர் என்னும் இடத்தில் மற்றொரு போர் நடந்தது. இலங்கை மன்னன் அனுப்பிய வலிய படையையும் பாண்டியர் படையையும் பராந்தகன் தோற்கடித்து, அவர்களுடைய யானைப் படையையும் மதுரை நகரையும் கைப்பற்றினான் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. தன் பக்கத்துப் படைகள் சிதறியோடவும், இராஜசிம்மன் தனது பொன் முடியையும் மற்றுமுள்ள அரச சின்னங்களையும் எடுத்துக்கொண்டு இலங்கைக்குத் தப்பி ஓடினான். ஆனால் தன் படைகள் முறியுண்ட செய்தி தன் செவிப்படுமுன்னரே காசியப்பன் இறந்துவிட்டான். அவனையடுத்து வந்த தப்புலன் என்னும் அரசன், உள் நாட்டுக் குழப்பங்களால் இராஜசிம்மனுக்கு எந்த உதவியும் செய்யக்கூடவில்லை. தப்புலனிடமிருந்து ஒருவித உதவியும் அடையமுடியாது என்பதைத் தெரிந்த பாண்டியன் தன் பொன் முடியையும் மற்றும் அணிகலன்களையும் சிங்கள அரசன் பொறுப்பில் வைத்துவிட்டுத் தன் அன்னை பிறந்த இடமாகிய சேரநாட்டிற்கு ஓடினான். அங்கும் போய் யாதும் செய்வதற்கில்லாமல், இராஜசிம்மன் தன் விதியை நொந்துகொண்டே வாழ்நாளைக்



கழிக்கவேண்டியதாயிற்று. பாண்டிநாட்டின் பேரரசனாய், மதுரையில் முடி சூடிக்கொள்ள விரும்பிய பராந்தகன், இலங்கையில் வைக்கப்பட்டிருக்கும் பாண்டியன் பொன் முடியையும் மற்றும் அணிகலச் சின்னங்களையும் பெறுவதற்காக நயத்துடன் எவ்வளவோ முயன்று பார்த்தான். ஆனால் தப்புலன் ஒரேயடியாய் மறுத்துவிட்டான். அதன்மேற்கொண்டு பராந்தகன் இலங்கையின்மீது போர் தொடுத்து, கி. பி. 945-ல் மூன்றாம் உதயனுடைய ஆட்சியில், அத்தீவைப் படையெடுத்தான். சோழனை எதிர்க்கும் ஆற்றலற்ற சிங்கள அரசன், தனக்கு முன்னுள்ளோர்கள் செய்ததுபோலவே, தானும் அனுராதபுரத்தைக் கைவிட்டுத் தெற்கு நோக்கி ஓடிவிட்டான். ஆனால், பாண்டியனுடைய அணிகலன்களையும் முடியையும் விட்டுவிடக்கூடாது என்ற உறுதியோடு, ஓடும்பொழுதும் அவற்றைக் கூடவே எடுத்துச் சென்றிருந்தான். ஆதலால் அனுராதபுரத்தைப் பிடித்தும், பராந்தகனின் எண்ணம் நிறைவேறவில்லை. அதற்குள், தக்கிணத்தில் சோழர்படைகள் தோல்வியுற்றுப் பெருங்கேடு நேர்ந்த செய்தியும் கிட்டியது. ஆதலால் பராந்தகன் இலங்கையைப் பிடிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு, சோழநாட்டுக்கு விரையலுற்றான்.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் ஆந்திரப் பேரரசு அழிந்தபின்னர்த் தோன்றிய சாளுக்கியர்களும் மராட்டியர்களும் போன்று, இராஷ்டிரகூடர் என்னும் ஒரு புதிய குலத்தாரும் அப்பொழுது வலுவடைந்து வரலாயினர். அவர்கள் இடைவிடாது போராடி, சாளுக்கியர்களுடைய பலத்தை ஒடுக்கியவர்கள். அப்பொழுது இரட்ட மன்னனாய் இருந்த கன்னர தேவன் (மூன்றாம் கிருஷ்ணன்) சோழர்களின் வளர்ச்சியை மிஞ்சவிடலாகாது என்ற எண்ணங்கொண்டு, பராந்தகன் இலங்கைக்குச் சென்றிருந்தகாலம்பார்த்து சோழ நாட்டைத் தன் முழு வலியுடன் தாக்கினான். அப்பொழுது சோழர்களும் வடக்கே தக்கிணத்தில் தங்கள் பேரரசை விரிவுபடுத்தவேண்டும் என்று முயன்றுகொண்டுதான் இருந்தார்கள். இருவர் படைகளும் தக்கோலம் என்னும் இடத்தில் எதிர்த்தன. அங்கு நடந்த போரில் இரு திறத்தார்களும் வெற்றிகொண்டதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால், சோழர் படைக்குத் தலைமை தாங்கி நின்ற பட்டத்துக்குரிய இளவரசனான இராஜாதித்தன் போரில் அம்புபட்டுச் சிலநாளில் இறந்துவிட்டான். அதைக் கேட்ட இரட்டர்கள் முன்னிலும் மிகுந்த ஊக்கத்துடன் போர் தொடுத்து, சோழ நாட்டினுட் புகுந்து, தலைநகராகிய தஞ்சை வரையில் வந்துவிட்டனர். இவ்வாறு, பராந்தகன் தன் தலைமகனை இழந்ததுமல்லாமல், தன் பேரரசும் போய், தனது நாட்டிலும் ஒரு பகுதியை இழக்க நேர்ந்தது. இவ்விதம் சோழனுக்கு நேர்ந்த தோல்வியை ஒருநல்வாய்ப்பாகக் கொண்டு, பாண்டியரும் சோழத் தலைமையை மதியாது தள்ளிவிட்டனர். சோழனுக்கு அஞ்சி ஒளிந்த சிங்கள மன்னனும் அனுராதபுரத்திற்கு வந்துவிட்டான். ‘மதுரையும் ஈழமும் கொண்ட’ என்ற விருதுப் பெயர் பராந்தகனுக்கு ஏற்பட்டிருந்தும், அவன் சாகும்பொழுது அது வெறும் இடம்பப் பெயராகவே பொலி விழந்து தோன்றியது.

## கண்டராதித்தன், அரிஞ்சயன், இரண்டாம் பராந்தகன், உத்தம சோழன் (கி. பி. 947—985):—

இரட்டர்களால் தோல்வியுற்ற பிறகு கி. பி. 985 வரை, சோழர்களின் நிலைமை வீழ்ச்சியுற்றேயிருந்தது. எஞ்சியிருந்த பராந்தகனின் இரு மக்களான கண்டராதித்தனும் அரிஞ்சயனும் ஒன்றாகச் சோழ நாட்டை ஆண்டுவந்தனர் என்றே சொல்லலாம். அவர்களுக்குப் பிறகு அரிஞ்சயனின் மகனான இரண்டாம் பராந்தகன் அரசனானான். இழக்கப்பட்ட நாடுகளை மீண்டும் கைப்பற்ற வேண்டி, அவன் பாண்டி நாட்டையும் இலங்கையையும் படையெடுத்தான். ஆனால் அது முன்பின் எண்ணாது பதற்றமாய் நடத்திய செயலேயாகும். இலங்கையில் அவன் நடத்திய போரில் நான்காம் மகிந்தன் என்னும் சிங்கள அரசனால் வெல்லப்பட்டான். பாண்டி நாட்டில் அதைவிடப் பெருங்கேடு நேர்ந்தது. அப்பொழுது ஆட்சிபுரிந்த வீரபாண்டியன் என்னும் போர் மன்னன் சோழர்கள் முன்னர் இழைத்துள்ள பழிகளுக்கெல்லாம் இப்பொழுது வஞ்சம் தீர்க்கவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தான். சேவூர் என்னும் இடத்தில் சோழர் படையைத் தாக்கிப் புறங்கண்டு, சோழ மன்னனையும் கொன்றதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு கொல்லப்பட்டவன் இரண்டாம் பராந்தகனேயாவான் என்று இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிறகு உத்தம சோழன் கி. பி. 985 வரை அரசாண்டு வந்தான். அவனைப் பற்றி அதிகம் ஒன்றும் தெரிவதற்கில்லை. அவனும் அவன் தாயார் செம்பியன்மாதேவியாரும் சிறந்த சிவனடியார்கள் என்றும், பல கோயில்களைக் கட்டியும், புதுப்பித்தும் வழிபாடு நடத்தினர் என்றும் அறியலாம்.

## முதலாம் இராஜராஜன் (கி. பி. 985—1012):—

அருண்மொழிவர்மன் என்ற இராஜராஜன் என்னும் நெடியோன் உத்தம சோழனுக்குப்பின் பட்டத்திற்கு வந்தான். ஓர் அரசனுக்குரிய இலக்கணங்கள் எல்லாம் அவனிடம் நன்கு பொருந்தியிருந்தன. அவனுடைய ஆட்சியில் சோழர்கள் பழையபடியும் வீறுகொண்டெழுந்தனர். சோழர் வளர்ச்சியைக் குன்றும்படி வைத்த இரட்டர்களை மேலைச் சாளுக்கியர்கள் அதற்குள் வென்று அடக்கிவிட்டனர். அதனால் இராஜராஜன் முதலில் பாண்டி நாட்டுப் பக்கம் திரும்பினான். ஒரு தமிழ்ப் பேரரசை நிலைநாட்டவேண்டுமானால், முதலில் மூன்று தமிழ் நாடுகளையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவரவேண்டும். அதைத்தான் இராஜராஜன் முதலில் செய்து முடித்தான். அவன் அமரபுயங்கன் என்னும் பாண்டியனை வென்று பாண்டி நாட்டைச் சோழ நாட்டின் ஒரு பகுதியாக்கி அதற்கு இராஜராஜ மண்டலம் அல்லது இராஜராஜப் பாண்டி நாடு என்று பெயர் கொடுத்தான். பிறகு சேர நாட்டைக் கடல் வழியாகவும் தரை வழியாகவும் தாக்கினான். விழிஞம், காந்தளூர்ச்சாலை முதலிய சேரர் அரண்கள் ஒன்றன்பின் ஒன்றாக விழுந்தன. சேர அரசனும் சோழனின் தலைமையை ஏற்றுக் கீழ்ப்படிந்தான்.



வட நாட்டிலும் சோழர்களுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்துக்கொண்டு வந்தது. கீழைச் சாளுக்கிய நாடான வேங்கியைப் பிடித்ததும், இராஜராஜன் கோதாவரியைக் கடந்து கலிங்கத்தின் மேற் சென்றான். அசோகனாலும் வெல்லுதற்கரிதாயிருந்த கலிங்க நாடு இராஜராஜன் காலடியில் எளிதாக வீழ்த்தப்பட்டது. தன் முன்னோர்களைப்போல் விட்டுவிடாமல், இராஜராஜன் தான் வென்றுகொண்ட நாடுகளில் நிலையாகத் தன் ஆட்சி நடந்து வருதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தான். இவையனைத்தையும் தான் பட்டத்திற்குவந்த பதினேழாம் ஆண்டாகிய கி. பி. 1002-க்குள் செய்து முடித்துவிட்டான். கலிங்க நாட்டைக் கைக்கொண்ட பின்னர், அவன் தெற்கு நோக்கி வந்து, இலங்கைமேற் செல்லலுற்றான். அந்த வேளையில் சிங்கள மன்னனான ஐந்தாம் மகிந்தனுக்கும் அவன் படை வீரர்களுக்கும் இடையில் மனக் கசப்பு இருந்து வந்ததால் சிங்களர்கள் தங்களைக் காத்துக்கொள்வதற்கு இயலாத நிலைமையில் இருந்தார்கள் என்று சிங்களச் சரித்திர நூலாசிரியர்கள் கூறுகின்றனர். அதனால் இராஜராஜனுக்கு படையெடுப்பது எளிதா யிருந்தது. முன் இரண்டாம் பராந்தகனைச் சிங்களர்கள் வென்றது உண்மையானாலுங்கூட, முதலாம் பராந்தகன் படையெடுத்த காலத்திருந்தே இலங்கையின் அரசியல் நிலையானது சீர்கேட்டைந்து கொண்டே வந்தது. அதற்குமுன் பல நூற்றாண்டுகளாக, சிங்களப் படையானது கூலிக்குப் பிடித்த ஆட்களாகவே அமைந்திருந்தது. அவர்களும், முக்கியமாய், தமிழர்களாகவே இருந்தனர். ஆதலால் இவ்வாறு சிங்களர்களிடத்தில் வேலைக்கமர்ந்த படைவீரர்கள் அடிக்கடி இலங்கையின் அரசியற் காரியங்களைத் தாங்களே கைக்கொண்டு நடத்தும்படியான நிலைமை ஏற்பட்டு வந்தது.

இவ்வித குறையோடு மட்டுமன்றி, சிங்களர்களுக்கு மற்றொரு பெரிய இடையூறு ஏற்பட்டது. இலங்கையின் வடபகுதியில் நாளாவட்டத்தில் தமிழர்களாய்ச்சென்று நிறைந்துவிட்டார்கள். அவ்விதம் சென்று தங்குதலுற்ற தமிழர்கள், சிங்களர்களோடு கலந்து ஒன்றாகாமல், குறுகிய கடலுக்கு மேற்கேயுள்ள தங்கள் இனத்தவர்களோடு உறவுகொண்டாடிக் கொண்டே வந்தனர். இலங்கையின் வடமுனைப் பகுதியையும், தாய்நாட்டில் ஒரு சிறு பகுதியையும் சேர்த்து, தமிழ்மக்களைச் சேர்ந்த நாகர் கூட்டத்து மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். முதலாம் பராந்தகனுடைய படையெடுப்பிற்குப் பின்னர், அனுராதபுரத்துக்கு வடக்கேயுள்ள பகுதி சிங்களர் கையினின்றும் நீங்கி விட்டது. ஒரு சில வேளைகளில் சிங்கள மன்னனாய் இருப்பவன் வலியுள்ளவனாய் இருந்தால் அவன் ஆட்சி வடபகுதியிலும் செல்லக் கூடியதாயிருந்தது. தாய் நாட்டிலிருந்து படையெடுப்புகள் நேர்ந்த போதெல்லாம், இலங்கைத் தமிழர்கள் தங்கள் இனத்தவர்களுக்கே உதவி செய்வது வழக்கம். இதனால் சிங்களர்களின் எதிர்த்துப் போரிடுந்திறன் நலிவுற்றே வந்தது.

இராஜராஜன் காலத்தவனான ஐந்தாம் மகிந்தனும் அவனுக்குமுன் ஆண்ட அவன் தமையனான ஐந்தாம் சேனனும், தங்களுடைய தமிழ்ப் படைகள் செய்த கலகத்தினால் உயிர் பிழைத்தற்கஞ்சித் தெற்கு நோக்கி ஓடினர். சிங்கள அரசர்கள் அவர்களுக்குச் சரியாகக் கூலிகொடுக்க முடியாததாலும், சோழர்களுடைய படையெடுப்பைத் தடுக்க மனமில்லாததாலும், அவ்விதம் அவர்கள் கலகம் செய்ததாகக் கூறப்படுகிறது. ஐந்தாம் சேனன் தமிழர்களுடைய செல்வாக்கு மிகுந்திருந்த அனுராதபுரத்திலிருந்து ஆளமுடியாமையால், அத்தலைநகரையும் அதன் வடபகுதியையும் தமிழர்கள் கையில் விட்டுவிட்டு ஓடிப்போய், பொலன்னறுவா என்னும் இடத்தைத் தலைநகராக்கிக் கொண்டான். அவனுக்குப் பின்வந்த ஐந்தாம் மகிந்தன் பழைய தலைநகருக்குத் திரும்பிவந்து பார்த்தான். ஆனால், தமிழ்ப் படைகள் கலகமிட்டுக் கிளம்பவும் தான் ஒன்றும் செய்ய முடியாத நிலையில், தெற்கேயே தப்பிப்பிழைத்து ஓடினான். இவ்வாறு கூலிக்கு அமர்த்தப்பட்ட தமிழ்ப் படைகள் அடிக்கடி கலகம் செய்ததாலும், அதன் விளைவாகச் சிங்களர்களின் அரசியல் நிலைகுலைந்ததாலும், இலங்கையில் சோழர்களின் படைகளுக்கு வழிதிறந்துவிட்டது போலிருந்தது.

கி. பி. 1002-ல் இராஜராஜன் அத்தீவைப் படையெடுத்தபொழுது அவனுக்கு எதிர்ப்பே இல்லை என்று சொல்லலாம். அவன் பொலன்னறுவா என்னும் புதிய தலைநகரையும் கைப்பற்றி இலங்கையில் தன் ஆட்சியை நிலைபெறச் செய்துவிட்டு, அங்கிருந்து மேற்கு நோக்கிக் கப்பலிற் சென்று முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் என்று குறிக்கப்பட்ட மால்டைவ்ஸ் என்னும் தீவுகளையும் இலக்கத் தீவுகள் என்னப்படும் இலக்கடைவ்ஸ் என்னும் தீவுகளையும் வென்று கைக்கொண்டான். சிங்கள சரித்திர நூலாசிரியர்கள், சோழர்கள் இலங்கையைக் கைப்பற்றின செய்தியை, ஐந்தாம் மகிந்தன் பிடிபட்டுச் சோழ நாட்டிற்குச் சென்ற கி. பி. 1017 என்று சொல்வர். ஆனால் அந்த நிகழ்ச்சிக்கு நெடுநாள் முன்னரே 1002-ல் இராஜராஜன் பொலன்னறுவாவைப் பிடித்துத் தன் ஆட்சியை நிறுவியுள்ளான். இலங்கையில் சில ஊர்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தைத் தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இவன் மானியம் விட்ட செய்தி கல்வெட்டுகளிற் காணப்படுகின்றது.

பல்லவர்கள் காலத்திலிருந்தே தமிழ்அரசர்கள் தங்கள் செல்வத்தை ஏராளமாய்ச் செலவிட்டு அழகிய பெரிய கற்கோயில்களும் உயர்ந்த கோபுரங்களும்கட்டி, அவற்றில் சிற்பமும் ஓவியமும் சிறந்து விளங்கும்படி கலைநுட்பம் அமைந்த வேலைப்பாடுகளை எழில்பெறத் தீட்டி அமைத்துள்ளார்கள். அதனால் தமிழ் மக்கள் உலகத்திலேயே கோயில் கட்டுவதில் மிகச் சிறந்த மக்கள் என்னும் புகழ் பெற்றுள்ளனர். இத்தகைய கோயில்களைத் தென் இந்தியாவில், இராமேச்சுரம், மதுரை, காஞ்சிபுரம், திருவரங்கம் போன்ற பல இடங்களில் இன்றும் காணலாம். அவை, பத்திச் செல்வர்களாய்த் தொடர்ந்துவந்த அரசர்களால் மாற்றியும்,



புதுப்பித்தும், அமைக்கப்பட்டுள்ளன. பழங்காலத்துப் பாண்டியர்கள் இலக்கியத்திலேயே விருப்பம் செலுத்தினார்கள். பல்லவர்கள் கட்டிடங்கள் அமைப்பதிலேயே கருத்தைச் செலுத்தினார்கள். ஆனால், தஞ்சைச் சோழ மன்னர்கள் அவ்விரண்டிலும் ஈடுபட்டவர்கள். இராஜராஜனால் கட்டப்பட்ட பெரிய கோயில் இப்பொழுது சிறிது பாழடைந்து தன் பழைய ஒளியையும் இழந்து நிற்கின்ற நிலையிலும்கூட, சிற்பக் கலையின் சிகரம் எனப் பொலிவெய்திப் புகழ்மணம் கமழ நிற்கும். அடுக்கடுக்காகக் கற்களை இழைத்துக் கட்டப்பட்ட 216 அடி உயரமுள்ள அதன் விமானம் கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது. அவ்விமானத்தின் உச்சியில் 80 டன் நிறையுள்ள ஒரேகல்லிலே கும்பம் இழைத்துக் கவிக்கப்பட்டுள்ளது. இயந்திரக் கலைகள் வளர்ந்தோங்கியுள்ள இக்காலத்திலுங்கூட அத்தகையதொரு கனமான கல்லை அவ்வளவு உயரத்திற்குக் கொண்டு செல்வது ஓர் அருமை வாய்ந்த செயலாகவே கருதப்படும் என்றால், அக்காலத்தில் இது செய்யப்பட்டது வியப்பினும் வியப்பேயாகும். இராஜராஜன் காலத்திற் செய்யப்பட்ட வெண்கலச் சிலைகள்கூட, இந்தியச் சிலைகளுள்ளே மிகச் சிறந்தனவாக மதிக்கப்படுகின்றன. தமிழர்கள் முன்னாளில் சிற்பக் கலையிலும் கட்டிட வேலையிலும் சிறந்த அறிவாளிகளாயிருந்ததுமட்டுமல்லாமல், ஓவியக் கலையிலும் உயர்ந்து விளங்கினார்கள். அவர்களுடைய சித்திரத்திறனின் மேம்பாட்டைத் தஞ்சைக் கோயிலினுள்ளேயே நாம் கண்டு மகிழலாம். இலங்கையை வென்றபிறகு இராஜராஜன் கி. பி. 1003-ல் இந்தப் பெரிய கோயிலைக் கட்டத்தொடங்கி, 1007-ம் ஆண்டுக்குள்ளாகவே அதை முடித்துவிட்டான் என நம்பலாம். ஏனெனில், அவன் மேலைச் சாளுக்கியர்களை முறியடித்து, அவ்வெற்றியைக் கொண்டாடிய பொழுது இக்கோயிலுக்குக் கணக்கற்ற நிதித்திரளைத் தானம் செய்ததாகக் கல்வெட்டுகளிற் கூறப்படுகிறது. தக்கிணத்திற் பெரும் பகுதியை ஆண்டுகொண்டிருந்த மேலைச் சாளுக்கியர்மீது தொடுத்த போரானது அவனது ஆட்சியின் 22-வது ஆண்டாகிய கி. பி. 1007-ல் வெற்றிகரமாய் முடிவெய்தியது. சாளுக்கியர்களுடைய தோல்விக்குப்பின்னர், தக்கிணம் அடங்கலும் உள்ளிட்டு விந்திய மலையிலிருந்து இலங்கை முடிய ஒரு திராவிட மன்னனுடைய ஆட்சியின் கீழே வந்தது, இராவணனுக்குப்பின், இதுவே முதல் முறை என்று சொல்லலாம். இந்துக் கோயில்களுக்குத் தனது செல்வத்தை வாரி வழங்கினதோடு அமையாது, இராஜராஜன் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்த விகாரம் கட்டி அதற்கு நிறைய மானியங்களும் ஏற்படுத்தினான். அக்காலத்தில் மலேயா நாட்டிலிருந்து வந்து நாகப்பட்டினத்தில் தங்கிய புத்தமதத்தினர்கள் வழிபாடு நடத்துவதற்காக ஒரு விகாரம் கட்டி அமைக்க வேண்டுமென்று மலேயாவிலுள்ள கெடா என்னும் இடத்தில் ஆண்டுவந்த சூளாமணிவர்மன் என்னும் மன்னனின் வேண்டுகோளின்படி இராஜராஜன் அதைக் கட்டினான். இதிலிருந்து தமிழர்கள் இந்தியாவிற்கு அப்பாலுள்ள கீழக்கரை நாடுகளோடும் தொடர்பு கொண்டிருந்த செய்தி புலனாகும். மலாய் நாட்டிற் பல இடங்களிலும் காணப்படும் கல்வெட்டிலிருந்து தமிழ் வணிகர்

கள் ஏராளமாய் அங்குக் குடியிருந்துவந்ததாகவும் தெரிகிறது. சாளுக்கியர்களை வென்றபிறகு, இராஜராஜன் தனது திறனுடைய மகனாகிய இராஜேந்திரன் கையில் அரசாட்சியை ஒப்புவித்து, தானிருக்கும்பொழுதே, கி. பி. 1012-ல் முடிசூட்டு விழாவும் நடத்திவைத்தான்.

## முதலாம் இராஜேந்திரன் (கி. பி. 1012—1042):—

இராஜேந்திரன் மிகப் புகழ்வாய்ந்த பெரும் வீரன். இராஜராஜனின் வெற்றிக்கும் புகழுக்கும் காரணமாயிருந்த போர்களிற் பலவற்றையும் அவனது சிறந்த மகனான இராஜேந்திரனே திட்டங்கள் போட்டு எடுத்து நடத்தினதாகக் கருதப்படும். தனது ஆட்சியின் ஆறாவது ஆண்டான 1017-ல் தென் இலங்கையிலுள்ள மலைகளிலும் கழிகளிலும் மறைந்துகொண்டு சிறு சண்டைகளும் உட்பூசல்களும் விளைத்துவந்த சிங்களர்களை ஒழிப்பதற்காக, இராஜேந்திரன் கடலைக் கடந்து இலங்கைக்குச் சென்றான். அந்தப் போரில் எல்லாவிதமான எதிர்ப்புக்களையும் தொலைத்துக் கடைசியாக ஐந்தாம் மகிந்தனைச் சிறைப்படுத்தி, இலங்கைக்குப் பெருங் கேட்டையும் தொல்லையையும் விளைப்பதற்குக்காரணமாய் இருந்த பாண்டியனது பொன் முடியையும் மற்றுமுள்ள அரச சின்னங்களையும் கைப்பற்றினான். பிறகு இராஜேந்திரன் பொலன்னருவா என்ற பெயரை ஜனநாதபுரம் என்று மாற்றி, இலங்கைத்தீவினைச் சோழர் பேரரசில் ஒரு மண்டலமாகச் செய்துவிட்டான்.

சோழர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தும் அடிக்கடி இடையூறுகள் செய்ய முயன்ற பாண்டிய மன்னனைத் துரத்திவிட்டு, இராஜேந்திரன் பாண்டி நாட்டையும் சோழர்களின் நேரான ஆளுகைக்கு உட்படுத்தினான். பாண்டி நாட்டில் மேலும் இடைஞ்சல்கள் ஏற்படாதிருக்க வேண்டி, தனது மகனுக்குச் சோழ பாண்டியன் என்னும் பட்டம் கொடுத்து அங்குத் தனக்குப் பதிலாக இருந்து ஆளும்படி செய்து அவன் உறைவதற்காக, பூமியும் நெளியும்விதத்தில் பெரியதோர் அரண்மனையை மதுரையில் கட்டுவித்தான். இச்செய்தி கல்வெட்டுகளால் அறியப்படும். ஆனால் அம்மாளிகை இருந்த இடம்கூட இப்பொழுது கண்டுபிடிப்பதற்கில்லை.

இவ்வாறு தன் தந்தையிடமிருந்து தாயகமாகப் பெற்ற பேரரசை வலியுறும்படி ஒழுங்குபடுத்தியபின்னர், தனது ஆட்சியின் பத்தாவது ஆண்டில் (கி. பி. 1021) மேலும் போர்கள்செய்து மண் கொள்ளக் கிளம்பினான். கலிங்கத்திலிருந்தபடியே ஒரிஸ்ஸாவை வளைத்துப்பிடித்துப் பின்னர் கன்னோசி (ஐக்கியமாகாணம்) வரையில் தன் ஆட்சியைச் செலுத்திவந்த வங்காள அரசனான பாலா என்பவனைத் தோற்கடித்தான். அதனால் ஆரியாவர்த்தத்தின் அப்பகுதிவரையும் சோழர் ஆட்சியின் கீழ்வந்தது. அந்தச் சமயத்தில் ஆரியாவர்த்தமே மோசமான நிலையில் இருந்துவந்தது. கி. பி. 1000-ல் இருந்து 1030-க்குள் அப்கானிஸ்தானத்தின் அரசனான மகம்மது என்பவன் ஆரியாவர்த்தத்தின் மேலைப்பகுதியைக் குறைந்தது பதினேழு முறை படையெடுத்தான்; சுமார் 1005-ல்



ஜீலம் நதிக்கரை வரையில் படையெடுத்து வந்தான்; 1008-ல் பஞ்சாபை வென்றான்; 1018-ல் மதுரா, கன்னோசி என்ற நகரங்களைப் பாழ்படுத்தினான்.

இதனால், இந்தியாவை முஸ்லீம்கள் தாக்கலுற்ற அதே வேளையில்தான் சோழர் படையும் வட இந்தியாவிலுள்ள வங்காளத்தையும் மற்றும் சில இடங்களையும் படையெடுக்கலுற்றது என்பது தெரியவரும். சோழர்களின் பேரரசு அழியும் காலம் வரையும், முஸ்லீம்கள் வங்காளத்தை எட்டியும் பாராது, பஞ்சாப் சிந்து முதலிய மேலைப் பகுதிகளோடு நின்று கொண்டனர். சோழர்கள் இந்துக்களாய் இருந்தாலுங்கூட, இந்து மதத்தினர்கள் எல்லாரும் ஒரே கூட்டம் என்ற உணர்ச்சி அக்காலத்தில் ஏற்படவில்லை. ஆதலால் வட நாட்டு இந்து அரசர்கள் முஸ்லீம் படைகளோடு போர் புரிந்தகாலத்தில் அவர்களுக்கு உதவியாகத் தமிழ் மக்கள் செல்லவில்லை. அதற்கு மாறாக, முஸ்லீம்கள் எவ்வாறு பகைவராக இருந்தனரோ, அவ்வாறே தமிழர்களும் ஆரியரிடத்தில் பகைமை பாராட்டி வந்தனர். இராஜேந்திரனது ஆட்சியின் பன்னிரண்டாவது ஆண்டில் (கி. பி. 1023) பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் அவன் மதுரா மண்டலத்தை வென்று கொண்டதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. சிலர் இது பாண்டிநாட்டைக் கைக்கொண்ட செய்தியையே குறிப்பதாகக் கருதுவர். பாண்டி நாடு இராஜராஜன் காலத்திலேயே வெல்லப்பட்டதும், இராஜேந்திரன் தனதுஆட்சியின் பத்தாவது ஆண்டில் பாண்டி மன்னனைத் துரத்திவிட்டுத் தன் மகனை அங்குப் பிரதிநிதியாக இருத்தியதும் நமக்குத் தெரியும். அதற்குப் பின்னர் அங்குச் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு, அவை அடக்கப்பட்டிருந்தாற்கூட, அதை ஒரு பெரிய வெற்றியாகக் கொண்டு இத்தகைய கல்வெட்டில் குறித்துவைக்க வேண்டியதில்லை. மேலும், பாண்டி நாட்டை இராஜராஜப் பாண்டி நாடு என்று வழங்கினரேயன்றி, மதுரா மண்டலம் என்று வழங்கினதில்லை, தன் தந்தையிடம் பெற்ற பேரரசில், தன் நிலையை நன்கு வலிபெறச் செய்துகொண்டு, இராஜேந்திரன் தன் ஆட்சியின் பத்தாவது ஆண்டில் வட இந்தியாவின் மேல் படையெடுத்துச் சென்றான் என்பதும் திட்டமாய் விளங்குகிறது. ஆதலால் தனது ஆட்சியின் பன்னிரண்டாவது ஆண்டில் வடக்கே ஏதாவது ஓரிடத்தில் அவன் போர் நடத்திக்கொண்டிருந்திருக்க வேண்டும். இத்தகைய காரணங்களைக்கொண்டு, உயர்ந்த கல்வியும் சிறந்த அறிவும் படைத்த ஹூல்ஷ் என்னும் ஆசிரியர், வட இந்தியாவில் யமுனை நதிக்கரையிலுள்ள மதுரா என்னும் நகரைச் சூழ்ந்துள்ள இடமே மதுரா மண்டலம் என்று குறிக்கப்பட்டிருப்பதாக முடிவு செய்துள்ளார். இராஜேந்திரன் அந்தப் பகுதியைப் படையெடுத்து வெல்வதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே முஸ்லீம் படைகள் அதைப் பாழ்படுத்தியிருந்தனர். அதனால் இராஜேந்திரன் அந்த நாட்டை வெல்வது எளிதாகவேயிருந்திருக்க வேண்டும்.

வட இந்தியாவில் வெற்றி சூடித் திரும்பியதும், இராஜேந்திரன் ஒரு புதிய தலைநகரைக் கட்டி, தான் கங்கைக் கரைவரையிலுள்ள நாடுகளைக் கைக்கொண்டதன் நினைவுக்குறியாக, அதற்குக் கங்கைகொண்ட சோழபுரம் என்று பெயர் கொடுத்தான். அந்நகரானது இந்நாளில் பாழ்பட்டு, அவன் கட்டிய கோயில் மட்டும் இப்பொழுது அங்கு நிற்கிறது. இப்பேரரசனாகிய சோழன் தான் தோற்கடித்த வடநாட்டு மன்னர்களைத் தன் தலைநகருக்குக் கங்கையிலிருந்து தண்ணீர் கொண்டுவரும்படி செய்து அதை ஒரு கிணற்றில் நிரப்புவித்தான். அந்தக் கிணற்றை இன்றும் காணலாம். சோழர்கள் இவ்வாறு நிலமிசை தங்கள் வீரம் நிலவ வெல்லற்கரியராய் விளங்கியதன்றி, கடலின் மிசையும் கலங்கள் செலுத்தித் தமது வெற்றிப் புலிக்கொடியை விரித்துயர்த்தினர். இராஜேந்திரன் காலத்தில் சோழர்கள் வசமிருந்ததுபோல், அவ்வளவு பெரிய கடற்படை வேறு எந்த இந்திய மன்னனுக்கும் அப்பொழுது இருந்ததில்லை. மங்களாபுரத்திலிருந்து வங்காளம் வரையுமுள்ள கடற்கரைப்பகுதி தமிழர்களுக்குச் சேர்ந்திருந்தது. மிகப் பழங்காலத்திருந்தே திராவிட மக்கள் நடுக்கடலிலும் நாவாய் ஓட்டி நடுங்கா நலமெய்தினர் என்பது நமக்குத் தெரியும். ஆதலால் இந்தியாவின் கடற்கரையளவில் முக்காற் பகுதியைத் தம் கையிற்கொண்டு, வலிய கப்பற் படைகளை அமைத்துக் கடலிலும் வலிபுடைத்து அயல் நாடுகளெல்லாம் அஞ்சும்படி தமிழர் வாழ்ந்தது ஓர் அதிசயமாகாது.

சேர்ழ நாட்டிற்கும் கெடா நாட்டிற்கும் எப்பொழுது எக்காரணம் பற்றிப் போர்மூண்டது என்பது தெரியவில்லை. சூளாமணிவர்மனின் மகனான மாறவிஜயோத்துங்கன் சோழர்களுக்கு நண்பனாகவே இருந்துவந்தான். ஆனால் இராஜேந்திரன், மாறவிஜயோத்துங்கனின் மகனான சங்கராம விஜயோத்துங்கனை வென்று, கீழைப் பர்மாவிலுள்ள மாப்பப்பாளம் என்ற இடத்திலிருந்து தென்சுமாத்திராவில் ஸ்ரீவிஜயம் (பாலம்பாங்கு)வரையுள்ள நகரங்களையும் துறைமுகங்களையும் பிடித்துத் தன் ஆட்சிக்குட்படுத்தினதாகக் கல்வெட்டுகளிலும் சில நூல்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. மலேயா நாட்டைச்சேர்ந்த மானக்கவாரம்(நிக்கோபார்) போன்ற பல தீவுகளும் சோழர் ஆட்சியினுள்ளாக்கப்பட்டன. ஸ்ரீவிஜயம் என்பது சுமாத்திரா, சாவகம், மற்றும் பல தீவுகளும் நாடுகளும் கொண்டு, இந்தியாவிற்கு அக்கரைப் பகுதியிலே விளங்கிய ஒருபேரரசு என்று சீனக்குறிப்புகளில்எழுதப்பட்டுள்ளது. அதன் தலைநகராகிய ஸ்ரீவிஜயத்தைச் சோழர்கள் பிடித்துக்கொண்டதால் கிழக்கு இந்தியத்தீவுகள் முழுதும் அவர்கள் கைவசமாயின. வென்று கொள்ளப்பட்ட நாடு, ஊர், இவற்றின் பெயர்கள் எல்லாம் தமிழ்ப்படுத்தப்பட்டிருப்பதால், நாம் அந்தப் பெயர்கள் எந்த இடத்தைக் குறிக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள முடியாவிடினும், இந்தியாவிற்கு அக்கரையிலுள்ள முக்கியமான நாடுகளையெல்லாம் இராஜேந்திரன் தமிழர் ஆட்சிக்கு உட்படுத்தினான் என்பதில் யாதோர் ஐயமுமில்லை.



இராஜராஜன், இராஜேந்திரன், இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் வட இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டிற்குப் பார்ப்பனர்கள் ஏராளமாய் வந்து சேர்ந்தனர். எந்தெந்தக் காலத்தில் எந்த அரசனின் கை மேலோங்குகிறதோ அந்த அரசனின் துணையையும் அருளையும் நாடுவதிலேயே நாட்டம் வைக்கும் ஆரியப் பார்ப்பனர்கள் பெருமை படைத்த சோழ நாட்டிற் சென்று குடியேறுவதிற் சிறிதும் பின்வாங்கவில்லை.

சோழ மன்னர்களும் பல்லவர்களைப் பின்பற்றி, சமஸ்கிருதக் கல்விக்கு ஆதரவு அளித்தனர்.

ஆரியர்களுடைய தொன்மை வாய்ந்த அவ்வடமொழியானது இந்துக்களுடைய சமய மொழியாகிவிட்டது. சோழ நாட்டிற்கும் அதற்குக் கீழ் அகப்பட்ட வடக்கேயுள்ள நாடுகளுக்கும் இடையே எழுத்துப் பேச்சுகள் யாவும் சமஸ்கிருதத்திலேயே நடந்து வந்திருக்கவேண்டும். அதனால் சமஸ்கிருதக் கல்விக்கு அந்நாளில் பெருமதிப்பு இருந்துவந்தது. தமக்குரிய தமிழை விடுத்து வடமொழிக்கு அவ்வளவு உயர்வு காட்டுதல் தகாது என்று தாய் அரசியார்கூட தம் மகனான இராஜராஜனைக் கண்டிக்க வேண்டியதாயிருந்தது.

சோழ மன்னர் தம் நாட்டில் பயிர்த்தொழில் வளர்ச்சிக்கு வேண்டுவனவற்றையும் விடாது செய்தனர். நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய குளங்களையும் கால்வாய்களையும் வெட்டுவித்தனர். அணைகள் பல கட்டுவித்தனர். இப்பொழுது பாழ்பட்டுக் கிடக்கும் பொன்னேரியில் அந்நாளிற் கட்டப்பட்ட பதினாறு மைல் நீளமுள்ள பெரிய கரையானது இப்பொழுது நடக்கும் பாட்டையாக விடப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களுடைய தொன்மைப் புகழானது இராஜேந்திரனுடைய ஆட்சிக்காலத்தில் தன் உச்ச நிலையை அடைந்து விளங்கியதென்று சொல்லலாம். அவனை அடுத்து வந்த சோழ அரசர்கள் இடையிடையே தோன்றிய கலகங்களையும் குழப்பங்களையும் அடக்கி, விரிந்து கிடந்த தங்கள் பேரரசாட்சியைச் சிதையாது வைத்திருக்க வேண்டியதைத்தவிர அவர்கள் செய்யவேண்டியதாக யாதொன்றும் இல்லை.

## இராஜாதிராஜன் (கி. பி. 1042—1052):—

இராஜேந்திரன் மகன் இராஜாதிராஜன் அரியணையேறியதும், நாட்டிற் பலஇடங்களிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. அவன் சேரர்களோடும் பாண்டியர்களோடும் பல போர்கள் நடத்தித் தன் பேரரசாட்சியை நிலைபெறுத்தும்படியாகிவிட்டது. அவன் மானாபரணன் என்னும் பாண்டியனையும் வீரகேரளனையும் வென்று கொன்றதாகக் கூறிக்கொள்கிறான். பாண்டி நாட்டிலிருந்து சுந்தரபாண்டியன் என்பவனைத் துரத்தினான். இலங்கையிற்கூட கலகங்கள் நடந்ததால், கிளர்ச்சி செய்த சிங்களர்களை அடக்குவதற்காக இராஜாதிராஜன் அத்தீவிற்குப் போகவேண்டி நேர்ந்தது. இலங்கையின் தெற்கு மூலைகளிற் சிலர் சிங்களப் பட்டத்

திற்கு உரிமை கொண்டாடி, சோழர் ஆட்சிக்கு எதிர்ப்புக் கிளர்ச்சிகள் செய்துகொண்டு வந்தனர். அத்தகையோர் நால்வரைக் குறித்து இராஜாதி ராஜன் தனது கல்வெட்டிற் கூறியுள்ளான். அவர்களிற் பாண்டிய இளவரசன் ஒருவன்; தொலையிலுள்ள கன்னோசியிலிருந்து ஓடிவந்தவன் மற்றொருவன். ஐந்தாம் மகிந்தனின் மகனான விக்கிரமபாகு என்னும் கலகத்தின் முக்கிய தலைவனையும் அவனைச் சேர்ந்தோரையும் இராஜாதிராஜன் போரில் வென்று கொல்லுவித்தான். அங்கிருந்து இராஜாதிராஜன் சோழநாடு திரும்பியதும், மேலைச் சாளுக்கியர்கள் படையெடுத்து வருகிறார்கள் என்ற செய்தி கிட்டியது. அவர்களோடு நடந்த போரில் இராஜாதி ராஜன் தனது இள வயதிலேயே உயிர் துறக்கும்படி நேர்ந்தது.

## இரண்டாம் இராஜேந்திரன் (கி. பி. 1052—1064) :—

பிறகு அவனது தம்பி இரண்டாம் இராஜேந்திரன் பட்டத்திற்கு வந்தான். இவன் தன் தமையனோடு கூடவே இருந்தவனாகையால், அவன் ஆட்சியில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. சாளுக்கியர்களோடு விடாமல் போர் நடந்துகொண்டேயிருந்தது. சாளுக்கியர்களும் ஓய்வுகொடாமல் போரை நடத்திவந்ததால், சோழர்களின் பேரரசாட்சி தளர்ச்சிக் குறிகளைக் காட்டத்தொடங்கியது. இலங்கையில் புதுக் குழப்பங்கள் உண்டாயின. கி. பி. 1052-ல் இராஜாதிராஜன் இறந்ததும், உலோகீஸ்வரன் என்னும் சிங்களன் தெற்கே கலகமிட்டுக் கிளம்பி, கதிர்காமம் என்னும் இடத்தைப் பிடித்துக்கொண்டான். மற்றொரு பக்கம், அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாகக் கருதப்பட்ட கீர்த்தி என்பவன் இலங்கைக்கு நடுவிலுள்ள மலைப்பகுதிகளில் வாழ்ந்த சிங்களர்களைத் திரட்டிக்கொண்டு கிளம்பினான். கீர்த்தி என்பவனுக்குப் பக்கவுதவி அதிகம் இருந்ததால் அவன், தெற்கே உலோகீஸ்வரனுக்குப்பின் வந்த காசியப்பன் என்பவனைத் தோற்கடித்து, அங்கேயிருந்த கலகக்காரர்களையும் தன்னோடு சேர்த்துக்கொண்டான். பின்னர், அவன் விஜயபாகு என்னும் பெயரைத் தாங்கி, தானே சிங்கள அரியணை ஏறுவதற்குத் தாய்முறைப்படி உரிமையுடையவன் என்று கூறி, சோழர்களோடு போர் தொடங்கலானான்.

இந்தக் குழப்பங்கள் எல்லாம் சோழர் படைகள் உள்ளே நுழைந்து பிடித்து அடக்கமுடியாத எட்டியுள்ள தொலைவிடங்களுக்குள்ளேயே நடந்துகொண்டிருந்தன. சில வேளைகளில் நல்ல படைக்கருவிகளுடன் ஒரு பலத்த சேனை இக்குழப்பங்களை அடக்குவதற்காக வரும். ஆனால், அப்படி வரும் வேளையில் குழப்பக்காரர்கள் மலைகளில் ஓடி மறைந்துகொண்டு போர் நடவாதபடி செய்துவிடுவர். இம்முறையையே விஜயபாகுவும் கைக்கொண்டான். அவனை அடக்குவதற்காகச் சோழர் படை வந்ததும், அவனும் அவன் கூட்டத்தாரும் மலைகளிற் சென்று மறைந்துகொண்டனர். மீண்டும் சோழர் படை பொலன்னறுவாவுக்குத் திரும்பியது பார்த்து, அவன் தெற்கே சென்று தம்பல



காம் என்னும் தொலைவான இடத்தில் தங்கியிருந்தான். அவனை விடாது பற்றுவதற்காக சோழர் படை அங்கு வந்து தேடவும் அவன் கிழக்குப் பக்கமாய் திஸ்ஸமஹாராமாவுக்கு அப்பால் ஓடி ஒரு கற்கோட்டையில் ஒழிந்துகொண்டான். இவ்விதம், இயற்கையரண் சூழ்ந்த காவலில் இருந்துகொண்டு சிறிது வெற்றி அடையவும், மனம் துணிந்து வெளியேறிச் சென்று போர் செய்யலானான். ஆனால் அங்கு அவன் பக்கம் படுதோல்வி உண்டாகவும், மீண்டும் வாகிரிகல் என்னும் கற்கோட்டையிற் சென்று மறைந்துகொண்டு, வேறு நல்ல வாய்ப்பு எப்பொழுது கிட்டும் என்று பார்த்திருந்தான்.

## வீர ராஜேந்திரன் (கி. பி. 1064—1067) :—

கி. பி. *1064*-ல் இரண்டாம் இராஜேந்திரன் தவறியவுடன், அவன் தம்பி வீர ராஜேந்திரன் பட்டம் எய்தினான். அவன் சாளுக்கியர் போரை எப்படியாவது முடித்துவிடவேண்டும் என்ற உறுதி கொண்டான். சாளுக்கிய மன்னனின் இரண்டாம் மகனான விக்கிரமாதித்தன் தலைமையில் வந்த சாளுக்கியர் படையைக் கூடல்சங்கமம் என்னும் இடத்தில் முறியடித்தான். இவ்வாறு மேலைச் சாளுக்கியர்கள் முன்போல ஒடுக்கப்பட்டனர். பின்னர் மங்கலமாக, வீர ராஜேந்திரன், தோல்வியடைந்த இளவரசனான விக்கிரமாதித்தனுக்குத் தன் மகளை மணம் செய்து கொடுத்து, சோழர் பேரரசின் ஒரு மாகாணத்திற்கு அவனை பிரதிநிதியாக நியமித்தான்.

அந்தச் சமயத்தில் வேங்கி நாட்டில் பரகேசரி இரார்ஜேந்திர சோழதேவன் என்னும் அரசிளங் குமரன் ஒருவன் இருந்தான். அவன் சோழர்களுக்கு வேண்டியவனாக இருந்தபோதிலும், ஏதோ ஒரு காரணத்தால் வீர ராஜேந்திரன் அவனை அரசினின்றும் நீக்கிவிட்டான். இவ்வாறு நீக்கப்பட்ட இளவரசன் முதலாம் இராஜேந்திரனின் மகள் **அம்மாங்கி தேவியார்** மகன். வேங்கி நாட்டரசனான கீழைச் சாளுக்கியன் அவனது தந்தை. அவன் வீர ராஜேந்திரன் *1069* ல் இறந்ததும் விக்கிரமாதித்தனின் தமையனான இரண்டாம் சோமேசுவரன் என்னும் மேலைச் சாளுக்கிய அரசனின் உதவியைக்கொண்டு சோழர் அரியணைக்கு உரிமைகொண்டாடிக் கிளம்பினான். அப்பொழுது பட்டத்து இளவரசனாயிருந்த அதிராஜேந்திரன் அப்பதவிக்குப் பொருத்தமில்லாத மெல்லியோனாகையால், சில முக்கிய தலைவர்கள் **அம்மாங்கி தேவியார்** மகனுக்கே சார்பாய் இருந்தனர். ஆனால் விக்கிரமாதித்தன் தன் மைத்துனன் அதிராஜேந்திரனுக்கே சார்பாய் இருந்து *1069* ல் பட்டமும் சூட்டிவைத்தான். சோழநாடு இரண்டு பிளவுபட்டு, இரு திறத்தார்களுக்குள்ளும் உட்கலாம் தோன்றி விட்டது. சோழர் தலைமையை வீசியெறியக் காத்துக்கொண்டிருந்த மேலைச் சாளுக்கிய மன்னன், பரகேசரிக்குத் தீவிரமாய் உதவி புரிந்துவந்தான். இவ்விதம் நடந்த உட்போரில், உயர் நிலையெய்தத் தவித்துக் கொண்டிருந்த பரகேசரி கையால் அதி ராஜேந்திரன் தோல்வியுற்று உயிர் துறக்க நேர்ந்தது. *1070*-ல் வெற்றி கொண்ட **பரகேசரி முத**

லாம் குலோத்துங்கன் என்ற பெயருடன் சோழ நாட்டுக்கு அரசனாக முடி சூடிக்கொண்டான்.

விக்கிரமாதித்தனுக்குக் குலோத்துங்கனின் கீழ் சோழர் பேரரசின் பிரதிநிதியாய் இருக்க முடியவில்லை. தனது அண்ணன் சோமேசுவரன் குலோத்துங்கனுக்கு உதவி புரிந்ததும் ஒரு புறம் கொதித்துக் கொண்டிருந்தது. அதனால் அவன் சோமேசுவரன் மேல் விடாது போரை நடத்திக் கொண்டேயிருந்தான்.

விக்கிரமாதித்தன் அவ்வாறு இரண்டு ஆண்டுகள் போர் செய்து சோமேசுவரனைத் தோற்கடித்து மேலைச் சாளுக்கிய மன்னனாகி விட்டான். அதிலிருந்து குலோத்துங்கனைச் சாளுக்கிய நாட்டினுள் தலையெடுக்கவொட்டாது நாள் முழுதும் பலத்துடன் அவனை எதிர்ப்பதே தொழிலாகக் கொண்டிருந்தான். அதுபோலவே முன் கீழ்ப்படிந்திருந்த சேர நாடும், பாண்டியும், சிங்களமும், வடக்கே கலிங்கம் போன்ற நாடுகளும், சோழ நாட்டினுள் ஐந்து ஆண்டுகளாய் உட்போர் நிகழ்ந்தபோது, சோழர் பேரரசாட்சியை உதறித் தள்ளிவிட்டன. இலங்கையில் சிங்களனான கீர்த்தி என்பான் எவ்வாறு சிங்களப் பட்டத்தைப் பெற முயன்று தோல்வியுற்றான் என்பதைப் பார்த்தோம். ஆனால் அவன் தன் முயற்சியை அதோடு கைவிட்டுவிடவில்லை. எப்பொழுது சமயம் வாய்க்குமென்று காத்திருந்தான். சோழ நாட்டில் உட் குழப்பங்கள் ஏற்பட்டு வெளிநாட்டுக் காரியங்களைக் கவனிக்க முடியாது போகவும், விஜயபாகு என்ற பெயரைக் கொண்ட கீர்த்தி பழையபடியும் கிளம்பினான். அதே சமயத்தில் அதிராஜேந்திரனும், குலோத்துங்கனால் நெருக்கப்பட்டு, பொலன்னறுவா, அனுராதபுரம் முதலிய இடங்களிலுள்ள சோழர் படைகளை எல்லாம் தன் உதவிக்காக இலங்கையை விட்டு அழைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதற்காகப் பின்வாங்கிய சோழர்படைகளைச் சிங்களர்கள் அனுராத புரத்திற்கு அப்பால் வரை விரட்டிக் கொண்டு வந்து அந்நகரை எளிதிற் கைப்பற்றி விட்டனர். அவ்விதம் காலிசெய்து மீண்ட சோழர் படையில் ஒரு பகுதியான வேலைக்காரர்கள் இலங்கையிலேயே தங்கி விடவும், அவர்களை விஜயபாகு மகிழ்ச்சியுடன் தன் பக்கத்தில் வேலைக் கமர்த்திக் கொண்டான். ஆனால் சிங்களர்கள் பழிவாங்குவதற்காகச் சோழ நாட்டின் மேல் படையெடுக்க முயன்றபோது, வேலைக்காரர்கள் அவர்களின் ஆணையை மீறிப் பெருங் குழப்பஞ் செய்யத்தொடங்கி விட்டனர். சோழர்களைத் துரத்திவிட்டதாக இறுமாந்திருந்த விஜயபாகு தலைநகரினின்றுந் தப்பியோடி மீண்டும் வாகிரி கல்லிலுள்ள கோட்டையில் அரண் புகும்படி நேர்ந்தது. அவனால் சோழர் படையில் ஒரு சிறு பகுதியாக இருந்த வேலைக் காரர்களையே அடக்க முடியவில்லை என்பதைக் கவனித்தால், சோழர் படையானது தாய் நாட்டில் ஏற்பட்ட உட் குழப்பங்களால் இலங்கையை விட்டுவரவேண்டியிருந்ததேயன்றி, சிங்களர்களால் விரட்டப்பட்டு ஓடி வந்து விடவில்லையென்பது தெளிவாகிறது. சோழ நாட்டில் உட்போர்கள் நடந்துவந்த காலத்தில் பாண்டியர்களும் கலிங்கர்



களும் சோழர் ஆட்சியினின்றும் நீங்கித் தங்கள் உரிமையைக் கைப்பற்றினர். மற்றும் சோழர் பேரரசை எதிர்ப்பதற்காக, கலிங்கரும், பாண்டியரும், சிங்களரும் ஓர் உடன்படிக்கை செய்து ஒன்று கூடிக்கொண்டனர். இலங்கை அரசனான விஜயபாகு கலிங்கத்திலிருந்து ஓர் இளவரசியைப் பெண் எடுத்துக்கொண்டதோடு, தனது தங்கை மிட்டா என்பவளை ஒரு பாண்டிய இளவரசனுக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

மலேயாவிலும் வட இந்தியாவிலும் சோழர் பேரரசிற்குட்பட்டிருந்த நாடுகள் என்னவாயின வென்பதைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரிவதற்கில்லை. இந்த உள்நாட்டுக் குழப்பங்களால் அவையும் இழக்கப்பட்டிருக்கவேண்டும் என்றே நாம் கொள்ளலாம். மேலேயுள்ள அரசின் பலம் இவ்வாறு குன்றியதால், இராஜ ராஜனும் முதலாம் இராஜேந்திரனும் நிறுவிய சோழர் பேரரசு நொறுங்கி வீழ்வதாயிற்று. அதிராஜேந்திரன் தோல்வியுற்று இறக்கவும், தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் மிகவும் புகழுடன் விளங்கிய விஜயபாலன் குலத்து ஆட்சியும் முடிவடைந்தது.

# அத்தியாயம்—2

## சோழரும் பாண்டியரும் (கி. பி. 1070—1216) :—

இராஜேந்திரன் என்ற முதலாம் குலோத்துங்கன் சோழ நாட்டு மன்னனானான். ஆனால், அவன் ஆள எண்ணியிருந்த பேரரசு போய்விட்டது. ஆயினும், அதற்காக அவன் கலங்கவில்லை அவனுக்கு அப்பேரரசை மீட்டே யாகவேண்டும் என்ற உறுதி பிறந்தது: முடி சூடிய நாள் முதலே பிற நாடுகளுடன் போர் தொடுக்கலானான்.

## முதலாம் துலோத்துங்கன் (கி. பி. 1070—1118)

தனக்குப் பிறப்புரிமையாகக் கிடைத்தது கீழைச் சாளுக்கிய நாடாகிய வேங்கி ஆகையால், முதலில் அதை விட்டுவிடாது பிடித்து, தன் இரண்டாவது மகனான இராஜராஜனை அங்கு ஆளும்படி வைத்தான். சோழநாட்டைச் சுற்றிலும் தனியுரிமை பூண்டிருந்த சிறு சிறு பகுதிகளையும் தன் ஆட்சியின் கீழாகக் கொண்டு வந்தான். பிறகு பாண்டிய நாட்டையும் சேரநாட்டையும் அடிப்படுத்தும் வேலையிற் புகுந்தான்.

சோழர்களுடைய ஆட்சி விளங்கிக் கொண்டிருந்த காலத்தில், இலங்கையில் ஏற்பட்டது போலவே, பாண்டி நாட்டிலும் அரியணையேறும் உரிமையைப் பலரும் வாதாடத் தலைப்பட்டனர். ஆனால், சோழர்களின் தலைமையினின்றும் பாண்டிநாட்டை விடுவிப்பதற்காக முயன்ற முயற்சிகளெல்லாம் வீணாயின. பாண்டிய குலத்தைச் சேர்ந்தவர்கள் பலர், சோழர் கைக்கு எட்டா வகையில் நாட்டில் அங்கங்கு ஒதுங்கியிருந்து கொண்டு, குழப்பங்களை நடத்திக்கொண்டே வந்தனர். இராஜாதிராஜனுடைய ஆட்சியில் நடந்தது போல் சில வேளைகளில் அவர்கள் சோழர் ஆட்சியை ஒழிப்பதற்காக ஒன்று கூடிக்கொள்வதும் உண்டு. சோழநாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்பட்ட காலையில் தாங்கள் விரும்பிக் கொண்டிருந்த தருணம் வாய்த்ததென்று பிற நாடுகள் செய்ததுபோல், பாண்டியர்களும் கிளம்பித் தங்கள் நாட்டுரிமையை மீட்டுக் கொள்ள முடிந்தது. இவ்வாறு நாட்டை ஒழுங்கு படுத்தி நீதி நடத்த முற்பட்டவர்களில், பராக்கிரமபாண்டியன், வீரபாண்டியன் என்னும் இருபெயர்கள் கூறப்பட்டுள்ளன.

ஆனால், இவ்வாறு மீட்கப்பட்ட பாண்டி நாட்டின் உரிமை விரைவில் மீட்கப் பெற்றது. ஏனெனில், கி, பி. 1075 ல் குலோத்துங்கன் பாண்டிநாட்டைப் படையெடுத்து வென்று, பாண்டிய அரசனையும் பிடித்துக் கொன்று விட்டான், அதிலிருந்து பத்து ஆண்டுகளாகப் போர் நிற்காமல் நடந்து கொண்டே வந்தது. கி. பி. 1094 ல் குலோத்துங்கன் பாண்டியிலுள்ள எதிர்ப்பை அறவே ஒழித்தெறிந்தான், தன்னை எதிர்த்த ஐந்து பாண்டிய இளவரசர்களை வென்று காடு நோக்கி ஓடச் செய்து, பாண்டி நாட்டைத் தன் நேர்முக ஆளுகையில் வைத்ததாகக் கூறிக் கொள்கிறான்.

குலோத்துங்கன் காலத்திருந்த ஜடாவர்மன் ஸ்ரீவல்லபன் என்னும் ஒரு பாண்டியச் சிற்றரசனின் கல்வெட்டுகள் பல மதுரை, திருநெல்வேலி வட்டாரங்களிற் காணப்படுகின்றன. ஆனால், குலோத்துங்கன் தன் ஆட்சியின் பிற்பகுதியில், தான் பாண்டிநாட்டிற் கொண்டிருந்த கொள்கையை மாற்றி, அரசு இழந்திருந்த சில பாண்டிய இளவரசர்களுக்கு ஆளும் உரிமையளித்து ஆதரித்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

குலோத்துங்கன் சேரநாட்டைக் கடல் வழியாகப் படையெடுத்து, அங்குள்ள பல துறைமுகப் பட்டினங்களைக் கைப்பற்றினான். இரு முறை காந்தளூர்ச் சாலையிலுள்ள கலங்களை அறுத்தெறிந்து பல சேரநாட்டுத் தலைவர்களையும் தனக்குத் திறையளக்கும்படி வைத்தான். ஆனால் அங்கு மலைப்பகுதிகளில் வாழ்ந்து வந்த சில முரட்டுக் கூட்டத் தலைவர்கள் எத்துணை அளவுக்குச் சோழர் முதன்மையை ஏற்றுக் கொண்டனர் என்பது தெரியவில்லை.

கலிங்கத்தைக் கைப்பற்றியது தான் குலோத்துங்கனுடைய மிகச் சிறந்த வெற்றியாகும். அதைப்பற்றிக் கலிங்கத்துப்பரணி என்னும் நூலில் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. கலிங்க நாட்டிலிருந்து கப்பம் கட்டும்படி குலோத்துங்கன் ஆணை பிறந்தது. சோழநாட்டுக் கலகத்தின்போது ஆட்சியைக் கைக்கொண்டவனான கலிங்கத்தரசன் அதை மறுத்தான். அது பொறாத குலோத்துங்கன் உடனே கலிங்கநாட்டைப் படையெடுத்து அழித்தான். அங்கு நடந்த ஒவ்வொரு போரிலும் கலிங்கர் படை தோல்வியுற்று, இறுதியில் சோழர் தலைமையைக் கலிங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. குலோத்துங்கனுடைய இறுதிக் காலத்தில் கலிங்கர் மீண்டும் தொந்தரவு கொடுக்கலாயினர். பட்டத்து இளவரசனான விக்கிரம சோழன், ஸ்ரீவல்லபனுக்குப் பின் வந்த பராந்தக பாண்டியன் என்பவனின் உதவி கொண்டு முதலில் தெலுங்கு நாட்டைப் படையெடுத்தான். தெலுங்கர் கோமானான பீமன் என்பவன் குளம் என்னும் இடத்தில் முறியுண்டான். பின்னர் விக்கிரமசோழன் கலிங்கத்தையும் வென்று அடக்கினான்.

குலோத்துங்கன் நாற்பத்தொன்பது ஆண்டுகள் ஆட்சி செலுத்திப் பின்னர், கி. பி. 1118 ல் இறந்தான. அவன் காலத்தில் சோழர் பேரரசை ஓரளவுக்கு நிலைபெறச் செய்தான் என்றே சொல்ல வேண்டும்.

## விக்கிரம சோழன் (கி. பி. 1118—1135) :—

அவன் மகனாகிய விக்கிரமசோழன் தன் இளமைப் பருவத்தில் மிகச் சிறந்தவனாய் வருவான்போலவே தோற்றியது. ஆனால் அவனுடைய ஆட்சியின் ஆறாவது ஆண்டில் வருந்தத் தக்க

முறையில் நாடு முழுதும் கருப்பு ஏற்பட்டு மக்கள் ஆற்றொணாத் துயருக்கு ஆளாயினர். அது சோழ அரசனை மிகவும் நலிவுறுத்தி விட்டது. அத்துடன் விஷ்ணுவர்த்தனன் போசள (கோய்சலா) மன்னன் தெற்குநோக்கிப் புறப்பட்டு வந்து தமிழ் நாட்டை அழிக்கத் தொடங்கினான். இதுதான் சமயம் என்று, மாறவர்மன் ஸ்ரீ வல்லபன் என்னும் பாண்டியன் சோழர் ஆட்சியைப் பாண்டியினின்றும் நீக்கித் தன் தனி ஆட்சி யச் செலுத்தலுற்றான்.

## இரண்டாம் குலோத்துங்கனும் இரண்டாம் இராஜராஜனும்:-

கி, பி. 1135 ல் இரண்டாம் குலோத்துங்கன் விக்கிரமனுக்குப் பின் பட்டம் சூடினான். பின் அவன் மகன் இரண்டாம் இராஜராஜன் 1162 வரை அரசாண்டான். இவர்கள் இருவர் ஆட்சியிலும் நிகழ்ந்த அரசியல் நடவடிக்கைகள் ஒன்றும் தெரிவதற்கில்லை.

## இரண்டாம் இராஜாதிராஜன் (கி. பி.1162—1178):—

அவர்களை அடுத்துவந்த மன்னன் இராஜகேசரிவர்மன் இராஜாதிராஜன். இவன் முன்னவர்களுக்கு எவ்வித உறவினன் என்பது தெரியவில்லை. இவனுடைய ஆட்சியின் பிற்பகுதியில், சுமார் 1168 அல்லது 1169 ல் பாண்டியில் உள்நாட்டுப் போர் மூண்டு அதில் இலங்கை மன்னனும் சோழ மன்னனும் தலையிடுவாராயினர்.

கி. பி. 1132 ல் பாண்டியில் தனியாட்சி செலுத்தலுற்ற மாறவர்மன் ஸ்ரீவல்லபன் மிகவும் வலிமை வாய்ந்து விளங்கினான். திருநெல்வேலியைத் தலைநகராக அமைத்துக் கொண்டு, இப்பொழுது திருவாங்கூர் என்னப்படும் சேரநாட்டுத் தென்பகுதியையும் தன் ஆட்சியின் கீழ்ப்படுத்தி வெற்றிச் சிறப்புடன் ஆண்டு வந்தான்.

## பராக்கிரம பாண்டியனும் குலசேகர பாண்டியனும் :—

ஸ்ரீவல்லபன் 1169 ல் இறந்தவுடன், அவன் மகன் குலசேகரன் அரசனானான். இவன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆளவேண்டும் என்ற விருப்பமுடையவன். ஆனால், அப்பொழுது பராக்கிரம பாண்டியன் என்பவன் மதுரையிலிருந்து வட பாண்டி நாட்டை ஆண்டுவந்தான். இவன் ஸ்ரீவல்லபன் காலத்திருந்தே மதுரையில் இருப்பவன். இவன் தனியுரிமை கொண்டு விளங்கியவனா அல்லது ஸ்ரீவல்லபனுக்கு அடங்கியவனா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் குலசேகரன் மதுரையைக் கைக்கொள்ள நினைத்தபொழுது, பராக்கிரமன் அவனை எதிர்த்து இலங்கை மன்னனை உதவிக் கழைத்தான்.

பெருமை வாய்ந்த பராக்கிரமபாகு அப் பொழுது இலங்கை மன்னனாய் இருந்தான். அவன் ஒரு பாண்டியனை மணந்து கொண்ட மிட்டா என்னும் சிங்கள இளவரசியின் பேரன். அவன்



சிங்களப் பட்டத்திற்கு உரிய ஒருவனை விரட்டிவிட்டுத் தன் வலியைக்கொண்டு மன்னன் ஆனவன். கப்பற் படையும் வைத்திருந்த முதல் சிங்கள அரசன் அவனேயாகும். தன் தமிழ் முன்னோர்களைப்போல் அவனும் பிற நாடுகள்கொள்ள ஆவலுடையவனாயிருந்தான். அவன் பராக்கிரம பாண்டியனுக்கு நெருங்கிய உறவினனாய் இருந்திருக்க வேண்டும். ஆதலால், பாண்டியன் உதவிக் கழைத்ததும், காலம் தாழ்க்காமல் ஒரு பெரிய படையைப் பாண்டிய நாட்டுக்கு அனுப்பினான். ஆனால் உதவி வருவதற்குள் குலசேகரன் பராக்கிரம பாண்டியனைத் தோற்கடித்துக் கொன்று விட்டு, மதுரையைக் கைப்பற்றினான். இச் செய்தி தெரிந்த பின்னும், சிங்களப் படை திரும்பி விடாமல், மதுரை நோக்கி மேலூன்றிச் சென்றது. கொலையுண்ட பராக்கிரம பாண்டியனின் மகனான வீரபாண்டியனுக்கு வழிநெடுக உதவி திரட்டப்பட்டது. சிங்களப் படைத் தலைவர்களாகிய இலங்காபுரியும் ஜகத் விஜயனும் பாண்டி நாட்டிலுள்ள பல தலைவர்களுக்குப் பரிசளித்துத் தம்பக்கல் துணை சேர்த்ததாகச் சொல்லப்படுகிறது.

பராக்கிரமபாகுவினுடைய படையும், வீர பாண்டியனுடைய படையும் ஒன்று சேர்ந்து மதுரையைக் கைப்பற்றின. குலசேகரன் அதினின்றும் தப்பிக்கொண்டு, பகைவர்களை வீரத்துடன் எதிர்த்தான். ஆனால் அடுத்தடுத்துப் பல இடங்களில் தோல்வியுற்றான். முடிவில், பாண்டியை விட்டு ஓடவேண்டியிருந்த நிலையில் சோழ நாட்டில் சரண் புகுந்தான். வீரபாண்டியனை அரியணை ஏற்றி விட்டு, இலங்காபுரி வெற்றிப் பொலிவுடன் வீடு திரும்பியதாகச் சிங்களர் கூறுகின்றனர். சோழ நாடு சென்ற குலசேகரன் இராதி ராஜனின் உதவியை வேண்டினான். சோழ மன்னன், தன்னாட்டினுள்ளும் ஒரு நாள் சிங்களர் வந்துவிடக் கூடும் என்று பயந்து, பல்லவராயன் என்னும் படைத் தலைவனிடம் ஒரு படையைக் கொடுத்து, குலசேகரனுக்கு உதவியாய் அனுப்பினான். மகா வம்சம் சொல்லுகிறபடி, சிங்களப்படை இலங்கை சென்றிருந்தால், இப்பொழுது விரைவாக மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். பல்லவராயன் என்ற சோழர் படையின் இளந் தலைவன் மதுரையை நோக்கிப் பொங்கி எழுந்தான். இடையே குறுக்கிட்ட போரில் இலங்காபுரியும் மற்றுமுள்ள சிங்களப் படைத் தலைவர்களும் சிறைப்பட்டுக் கொலையுண்டனர். அவர்கள் தலைகள் மதுரை வாயிலில் தொங்க விடப்பட்டன. இவ்வாறு சிங்கள உதவிப்படை தோல்வியுற்றதும் வீரபாண்டியன் தலைநகரைக் கைவிடுத்து ஓட்டம் பிடித்தான். குலசேகரன், மதுரையைத் தலைநகராகக் கொண்டு மீண்டும் ஆளத் தொடங்கினான்.

## மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178—1216):—


பாராக்கிரம பாகு பாண்டிய நாட்டில் தன் படை தோல்வியுற்றதற்கு மிகவும் வருந்தி, சோழ நாட்டைப் படையெடுத்துப் பழி தீர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்தான். கார தீவு, மாந்தோட்டை முதலிய வடக்குத் துறைமுகங்களில் படைகளைத் திரட்டிவைத்

துக்கொண்டு, சோழ நாட்டைக் கடல்வழியாகத் தாக்குவதென்று திட்டம் செய்தான். அவ்வமயம் சோழ நாட்டில் நாடு கடத்தப்பட்ட ஸ்ரீ வல்லபன் என்ற சிங்கள இளவரசன் இருந்து வந்தான். அவன் பராக்கிரம பாகுவின் பகைவன். ஆதலால், இராஜாதிராஜன் ஒரு கப்பற் படையை அவனுடன் அனுப்பி, இலங்கைத் தீவின் அருகிலேயே சிங்களர்களை எதிர்த்துக் கடற் போர் நிகழ்த்தும்படி ஏவினான். அதன்படியே ஸ்ரீவல்லபன் அங்குச் சென்று, படை யெடுப்புக்குத் திரட்டி வைக்கப்பட்டிருந்த சிங்களப் படைகளைத் தகர்த்து, கடற்கரைக்கு அருகிலுள்ள ஊர்களிற் புகுந்து சூறையாடிக் கொள்ளைப் பொருள்களுடன் சோழ நாடு திரும்பினான்.

*1178*-ம் ஆண்டில் இராஜாதிராஜன் இறக்கவும், மூன்றாம் குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தான். அதற்கு இரண்டு ஆண்டுகள் கழித்து, *1180*-ல் பாண்டி மன்னன் குலசேகரன் இறக்கவும், மீண்டும் வீரபாண்டியன் நாட்டை அடைவதற்கு முயற்சி எடுத்தான். அப்பொழுதும் பராக்கிரம பாகு அவனுக்கு உதவியளிப்பதற்குப் பின்னிட்வில்லை. இவ்வாறு சிங்களர்களின் உதவியால் அவனுக்குச் சிறிது வெற்றியும் முதலில் உண்டாகியது. குலசேகரனின் மகனான விக்கிரம பாண்டியன் குலோத்துங்கனின் உதவியை நாடினான். ஆகவே மீண்டும் போர் தொடங்கியது.

வீரபாண்டியனும் அவன் உதவியாளரும் சோழர் படை முன் நிற்க முடியவில்லை. பாண்டி நாட்டை விட்டுச் சிங்களர்கள் துரத்தப்பட்டு, மதுரையும் கைவசம் வந்தது. இவ்வாறு வீரபாண்டியனையும் புறங் கண்ட பின்னர், குலோத்துங்கன் விக்கிரம பாண்டியனை அரியணை ஏற்றிவைத்தான். வீரபாண்டியன் மீண்டும் ஒரு முறை போருக்குக் கிளம்பினான். ஆனால் நெட்டூர் என்னும் இடத்தில் அவன் வலியழிந்து சிறைப்பட்டான். குலோத்துங்கன் மனமிரங்கி அவனுக்கு ஒன்றும் தீங்கிழைக்காமல், சேர நாட்டிற்கு ஓடிப் பிழைக்கும்படி விடுத்தான்.

இத்துடன் பாண்டியில் உள்நாட்டுப் போர் முடிவடைந்தது. மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் சோழ நாடு மீண்டும் தன் பழைய பெருமையைக் கொண்டு விளங்கியதாகவே தெரிகிறது. திரிபுவனம் என்னும் இடத்திலுள்ள கோயிற் கல்வெட்டுகளிலிருந்து, அவன் வட திக்கிலும் சில பகைவர்களுடன் பல போர்கள் நடத்தி வென்றதாகவும், இலங்கையை வென்று கொண்டதாகவும் தெரியவருகிறது. திரிபுவனத்திலும் தாராசுரத்திலும், இராஜராஜனின் தஞ்சைக் கோயிலைப் போன்ற இரு கோயில்கள் குலோத்துங்கனால் கட்டப்பட்டன. சோழர் பேரரசாட்சியிற் கட்டப்பட்டனவாய் இன்னும் நாம் காண்பனவற்றுள் இவை இரண்டுமே கடைசியாகக் கட்டப்பட்டனவாகும். சோழ நாட்டுப் பேரரசர் வரிசையிலும் கடைசியாகப் பெருமையுடன் விளங்கிய மன்னனும் அவனேயாவான். ஏனெனில் அவனை அடுத்து வந்தவர்கள் திறனற்ற மெல்லியோராய், நாட்டைச் சீர்குலைய விட்டுத் தாங்களும் மறைந்தொழிவாராயினர்.



தஞ்சாவூர் கோவில்

# அத்தியாயம்—3

## பாண்டியர் பேரரசாட்சி 1216—1310

### மூன்றாம் இராஜராஜனும் (1216—1243) ... .... முதலாம் சுந்தர பாண்டியனும் (1216—1238) :—

*கி. பி. 1216-ம் ஆண்டில் மூன்றாம் குலோத்துங்கனும் குலசேகரனும் இறக்க நேரிட்டது. குலோத்துங்கனின் மகன் மூன்றாம் இராஜராஜன் பல மற்றவனாகக் காணப்பட்டான். குலசேகரனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த அவன் தம்பியான சுந்தர பாண்டியன் மேலோங்கிவர வேண்டும் என்ற எண்ணமும் ஊற்றமும் வாய்ந்தவன். இப்போர்த் தினவு கொண்ட பாண்டியன் தன் முன்னவனுக்குச் சோழர்கள் செய்த நன்றியையும் மறந்து 1222-ல் சோழ நாட்டின்மேல் படையெடுத்தான். தஞ்சையையும் உறையூரையும் நெருப்பிற் கிரையாக்கிச் சோழ நாட்டின் தென் பகுதியைப் பாழாக்கினான். இராஜராஜன் தத்தளித்துத் தலை நகரை விட்டு வடக்கு முகமாக ஓடலுற்றான். ஆனால், அங்கே தென் ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள சேந்த மங்கலத்தில் ஆண்டுகொண்டிருந்த பல்லவச் சிற்றரசனான கோப்பெருஞ் சிங்கன் என்பவன் கையில் சிக்குண்டான். அப் பல்லவன் தன்னலம் கருதித் திடீரென்று பகைவனாக மாறிவிட்டான்.*

*இப்பொழுது மைசூர் எனப்படும் நாட்டில் போசளர் (கோய்சலா) என்னும் ஒரு புதிய அரசகுலத்தார் தோன்றி சிலகாலமாய் ஆட்சி செய்துகொண்டிருந்தனர். அவர்களோடு இராஜராஜனும் சுந்தர பாண்டியனும் உறவு முறைகொண்டவர்கள். ஆதலால் இராஜராஜன், அப்பொழுது போசள மன்னனாய் விளங்கிய இரண்டாம் வீர நரசிம்மனின் உதவியை வேண்டினான். வீர நரசிம்மன் ஒரு வலிய படையை அப்பண்ணன், சமுத்திரகோப்பையன் என்ற இருவர் தலைமையில் சேந்தமங்கலத்தை நோக்கி அனுப்பினான். அதனால் கோப்பெருஞ் சிங்கன் சோழ மன்னனைச் சிறையினின்றும் விடவேண்டியதாயிற்று. பின்னர் நரசிம்மன் பாண்டி மன்னனை அடக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தெற்கு நோக்கிப் படையெடுத்து திருவரங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அவன் இராமேசுவரம் வரை சென்று அங்கு ஒரு வெற்றித் தூண் நட்டதாகவும் சொல்லப்படுகிறது. உண்மையில் என்ன நடந்தது என்று திட்டமாய்ச் சொல்வதற்கில்லை. ஆனால் போசளர்களுக்கும் பாண்டியர்களுக்கும் சோழ நாட்டைக் குறித்து ஏதோ ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதாக மட்டும் திட்டமாய்ச் சொல்லலாம். நரசிம்மன் 'சோழர் குலஸ்தாபனாசாரியன்' என்ற விருதுப் பெயர் சூடிக்கொண்டான். அதே வேளையில், சுந்தர பாண்டியனுடைய கல் வெட்டுகளில் அவன் வென்ற சோழ நாட்டை மீண்டும் அருள் கூர்ந்து இராஜராஜனுக்கு வழங்கி விட்டதாகக் கூறப்படுகிறது.*

ஆனால் தான் இவ்விதம் புரிந்த உதவிக்காக நரசிம்மன் சோழ நாட்டில் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, அதில் தனது மகன் வீரசோமேசுவரனைப் பிரதிநிதியாக நியமித்தான்.

சுந்தரபாண்டியன் கொங்கு நாட்டுக் காரியங்களிலும் தலையிட்டதாகத் தெரிகிறது. அதன் விளைவாக அதில் ஒரு பகுதி பாண்டியர் ஆட்சியின் கீழ் வந்து சேர்ந்தது.

மீண்டும் சில ஆண்டுகளில், இராஜராஜன் பாண்டியனுக்கு அளக்கவேண்டிய திறையை ஒழுங்காய்ச் செலுத்தாமல் கலகம் செய்தான். சுந்தரபாண்டியனுக்குச் சீற்றம் பொங்கி எழுந்தது. இம்முறை போசளர்கள் உதவிக்கு வரவில்லை. சுந்தரன் சோழ மன்னனின் வலியை அறவே யொழித்துத் தனக்குக் கீழ்ப்படுத்தினான். தன் வெற்றியைக் கொண்டாடுவதற்காகப் பாண்டிய நாணயங்களைச் சோழ நாட்டில் வழங்கினது மல்லாமல், சுந்தர பாண்டியன் பல கோவில்கள் கட்டுவித்துக் கல்வியையும் வளரச் செய்தான். அவன் அமைச்சன் குருகுலதரையன் என்பதும், அவன் படைத் தலைவர்களான மழவர் மாணிக்கம் என்பவனும் கண்டன் உதயஞ் செய்தான் காங்கேயன் என்பவனும் எண்ணில் செல்வத்தைப் பொது மக்களின் நன்மைக்காக வாரி வளங்கினார்கள் என்பதும் கல்வெட்டுகளால் உணரப்படும். இவ்வாறு சீரும் சிறப்புமாய் இருபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்த பின்னர் 1238-ல், ஆட்சியில் அலுத்து இளைப்பாறவேண்டி, சுந்தர பாண்டியன் தன் பட்டத்தைக் குலசேகரன் என்னும் இளவரசனிடம் ஒப்படைத்தான்.

ஆனால், இரண்டாம் ஜடாவர்மன் குலசேகரன் என்னும் அவ்விளவரசன் ஓர் ஆண்டளவு கூடத் தனியாய் ஆள முடியவில்லை. அந்த ஆண்டின் இறுதியிலேயே மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்பவனையும் தன் கூடச் சேர்த்து ஆட்சி புரியும்படி நேர்ந்தது.

## இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1238—1253)

1239-ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து மாறவர்மன் சுந்தர பாண்டியன் தானே தனியாட்சி செலுத்தலுற்றான். அவன் காலத்தில் போசளருக்கும் சோழ பாண்டியருக்கும் நெருங்கிய உறவு இருந்து வந்தது. அதனால் அவர்களிடையே போர் என்பதே ஏற்படவில்லை. ஆனால் ஒவ்வொரு காரியத்திலும் போசளர்கள் தலையிட்டு இடையூறாக இருந்து வந்தனர். அதைப் பாண்டியன், உறவு முறையை முன்னிட்டுப் பொறுத்தே தீர வேண்டி யிருந்தது. போசள மன்னனான வீரசோமேசுவரன் சுந்தரபாண்டியனுக்கு மாமன் முறையாவான். அதனால் அவன் மாமடி என்று அழைக்கப்பட்டான். இந்த மாமன் என்னும் உறவு முறையை வைத்துக் கொண்டே அவன் பாண்டி நாட்டுக் காரியங்களில் வேண்டா விதத்தில் தலையிட்டுக் கொண்டிருந்தான்.



மாறவர்மன் சுந்தர பாண்டியன் 1253 வரை ஆட்சி புரிந்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் 1251-ம் ஆண்டின் முற்பகுதியிலிருந்தே ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் என்னும் இளவரசனும் அவனுடன் சேர்ந்து ஆண்டு வரலானான். இவ்விளவரசன் பெரிய எண்ணங்களைக் கொண்டவனாகையால் வெற்றித்திரு வேட்டவனாய் விரைந்தெழுந்தான்; சேர நாட்டின் மேற் படையெடுத்து அம்மலை நாட்டைப் பாழ்படுத்தி, மலையாள அரசனைத் தனக்குட்படுத்தினான்.

1258-ல் போசளர்களை அன்னவர் இராஜராஜனிடமிருந்து கவர்ந்து தமது கைக்கொண்டிருந்த தமிழ் நாட்டுப் பகுதியிலிருந்து ஜடாவர்மன் விரட்டியடித்தான். காவிரியின் கரையருகே போசளர் படைத் தலைவனான சிங்கணன் என்பவன் தோல்வியுற்றுக் கொல்லப்பட்டான். 1262-ல் வீர சோமேசுவரன் இறக்கும் வரையில், போசளர்களுடன் போர் நடந்துகொண்டே யிருந்தது. ஆனால் 1267-ல் வீர சோமேசுவரனின் மகனான இராமநாதன் சோழ நாட்டைப் படையெடுத்து, 1271-ம் ஆண்டளவில் ஸ்ரீரங்கத்தையும் கண்ணனூரையும் கைப்பற்றிக் கொண்டான்.

வீரசோமேசுவரன் இறந்த பின்னர் சுந்தரபாண்டியன் சேந்தமங்கலத்திற் கிளம்பிய ஒரு கலகத்தை அடக்கவேண்டி யிருந்தது. முன் ஒரு முறை சோழர் தலைமையை எதிர்த்தெழுந்த கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவச் சிற்றரசன் இப்பொழுது சுந்தர பாண்டியனிடத்தும் பகைமைகொள்ள தொடங்கினான். ஆனால் பாண்டிய மன்னன் அவன் நாட்டைப் படையெடுத்தவுடன் அஞ்சியொடுங்கிய கோப்பெருஞ்சிங்கன் தானே வலிய வந்து பாண்டியனுக்குத் திறை கொடுத்து நயமொழி கூறினான். சுந்தரபாண்டியன் தனக்குத் தெலுங்கு நாட்டிலிருந்தும் கன்னட நாட்டிலிருந்தும் மிகுந்த உதவி கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொண்டு, அவன் அனுப்பிய திறையை மறுத்துத் தன் படையுடன் அவனை ஒடுக்க முற்பட்டான். பின்னரும் அவன் இனி உண்மையுடன் கீழ்ப்படிந்து திறை அளப்பதாக மன்றாடி வேண்டவும், சுந்தர பாண்டியன் அவனை முன்போலிருக்கச் செய்தான்.

பின்னர் அப் பாண்டிய பேரரசன் காஞ்சியை எதிர்த்தான். அப்பொழுது அங்கே கண்ட கோபாலன் என்ற ஒரு தெலுங்கு அரசன் ஆண்டு கொண்டிருந்தான். சுந்தரபாண்டியன் கண்ட கோபாலனைக் கொன்று காஞ்சியையும் தன் கைவசப் படுத்தினான். அங்கு நடத்திய போரில் ஆரிய மன்னர்களின் உதவியைப் பெற்ற பல தெலுங்குச் சிற்றரசர்கள் அவனை எதிர்த்து வந்தார்கள். சிதம்பரத்திற் காணப்படும் கல் வெட்டுகளின்படி, அவன் அத் தெலுங்கர்களைக் கொன்று அவர் படைகளை வென்று அவர்களுக்கு உதவியாய் வந்த ஆரியர்களைப் பேராற்றங்கரையளவும் துரத்திச் சென்றதுமன்றி, ஒரு பார்ணர் தலைவனைக் காட்டிற்கு விரட்டினான். இவ்வாறு அந்தப் போருக்குப் பின்னர், சுந்தர பாண்டியன் தமிழ் நாடு முழுதையும் தன் தலைமையின் கீழ்க்

கொண்டு வந்து, தெலுங்கு நாட்டில் நெல்லூர் அளவும் தன் ஆணையை நிலவச் செய்தான். கொங்கு நாடும், கன்னட நாட்டில் ஒரு பகுதியும் அவனது ஆட்சியின்கீழ் வந்தன.

இவ்வாறு சுந்தர பாண்டியன் நடத்திய போர்களில் குலசேகரன், வீரபாண்டியன் என்ற இரு இளவரசர்கள் அவனுக்குப் பெருந் துணையாய் இருந்து வந்தனர். சுந்தர பாண்டியனுக்கு உறவுள்ளவனாய்த் தோன்றுகிற வீரபாண்டியன் படைகளுக்குத் தலைமை தாங்கித் தானே நேரிற் சென்று, சோழ நாட்டையும் கொங்கு நாட்டையும் மற்றும் பல இடங்களையும் வென்று பிடித்தவன், கி. பி. 1255-ல் வீரபாண்டியன் இலங்கைக்கும் படையெடுத்துச் சென்றான். இலங்கையில் அப்பொழுது இரண்டு அரசர்கள் தனித்தனியே ஆண்டு கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர்களில் ஒருவன் கொல்லப்பட்டான். இன்னொருவன் அணிகலன்களும் யானைகளும் திறை கொடுத்து அடிபணிந்தான். சுந்தரபாண்டியனுடைய வெற்றிக் கயற் கொடியைக் கோணமலையின் உச்சியிலும் திரிகூடகிரியின் உயர் கோட்டிலும் தானே ஊன்றியதாக வீரபாண்டியன் கூறிக்கொள்ளுகிறான்.

## ஈழ நாடு :—

இலங்கையில் இரண்டு தனியரசுகள் இருந்ததாகக் கூறப்பட்டது. அவை வட இலங்கையிலுள்ள தமிழ்ப் பகுதி ஒன்றும், தென் இலங்கையாகிய சிங்கள நாடு மற்றொன்றுமாகும். சோழர் படையெடுப்புக்குப் பின்னிருந்து வட இலங்கையில் தமிழர் ஆட்சியே தொடர்ந்து வந்தது. பெருமை வாய்ந்த பராக்கிரம பாகு வட பகுதியையும் சேர்த்து இலங்கையை ஒரே நாடாக உசம் பெறச் செய்து வைத்தான். ஆனால், அவனுக்குப் பின் தோன்றியவர்களால் அவ்வாறு கொண்டு செலுத்த முடியவில்லை. ஆதலால் மீண்டும் இலங்கையிலுள்ள தமிழர்கள் வேறாகப் பிரிந்து ஒரு தனியரசை அமைத்துக் கொண்டனர். யாழ்ப்பாண நாட்டு மன்னர்கள் தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொள்கின்றனர். ஆகவே, அவர்கள் சேர சோழ பாண்டியராகிய தமிழ்க்குல மன்னர் வழியைச் சேர்ந்தவர்களாய் இருக்க முடியாது. அவர்கள் எவ்விதம் முளைத்தனர் என்பதே விளங்கவில்லை. சோழர் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் இலங்கை மன்னனாயிருந்த விஜயபாகு என்பவன் ஒரு கலிங்கத்திளவரசியை மணந்துகொண்டான். அக்காலவழக்கப்படி அந்த மணத்தின் மூலமாய்க் கலிங்கத்திலிருந்து பல அரசிளங்குமாரர்கள் மன்னனுக்கு மைத்துனர் என்ற முறையில் இலங்கைக்கு வந்திருக்கக் கூடும். கலிங்கர்களுடைய செல்வாக்கு நாளாவட்டத்தில் இலங்கையிற் பெருகிக்கொண்டே வந்து முடிவில் கலிங்க மகா என்னும் கலிங்கன் ஒருவன் இலங்கைக்கு மன்னனாகவே வந்துவிட்டான். இக்கலிங்க மகா என்பவனுடைய இனத்தவராய் ஆரிய நாகரீகப் பண்புகளில் தோய்ந்திருந்த கலிங்கர்களே சிங்கை அல்லது சிங்கபுர ஆரிய குலத்தார் என்று சொல்லிக்கொண்டு, யாழ்ப்பாண மன்னர்களாய் அமர்ந்திருக்கக் கூடும். யாழ்ப்பாண மன்னர்களின் பலம் நாளுக்கு நாள் வளர்ந்து



வந்து அவர்கள் சிங்களர்களை இராஜரத்தை என்னும் மாகாணத்துக்கப்பால் தள்ளிவிட்டனர். பிபிலைக்கு வடக்கே ரோகன மாகாணத்தின் ஒரு பகுதிகூட யாழ்ப்பாண நாட்டோடு சேர்க்கப்பட்டது. இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்தும் பாண்டியிலிருந்தும் தமிழர்களால் வருத்தலுற்ற சிங்களர்கள் இலங்கைக்கு நடுவிடத்தும் மேலைப் பகுதியிலுமுள்ள கோட்டை அரண்களுக்குத் தங்கள் தலை நகரை மாற்றிக் கொண்டனர். வீரபாண்டியனால் கூறப்பட்டுள்ள இரண்டு இடங்களுள், கோணமலை என்னும் தமிழ்ப் பெயர் திரிகோணமலையைக் குறிக்கின்றது. திரிகூடகிரி என்னும் சிங்களப் பெயர் கண்டிமா வட்டத்திலுள்ள மூன்று கவட்டாய் முளைத்தெழுந்த ஒரு மலைச்சிகரத்தைக் குறிப்பதாகும்.


## மாறவர்மன் குலசேகரன் (1268—1310) :—

சுந்தர பாண்டியனுடைய ஆட்சி முடிந்ததும், அவனுக்குக் கீழிருந்துவந்த மாறவர்மன் குலசேகரன் என்பவன் அரசனானான். அவன் ஆட்சி பெற்றவுடனே சேரநாட்டில் எழுந்த குழப்பங்களையெல்லாம் ஒடுக்கினான். அவனுக்கு நான்கு தம்பிமார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் பாண்டியப் பேரரசின் வெவ்வேறிடங்களில் பிரதிநிதியாக இருந்து ஆட்சி செய்தனர். அவர்கள் மிகவும் ஒற்றுமையுடன் ஆண்டுவந்ததால் அவர்கள் நாளில் பாண்டியப் பேரரசு உச்சநிலையை அடைந்து செழிப்புற்றது.

1284 ல் இலங்கையைப் போர் செய்து மீண்டும் கைக்கொள்ள வேண்டியதாயிற்று. உண்மையில் இலங்கை அவ்வேளையில் கலகங்களாலும், பஞ்சத்தாலும், நோய்களாலும் பெருந் துன்பத்திற்கு உட்பட்டிருந்ததால், சிங்களமன்னன் தன்பாட்டைப் பார்த்துக்கொள்வதே பெரும் பாடாயிருந்தது. முதலாம் புவனேகபாகு என்பவன் யபாஹுவா என்னும் அரணிலிருந்து ஆண்டு வந்ததால் தமிழர் படை தன் அருகில் வரமுடியாது என்று எண்ணியிருந்தான். குலசேகரன் தன் படைத் தலைவனான ஆரியச் சக்கரவர்த்தி என்பவன் வசம் ஒரு வலிய படையைக் கொடுத்து அனுப்பினான். சிங்களர் முழுத் தோல்வியடைந்தனர். ஆரியச் சக்கரவர்த்தி அவர்களின் தலைநகரைப் பிடித்து, அங்கிருந்த திருப்பண்டமாகிய புத்தர் பிரானின் பல்லையும் பாண்டிநாட்டிற்கு எடுத்துச் சென்றான். பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சிங்களர்களால் கண்ணும் கருத்துமாய்ச் சேமித்து வழிபட்டுவரும் நினைவுப் பொருளாகிய புத்தரின் பல்லை அவ்வாறு கொண்டு சென்றதால் நாடு முழுதும் ஒரே ஏக்கமாய்த் துக்கம் குடிகொண்டிருந்தது. ஆனால் பாண்டியர்கள் விடாது இருபது ஆண்டுகளாய் இலங்கையைத் தங்கள் நேர் ஆட்சியில் வைத்து நடத்தினர். கி. பி. 1302 ல் பராக்கிரமபாகு என்னும் ஒரு சிங்கள இளவரசன் பாண்டிநாடு சென்று, மன்னனைக் கண்டு சிங்களர்களுக்காகப் பரிந்து பேசினான். புத்தர் நினைவாகத் தாங்கள் பூசிக்கும் அவருடைய பல்லாகிய திருப்பண்டத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி குறையிரந்து நின்றான். பெருந்தன்மைவாய்ந்த குலசேகரனும் அவ்வாறே கொடுத்தனுப்பினான். புவனேகபாகுவை வென்று இலங்கைத்தீவு முழுதையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவந்ததாக

யாழ்ப்பாண வைபவமாலையிற் குறிக்கப்பட்ட 'ஜயவீரசிங்கை—ஆரியன்' என்னும் யாழ்ப்பாண அரசனே மேலே குறித்த ஆரியச் சக்கரவர்த்தியாய் இருக்கலாம். அவன் அவ்வாறு சிங்களர்களை வென்றது பாண்டிய அரசனின் பொருட்டாகவே போலும். ஏனெனில் பன்னிரு ஆண்டுகள் கழித்து, சிங்களர் வழக்கம்போல் ஒழுங்காகத் திறைசெலுத்தி வருவார்கள் என்று பாண்டிய அரசன் உறுதி கூறிய பின்னரே, பராக்கிரமபாகுவிற்குச் சிங்களர் பட்டத்தைச் சிங்க ஆரியன் மீண்டும் அளித்தான் என்று கூறப்பட்டுள்ளது.

நெடுங்காலம் நடந்துவந்த குலசேகரனின் ஆட்சி மிகவும் செழிப்புற்று விளங்கியது. வென்றுகொண்ட நாடுகளிலிருந்து பெருஞ் செல்வம் வந்து குவிந்தது. வெனிஸ் நகரத்திலிருந்து நாடுகளைச் சுற்றிப்பார்க்க வந்த மார்க்கோ போலோ என்பவர் குலசேகரனின் திருவோலக்கச் சிறப்பைக் கண்டு வியந்து அம்மன்னனுக்கிருந்த செல்வ வளத்தைப் பலப்படப் பாராட்டி எழுதியுள்ளார். அங்கு அராபிய வணிகர்கள் கொண்டுவரும் குதிரைகளை வாங்குவதற்கு எவ்வளவு பொருள் அள்ளி வீசப்பட்டது என்பதை அழகுறச் சித்திரிக்கிறார். தனது பெரிய வலிய படைகளுக்காக குலசேகர மன்னன் ஆண்டு ஒன்றுக்குப் பதினாயிரம் பரிகள் விதம் விலை கொடுத்து வாங்கினதாகச் சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டுக் குதிரை வீரர்கள் அங்கவடி ஒன்றும் இல்லாமலே குதிரை மீதிவர்ந்து செல்வது பேய்கள் பறப்பது போன்றிருக்கும் என்று மார்க்கோபோலோ எழுதியுள்ளார். ஆனால் காலாட் படை வீரர்களைப் பற்றி அவருக்கு மதிப்பான எண்ணம் கிடையாது. ஏனெனில், அவர்கள் புலால் உண்ண மாட்டார்கள். உயிர்க் கொலை செய்யமாட்டார்கள் என்கிறார் மார்க்கோபோலோ. தக்கிணத்தின் பெரும் பகுதியையும் இலங்கையையும் தமிழ் மக்கள் ஆண்டிருந்துங்கூட, தமிழ்ப் போர் வீரர்களுக்குத் தகுந்த பொரு படைகள் அளிக்கப்படவில்லை. வாளும் வேலுமே அவர்கள் வழங்கி வந்தனர். பொதுமக்களிடையே மூட நம்பிக்கைகளும் குருட்டுக் கொள்கைகளும் மலிந்து காணப்பட்டனவாம். முத்துக்குளிப்பவர்கள் நீரில் மூழ்குமுன், பார்ப்பனர்கள் மந்திரம் போட்டுப் பெரிய ஆள் விழுங்கி மீன்களை விலகச் செய்வார்கள் என்று நம்பி, அதற்காகத் தாம் வாரி எடுக்கும் இப்பிகளில் இருபதில் ஒரு பங்கு அந்த பார்ப்பனர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது என்று மார்க்கோபோலோ கூறியுள்ளார். வாசப் என்னும் மற்றொரு சரித்திர நூலார், பாண்டி மன்னர் வெளி நாடுகளோடு வாணிகம் நடத்தி வந்ததைப் பற்றித் தெரிவிக்கிறார். கிழக்கே மலாய் சீனம் முதலிய நாடுகளிலிருந்தும், வடக்கே இந்தி சிந்தி முதலிய இடங்களிலிருந்தும், மேற்கே ஈராக், குர்சன் முதலிய நாடுகளிலிருந்தும், ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், பாண்டியர்களுடைய சிறந்த துறைமுகப்பட்டினமான காயலுக்குப் கப்பல் கப்பலாய்ப் பண்டங்கள் வந்து இறக்குமதியானதாக வாசப் எழுதியுள்ளார். இவ்வாறு தமிழ் நாடு, ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்புகூட அவ்வளவு புகழும் செழிப்பும் கொண்டு விளங்கியிருந்திருக்கிறது.



தஞ்சாவூர் ராஜாராஜன் கோவில்

# அத்தியாயம்—4

## தமிழ் அரச குடும்பங்களின் வீழ்ச்சி.

குலசேகரனுக்குத் தன் இல்லக்கிழத்தியான அரசியிடம் சுந்தரபாண்டியன் என்ற மகன் பிறந்தான். இதைத் தவிர அவன் பணிப் பெண்களில் ஒரு காமக்கிழத்தியையும் வைத்திருந்தான். அவளுக்கு வீரபாண்டியன் என்ற ஒரு மகன் உண்டு. வீரபாண்டியன் சுந்தரபாண்டியனுக்கு வயதில் மூத்தவன். ஆள் துடுக்கானவனாய் எதற்கும் துணிந்து முன்நிற்கக்கூடியவன். ஆதலால், வீரபாண்டியனைக் குலசேகரன் 1296-லிருந்து அரசியற் காரியங்களைத் தன்னோடு கூடஇருந்து கவனித்து வரும்படி செய்தான். சுந்தரபாண்டியனும் 1303-லிருந்து அரசியலிற் புகுத்தப்பட்டாலும் அவனுக்கு, வீரபாண்டியனைப் போல் அவ்வளவு முதன்மை அளிக்கப்படவில்லை. 1310-க்கும் 1311-க்கும் இடையில், குலசேகரன் தனது முடியை தன் மக்கள் இருவரில் ஒருவனுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று எண்ணலுற்று, தன் மூத்த மகனாகிய வீரபாண்டியனுக்கே பட்டம் கட்டிவைப்பதென்று முடிவு செய்தான். சுந்தரபாண்டியனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது, அந்த வேகத்தில் தனது தந்தையாகிய மன்னனைக் கொலைசெய்துவிட்டு, படையின் உதவியைக் கொண்டு தானே பாண்டியப் பேரரசன் என்று முடி சூடிக்கொண்டான்.

நாற்பத்து நான்கு ஆண்டுகளாக ஆண்டு வந்த குலசேகரனிடத்தில் குடிமக்களுக்கு அளவு கடந்த அன்பு இருந்தது. அவன் கொலையுண்டான் என்ற செய்தி பாண்டியப் பெருநாடெங்கும் பரவியதும் ஒரே கொந்தளிப்பாகிக் குமுறியது. தந்தையைக் கொன்ற கைதவனைப் பழிவாங்கும் உறுதியுடன் வீரபாண்டியன் ஒரு படையைத் திரட்டினான். பல் சிற்றரசர்கள் அவனுக்கு உதவியாகக் கிளம்பினர். நாடு முழுவதுமே அவன் பக்கலில் இருந்தது. அப்படி யிருந்தும், முதலில் அவனுக்குச் சிறிது தோல்வியே கிடைத்தது. ஆனால் அவன் விடவில்லை. மறுமுறையில் மதுரை அவன் கையில் அகப்பட்டது. சுந்தரபாண்டியனின் படைமாருதம் அறைந்த பூளையாகியது. தோல்வியும் மானமும் பொறுக்கமாட்டாமல் நாட்டை விட்டு ஓடினான். எவ்வாறு மதிகெட்டுத் தன் தந்தையைக் கொன்றானோ அதுபோலவே இப்பொழுதும் தன் தாய் நாட்டை முஸ்லீம்களுக்குக் காட்டிக்கொடுக்கலுற்றான்.

சோழன் இராஜேந்திரன் ஆட்சியில் வட நாட்டில் நிகழ்ந்த முஸ்லீம் படையெடுப்பைப் பற்றி நாம் சிறிது பார்த்தோம். இராஜேந்திரன் வங்காளத்தையும் மற்றும் கீழை ஆரியாவர்த்தத்திலுள்ள சில நாடுகளையும் பிடிப்பதில் முனைந்திருந்த பொழுது, தங்கள் ஆட்சியின் கீழ் விழுந்த வடமேற்குப் பகுதியை முஸ்லீம்கள் பலப்படுத்திக் கொண்டுவந்தார்கள். அதற்குப்பின் வந்த

மூந்நூறு ஆண்டுகளில் வட இந்தியாவில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல முஸ்லீம படையெடுப்புகள் பொங்கி எழுந்துகொண்டே யிருந்தன. சோழர் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் அவர்கள் தெற்கே தக்கிணத்துள்ளும் புகுந்து பரவலாயினர்.

அநேகமாய் அங்குள்ள இந்து அரசர்கள் அனைவரும் தோல்வியுற்றும் வலிகுன்றியும் தங்கள் நிலையை இழக்கலானார்கள். பதினான்காவது நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்து ஆட்சி என்பது தென் இந்தியாவில் மட்டும் காணக்கூடிய நிலைக்கு வந்துவிட்டது. அங்கும் முஸ்லீம்கள் விடாது விரட்டிக்கொண்டு வந்து, முதலாவதாகத் தெற்கே போசளர்களைத் தாக்கினர். போசளர்களைச் சுந்தரபாண்டியன் 1262-ல் தமிழ் நாட்டின் வட பகுதியிலிருந்து எவ்வாறு விரட்டினான் என்பதை முன்னரே பார்த்துள்ளோம். சுந்தரபாண்டியன் இறந்த பின்னர், அவர்கள் ஹம்பி என்னும் இடத்தைத் தங்கள் தலைநகராகக் கொண்டு மீண்டும் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது.

போசளர்கள் தமிழ் நாட்டையொட்டி வடக்கே யிருந்த கன்னடப் பகுதியையும் தெலுங்கு ஜில்லாக்களையும் பிடித்துத் தங்கள் நிலையை வலிபெறச் செய்தனர். முஸ்லீம்களின் வரவை அவர்கள் மிகத் திறமையாக எதிர்த்துச் சிறிதளவுக்குத் தடுத்து நிறுத்துவாராயினர். அந்நெருக்கடியான நேரத்தில்தான் தன் தந்தையைக் கொன்ற சுந்தரபாண்டியன் முஸ்லீம் படைத் தலைவனான மாலீக்காபூர் என்பவனுடைய உதவியை நாடிச் சென்றான். இதைத் தெரிந்த வீரபாண்டியன் காலம் தாழ்க்காது குதிரைப் படையும், காலாட் படையும் கொண்ட ஒரு பெரிய தானையை முஸ்லீம்களைத் தடுப்பதற்காகப் போசளர்களுக்கு உதவியாய் அனுப்பினான். ஆனால் வஞ்சகனான சுந்தரனின் உதவியைக் கொண்டு, மாலீக் காபூர் போசளப் படைகளோடு போர் செய்வதைத் தவிர்ந்து வேறொரு வழியாய்த் தமிழ் நாட்டினுள் திமு திமு வென்று நுழைந்துவிட்டான். தமிழ்நாடு பிளவுபட்டு, உடன் பிறப்பாளர்களுக்குள் இரு கட்சிகள் இருந்து வந்ததால் முஸ்லீம் படையினர் பல நகரங்களை எளிதில் பிடித்துவிட்டதாக, வாசப் எனும் முஸ்லீம் ஆசிரியர் எழுதியுள்ளார். மாலீக்காபூர் மதுரையை அடைந்ததும், அந்நகர் கைவிடப்பட்டுப் பாழென நின்றது, கோயிலின் அருகே சில யானைகள் மட்டும் காணப்பட்டன. முஸ்லீம்கள் கோயிலினுட் புகுந்து சூறையாடி நிறைந்த செல்வத்தைக் கொள்ளைகொண்டனர். ஏனெனில், பாண்டியிலேயே தங்குவது என்ற எண்ணம் அவர்களுக்குக் கிடையாது.

மதுரைக்குத் தெற்கே வேண்டுமென்றே வீரபாண்டியன் பின் வாங்கியிருந்தான். ஆதலின், இப்பொழுது ஒரு பெரிய யானைப் படையுடன் திடீரெனத் தோன்றி மாலீக்காபூரைப் பாண்டி நாட்டை விட்டுத் துரத்தினான். ஆனால் அவ்வாறு ஓடும்பொழுது மாலீக்காபூர் கணக்கற்ற பொன் நிறைந்த தனது கொள்ளைப் பொருள்களையெல்லாம் விடாது வாரிக்கொண்டே போய்விட்டான்.



இவ்வாறு முதன் முதல் ஏற்பட்ட முஸ்லீம் படையெடுப்பு கதிரவன் காய்ந்த பனிபோல மறைந்ததேயானாலும், அதன் நேர் விளைவாக, பாண்டியரின் பேரரசு குலைந்து கவிழ்வதாயிற்று. பாண்டி நாட்டில் உள்நாட்டுப் போர் கிளம்பி, முஸ்லீம்களும் தாக்கலுற்றவுடன், தெலுங்கர்களும், சோழர்களும் பாண்டியர் தலைமையை இகழ்ந்து உதறிவிட்டனர். வீர பாண்டியன் உள் நாட்டுக் குழப்பங்களை அடக்கவேண்டியிருந்ததால், வெளிநாடுகளில் ஒன்றும் செய்வதற்கில்லை.

முஸ்லீம் கொள்ளைக்காரர்கள் ஒருவாறு ஒழிக்கப்பட்டவுடன், இரவி வர்மன் குலசேகரன் என்னும் சேரநாட்டு மன்னன், பாண்டியர்களை வஞ்சம் தீர்ப்பதற்கு அதுதான் தகுந்த சமயம் என்று எழுந்தான். அவன் பாண்டி நாட்டைப் படையெடுத்து, வீர பாண்டியனையும் சுந்தர பாண்டியனையும் பொருதழித்து, அங்கிருந்து நேரே காஞ்சிவரையிற் சென்று, அங்கே பேரரசுப் பட்டம் சூடினான். ஆனால் அவன் பெருமையும் புகழும் சிறிதளவே நின்றன. காஞ்சிக்கு வடக்கே ஆண்டுகொண்டிருந்த தெலுங்க அரசன் தனது படைத் தலைவனான முப்பிடி நாயக்கனை அனுப்பிக் குலசேகரனை எதிர்க்கச் செய்தான். முப்பிடி நாயக்கன் சேரர் பேரரசன் வென்ற நாடுகளைப் பிடுங்கிக்கொண்டு, அவனை வெறுங் கையனாய்ச் சேரநாட்டிற்குள் ஓட்டவைத்தான். மேலும், அவன் தமிழ்நாட்டின் வடபகுதியாகிய காஞ்சியையும், சோழநாட்டையும் தெலுங்கர் ஆட்சிக்கு உட்படுத்தி, வட பாண்டி நாட்டை ஆண்டுகொண்டிருந்த சுந்தர பாண்டியனையும் தெலுங்க அரசனுக்குக் கப்பம் கட்டிக்கொண்டுவரும்படி செய்தான். 1319-ல் சுந்தர பாண்டியன் இறந்தான். அவனுக்குப் பின்னர், வீர பாண்டியன், நாட்டைச் செப்பனிட்டு முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவந்துவிடவேண்டுமென்று ஆன முயற்சிகளைச் செய்தான். அவ்வாறு அவன் ஒருவழியாக நாட்டை ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கையில் இரண்டாவதுமுறையும் ஒரு முஸ்லீம் படையெழுச்சி கிளம்பி அவனை நெருக்க ஆரம்பித்தது. இந்த இரண்டாவதுமுறை வந்த முஸ்லீம் படை கொள்ளையடிப்பதற்கென்றே டில்லி சுல்தானால் அனுப்பப்பட்டிருந்தது. அதற்குப் படைத் தலைவனாயிருந்த குஸ்ருகான் வழிநெடுகிலும் ஒரு கோயிலையாவது உருப்படியாய் விடவில்லை. அவன் பாண்டிநாட்டையும் பாழ்படுத்தி, முடிந்தவரையில் கொள்ளையடித்துக்கொண்டு திரும்பினான்.

இவ்வாறு நொந்து நலிவுற்ற தமிழ் மக்கள், மீண்டும் மூன்றாவது முறையாக 1330-ல் மற்றொரு முஸ்லீம் படையால் தாக்குண்டனர். புதிதாக டில்லிக்குப் பேரரசனான மகம்மது-பின்-துக்ளாக் என்பவன் தென்கோடி நாடான பாண்டியைத் தன் அரசோடு சேர்த்துக்கொள்ள ஆவல்கொண்டவனாய் ஜலாவுதீன்-அஷன்-ஷா என்னும் தன் படைத்தலைவனைப் பாண்டிநாட்டின்மேல் ஏவினான். முஸ்லீம் படை மிக எளிதில் தமிழர் படையை வென்று மதுரையைக் கைப்பற்றியது. மதுரைக்கு முதல் முஸ்லீம் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஜலாவுதீன், விரைவில் தானே தனி

முறையில் சுல்தானாக இருந்து ஆட்சிபுரியத் தொடங்கி, மதுரைக்குச் சுற்றிலுமுள்ள பல இடங்களையும் சிறிது சிறிதாக வென்று கைக்கொண்டு பலவானாகிவிட்டான்.

மதுரை சுல்தான்களுக்குத் தலைநகரைச்சார்ந்த சுற்றுவட்டாரத்தில்மட்டும் அவர்கள் அதிகாரம் செல்லக்கூடியதாய் இருந்ததே தவிர, மற்ற நாட்டுப்புறங்களின் உட்பகுதிகளில் பாண்டிய மரபைச் சார்ந்த இளவரசர்களே தனித்தனி முறையில் ஆட்சி செலுத்திவந்தனர். இவ்வாறு, தலைநகரில் ஒருவர் அதிகாரமும், ஒதுங்கிய நாட்டுப்புறங்களின் உட்பகுதிகளிற் பலர் அதிகாரமுமாய், நாட்டிற் பல பிளவுகள் ஏற்பட்டன. அதனால் நாடெங்கும் அடக்குமுறையும் ஒழுங்குத் திட்டமும் ஏற்படுவதற்கு வழியில்லை. மதத்தின் பெயரால் முஸ்லீம்கள் செய்த கொடுமைகளுக்கும் கணக்கில்லை. தமிழ்நாடு சீரழிந்து அல்லோல கல்லோலப்பட்டது.

மதுரை சுல்தான்களுடைய கொடுங்கோலாட்சி சில ஆண்டுகளே நிலைநின்றதெனினும், எத்தகைய கொடுமை இழைத்து வந்ததென்பதை மதுரா விஜயம் என்னும் வடமொழிக் காவியத்தில் விளங்கக் காணலாம். அந்நூல் பாண்டி நாட்டிலிருந்து முஸ்லீம் ஆட்சியை எந்த வீரன் ஒழித்தானோ, அந்த வீரனுடைய மனைவியின் கையால் எழுதப்பட்டுள்ளது. கோயில்கள் தகர்ந்து பாழடையவும் அங்கு நரிகள் ஊளையிட்டுத் திரிந்தனவாம். அவ்வேளையில் காவிரியாறுகூடப் பெருக்கெடுத்துத் தமிழ் நாட்டை அழிக்கத் தலைப்பட்டது. நாடெங்கும் ஊர்ப்புறங்களில் முரட்டுத் துருக்கர்களின் மிரட்டற் பேச்சு; வெந்து எரிகின்ற பிணங்களின் புலால் நாற்றம். ஓர் ஒழுங்கோ, நீதியோ கிடையாது. புன்மையுற்ற திராவிட மக்களின் முகத்தில் ஏக்கமே குடிகொண்டிருந்தது.

ஆயினும், பாண்டியகுல இளவரசர்கள் முஸ்லீம் பகைவர்களுடன் போராடுவதை விடவில்லை. போசளர்களோடு ஒத்துழைத்துப் போராடுவாராயினர்.

சுமார் 1340-ல் மதுரை சுல்தானால் கண்ணனூர்க்கொப்பம் என்னும் இடத்தில் போசள அரசனான மூன்றாம் வீர வல்லாளன் என்பவன் முறியடிக்கப்பட்டான். அதிலிருந்து இருபது ஆண்டுகளாக முஸ்லிம்களைப் பாண்டிநாட்டிலிருந்து கிளப்பவே முடியாது போலத் தோன்றியது.

ஆனால் அந்த வேளையில், துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள கன்னட அரசாகிய விஜய நகரம் முஸ்லீம் எதிரிகளைத் தொலைப்பதற்காக சிறு சிறு கன்னட அரசுகளையும் தெலுங்க அரசுகளையும் ஒன்று சேர்த்துப் பலப்படுத்திக்கொண்டு, தெற்கு நோக்கியே வந்துகொண்டிருந்தது. சுமார் கி. பி. 1364-ல் தமிழப் பகுதியாகிய காஞ்சி என்ற தொண்டை நாடும் விஜயநகரப் பேரரசின்கீழ் வந்து சேர்ந்தது. விஜயநகரப் படைத்தலைவன் குமார கம்பண்ணன் என்பான் காஞ்சியில் தங்கியிருந்தபொழுது முஸ்லீம் கொ



டுங்கோன்மையை ஆற்றாத பாண்டியர்கள், அவனிடம் சென்று முறையிட்டனர். வீரபாண்டியன் என்பவன் அப்பொழுது தென்பாண்டிநாட்டை ஆண்டுகொண்டிருந்தான். அவனுடைய ஆட்சியின் முப்பத்தொன்றாவது ஆண்டில் செதுக்கப்பட்ட ஒரு கோயில் கல்வெட்டில், குமார கம்பண்ணன் மதுரைக்குப் படையெடுத்துவந்து சுல்தான் ஆட்சியை ஒழித்த வரலாறு கூறப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில் சொல்லியபடி, "காலமோ துலுக்கர்கள் காலமாய் இருந்தது; கோயில் நிலங்களுக்கும் வரி விதிக்கப்பட்டது; எனினும் கோயிற் பூசைகள் குறைவற நடந்தேறவேண்டும். ஆதலால் ஊர்க்குடியான மக்கள், முறை வைத்துக்கொண்டு, கோயில் நிலங்களைப் பயிரிட்டுவந்தனர். இந்த வேளையில் கம்பண்ண உடையார் தோன்றி, துலுக்கர்களை ஒழித்து, ஒழுங்குமுறைகொண்ட அரசாட்சியை நாடெங்கும் நிலவச்செய்து, முன்போல் கோயில் வழிபாடுகள் முறையாய் நடந்துவருவதைக் கண்காணிப்பதற்காகப் பல நாயக்கர்களையும் நியமித்தருளினார்." எட்டு ஆண்டுகள் வரையில் முஸ்லீம்களோடு போர் நடந்துவந்தது. அதன் பின்னர், 1378-ல் மதுரை பிடிபட்டு, முஸ்லீம் படைகளும் திராவிட நாட்டினின்றும் துரத்தப்பட்டன.

## விஜய நகரும், ஈழமும் :—

இலங்கையின் வடபகுதி தனியாட்சி பெற்றுத் தமிழ்நாடான வரலாற்றினை நாம் முன்னரே பார்த்தோம். சுமார் கி. பி. 1310 லிருந்து அனுராதபுரம், பொலன்னறுவா என்னும் இரு பழைய நகரங்களும் தமிழர் கையிலிருந்து வந்தன. இலங்கையிலுள்ள இரண்டு அரசுகளுள் யாழ்ப்பாணம் மிக வலிமையுடையதாய் விளங்கியது. தமிழ் நாட்டினுள்ளே முஸ்லீம்கள் நுழைந்து மதுரையைக் கைப்பற்றியதன் ஏதுவாகப் பல தமிழ் மக்கள் இலங்கைக்குச் சென்றிருத்தல்கூடும். அவ்வாறு சென்றவர்களிற் சிலர் தெற்கேயுள்ள சிங்கள அரசர்களின்கீழ் வேலைக்கமர்ந்தாலும், பெரும் பகுதியினர் தங்கள் இனத்தவரிடை யாழ்ப்பாணத்திலேயே தங்குவாராயினர். சுமார் கி. பி. 1340-ம் ஆண்டுக்குள் தெற்கே புத்தளம் வரையில், சிவனொழிபாதம் உட்பட, யாழ்ப்பாண நாட்டின் ஆட்சி பரவிவிட்டது. சிங்கள அரசர்கள் குறுநில மன்னர் நிலைக்கு ஒடுக்கப்பட்டார்கள். மூன்றாம் விக்கிரமபாகு என்பான் (1360—1374) யாழ்ப்பாண நாட்டிற்குத் திறை செலுத்திவந்ததாக எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால் சுமார் 1385-ல் சிங்களர்கள் யாழ்ப்பாண நாட்டின் தலைமையினின்றும் தங்களை விடுவித்துக்கொண்டனர். கொழும்புக்குத் தெற்கேயுள்ள சதுப்பு நிலத்தில் அளகக்கோனார் என்னும் ஒரு படைத்தலைவன் வலிய அரண் ஒன்றை வகுத்துக்கொண்டு யாழ்ப்பாண நாட்டின் ஆணையை எதிர்க்கலுற்றான். யாழ்ப்பாண மன்னனிடமிருந்து தன்னிடம் திறை வாங்குவதற்காக வந்த தூதர்களைப் பிடித்துத் தூக்கிலிடுவித்தான். உடனே போர் தொடங்கியது. யாழ்ப்பாண நாட்டுப் படைகள் நிலத்தின் வழியாகவும், கடலின் வழியாகவும் வந்து தாக்கின. நிலப் படை

கள் மாத்தலை என்னும் இடத்தருகே வந்துவிட்வும், சிங்கள அரசன் கம்போலா என்னும் தன் தலைநகரிலிருந்து ஓட்டம்பிடித்தான். ஆனால், கடல்வழியாக வந்த யாழ்ப்பாணப் படைகளின் கதி முற்றிலும் மாறாக முடிந்தது. அளகக்கோனார் அப்படைகளைக் கொழும்பிலும், பானைத்துறையிலும் எதிர்த்துத் தாக்கிச் சிதற அடித்துவிட்டான். புவனேகபாகு என்பவனைத் தோற்கடித்த ஜயவீரசிங்கை ஆரியன் நாளிலிருந்து இலங்கைத்தீவு முழுவதிலும் தன் அதிகாரம் செலுத்திவந்த யாழ்ப்பாணத்தின் முதன்மை இவ்வாறு முடிவடைந்தது.

கி. பி. 1410-ல் சீனநாட்டிற்கு சிறை செய்து கொண்டுபோகப்பட்ட அளகக்கோனாரின் உறவினனான வீர அளகேசுவரன் என்னும் சிங்கள மன்னன் இந்து மதத்தினனான ஒரு சோழ நாட்டான் என்று சீனர்களால் சொல்லப்படுகிறது. மயூரசந்தேசம் என்னும் சிங்கள நூலிலும் அவன் மகேசுவரனான சிவனுக்கு அடியவன் என்றே கூறப்படுகிறது. இப்பெயர்பெற்ற சிங்களக் குடும்பம் தென் இந்தியாவிற் காணப்படும் கோனார் சாதியிலிருந்து தோன்றியிருக்கலாம் என்று அவர்கள் பெயரின் மூலமாய் அறியலாம். மலையாளத்திலுள்ள வஞ்சிபுரம் என்னும் இடத்திலிருந்து அவர்கள் வந்ததாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சுமார் 1385-ல் விஜயநகர் மன்னனின் மகனான விருபாட்சன் ஈழநாட்டைப் படையெடுத்தான். அவன் இலங்கையை வென்றதாகக் கூறிக்கொள்கிறான். ஆனால் உண்மையில் அவன் படையெடுத்தது யாழ்ப்பாணமேயாகும். இலங்கையிலிருந்துவந்த இரண்டு அரசுகளுள்ளும் யாழ்ப்பாணத்தரசே முதன்மையாய்த் தோன்றியதுபோலும். யாழ்ப்பாணமும் விஜயநகர ஆட்சியின் கீழ் வந்ததனால் திராவிடநாட்டு அரசுகள் அனைத்தும் ஒரு தனித் தலைமை அரசின்கீழ் அடங்கியிருந்தன எனலாம். இவ்வாறு திராவிடநாட்டு இந்து அரசுகள் எல்லாம் விஜய நகரப் பேரரசின் கீழ் ஒரு கூட்டுத்தொகுதியாய் இணைந்து நின்று புயவலிபடைத்த முஸ்லீம்களுடைய போர்முனைப்பை ஓர் இரண்டரை நூற்றாண்டுகளின் கால அளவுக்கு வெற்றிகரமாய்த் தடுத்துவரலாயின.

## யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சி :—

சுமார் 1415-ல் ஆறாம் பராக்கிரமபாகு என்பவன் சிங்கள மன்னனாக வந்தபொழுது யாழ்ப்பாண நாட்டின் தலைமையாட்சி இலங்கையின் மற்றப்பகுதிகளில் செலுத்தப்படாது நின்றுவிட்டது. 1450-ம் ஆண்டளவில் பராக்கிரமபாகு இலங்கைத்தீவு முழுவதையும் தன் ஆட்சிக்கு உட்படுத்த விரும்பினான். அதற்குப் பொருத்தமாய்ச் செம்பகப்பெருமாள் என்னும் ஓர் இளம் படைத்தலைவன் அவனிடத்தில் இருந்தான். அவ்வீரன் மலையாளத்திலுள்ள ஒரு தமிழ்ப் பண்டாரத்தின் மகன். அரசனுக்குத் தத்துப்பிள்ளையாக வந்து சேர்ந்தவன். அவனுடைய உடல்வலியின் ஆற்றலும், குதிரையேற்றத் தேர்ச்சியும் மன்னன் மனதைக் கவர்ந்தன. அதனால் யாழ்ப்பாணத்தைப் படையெடுப்பதற்கு அவனே சிங்க



ளப் படைத்தலைவனாய் நியமிக்கப்பட்டான். சிங்களத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் நடுவே எல்லைப்புற நாடாக விளங்கிய வன்னி என்னும் இடத்தில் தமிழ் இனத்தவராகிய வன்னித் தலைவர்களின் உதவியைக்கொண்டு முண்டி எதிர்த்ததால், செம்பகப்பெருமாள் தனது முதல் பாய்ச்சலில் வன்னியளவோடு நிற்க வேண்டியதாயிற்று. ஆனால் அவன் விடாது இரண்டாம் முறையும் படையெடுத்து, யாழ்ப்பாணத்தின் உள்ளே நுழைந்து தலைநகரைக் கைப்பற்றினான். பின்னர் அவனே யாழ்ப்பாண நாட்டு மன்னனாய்ப் பதினேழு ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான். 1467-ல் பராக்கிரமபாகு இறந்ததும், செம்பகப்பெருமாள் கோட்டை என்னும் இடத்திற்கு விரைந்து சென்று, சிங்கள அரியணையைக் கைப்பற்றி, புவனேகபாகு என்னும் பெயரோடு முடி புனைந்து கொண்டான்.

இதன் பிறகு திரும்பவும் யாழ்ப்பாணம் தனியுரிமையை அடைந்தது. 1543-ல் சங்கிலி எனப்படும் செகராசசேகரன் என்பவன் யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த பொழுது, கடல் வாணிகத்துறை முகப் பகுதிகளைக் கைக்கொண்டிருந்த போர்த்துக்கீசியர் அவனைத் தங்களுக்குக கீழ்ப்படியச் செய்தனர். இயல்பாகவே மிகக் கொடுமை வாய்ந்தவனான சங்கிலி, போர்த்துக்கீசியப் பாதிரிமார்களால் தங்கள் மதத்திற்கு மாற்றப்பட்டிருந்த கிறிஸ்துவர்களை அடிக்கடி துன்புறுத்தி வந்து, அவர்களில் 700 பேரை மன்னார் என்னும் இடத்தில் படுகொலைக்கு ஆளாக்கினான். இவ்வாறு சங்கிலியின் செய்கைகளே போர்த்துக்கீசியர் யாழ்ப்பாண நாட்டுக் காரியங்களில் தலையிடுவதற்கு ஒரு நல்ல நிமித்தமாகிவிட்டன.

1591-ல் போர்த்துக்கீசியர் யாழ்ப்பாண நாட்டைப் பிடித்து, அங்கே பரராசசேக்ரன் என்னும் இளவரசனை அரியணை யேற்றினர். அவன் 1615 வரை நன்றாக ஆட்சி புரிந்தான். அவன் இறந்தவுடன் அவன் உறவினனாகிய சங்கிலி என்பான் ஒருவன் அரியணையைக் கைப்பற்றிக் கொண்டு, போர்த்துக்கீசியரை நாட்டை விட்டுத் துரத்த முயன்றான். முதலில் அவனுக்குச் சிறிது வெற்றி கிடைத்து வந்தது. அதற்குள் போர்த்துக்கீசியர் செவ்வனேயமைந்த ஒரு பெரிய படையை ஒலிவேரா பிலிப்பு என்னும் படைத் தலைவன் வசம் கொடுத்து அனுப்பினர். தமிழப் படை வீரர்கள் நல்ல முறையிலே போரை நடத்தியும், ஐரோப்பியரின் உயர்தரப் படைகளுக்கு ஆற்றாது உடைந்தனர். எதிரிகள் சங்கிலியைப் பிடித்துக் கோவா என்னும் இடத்திற்குக் கொண்டு போய், அங்குக் கொன்று விட்டனர். இவ்வாறு தமிழரின் தனியாட்சி உரிமை இலங்கையில் மாய்ந்தொழிந்தது.

## அத்தியாயம்—5


### பிந்திய சோழ பாண்டியர் காலத் தமிழ் இலக்கியம்:—

தமிழ் மொழியில் பக்திச் சுவை ததும்பும் பாமாலைகள் பாடியருளிய சைவ நாயன்மார்களுக்கும் வைணவ ஆழ்வார்களுக்கும் பின், அதே முறையில் பாசுரங்கள் இயற்றும் சேந்தனார், திருமூலர், நக்கீரர் நம்பியாண்டார் நம்பி போன்ற பல புலவர்கள் தோன்றினர். அவர்களுள், நம்பியாண்டார் நம்பி முதலாம் இராஜராஜன் காலத்தில் வாழ்ந்தவர். திருமூலர் திருமந்திரம் பாடினார். ஒன்பது சிவனடியார்கள் பாடிய பாடல்களைத் திருவிசைப்பா என்னும் பெயரால் தொகுத்திருக்கின்றனர். அவையெல்லாம் திருமுறைகளாக வகுக்கப்பட்டு முன்னரே ஏற்பட்டுள்ள பக்திப் பாசுரங்களோடு சேர்க்கப்பெற்றுள்ளன.

இராஜராஜனுக்குப் பிறகு குலோத்துங்கன் காலம் வரையிருந்த சோழ மன்னர்கள் நாடு பிடிப்பதிலேயே நாட்டமாய் இருந்து விட்டதால் சிறந்த இலக்கிய நூல்களாக ஒன்றும் அவர் காலத்தில் வெளி வரவில்லை. ஆனால் இராஜேந்திரன் வட இந்தியாவில் பல பகுதிகளையும் வென்று கைக்கொண்ட பொழுது, வடக்கே இருந்து கல்வி கற்ற பார்ப்பனர்களைத் திரள் திரளாகக் கொண்டுவந்து தமிழ் நாட்டிற் குடியேற்றி வைத்தான் என்பதை நாம் மறந்து விடலாகாது.

இவ்வாறு வந்த பார்ப்பனர்கள் தமிழை சமஸ்கிருத மயமாக்குவதற்கு வேண்டியவற்றையெல்லாம் செய்து வைத்தனர். அதன் விளைவைக் குலோத்துங்கன் காலத்தெழுந்த இலக்கிய நூல்களில் நாம் நன்கு காணலாம்.

சங்க காலத்திற்குப் பின் தோன்றிய புலவர்களுள் மிகவும் சிறந்து விளங்குகின்றவராகிய கம்பர் அக்காலவளவில் தோன்றியவர்தான். அவர் தாம் எழுதிய இராமாயண நூலுக்கு வடமொழி நூலில் இருந்தே கதையை எடுத்துள்ளார். பெருந்தேவனார் பாடிய பாரதவெண்பா, புகழேந்தியார் பாடிய நளவெண்பா, ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணி போன்ற நூல்கள் எல்லாம் வடமொழி இதிகாசங்களையும் புராணங்களையும் தழுவியே எழுதப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து தமிழ்ப் புலவர்கள் எத்துணை அளவுக்கு வட மொழியை அடுத்து வாழத்தொடங்கி விட்டார்கள் என்பது தெரிய வரும். ஆனால் அதற்குப் புறனடையாக சயங்கொண்டார் மட்டிலும் தமது கலிங்கத்துப் பரணியைப் பாடினார். அது முதற் குலோத்துங்கன் கலிங்கத்தை வென்ற புகழினை விரித்துக் கூறுகிறது. ஆதலால் அந்நூல் சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படக்கூடியதாய் தமிழ் மக்கள் வீரப் புகழ்படைத்து விறெய்திய அக்காலத்தை விளக்கமுறப் புலனுறுத்தும் ஆடிபோல் மிளிர்கின்றது.



மதுரை நாயக்கர் அரண்மனை

சமயத் தொடர்புடைய நூல்களுள், சேக்கிழார் எழுதிய பெரிய புராணம் மிகவும் முக்கியமானது. வடமொழிப் புராணங்களில் எதையும் மிகைபடுத்திக் கூறுகின்ற வழக்கம் தமிழ் நூல்களிடையும் நுழையத் தொடங்கியது. பெரிய புராணத்தில் நாயன்மார்களுடைய அற்புத வாழ்க்கைச் சரிதைகள் புராண நடையில் எழுதப்பட்டிருப்பினும், நமக்குரிய பெருமக்களாக பத்திமிகுந்த அடியார்களைப் பற்றி நாம் தெரிந்துகொள்வதற்குப் பெரிய புராணத்தைத் தவிர வேறு ஆதாரம் இல்லாதிருக்கிறது.

இவை தவிர பல இலக்கண நூல்களும் அக்காலத்தில் எழுதப்பட்டன. அவற்றுள் இப்பொழுது நன்கு வழங்கப்படும் நன்னூல் என்பது, தொல்காப்பியத்தைப் பின்பற்றியதேயாயினும், சுருங்கக்கூறி விளங்கவைப்பதால் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியது. தமிழ் மூவேந்தர்களின் வீழ்ச்சிக்குப்பின், தமிழ் மொழி தெலுங்கு கன்னடம் வடமொழிகளுக்கும் தாழ்ந்த நிலையை எய்தியது. அதனால் மதத்தைப் பற்றிப் பாட வந்த புலவர்கள் பழந் தமிழ்ச் செய்யுள் நடை மரபுகளைக் கைவிட்டு, கர்நாடக இசைத்துறைப் பாடல்களைத் தெலுங்கில் பாடத் தொடங்கிவிட்டனர்.

அந்நிலை வந்துங்கூட, எண்ணிறந்த புலவர்களும் சமயப்பெரியார்களும், திருநெல்வேலி பகுதியிலுள்ள பாண்டியர் குலச் சிற்றரசர்களும் விஜயநகர ஆட்சிக்காலத்திலும் அதற்குப் பின்னரும் இல்லாமற் போய்விடவில்லை. ஆனால் அன்னவர்கள் தங்களுக்குரிய சிறப்பை அடைவதற்கு வழியில்லாமற் போயிற்று. அத்தமிழ்ப் பெரியார்களின் பெயர்கள் மங்கி மறைந்து விடாதபடி விளக்கமுறுத்துவதற்கான வள்ளல்களும் முன்வந்தனர். இராமநாதபுரம் அரசர் பாண்டித்துரைத் தேவர் நாலாவது தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நிறுவினார்கள். செட்டி நாட்டரசர் இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அமைத்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்க் கலைகள் செழித்தோங்கி வளர்வதற்கு ஏற்ற நிலைக்களமாய் விளங்கி வருகிறது. ஆனால், சேர சோழ பாண்டியர்களின் பழந் தமிழ்க்குல மரபுகள் மாய்ந்த பின்றை, தொல்லாணை நல்லாசிரியர் புணர் கூட்டுண்ட தண்டமிழ் வளமும் குறைவதாயிற்று.

# அத்தியாயம்—6

## நாயக்கர் ஆட்சியும் ஆங்கிலேயர் ஆட்சியும் :—

தென் இந்தியாவிலிருந்து முஸ்லீம் படைகள் வெளியேற்றப்பட்டு விஜயநகர இராச்சியம் வேரூன்றியதிலிருந்து, இந்தியாவிலுள்ள இந்து நாடுகளுக்குள்ளே திராவிடர்களுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டது உண்மையே. ஆனால் தமிழ் மக்களின் அளவில், அவர்கள் பெருமை குறைந்துவிட்டது என்றே சொல்லவேண்டும். திராவிட இனத்தவருக்குள் தெலுங்கரும் கன்னடருமே முஸ்லீம் படையெடுப்பை ஊக்கத்துடன் விடாது போராடி எதிர்த்தவர்கள். தமிழர் தாழ்ச்சியுற்றுப் பின்னடைந்து சோர்வாராயினர். விஜயநகரப் பேரரசின்கீழ் பாண்டியரும் சோழரும் மீளதம் ஆட்சியைப் பெற்றது உண்மைதான். ஆயினும், அவர்களின் படைப் புகழ் எல்லாம் பறந்தொழிந்தது. ஒரு வலிமைகொண்ட பேரரசின்கீழ் அவர்கள் குறுநில மன்னரின் நிலைக்குக் குறுகிவிட்டனர். விஜயநகர முதன்மையாட்சி முறிந்துவிடாதபடி தமிழ் நாட்டின் பல இடங்களிலும் தெலுங்க வீரர்களும் கன்னடத் தலைவர்களும் நிலையாய் அமர்த்தப்பட்டார்கள். தற்கால இந்தியாவிலுள்ள உள்நாட்டு மன்னர்களுக்கு ஆலோசனையாளர்களாக ஆங்கில அதிகாரிகள் அமர்த்தப்பட்டிருப்பதுபோல், மதுரை மன்னனுக்கும் ஆலோசனையாளனாக எல்லாவித அதிகாரங்களையும் பெற்ற ஒரு தெலுங்கன் நியமிக்கப்பட்டான். அரசனுடைய அதிகாரம் அனைத்தையும் சிறிது சிறிதாக இத்தெலுங்கத்தலைவர்கள் தாங்களே கைப்பற்றிக்கொண்டு, கி. பி. 1483-ல் மதுராபுரிமா நாயக்கர் என்று தங்களுக்குப் பெயர் கொடுத்துக் கொண்டார்கள்.

அதற்குப் பின்னர் விஜயநகரப் பேரரசனுக்குக் கீழ்ப்படிந்திருந்த சோழபாண்டியர்களைப்பற்றி ஒன்றுமே தெரிவதற்கில்லை. தமிழ் நாட்டு அரசியல் என்பது அறவே மறைந்து, விஜயநகரக் காரியங்களுக்கே எங்கும் முதன்மை கொடுக்கப்பட்டது.

## திருநெல்வேலிப் பாண்டியர்கள் :—

முஸ்லீம் ஆட்சியின்போது, அவர்களை எதிர்த்துக் கிளம்பிய இளவரசர்களுக்கெல்லாம் தென் பாண்டிய நாடே அரணாக விளங்கியது. விஜயநகர ஆட்சி ஏற்பட்ட பிறகும் அந்நிலை மாறவில்லை. கி. பி. 1401 முதல் 1422 வரை ஜடாவர்மன் விக்கிரம பாண்டியன் என்னும் அரசன் இராமநாதபுரத்தையும், அதற்கு தெற்கேயுள்ள பகுதிகளையும் ஆண்டுவந்தான். கி. பி. 1422 முதல் 1462 வரையில் தென் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவன் ஒரு பெரிய எதிர்ப்பை வெற்றியுற நடத்திவந்தான். அவன் விஜயநகர முழு வலியையும் அசைத்து, சில ஆண்டுகளாக மதுரையைக் கைப்பற்றி வைத்தி



ருந்தான். அவனுக்குக் கொற்கை வேந்தன் என்னும் பெயரும் உண்டு. ஆதலால் தென்கரையோரத்திலுள்ள இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் அவன் கைவசமே இருந்துவந்திருக்க வேண்டும், ஆனால் முடிவில் அவன் விஜயநகரப் படைத் தலைவன் நரசநாயக்கனால் முறியுண்டு, தெற்கே தனது பழைய அரணாகிய திருநெல்வேலிப் பகுதிக்கு ஒதுக்கப்பட்டான்.

பராக்கிரம பாண்டியன் என்னும் மன்னன் பத்திச் செல்வம் பழுதறப் பூண்டு விளங்கினான். தான் பிறந்த உயர் பெருங்குலமானது சிறுமையுற்று ஓய்ந்திருந்த நாளிலும், தென்காசியில் ஒரு பெரிய கோயிலைக் கட்டியதோடு, பழங்கோயில்கள் பலவற்றையும் புதுப்பித்துப் பெருமைகொண்டான்.

பாண்டிய குலத்தின் இவன் கிளையினர் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு தென்பகுதியை சுமார் 1652 வரையில் செங்கோலோச்சி வந்தனர். அதன் பின்னர் அவர்களுடைய வரலாறு யாதெனத் தெரிவதற்கியலாதபடி மறைந்து போயினர். அவர்கள் தங்கள் கல்வெட்டுகளில் தனியுரிமைகொண்ட மன்னர்களைப்போல் கூறிக்கொள்ளினும் உண்மையில் அவ்வாறு அவர்கள் இருந்ததில்லை. அடிக்கடி விஜயநகரப் பேரரசன் அவர்கள் காரியங்களில் தலையிட்டுவந்தான். அதுபோல் 1534-ல் விஜயநகரத்திற்குக் கீழ்ப்படிந்திருந்த திருவாங்கூர் சிற்றரசன், தென் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த ஸ்ரீவல்லபன் என்பவனைத் தாக்கியபொழுது, பேரரசனான அச்சுதராயன் தென்கோடிக்குப் படைகளுடன் விரைவிற் கிளம்பி வந்து தடுக்கவேண்டியதாயிற்று. இதன் விளைவாக அச்சுதராயன் ஒரு பாண்டியர் குலப்பெண்ணை மணந்துகொண்டான்.

பராக்கிரம பாண்டியனுடைய வழிவந்தவர்களுக்கு அரசியலில் உண்மையாக ஓர் அதிகாரமும் இல்லாதிருந்தது. அவர்கள் தங்களுடைய பொழுதையும் பொருளையும் கோயில்களும் மன்றங்களும் கட்டுவதற்கே செலவிட்டனர். இன்னும், அவர்கள் கல்வித்துறையிற் கருத்துடையவர்களாய்ப் புலவர்களைப் போற்றி வந்தனர். இவ்வாறு சில காலம் மதுரைக்குப் பதிலாகத் திருநெல்வேலி தமிழ்க் கலைப்பண்பாடுகளுக்கு முதலிடமாக விளங்கியது.


## நாயக்கர் தலம் :—

சுமார் கி. பி. 1559-ல் வீரசேகரன் என்னும் சோழ அரசன் அப்பொழுது ஆண்டு வந்த சந்திரசேகரன் என்னும் பாண்டியன் மேற் படையெடுத்து மதுரையினின்றும் அவனைத் துரத்தினான். அதை அறிந்த விஜயநகர மன்னன் வலிந்து போர் தொடுத்த சோழனை ஒறுப்பதற்காகத் தன் படைத் தலைவனான நாகம நாயக்கனை அனுப்பினான். ஆனால் நாகம நாயக்கன் மதுரையைக் கைப்பற்றியவுடன், தனக்கிட்ட ஆணையின்படி, பாண்டியனை மீண்டும் அங்கு அரசு கட்டிலில் அமர்த்திவைக்காமல், தானே அரசனாகிவிடப்பார்த்தான்.

இதை அறிந்த விஜயநகரப் பேரரசன் கனன்று பொங்கி, நாகமனுடைய மகனை விஸ்வநாதன் தலைமையிலேயே ஒரு படையை அனுப்பி, அந்நன்றி கெட்ட நாகமனைக் கொன்றுவது கொண்டாவது மீளும்படி ஏவினான். அவ்வரிய காரியத்தைச் செய்து முடிக்க வேறு ஒருவரும் இல்லாதது கண்டு, அதை முற்றுவிக்க விசுவநாதன் தானாகவே வலிய முன்வந்ததாகச் சொல்லப்படுகிறது. விசுவநாதன் தன் தந்தையோடு பொருது வெற்றியுடன் அவனைச் சிறை செய்து கொற்றத் தலை நகருக்கு கொண்டுவந்தான். பின்னர் அவ்வீரமகனின் வேண்டுகோளுக் கிரங்கிப் பேரரசனான கிருஷ்ண தேவராயன் நாகமனை மன்னித்தான். பிறகு அம்மன்னன் விசுவநாதனை மதுரையில் தனது பிரதிநிதியாக வீற்றிருந்து வழிவழியாக ஆண்டுவரும்படி நியமித்துவிட்டான்.

ஆனால் விசுவநாதன் பிரதிநிதிக்கும் மேலான அதிகாரங்களையே பெற்றிருந்தான். உண்மையில் அவனே பாண்டி நாட்டு அரசன். இத்தகைய ஏற்பாடு திருநெல்வேலியில் இருந்து வந்த பாண்டிச் சிற்றரசர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்களில் ஐவர் ஒன்றுசேர்ந்துகொண்டு விசுவநாத நாயக்கனை எதிர்த்தனர். தெற்கே கிளம்பி வந்த மதுரைப் படைகளைப் பாண்டியர்கள் நேர் நின்று போர் புரியாது மறைமுகமாய்த் தாக்கியதால், நாயக்கனின் படைகள் நசுக்குண்டு நலிவெய்தின. இவ்விதம் போரை இழந்த விசுவநாதன் பாண்டியர்களைத் தனித் தனியே நேர்முகப் போருக்கு அறைகூவி அழைத்து ஒவ்வொருவரையும் வென்றான். பின்னர் ஒருவாறு அவர்களைத் தணிவித்து நாடெங்கும் அமைதி நிலைக்கச் செய்துவைத்தான். பாண்டி நாட்டை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாளையத்தையும் ஒவ்வொரு தலைவனிடம் ஒப்புவித்தான். அத்தலைவனுக்குப் பாளையக்காரன் என்று பெயர். விசுவநாதன் பாண்டி நாட்டிற்குத் தன்னுடன் அழைத்து வந்திருந்த வீரர்களான தெலுங்கர்களுக்கும், கன்னடர்களுக்கும் தகுந்த கைமாறு செய்யக்கருதி, அவர்களிற் பலரையும் பாளையக்காரர்களாக நியமித்தான். ஆனால் தெற்கே எட்டியுள்ள இடங்களைக் கட்டுக்கடங்கா வீரர்களாய் விளங்கி நின்ற மறவர் தலைமக்களிடமே நம்பி விட்டு விடும்படியாக நேர்ந்தது.

விசுவநாதன் கி. பி. 1563 வரை ஆட்சி புரிந்தான். அதன் பின் அவன் மகன் கிருஷ்ணப்ப நாயக்கன் அரசனானான். அவன் வந்த இரண்டு ஆண்டுகளுக்கெல்லாம் விஜயநகரம் முஸ்லிம்களால் தாக்குண்டு அழிக்கப்பட்டது. அதனால் சந்திரகிரியைத் தலைநகராகக்கொண்டு, விஜயநகரப் பேரரசன் வாழவேண்டிவந்தது. அவனுக்கு மைசூர், தஞ்சை, மதுரை என்னும் மூவிடத்திருந்த அரசர்களும் உண்மையாகவே இருந்தார்கள். கிருஷ்ணப்பன் இலங்கையைப் படையெடுத்து, கண்டி அரசனைப் பட்டாளம் அன்ற இடத்தில் வைத்து வென்றதாகக் கூறப்படுகிறது.



மதுரை தெப்பக்குளம்

கி. பி. 1573 லிருந்து கிருஷ்ணப்பனின் இரு குமாரர்களான கிருஷ்ணப்பனும் விசுவநாதனும் ஒன்றாக இருந்து பாண்டியை ஆண்டு வந்தனர். பின்னர் 1595-ல் கிருஷ்ணப்பனின் இருமக்களான எலிங்கிய நாயக்கனும் விசுவப்பநாயக்கனும் சேர்ந்து 1602 வரை ஆட்சி செலுத்தினர்.

கி. பி. 1602-ல் எலிங்கிய நாயக்கனின் மகன் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கன் அரசன் ஆனான். அவன் இராமேசுவரத்தையும் அதைச் சேர்ந்த பகுதியான சேது நாட்டையும் ஒரு பாண்டியர் குல வழித்தோன்றலுக்கு அளித்து, சேதுபதி என்னும் பட்டமும் சூட்டி, எழுபத்திரண்டு பாளையங்களுக்கும் தலைமையுடையவனாக ஆக்கி வைத்தான். அவன் 1609-ல் முத்துவீரப்பன், திருமலை, குமாரமுத்து வீரப்பன், என்ற மூன்று குமாரர்களை வைத்துவிட்டு இறந்தான். அவர்களுள் மூத்தவனான முத்து வீரப்ப நாயக்கன் 1623 வரை ஆட்சி புரிந்தான். அவன் காலத்தில் மைசூர் அரசன் மதுரையைக் கைப்பற்ற முயற்சிஎடுத்தான். ஆனால் எழுபத்திரண்டு பாளையக்காரர்களும் சேர்ந்து மைசூர்ப் படைகளைக் கெட்டழிந்திடச் செய்தனர். அவ்வேளையில், பெலன் குன்றியிருந்த விஜயநகரப் பேரரசை முஸ்லீம்கள் மேன்மேலும் தகைக்கலுற்றனர்.

ஆதலால், திருமலை நாயக்கன் மதுரைப் பட்டத்தைப்பெறுகின்ற நாளில், விஜயநகர மன்னன் மிகவும் வலிகெட்டு மெலிவெய்தியதால், திருமலை நாயக்கன் அவனுக்குப்பணிவதை நிறுத்திவிட்டான். பாண்டி நாடும் முன்போல செல்வம் பொழிந்து செழிப்புற தொடங்கவும் திருமலை வணங்கா முடிமன்னனாய்த் தனியாட்சி புரிந்து வந்தான். ஆனால் முஸ்லீம்களுடைய தொந்தரவு இருந்துவந்ததால், இந்து அரசுகள் எல்லாம் ஒரு பேரரசின் கீழ் ஒன்றுபட்டிருந்தாலே நலம் எனத் தோன்றியது. தஞ்சை, செஞ்சியிலுள்ள நாயக்கர்களும் திருமலை நாயக்கனைப் போன்று, தனியரசர்களாக மாறிவிட்டனர். ஆனால் மைசூர் மட்டும் விஜயநகரப் பேரரசிற்கு உண்மையாய்க் கட்டுப் பட்டு, தமிழ் நாட்டு நாயக்கர்களைக்கூட தண்டிப்பதற்காக ஒருப்பட்டெழுந்தது. தெற்கே திண்டுக்கல் நோக்கி மைசூர் படைகள் எழுந்து வந்தன. திருமலை நாயக்கன் இராமப் பையன் என்னும் படைத் தலைவன் வசம் ஒரு வலிய படையை அனுப்பி அவர்களை எதிர்க்கச் செய்தான். மைசூர் படைகள் இடைமுறிந்து திரும்பியோடும்படி யாயிற்று.

பின்னும் சில ஆண்டுகளுக்குப்பின், விஜயநகர மன்னன் மதுரையை நோக்கிப் படையெடுத்தான். திருமலை நாயக்கனுக்கு உதவியாய்த் தஞ்சை நாயக்கனும் செஞ்சி நாயக்கனும் துணை நின்றனர். அவ்விதமிருந்தும் விஜயநகர மன்னனுக்கே முதலில் சிறிது வெற்றி கிடைத்தது. அதைக் கண்டு திருமலை நாயக்கன் அச்சமுற்று, ஐதரபாத்தின் ஒரு பகுதியாக விளங்கும் கோல்கொண்டாவில் அப்பொழுது ஆண்டுவந்த முஸ்லீம் சுல்தானுடைய உதவியை வேண்டினான். உடனே அந்த சுல்தானும்

விஜயநகர மன்னனை எதிர்த்துக் கிளம்பி, தெலுங்கு நாட்டில் ஒரு பகுதியை அழித்து, தெற்கே பாண்டி நாட்டை நோக்கியும் படையெடுத்து வந்து விட்டான். அவனைத் தடுப்பதற்காகக் கோல்கொண்டாவைத் தாக்கும்படி திருமலை பிஜப்பூர் சுல்தானைக் கிளப்பிவிட்டான். ஆனால் பிஜப்பூர் சுல்தான் அவ்விதம் செய்யாமல், கோல்கொண்டாவுடன் சேர்ந்துகொண்டு மதுரையை எதிர்த்துத் தாக்கினான். திருமலை இன்னது செய்வதென்றறியாமல் தடுமாறினான். அதைக்கண்ட விஜயநகர மன்னன், முஸ்லிம்களிடையே தழைத்த ஒற்றுமை உணர்ச்சியை உள்ளத்தே உவந்து நோக்கி, தானும் முன்னையவற்றை யெல்லாம் மறந்து, பாண்டி நாட்டின் உதவிக்காகப் பறந்து வந்தான். ஆனால், முஸ்லிம் படைகள் வலியனவாய் மிகுந்திருந்தமையின், இந்துப் படைகள் எல்லாம் திரண்டு கூடியும் எதிர்நிற்கலாற்றாது உடைந்தன. திருமலை பிஜப்பூரின் தலைமையை ஏற்றுத் திறையளக்கும்படியாக நேர்ந்தது. இவ்வாறு முஸ்லிம் தொந்தரவு நீங்கியதும், விஜயநகர மன்னன் மைசூரின் உதவியைக் கொண்டு, திருமலை நாயக்கனை அடக்கிவிடவேண்டும் என்று மறுபடியும் முயற்சி எடுத்தான். அப்பொழுது திருமலை பிஜப்பூர் சுல்தானை மூட்டி விட்டான். பிஜப்பூர் படைகள் மைசூரைப் படையெடுத்து அழித்துக்கொண்டே மதுரையை நோக்கி வந்தன. இம்முறை திருமலை ஏராளமான பொருளைக் கொடுத்து பிஜப்பூர் சுல்தானை மனம் குளிரச் செய்து அனுப்பினான். பின்னும் சில ஆண்டுகள் கழித்து மைசூர்ப் படைகள் மூன்றாவது முறையாக மதுரைமீது படையெடுத்தன. முன்னர் அடைந்த துன்பங்களை மனங்கொண்டு, திருமலை இம்முறையில் முஸ்லிம்களை உதவிக்கு அழைக்கவில்லை.

திருமலைநாயக்கன் ஆட்சியின் தொடக்கத்திலேயே அவனுக்கும் பாளையக்காரர்களின் தலைவனான சேதுபதிக்கும் அவ்வளவு நல்ல எண்ணம் இல்லாதிருந்து வந்தது. ஆதலால் சேதுபதியின் உதவியைப் பெறுவதற்காகத் தன் அரசியைக்கொண்டு ஒரு திருமுகம் எழுதி அனுப்பினான். அரசி எழுதிய திருமுகம் கண்டவுடன் சேதுபதி ஒரு பெரிய படையைத் திரட்டிக்கொண்டு அரசனுக்கு உதவியாக வந்தான். மைசூர்ப் படைகள் தோல்வியுற்று மலைகளுக்கு ஓடின. பின்னர் திருமலையின் இளையவனான முத்துவீரப்பன் மைசூரைப் படையெடுத்து மலைப் பகுதி நாடுகளை அழித்தான். அவ்விதம் வெற்றியடைந்து முத்துவீரப்பன் மதுரைக்குத் திரும்புவதற்குள், திருமலை நாயக்கன் தனது எழுபத்தைந்தாவது வயதில் இறந்து விட்டான். இவ்வாறு இடைவிடாது போர்கள் நடந்துவந்தபோதிலும், திருமலையின் ஆட்சியில் மதுரை மிகவும் செழித்து முன்னேற்றம் அடைந்திருந்தது. அவன் அங்கு ஓர் அழகான அரண்மனையைக் கட்டினான். அதில் ஒரு பகுதி இன்றும் நிலைத்திருக்கிறது. இன்னும், அவன் மீனாட்சி அம்மன் கோயிலை யொட்டிப் புதுமண்டபம் ஒன்று கட்டினான். அழகான பெரிய குளம் ஒன்றும், மற்றும் பல வசதிகளும் அவன் ஏற்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது.



திருமலை நாயக்கனின் மகன் முத்துஅழகாத்திரி, அவன் முஸ்லிம்களைத் தடுத்துக் காப்பதற்காகத் திருச்சிராப்பள்ளியில் ஒரு பெரிய கோட்டையைக் கட்டினான். சில ஆண்டுகளில் முஸ்லிம்களும் திருச்சியை நோக்கிப் படையெடுத்து வந்தனர். ஆனால் அங்குக் கோட்டையின் காவல் கடுமையாகத் தோன்றியதால், அவர்கள் தஞ்சை மேற்சென்று அந்நகரைப் பிடித்தனர். அங்கிருந்து மீண்டும் திருச்சியைப் பிடிக்க முயற்சி செய்யப்பட்டது. ஆயினும், பஞ்சமும் நோயும் முஸ்லிம் படைகளைத் துன்பப்படுத்தத்தொடங்கியதால், சிறிதளவு பொன் பெற்றுக்கொண்டு அவர்கள் பாண்டியை விட்டு நீங்கலாயினர்.

இவ்வாறு நாளுக்குநாள் முஸ்லிம்களுடைய தொந்தரவு பெருங்கேடு விளைத்துக்கொண்டு வரவும், இந்து அரசுகளிடையே சிறுசிறு பூசல்களும் போர்களும் ஏற்பட்டு ஒற்றுமை குறைந்துகொண்டே வந்தது.

அழகாத்திரி 1662-ல் இறக்கவும், அவன் மகன் சொக்கநாதன் அரசன் ஆனான். இப்புதிய மன்னன் முஸ்லிம்களுடைய வருகையைத் தடுக்கும் ஆத்திரத்தில், தஞ்சை மன்னனுடனும் சேதுபதியுடனும் பகைத்துக்கொண்டான். பாண்டி நாட்டை முஸ்லிம்கள் படையெடுக்காதிருப்பதற்காக அடிக்கடி பொருள் நிறையக் கொடுத்துக்கொண்டே வரவேண்டியிருந்தது. இவ்வளவு மானக்குறைவும் தஞ்சையான் உதவி யளிக்காததால் விளைந்தது என்று மனத்திற்கொண்டு, சொக்கநாதன் தஞ்சை மன்னன் மேற் போர் தொடுத்தான். அவ்வாறு நடந்த போரில் தஞ்சை மன்னன் உயிர் நீந்தான். அவன் குடும்பமும் அழிந்தொழிந்தது.

ஆனால் தஞ்சை பிஜப்பூர் சுல்தானின் உதவியை நாடிற்று. முஸ்லிம்களுக்குத் தமிழ் இராச்சியங்களில் தலையிடவேண்டும் என்பது பெரு விருப்பம். உடனே பிஜப்பூரிலிருந்து எக்கோஜி என்ற ஒரு மராட்டியப் படைத்தலைவன் ஒரு படையுடன் கிளம்பினான்.

எக்கோஜி தஞ்சையைக் கைப்பற்றித் தானே அரசனாக இருந்து ஆளத்தொடங்கினான். தெற்கே யுள்ள மறவர்கள் கலகமிட்டெழுந்தனர். வடக்கு முனையில் மைசூர்ப் படைகள் கிளம்பித் தாக்கலுற்றன. இவ்வாறு சொக்கநாதனுடைய ஆட்சி குருதி கொப்புளிக்கும் வீணான போர்களால் அலக்கணுற்று அல்லாடியது.

ஆதலால், சொக்கநாதனுடைய மகன் அரங்ககிருஷ்ண முத்து வீரப்பன் 1682-ல் ஆட்சிக்கு வந்ததும், நாடெங்கும் ஒரே குழப்பமாய் இருந்தது. ஆனால் நல்ல காலமாய், டில்லிப் பேரரசனுடைய முதன்மை யாட்சியைப் பிஜப்பூரும் கோல்கொண்டாவும் ஏற்றுக்கொள்ள மறுத்ததால் முஸ்லிம்களிடையே பிளவுகள் ஏற்பட்டன. தஞ்சை மராட்டியர்களுக்கும் மைசூருக்கும் மனவேற்றுமை உண்டாயிற்று. இவ்வாறு பாண்டி நாட்டுப் பகை

வர்கள் வேறு இடங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்தவேண்
யிருந்ததால், முத்து வீரப்பன் தன் நாட்டில் சிறிது அமைதி
நிலைநாட்ட வழி ஏற்பட்டது. ஆனால் அவன் நெடுநாள் இரு
காது திடீரென்று 1689-ல் தவறிவிட்டான்.

அவன் இறக்கும்பொழுது அவன் மனைவி கருவுற்றிருந்தாள்
பட்டத்திற்கு வேறு குழந்தைகள் இல்லாததால், அவன் தா
அரசி மங்கம்மாள்தானே அரசாட்சியைக் கைக்கொண்டு, மிக்
திறமையுடன் நடத்திவந்தாள். இறை கொடுக்காது கலகமிட்டு
கொண்டிருந்த திருவாங்கூர் அரசனை அடக்கித் திறை அளக்க
செய்தாள். தஞ்சை மராட்டிய மன்னனும் கைமிகுந்து விடா
படி தட்டிவிட முயற்சி எடுத்தாள். ஆனால் அவள் செய்த ஒ
பெருந் தவறு யாதெனில், அது அவள் சேதுபதியைப் பகை
துக் கொண்டதேயாகும். சேதுபதி, தான் நினைத்தபடி எ
லாம் நடக்கத்தொடங்கி, மங்கம்மாளின் அதிகாரத்தைப் பெ ரு
படுத்தாதிருந்தான். மராட்டியர்களோடு ஏற்பட்ட வேற்
மையை ஒருவிதமாய் ஒழுங்கு படுத்தி உறவு கொள்ளவும், அவ
கள் மங்கம்மாளுக்கு உதவி அளிக்க முன் வந்தனர். அவர்கள்
உதவியைக்கொண்டு மங்கம்மாள் சேது நாட்டுடன் போர்தொடு
தாள். அப்பொழுது சேதுபதியாய் இருந்த கிழவன் சேதுப
என்பவன் சிறிதும் அஞ்சாது, தஞ்சையிலிருந்தும் மதுரையில்
ருந்தும் திரண்டு வந்த படைகளை ஒருமுகமாய் எதிர்த்துச் சித
அடித்துவிட்டான். சேதுபதியின் போர் வல்ல மறவர் படைய
னது எதிர்பாராத விதமாய்க் கிளம்பி மராட்டியர் படை
எதிர்த்து, மதுரை அரசியின் படைத்தலைவனான நரசப்ப ஐய
என்பவனைக் கொன்று, எதிரி படைகளைச் சேது நாட்டுக்கு
வெளியே மடக்கித் தள்ளி விட்டது. அதிலிருந்து சேது நா
மதுரைத் தலைமையைக் களைந்து விட்டுத் தனியாட்சி நடத்த
தலைப்பட்டது.

முத்துவீரப்பனின மகனான விஜயரொக்கநாத நாயக்கன்
1704 லிருந்து ஆட்சி நடத்தலுற்றான். அவன் காலத்தில் சே
நாட்டில் பல தலைவர்களும் பிரிவுகளும் ஏற்பட்டுவிடவே முன்னி
ருந்த ஒற்றுமையும் பலமும் சிறந்து ஒழிந்தன. 1731-ல் விஜய
ரொக்கநாதன் குழந்தையில்லாமல் இறந்து விடவும், அவனது
பட்டத்தரசியான மீனாட்சி அம்மாள் அரசாட்சியை நடத்துவாளா
னாள். பங்காரு திருமலை நாயக்கன் என்னும் தனது நெருங்கிய
உறவினனுடைய மகனான பங்காரு என்பவனைத் தனக்குத் தத்
தாக எடுத்து வளர்த்தாள். சில ஆண்டுகளுக்குள் அவன்
தனக்கே பட்டம் வேண்டும் என்று வாதாடத் தொடங்கிவிட்
டான். தங்களுடைய வழக்கைத் தீர்ப்பதற்குக் கர்நாட்க நவாப்
உதவியை இருவரும் வேண்டினர். பாண்டி நாட்டின் மேலேயே
கண்ணாய் இருந்த அந்த முஸ்லீம் நவாப் பங்காருவின் பக்கமே
சார்ந்து தீர்ப்பளித்தான்.

பின்னர், பங்காரு மதுரையை ஆளத்தொடங்கியதும், கர்
நாட்க நவாப் தன படைத் தலைவனான சந்தா சாகிப் என்பவனைப்



டி நாட்டை தாக்கும்படி ஆணையிட்டான். இவ்வாறு தங்
வழக்கைத் தீர்க்க நவாப்பிடம் வரம் கேட்டதிலிருந்தே
ரை நாயக்கர்கள் எவ்வளவிற்கு வலிகுன்றி மெலிந்துள்ளனர்
து நன்கு தெரியவரும். சந்தா சாகிப் மதுரையையும் திருச்
யும் கைப்பற்றிக்கொண்டு தானே அரசனாகிவிட்டான்.

அரசி மீனாட்சிக்கும் பங்காரு நாயக்கனுக்கும் பின் மதுரை
க்கர் குலம் முடிவடைந்து விட்டது. பாண்டி நாடு ஒரு தனி
என்ற நிலையும் பின் இல்லாது போயிற்று.

சந்தா சாகிப்பும் நெடுநாள் இருக்க வில்லை. சில ஆண்டு
ல் தஞ்சை மராட்டியர்கள் மதுரையைப் படையெடுத்து அவ
பிடித்துச் சிறையிலிட்டனர். கி. பி. 1743-ல் ஐதராபாத்
ரம் மைசூரையும் கருநாடகத்தையும், தெற்கே தமிழ் நாடு
யும் வென்று அகப்படுத்தி, அவற்றை ஆற்க்காடு நவாப்
ஒப்புவித்து அவனையே ஆண்டு கொண்டிருக்கும்படி வைத்
ா.

1748-ல் மராட்டியர்களால் விடுவிக்கப்பட்ட சந்தா சாகிப்
க்காட்டு நவாப் கொண்ட நாடுகள் தனக்கே வேண்டுமென்று
ாடினான். இதற்குள் கிழக்கு இந்தியக் கம்பெனிகளை வைத்து
திய ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் தென்னாட்டு
யற்பூசல்களில் தலையிடுவாராயினர். பிரெஞ்சுக்காரர்கள்
ா சாகிப்புக்கு உதவியாகவும், ஆங்கிலேயர்கள் ஆற்காட்டு
ப்புக்கு உதவியாகவும் கிளம்பினார்கள்.

அவர்களிடையே நடந்த போர்களால் தமிழ் நாடு பாழ்பட்
. எங்கும் பயிர்த் தொழில் நடைபெறாமல், பஞ்சமும் நோயும்
, ஏழைத் திராவிடமக்கள் இறந்துபடுவாராயினர். ஒரு
றுப்பான அரசாட்சி என்பது இல்லாது போகவும், ஒழுங்கு
ற வாழ்க்கையும் சீர்குலைந்து விட்டது. முஸ்லிம்களுடைய
ன்மைக்கு அஞ்சி, மறக்குலத் தலைவர்களும் மற்றுமுள்ள
ாயக்காரர்களும் அடங்கியதுபோற் காணப்பட்டாலும், நாடு
தும் ஒரே கலகமாய் இருந்தது. கேள்விமுறை யில்லாத
யில், மறப் படை வீரர்கள் ஆறலைக்கவும் சூறையாடவும்
ிந்து விட்டார்கள்.

ஆங்கிலேயர்கள் சிறிது சிறிதாகத் தங்கள் மாற்றலரை வெ
டு, தமிழ் நாடு முழுதும் தங்கள் துணைவனான ஆர்க்காட்டு
ப் ஆட்சிக்கு வரும்படி உதவி புரிந்தனர். ஆனால் நேர்முக
த் தாங்களே எதிர்த்துச் செல்லாது, ஆங்கிலேயக் கம்பெனி
ஆர்க்காட்டு நவாப்பின் பின்னணியில் நின்றுகொண்டே
னுக்குப் பலமளித்து வந்தனர்.

அப்படியிருந்தும், பாளையக்காரர்களை அடக்குவது அரிதா
ந்ததால், நவாப்பினால் அவர்களிடமிருந்து செல்லவேண்டிய
களை வசூலிக்க முடியவில்லை. ஆகையால், 1781-ல் வரிகளை

வசூலிக்கும் வேலை பிரிட்டிஷ் கிழக்கு இந்தியக் கம்பேனியார் வசமே ஒப்புவிக்கப்பட்டது. அதிலிருந்து 1800-ம் ஆண்டிற்கு ஆங்கிலேயர்கள் மறவர்களை எதிர்த்துக் கொடும்போர் நடத்தி அவர்கள் கோட்டைகளை ஒவ்வொன்றாய்த் தகர்த்தெறிந்து அறவே ஒடுக்கி விட்டார்கள்.

கி. பி. 1801-ல், சென்னையைத் தங்கள் முதன்மை இடமாகக் கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் பொதுவாகக் கலகக்காரர்கள் யாருக்கும் மன்னிப்பு அளித்து, தென்னாடு முழுதையும் தங்களின் நேரான அதிகாரத்தின் கீழ்க்கொண்டு வந்தனர். அதிலிருந்து சிறிது காலத்திற்குள் தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் என்ற பல பகுதிகளும் அடங்கிய திராவிட நாடு முழுதும் ஆங்கிலேயருடைய முதன்மை ஆட்சியின்கீழ் வந்து விட்டது. அதில் பெரும் பகுதியை அவர்கள் நேர்முகமாகவே ஆளத் தொடங்கினர். திராவிட ஜில்லாக்களை எல்லாம் ஒன்றுசேர்த்து ஆட்சிமுறை வசதியை முன்னிட்டு ஒரே மாகாணமாகச் செய்து விட்டனர். அதனால் திராவிட இனத்துப் பல தொகுதியினரும், முன் தங்களுக்கிருந்த வேற்றுமைகளை மறந்து, திராவிட நாட்டின் எதிர்கால நன்மையையும், வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் கருதி ஒன்றுபட்டுழைக்கும் உணர்ச்சி பிறக்க வழி ஏற்பட்டிருக்கிறது.

9